# அனுதினமும் தேவனுடன்

கர்த்தர் ஆளுகிற
எவ்விடங்களிலுமுள்ள
அவருடைய சகல கிரியைகளே,
அவரை ஸ்தோத்திரியுங்கள்!
(சங்கீதம் 103:22)



செப்டெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| செப்டெம்பர் | | | ஒக்டோபர் | |
|---|---|---|---|---|
| காலை | மாலை | திகதி | காலை | மாலை |
| சங். 139-144 | 1கொரி 11 | 01 | ஏசாயா 35,36,37 | எபேசியர் 3 |
| சங். 145-150 | 1கொரி 12 | 02 | ஏசாயா 38,39,40 | எபேசியர் 4 |
| நீதி. 1,2,3 | 1கொரி 13 | 03 | ஏசாயா 41,42,43 | எபேசியர் 5 |
| நீதி. 4-7 | 1கொரி 14:1-22 | 04 | ஏசாயா 44,45, | எபேசியர் 6 |
| நீதி. 8-10 | 1கொரி 4:23-40 | 05 | ஏசாயா 46,47,48 | பிலிப்பியர் 1 |
| நீதி. 11-13 | 1கொரி 15:1-19 | 06 | ஏசாயா 49,50,51 | பிலிப்பியர் 2 |
| நீதி. 14-16 | 1கொரி 15:20-34 | 07 | ஏசாயா 52,53,54 | பிலிப்பியர் 3 |
| நீதி. 17-19 | 1கொரி 15:35-58 | 08 | ஏசாயா 55-58 | பிலிப்பியர் 4 |
| நீதி. 20-22 | 1கொரி 16 | 09 | ஏசாயா 59,60,61 | கொலோ. 1 |
| நீதி. 23-25 | 2கொரி 1 | 10 | ஏசாயா 62,63,64 | கொலோ. 2 |
| நீதி. 26-28 | 2கொரி 2 | 11 | ஏசாயா 65.66 | கொலோ. 3 |
| நீதி. 29-31 | 2கொரி 3 | 12 | எரே. 1,2,3 | கொலோ. 4 |
| பிரச. 1,2,3 | 2கொரி 4 | 13 | எரே. 4,5 | 1தெசலோ. 1 |
| பிரச. 4,5,6 | 2கொரி 5 | 14 | எரே. 6,7 | 1தெசலோ. 2 |
| பிரச. 7,8,9 | 2கொரி 6 | 15 | எரே. 8,9,10 | 1தெசலோ. 3 |
| பிரச. 10,11,12 | 2கொரி 7 | 16 | எரே. 11,12,13 | 1தெசலோ. 4 |
| உன்னத. 1-5 | 2கொரி 8 | 17 | எரே. 14,15,16 | 1தெசலோ. 5 |
| உன்னத. 6,7,8 | 2கொரி 9 | 18 | எரே. 17,18,19 | 2தெசலோ. 1 |
| ஏசாயா 1,2 | 2கொரி 10 | 19 | எரே. 20,21,22 | 2தெசலோ. 2 |
| ஏசாயா 3,4,5 | 2கொரி 11 | 20 | எரே. 23,24 | 2தெசலோ. 3 |
| ஏசாயா 6,7,8 | 2கொரி 12 | 21 | எரே. 25,26 | 1தீமோ. 1 |
| ஏசாயா 9-10 | 2கொரி 13 | 22 | எரே. 27,28,29 | 1தீமோ. 2 |
| ஏசாயா 11,12,13 | கலா. 1 | 23 | எரே. 30,31 | 1தீமோ. 3 |
| ஏசாயா 14,15,16 | கலா. 2 | 24 | எரே. 32,33 | 1தீமோ. 4 |
| ஏசாயா 17-20 | கலா. 3 | 25 | எரே. 34,35 | 1தீமோ. 5 |
| ஏசாயா 21-23 | கலா. 4 | 26 | எரே. 36,37 | 1தீமோ. 6 |
| ஏசாயா 24-26 | கலா. 5 | 27 | எரே. 38,39 | 2தீமோ. 1 |
| ஏசாயா 27-29 | கலா. 6 | 28 | எரே. 40,41,42 | 2தீமோ. 2 |
| ஏசாயா 30-31 | எபேசியர் 1 | 29 | எரே. 43,44 | 2தீமோ. 3 |
| ஏசாயா 32-34 | எபேசியர் 2 | 30 | எரே. 45-48 | 2தீமோ. 4 |
| | | 31 | எரே. 49-50 | தீத்து 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

(DAILY DEVOTIONS)

## செப்டெம்பர் - டிசம்பர்
## 2014

நிர்வாக இயக்குனர் : திரு. மயூக பெரேரா

தமிழ்பணி முகாமையாளர் : திரு. ரவி சங்கர்

தொகுப்பாசிரியர் : திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்




தபால் முகவரி:
சத்தியவசனம்
த.பெ. 1012,
கொழும்பு, இலங்கை.

நேரில்:
120A, தர்மபால மாவத்தை
கொழும்பு 7
இலங்கை.

Email: info@backtothebible.lk
TEL: 011-4691500


இது ஒரு சத்தியவசன வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியமுள்ள வாசகர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

"அனுதினமும் தேவனுடன்" என்ற இத்தியான நூலானது தேவன் நமக்கு அருளியுள்ள பரிசுத்த வேதாகமத்தை தியானிக்கவும் அவரது வார்த்தைகளை ஆராயவும் உதவிசெய்கின்ற ஒரு துணை நூலாக விளங்குகின்றது. இந்தப் பணியிலே, சத்தியவசன ஊழியத்தைத் தங்கள் காணிக்கையாலும் ஜெபத்தாலும் தாங்கிவருகிற உங்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

தேவனுடனான நெருக்கமான ஒரு உறவுக்குள் மக்களை வழிநடத்தும் பணியில், எமது சத்தியவசன வானொலி, தொலைபேசி, இணையதளம், ஆலோசனை, தபால்வழி வேதபாடம் மற்றும் இலக்கிய ஊழியங்களின் வாயிலாக மும்மொழியிலும் தேவ செய்தியை பெற்று இலங்கை தேசத்திலும் வெளிநாடுகளிலும் பயனடைந்து வருகின்ற வாசகர்களுக்காக தேவனைத் துதிக்கின்றோம். பலர் தாம் பெற்றுக் கொண்ட தேவ ஆசீர்வாதங்களை எம்மோடு பகிர்ந்துகொள்கிறார்கள். இவை ஊழியத்தில் ஈடுபட்டுள்ள எமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருவதாக அமைந்துள்ளது.

நீங்கள் பெற்றுக்கொண்ட தேவ ஆசீர்வாதங்களை உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பெற்றுக்கொள்ளவும் அநேகர் வேதாகமத்தை தியானிக்கவும் இவற்றை அவர்களுக்கு அறிமுகப் படுத்தி வையுங்கள். நான்கு மாதங்களுக்கு ஒருமுறை (வருடத்திற்கு 3 தடவை) மாத்திரமே இத்தியானநூல் வெளிவருகின்றது என்பதை அன்புடன் ஞாபகப்படுத்துகிறோம்.

இம்முறை சற்று வித்தியாசமான விதத்தில் வெளிவரும் தியானங்களில் செப்டெம்பர் மாத தியானங்களை *சகோதரி ஜெரி ரீடில்* அவர்களும், ஒக்டோபர் மாத தியானங்களை தொகுத்தும், நவம்பர் மாத தியானங்களை *சகோதரி சாந்தி பொன்னு* அவர்களும், டிசம்பர் மாத தியானங்களை *சகோதரி தர்ஷினி சேவியர்* அவர்களும் எழுதியுள்ளார்கள். உங்கள் ஜெபத்தில் அவர்களைத் தாங்குங்கள்! தேவனின் கிருபையும் ஆசீர்வாதமும் உங்களோடுகூட இருப்பதாக!

அன்புடனும் ஜெபத்துடனும்,

***சகோதரன் வஷ்னீ ஏனர்ஸ்ட்***

(தொகுப்பாசிரியர்)

earnest@backtothebible.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் தரிசனத்தோடு செயற்படு

செப்டெம்பர்
**1**
திங்கள்

வேத வாசிப்பு : நெகேமியா 1:1-3

**'...என் பிதாக்களின் கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக் கொள்ளுகிறேன்.' நெகேமியா 2:5**

எகிப்து தேசத்திலே அடிமைகளாய் இருந்த இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்த கர்த்தர், அவர்கள் தமக்குப் பிரியமாக சாட்சியாக வாழ வேண்டுமென்று பல கற்பனைகள், கட்டளைகளைக் கொடுத்தார். ஆனால், அவர்களோ பல தடவைகள் அக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற்போனார்கள். இதன் பலனாக பல எதிராளிகளினால் தாக்கப்பட்டு, இறுதியில் தமது சொந்த நாட்டையே இழந்தார்கள். கர்த்தருடைய தேவாலயமும், பட்டணத்தைச் சுற்றி இருந்த பாதுகாப்பின் அரண்களும் உடைக்கப்பட்டன. ஜனங்கள் பல இன்னல் களுக்கு உட்பட்டனர். இப்படியானதொரு காலகட்டத்தில் நெகேமியா என்ற யூதன் பாபிலோனின் அர்தசஷ்டா என்ற ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாகப் பணியாற்றிக்கொண்டிருந்தான். என்றாலும் அவனது இருதயமும், சிந்தனையும் எருசலேமையும், அங்கிருக்கும் மக்களையும் குறித்ததாகவே இருந்தது. ஆனானியும் வேறு சில யூதர்களும் அவனைச் சந்தித்தபோது, எருசலேம் நகரைக்குறித்தும் மக்களைக்குறித்தும் விசாரித்தான். எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டு அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டிருப்பதாகவும், ஜனங்கள் மிகுந்த நிந்தையை அனுபவிப்பதாகவும் அவர்கள் கூறினர். அதைக் கேட்டதும் நெகேமியா மிகவும் அழுது, துக்கித்து, உபவாசித்துத் தேவனை நோக்கி மன்றாடினான். பின்பு ராஜாவின் தயவையும் அனுமதியையும் பெற்று, எருசலேமின் அலங்கத்தைத் திரும்பவும் கட்டி, ஜனங்களின் நிந்தையை நீக்க வேண்டும் என்ற "தரிசனத்தோடு" புறப்பட்டான். கடைசிவரைக்கும் நெகேமியா அந்த தரிசனத்தின் நோக்கிலிருந்து பின்வாங்கவேயில்லை.

அன்று எருசலேமுக்கு நேர்ந்ததுபோன்று, இன்று அநேக குடும்பங்கள், சபைகள், கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், நாடுகள் சத்துராதியான சாத்தானின் சதி வலையில் சிக்குண்டு பலவிதங்களில் உடைவுகளுக்கும், அழிவுகளுக்கும், நிந்தைகளுக்கும் முகங்கொடுக்கின்றன. இந்த அழிவின் செய்திகளை கேட்கும் போது கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதாகக் கூறுகின்ற நாம், கிறிஸ்து நமக்குக் கொடுத்த "ஆத்தும ஆதாயம்" என்ற "தரிசனத்தோடு" செயற்படப் புறப்படுகின் றோம். ஆனால், நாட்கள் செல்லச்செல்ல ஆத்தும ஆதாயத்தை மறந்து நமது சுயதிட்டங்களாகப் பல்வேறு ஊழிய ஸ்தாபனங்களைக் கட்டும் தரிசனத்தோடு செயற்படுகின்றோம். அவை நல்ல காரியமாயினும், ஆரம்பத்தில் நமக்குள் இருந்த ஆத்தும ஆதாயத்தைக் குறித்த தரிசனத்திற்கு நாம் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கிறோம் என்பது மிக முக்கியம். நெகேமியா தன் காரியத்தைச் செய்துமுடித்தார். நமது காரியம் என்ன?

ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் ஆத்தும ஆதாயத்தின் தரிசனத்தை முன்னெடுப்பதில் நாம் முன்நிற்கிறோமா? பின்நிற்கிறோமா? இயேசு கொடுத்த இறுதியானதும் பிரதானமானதுமான கட்டளையை நிறைவேற்றுவதில் நமக்கிருக்கும் தடை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்படியும் முக்கியபடியும்

செப்டெம்பர்

2

செவ்வாய்

வேத வாசிப்பு : நெகேமியா 1:4 -11

**'இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி....' நெகேமியா 1:4**

போரினால் பாதிக்கப்பட்டு, அநாதைகளாக்கப்பட்ட சிறு பிள்ளைகளுக்கு இல்லமொன்றை நிறுவவேண்டுமென்ற தரிசனத்துடன் ஒரு கிறிஸ்தவ சகோதரன் பல செயற்திட்டங்களைத் தயாரித்தார். இப் பணியில் தன்னோடு இணைந்துகொள்ள முன்வந்தவர்களிடம் அதனைச் சமர்ப்பித்தார். அதிலே முதலாவதாக, அத்திட்டத்திற்குத் தேவையான பணத்தை எப்படியாக சேகரிப்பது என்பதே முதற்படியாக அமைந்திருந்தது.

நெகேமியாவுக்கும் ஒரு தரிசனம் இருந்தது. அதற்காக அவர் எடுத்து வைத்த படிகளில் முதன்மையிடம் வகித்தது எது? உடைக்கப்பட்ட எருசலேமின் அலங்கத்தையும், சுட்டெரிக்கப்பட்ட வாசல்களையும் திருத்தி, தன் ஜனங்களின் துன்பங்களையும், நிந்தையையும் நீக்கவேண்டுமென்ற தேவ தரிசனத்தைப் பெற்ற நெகேமியா அதனைச் செயற்படுத்துவதற்காக எடுத்த முதற்படி "ஜெபம்". பின்னரும் அவர் எடுத்த ஒவ்வொரு முயற்சியிலும் ஜெபமே முக்கியபடியாக இருந்தது என்பதை நெகேமியாவின் புஸ்தகத்தில் காண்கின்றோம். 1.நெகேமியா தேவனைத் துதித்தான். 2.தேவனுக்கு நன்றி செலுத்தினான். 3."நானும் என் வீட்டாரும் பாவம் செய்தோம்" என்று பாவஅறிக்கை செய்தான். 4.குறிப்பிட்ட காரியத்தைக்குறித்த தனது தரினத்தை வாய்க்கப்பண்ணவேண்டுமென ஜெபித்தான். 5. அதற்காகத் தன்னை முற்றுமாக அர்ப்பணித்தான்.

'ஆத்தும ஆதாயமே எமது தரிசனம்' என்று கூறி குழந்தைகள், வயோதிபர் இல்லங்கள், இலவச வைத்தியசாலை, பாடசாலை, தொழில்முறை கல்வித் திட்டங்கள் என்று பல திட்டங்களுக்கூடாக இத் தரிசனத்தை நாம் முன்னெடுக்கக்கூடும். இவை அனைத்தும் நல்ல வழிமுறைகள்தான். ஆனால், இவற்றைச் செயற்படுத்தும்போது முதலாவதாக நாம், நமது சுய திட்டங்களை செயற்படுத்த முயற்சிக்கின்றோமா; அல்லது, நெகேமியாவைப்போல துதி, நன்றி செலுத்துதல், பாவ அறிக்கை, குறிப்பிட்ட திட்டத்திற்கான ஜெபம், அத்துடன் நம்மையும் முழுதாக அர்ப்பணித்து, அதன் பின்னரே நமக்குள் இருக்கும் தரிசனத்தைச் செயற்படுத்த ஆரம்பிக்கின்றோமா? தொடர்ச்சியான ஒவ்வொரு படியிலும் ஜெபத்தோடு முன்செல்லுகிறோமா என்பதையும் ஆராய்ந்து பார்ப்போமாக. தேவனுக்குப் பிரியமான ஆத்தும ஆதாயப் பணியைத் தொடருவதற்கு முதற்படியும் முக்கியபடியுமாக ஜெபத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து முன்செல்லுவோமாக. தேவன் நம் முன் செல்லுவார்.

இதுவரையிலும் தேவபணியிலும் நமது வாழ்வின் காரியங்களிலும் நாம் எவை எவற்றிற்கு முதலிடம் கொடுத்திருக்கிறோம்? ஜெபம் முக்கிய இடம் வகித்த போதும், ஜெபமின்றி நாம் முன்சென்றபோதும் நமது பணிகளில் வேறுபாடுகளைக் கண்டிருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமதித்தாலும் காத்திரு

செப்டெம்பர்
**3**
புதன்

வேத வாசிப்பு : நெகேமியா 1:9-11

**'குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும், ...அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, அது நிச்சயமாய் வரும். அது தாமதிப்பதில்லை.' ஆபகூக் 2:3**

நாம் விரும்புவதைப் பெற்றுக்கொள்ள, அல்லது தேவ அழைப்பின்படி ஒரு பணியை முயற்சிக்கும்போது சிலவேளைகளில் தாமதங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. இப்படியான தருணங்களில் நாம் விசுவாசத்தில் சோர்ந்துபோகிறோம்; அல்லது, நமது அழைப்பில் சந்தேகப்பட்டு பின்வாங்கிவிடுகிறோம். ஆனால், தேவனை நம்பிய அவரது பிள்ளைகளின் வாழ்க்கையில் இப்படியான தாமதங்கள் நன்மைக்கு ஏதுவாகவே ஏற்படுகின்றன. இதுவே நெகேமியாவின் வாழ்க்கையில் நடைபெற்றது.

நெகேமியா தன் உள்ளத்திலே தேவதரிசனம் ஒன்றைப் பெற்றான். ஆனால், அதைக்குறித்து ராஜாவிடம் பகிர்ந்துகொள்ள சில மாதங்கள் தாமதிக்க நேர்ந்தது. இதனால் என்னதான் நன்மை ஏற்பட்டது? ஆம்! தாமதித்தாலும், ராஜாவின் பார்வையில் நெகேமியாவின் உள்ளத்தின் துக்கம் தெரிவதற்கு அதுவே ஏற்ற தருணமாக இருந்தது. அதன் பலனாக நெகேமியா தான் பெற்ற தரிசனத்தைச் செயற்படுத்த ராஜ அனுமதியைப் பெற்றுக்கொண்டு எந்தத் தடையுமின்றி முன்சென்றான்.

இப்படியான தாமதத்தை நெகேமியாவின் வாழ்க்கையில் மட்டுமல்ல, தேவ அழைப்பைப் பெற்ற அநேகரின் வாழ்க்கையிலும் நாம் காண்கின்றோம். குறிப்பாக யோசேப்பு, தாவீது என்பவர்களின் வாழ்க்கையில்கூட அவர்கள் தேவனுடைய அழைப்பின் சரியான இடத்தை வந்தடைய அநேக வருடங்கள் சென்றன. இதனால் அவர்கள் சோர்ந்து தளர்ந்துபோகவில்லை? கர்த்தர் தம்மை அழைத்த அழைப்பைச் சந்தேகிக்கவுமில்லை. அல்லது தேவ அழைப்பை முற்றுமாக விட்டுவிட்டுப் பின்வாங்கிப்போகவுமில்லை. தாம் பெற்ற அழைப்பில் தாமதம் ஏற்பட்டு, பல இன்னல்களைக் கடந்துசெல்ல நேரிட்டபோதும், கர்த்தர் பேரிலே அவர்கள் வைத்திருந்த விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் உறுதியாகவே இருந்தனர். அதின் பலனாக கர்த்தர் அவர்கள்பேரிலே வைத்திருந்த நோக்கத்தை அவர்களது வாழ்விலே நிறைவேற்றி, தமது ஜனத்துக்கு ஆசீர்வாதமான பாத்திரங்களாக அவர்களை மாற்றி வழிநடத்தினார்.

கர்த்தரை நம்பிய பிள்ளைகளுக்கு எல்லாம் நன்மைக்கேதுவாகவே நடக்கும் (ரோமர் 8:28). ஆகையால், கர்த்தர் நமது உள்ளத்தில் கொடுக்கும் தரிசனம் தாமதித்தாலும், சோர்ந்துபோகாமல் விசுவாசத்துடன் காத்திருந்து, கர்த்தரையே பற்றிக்கொண்டிருப்போமாக. கர்த்தர் ஒருபோதும் பிந்தவும்மாட்டார்; முந்தவும் மாட்டார்.

இதுவரை காத்திருப்பதில் தவறி, காரியங்களைக் கெடுத்துப்போட்ட தருணங்கள் நம் வாழ்விலே உள்ளனவா? அழைப்பு, தரிசனம் நிச்சயம் என தெரிந்தாலும், அவரது வேளைக்குக் காத்திருப்பதில் நமக்கிருக்கும் பிரச்சனைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலமற்ற அர்ப்பணிப்பு

செப்டெம்பர்
4
வியாழன்

வேத வாசிப்பு : நெகேமியா 2:1-9

**'...என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால், ராஜா அவைகளை எனக்குக் கட்டளையிட்டார்.' நெகேமியா 2:8**

பண்டைக் காலத்தில் ராஜ அரண்மனையில் வேலைக்கு அமருவது என்பது இலகுவான காரியமல்ல. அதுவும் ராஜாவுக்குப் பான பாத்திரக்காரனாக நியமனம் பெறுவது மிகவும் கடினமாகும். காரணம் இப் பான பாத்திரக்காரனே ராஜாவின் உணவுக்கு முழுமையான பொறுப்பு. ஆகவே, இந்நியமனத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒருவன் நன்நடத்தை உள்ளவனாகவும், ராஜாவின் தனிப்பட்ட நம்பிக்கையையும், விசுவாசத்தையும் ஈர்ந்தவனாகவும் இருக்கவேண்டும். யூதனாயிருந்த நெகேமியா இப்படியான ஒரு பொறுப்புள்ள ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டது அவனுடைய நல்நடத்தையையும், ராஜா அவன்மேல் கொண்டிருந்த நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், இப்படியான உயர்வான, சகல வசதிகளையும் கொண்ட ஸ்தானத்தில் நெகேமியா வாழ்ந்திருந்தாலும், அவன் சுயநலமுள்ளவனாக இருக்கவில்லை. தனது மக்களுக்காக, எருசலேமின் இடிந்துபோன அலங்கத் துக்காக இரவு பகலாக ஜெபித்தான். ராஜாவின் கண்களில் கர்த்தர் தயை கிடைக்கப்பண்ணினார். அல்லது ராஜா, அவனது துக்க முகத்தைக் கண்டது எப்படி? அவனது துக்கத்திற்கான காரணத்தை வினவியபோது, சந்தர்ப்பத்தை உபயோகித்து, தன் இருதயத்தின் வாஞ்சையை ஜெபத்தோடு ராஜாவுக்குத் தெரியப்படுத்தினான். அதன் பலனாக ராஜா அவன் கேட்டுக்கொண்டபடி அவனைத் தன் சொந்த நாட்டிற்குச் சிலநாட்களுக்கு அனுப்பினார். மட்டுமின்றி, இடிந்துபோன எருசலேமின் அலங்கத்தையும் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல் களையும் கட்டுவதற்குத் தேவையான சகல பொருட்களைப் பெற்றுக்கொள்ள வும், எந்தத் தடைகளோ ஆபத்துகளோ இல்லாமல் பயணத்தை மேற்கொள்ள வும், அவன் கடந்து செல்லவிருந்த நாடுகளின் தலைவர்கள் அனைவருக்கும் கடிதங்களைக் கொடுத்தான். நெகேமியாவின் சுயநலமற்ற அர்ப்பணிப்பு அவன் நாட்டிற்கும், ஜனத்தாருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது.

சுயநலமற்ற அர்ப்பணிப்பு! ஆத்தும ஆதாயப் பணியைச் செய்ய அழைக்கப்பட்ட நாம் வெறும் வாஞ்சையோடும் ஜெபத்தோடும் மட்டும் நின்று விடாது "சுயநலமற்ற" நெகேமியாக்களாக செயற்படுவோமாக. இதையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். "சுயம் என்னில் சாம்பலாய் மாற, சுத்தாவியே அனல் மூட்டும். ஜெயம் பெற்று மாமிசம் சாக தேவா அருள் செய்குவீர்" என்று கூறி ஜெபத்தோடு நம்மை முழுமையாக அர்ப்பணிப்போமாக. தடைகளைத் தேவன் நீக்குவார். இன்று நாம் எந்த நிலையில் இருந்தாலும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்து அவர்களுக்கும் நாம் ஆசீர்வாதமாக இருக்க நம்மை ஒப்புக்கொடுப்போமாக.

எனது வாழ்வை தேவனுக்கென முழுமையாக அர்ப்பணித்து வாழ எனக்கு இருக்கும் தயக்கம் என்ன? பிற மனிதர் தடை என்று எண்ணினால், அத்தடையை மேற்கொண்டு தேவபணிக்கு முன்செல்ல ஏன் என்னால் முடியாதுள்ளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானமான அணுகுமுறை

செப்டெம்பர்

# 5

வெள்ளி

வேத வாசிப்பு : நெகேமியா 2:10-20

**'....அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.' நெகேமியா 2:18**

ஒரு திட்டத்தைச் செயற்படுத்த படிமுறைகள் எத்தனை முக்கியமோ, அதுபோலவே அணுகுமுறையும் முக்கியமானது. அணுகுமுறையைச் சரியாகச் செயற்படுத்த 'ஞானம்' மிகவும் முக்கியமாகும். "அறிவுத்திறன், அனுபவம், நேர்மை மற்றும் சிந்தனையாற்றல் என்று அனைத்தினதும் கலவையே ஞானம். எந்தப் பற்றாக்குறையுமில்லாமல் வேத வார்த்தையின் வாயிலாயும் இதைக் கேட்கக்கூடியதாயிருக்கும்" என்று ஒரு அறிஞர் கூறி வைத்துள்ளார்.

பொறுப்புள்ள ஸ்தானத்தில் பணியாற்றிய நெகேமியாவும், அறிவுத்திறனுடையவனாகவும், அனுபவமும் நேர்மையுமுள்ளவனாகவும், சிந்தித்துச் செயலாற்றும் திறமைகொண்டவனாகவும் ஞானமுள்ள மனுஷனாகவும் விளங்கினான். மட்டுமல்ல, இவற்றிலும் மேலாக தேவனையும், அவரது வாக்குத்தத்தங்களையும் அறிந்தவனாயிருந்தான். எனவேதான் நெகேமியா, தருணம் வாய்த்தபோது அவசரப்படாமல், தன் காரியத்தை ராஜாவுக்குத் தெரியப்படுத்த முன்னர், ஜெபித்தான் என்று வாசிக்கிறோம். அதன் பின்புதான் ராஜாவின் தயவையும், உதவியையும் பெற்று, தனது தேவைகளைச் சந்திக்க ராஜாவிடமிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொண்டான். அடுத்ததாக, யாரிடமும் உடனடியாக தனது தரிசனத்தைக் குறித்துக் கூறாது, யாரும் அறியாத இரவுவேளையில் தனிமையாகச் சென்று எருசலேம் அலங்கத்தின் உடைவுகளையும், சுட்டெரிக்கப்பட்ட வாசல்களையும் பார்வையிட்டான். இவையனைத்தின் பின்பு நெகேமியா தன் ஜனத்தாரிடம் தனது தரிசனத்தையும், தேவனின் தயவுள்ள கரம் எப்படி தன்னோடு இருந்தது என்றும் கூறி, "நாம் இனி நிந்தைக்குள்ளாய் இராதபடிக்கு எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள்" என்று ஜனங்களைத் திடப்படுத்தினான். ஜனங்கள் அந்த வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தியதற்கு ஒவ்வொரு படியிலும் நெகேமியாவின் ஞானமான அணுகுமுறைதான் காரணமாயிற்று.

எந்தவொரு பணியைச் செய்வதென்றாலும் அதற்கு பிறரின் உதவி, ஒத்தாசை தேவை. ஆனால், அவர்களையும் அப்பணியில் முழுமனதோடு ஈடுபட வைப்பதற்கு ஒவ்வொரு படியிலும் ஞானமான திட்டங்களும் ஞானமான அணுகுமுறையும் மிக அவசியம். நெகேமியாவுக்கும் தடைகள் மிரட்டல்கள் ஏராளமாக வந்தது. அதற்காக நெகேமியா சோர்ந்துவிடவில்லை. அவன் முன்னெடுத்த பணி தோல்வியுறவில்லை. நெகேமியா பணியை முடித்தார்.

நான் ஆரம்பித்த பணி ஏதாவது இன்று தடைப்பட்டு நிற்கிறதா? நெகேமியாவின் திட்டமிடல் அணுகுமுறை என்பவற்றுக்கும் இன்று எனது காரியங்களுக்கும் என்ன வேறுபாடு காணப்படுகிறது? என்னில் எந்தப் பகுதியைச் சரிப்படுத்தி, பிறரும் பணியில் முழுமனதுடன் ஈடுபட நான் என்ன வழி செய்யவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையான செயற்பாடு

செப்டெம்பர்

6

சனி

வேத வாசிப்பு : நெகேமியா 3:1 - 32

**'ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.' 1கொரிந்தியர் 12:26**

சபை ஒன்றைக் கட்டுவது என்பது இலகுவல்ல. எனினும், இந்நாட்களில் எல்லா இடங்களிலும் புதிய சபைகள் எழும்பிக்கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், நாட்கள் கடந்து செல்லும்போது பல சபைகளில் ஒற்றுமையின்மையும், பிரிவும் மிக இலகுவாக ஏற்படுகின்றன. ஏன் என்று கேட்டால், "சேர்ந்து செயற்படுவதற்கு இடமில்லை. ஏற்றத்தாழ்வு மனப்பான்மை அதிகம் உண்டு. ஒருசிலருக்கு மட்டுமே முதன்மையான இடம். ஊழியக்காரன் மட்டுமே அனைத்து பொறுப்புகளையும் ஏற்றிருப்பதால் சபை எப்படி இயங்குகின்றது என்று தெரியவில்லை. எமது தாலந்துகளை உபயோகிக்க இடமில்லை" என்று பல காரணங்களைக் கூறுவார்கள்.

"ஒற்றுமையின்மை"! இன்றுமட்டுமல்ல, ஆதி திருச்சபைக் காலத்திலும் கொரிந்து சபையினர் மத்தியில் இவ் ஒற்றுமையின்மை காணப்பட்டது. அதனால் தான் பவுலடியார், சபையானது சரீரத்தைப்போல் இயங்கவேண்டும் என்று கூறினார். அதாவது, ஒரு சரீரத்தில் அவயவங்கள் வெவ்வேறு தொழிலைச் செய்தாலும், எப்படி அவை ஒன்றோடொன்று இணைந்து செயற்படுகின்றதோ அவ்வண்ணமே ஒரு சபையிலும் ஒவ்வொருவரும் வித்தியாசமான வரங்களைக் கொண்டிருந்தாலும், ஒற்றுமையாக செயற்படவேண்டியதின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறினார்.

இப்படியான செயற்பாட்டையே நெகேமியா 3ம் அதிகாரத்தில் பார்க்கின்றோம். இடிந்துபோன எருசலேம் நகரின் அலங்கத்தையும், எரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் கட்டவேண்டுமென்று வந்திருந்த நெகேமியா, தானே அதின் வேலைகளை தனிமையாகச் செய்யாமல், அனைத்து மக்களையும் பங்குபெற செய்ததால், அவர்களும் ஒன்றிணைந்து அனைத்து வேலைகளையும் செய்தார்கள். இப்படியான ஒன்றிணைந்த செயற்பாட்டிற்கூடாக மக்களுக்குள் ஒற்றுமை, ஏற்றத்தாழ்வற்ற மனப்பான்மை, ஒருவரை ஒருவர் கனப்படுத்துதல், பொறுப்புணர்வு, அவரவர் தத்தமது கடமையை நோக்காகக்கொண்டு செயற்படும் செயல்முறை போன்றவற்றை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாம் சபையில் மட்டுமல்ல, வீட்டிலோ, வேலை ஸ்தலத்திலோ எங்கிருந்தாலும் அனைவரோடும் 'ஒற்றுமையாக செயற்படவேண்டியது' மிகவும் முக்கியமாகும், ஒரு பணி நன்கு நிறைவேற்றப்பட இந்த ஒருமனம் ஒற்றுமை மிக அவசியம். அங்கேதான் தேவனுடைய நாமம் பிறர் மத்தியில் மகிமைப்படுகிறது.

இன்று நாம் பங்கேற்றிருக்கும் பணியில், அது குடும்பத்திலோ சபையிலோ எதுவாயினும், ஒற்றுமை முறிவடைந்திருக்குமானால், அதற்கு நான் எந்தவிதத்திலாவது காரணமாயிருக்கிறேனா? ஒருமனம் முறிவடைந்தால் அதனால் வரும் பாதிப்பு என்னையும் தாக்கியிருக்கிறதா? சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புகளை மேற்கொள்!

செப்டெம்பர்

**7**

ஞாயிறு

வேத வாசிப்பு : நெகேமியா 4:1-8

**'நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் சன்பல்லாத் கேட்டபோது, அவன் கோபித்து, எரிச்சலடைந்து, ...வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண்ணினார்கள்.' நெகேமியா 4:1,8**

மனிதன் பாவத்தில் விழுந்ததற்கு அவனது கீழ்ப்படியாமை தான் காரணம் என்று கூறுகிறோம். பதில் சரியாயினும், இப்படியாக மனிதன் கீழ்ப்படியாமற்போனதற்கு, மனிதனுடைய வாழ்க்கையில் தேவன் கொண்டிருந்த திட்டத்தை முறியடிப்பதற்கு சத்துராதியான சாத்தான் காண்பித்த 'எதிர்ப்பு' காரணமாய் அமைந்தது என்பதுவும் தெளிவு.

சத்துராதியின் இந்த 'எதிர்ப்பு' என்பது, ஆரம்ப காலத்திலிருந்தே மனிதன் தன் வாழ்வில் முகங்கொடுக்கின்ற ஒரு போராட்டம் என்றே கூற வேண்டும். இப்படியான போராட்டத்திற்கு நெகேமியா தப்பித்துக்கொள்ள முடிய வில்லை. ஆம்! நெகேமியாவின் தலைமையில் எருசலேமின் அலங்கமும், அதின் வாசல்களும் திருத்தி அமைக்கப்படும் திட்டத்தை முதலில் சமாரியாவில் அதிகாரத்திலிருந்த சன்பல்லாத் என்பவன் கேள்விப்பட்டபோது கோபமும், எரிச்ச லும் அடைந்து, நெகேமியாவையும் ஜனங்களையும் அவமதித்து, ஏளனம் செய்தான். சன்பல்லாத் மட்டுமல்ல, இவனோடுகூட தொபியாவும், அரபியரும், அம்மோனியரும், அஸ்தோத்தியரும் சேர்ந்து எதிர்த்தார்கள் என்று வேதத்தில் வாசிக்கின்றோம் (நெகேமியா 4:7).

நெகேமியா மாத்திரமா? வேதாகமத்தில் ஆரம்பம் முதல் முடிவுவரை தேவனுடைய பிள்ளைகள் அனைவருமே தமது வாழ்நாட்களில் பல எதிர்ப்பு களை சந்திக்க நேர்ந்ததைக் காணலாம். அதுமாத்திரமல்ல, மனிதகுலத்தையே பாவத்திருந்து மீட்டுக்கொள்ள இவ்வுலகிற்கு வந்த தேவகுமாரனான இயேசு கிறிஸ்து தன் வாழ்நாட்களில் எத்தனை எதிர்ப்புகளைச் சந்தித்தார். அவர் பிறந்த போதே எதிர்ப்பு ஆரம்பமானது. அவருடைய ஊழிய நாட்களில் பரிசேயர், சதுசேயர், மதத் தலைவர்கள் என்று பலருடைய எதிர்ப்பைச் சந்தித்தார். பொய் யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பிடிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். அவரைச் சிலுவையில் அறைந்ததுமன்றி அவரைப் பரியாசம்பண்ணி ஏளனமும் செய் தார்கள். ஆனால், இயேசு வெற்றி சிறந்தாரல்லவா!

இன்றும் பிசாசானவன் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் தனது எதிர்ப் பைக் காட்டிக்கொண்டே இருக்கிறான். குடும்பம், வேலைதளம், சபை என்று எல்லா இடங்களிலும் எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடும். ஆனால் இவ் எதிர்ப்பு களைக் கண்டு நாம் சோர்ந்து தளர்ந்துபோக வேண்டிய அவசியமில்லை. நெகேமியா தளர்ந்துபோனானா? இல்லையே! எதிர்ப்புகள் மத்தியிலும் நெகேமி யாவுக்குக் காரியங்களை வாய்க்கப்பண்ணினவர் நம்மையும் நடத்துவார். எதிர்ப்புகளுக்கு மேலாக எழுந்து தேவபெலத்தோடு முன்செல்வோமாக.

கர்த்தருக்காக, நான் ஆரம்பித்த எந்தக் காரியம் இன்று தடைபட்டு நிற்கின்றது? இதற்கு உண்மையான காரணம் என்ன? எனது சோம்பேறித்தனமா? அல்லது, எனக்கு எதிரான காரியங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பை எதிர்நோக்கும் வழி

செப்டெம்பர்

**8**

திங்கள்

வேத வாசிப்பு : நெகேமியா 4:10-23

**'கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய் வேலை செய்தார்கள்.'** நெகேமியா 4:18

எதிர்ப்புகளை எதிர்த்துப் போராடி தாம் மேற்கொள்ளும் பணியைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு எதிராளியைப் பழிவாங்குவதே ஏற்ற சிறந்த வழி என்று நினைக்கிறவர்கள் அநேகர். ஆனால், நெகேமியாவோ பழிக்குப் பழிவாங்கும் வழியை பின்பற்றவில்லை. மாறாக, அவன் தேவனுடைய வழியையே பின்பற்றினான்.

சன்பல்லாத்தும் அவனைச் சேர்ந்தோரும், அலங்கத்தின் வேலைகளை இடைநிறுத்தும்படி மக்களைச் சோர்வடையச் செய்தனர். மக்களை அவமதித்து, ஏளனம் செய்து பயமுறுத்தி தடைகளைப் போட்டார்கள். ஆனால், நெகேமியா முதலாவது ஜனங்களை அழைத்து அனைவருமாக தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். இரவும்-பகலும் ஜாமங்காக்கிறவர்களை ஏற்படுத்தி, பயப்படாமல் வேலையைத் தொடரும்படி ஜனங்களைத் திடப்படுத்தினான். கட்டுகிறவர்கள் அனைவரும் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டு வேலையைத் தொடரும்படி கட்டளையிட்டான். இவ்வழிகளை நெகேமியா கையாண்டதால் ஜனங்கள் எதிராளிகளைக் குறித்தோ, அவர்களுடைய எதிர்ப்பைக் குறித்தோ, எப்படிப் பழிவாங்கலாம் என்றோ சிந்திக்காமல், தேவனை நோக்கிப் பார்த்து தமது வேலைகளைச் செய்தார்கள்.

இன்று, நேரிட்டிருக்கிற எதிர்ப்புகளினால் நாம் சோர்ந்து தளர்ந்து பயந்து, ஆரம்பித்த நல்ல காரியங்கள் எதையாவது தொடராமல் இடைநிறுத்தி விட்டோமா? அல்லது, எதிராளிகளையும், அவர்களுடைய செய்கைகளையும் குறித்தே சிந்தித்துக்கொண்டு அவர்களைப் பழிக்குப் பழிவாங்கும் வழிகளைச் செயற்படுத்த முயலுகிறோமா? வேண்டாம், நமக்கு ஏற்படும் எதிர்ப்புகளை நாம் எதிர்கொள்ள ஒரேவழி தேவனை நோக்கிப் பார்ப்பதுதான். **'பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு'**(எபேசியர் 6:11,12) என்று எழுதிய பவுலின் எச்சரிப்பை மனதிற்கொண்டு, சத்தியம், நீதி, சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம், விசுவாசம் என்னும் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு ஜெபத்தில் தரித்திருப்போமாக. எவருக்கும் விரோதம் நினைக்காதபடிக்குக் கர்த்தர் நம்மைக் காப்பாராக.

இதுவரை யாருக்காவது விரோதமாக பழிக்குப் பழிவாங்கும் எண்ணங்கொண்டிருக்கிறேனா? தேவனை நோக்கிப் பார்த்து முன்செல்லுவதற்கும், விரோதியைக் குறித்தும் அவனது செயலைக்குறித்தும் சிந்தித்துக்கொண்டு என் மனதை நானே கறைப்படுத்திக்கொள்வதற்கும் உள்ள வேறுபாட்டை கண்டுள்ளேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயம் செய்யத் தயங்காதே!

செப்டெம்பர்
9
செவ்வாய்

வேத வாசிப்பு : நெகேமியா 5:1-19

**'அவர்கள் கூக்குரலையும், இந்த வார்த்தைகளையும் நான் கேட்டபோது, மிகவும் கோபங்கொண்டு, ...நீங்கள் செய்கிற காரியம் நல்லதல்ல. ....நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா?...' நெகேமியா 5:6,9**

பிறரின் தலையீடுகளால் நாடுகளுக்குள்ளும், உள்நாட்டுக்குள்ளும் மாத்திரமல்ல, சபைகளில், குடும்பங்களில், தனிப்பட்டவர்களின் வாழ்க்கையிலும் கூட பலவித பிரச்சனைகள் ஏற்படுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. மறுபுறத்தில் ஒருவருக்கொருவர் விரோதமாக முறையிடும்போதும் பலவித பிரச்சனைகள் தலைதூக்கத்தான் செய்கிறது. அதற்காக பிரச்சனைகளை அப்படியே விட்டுவிடமுடியாது. நெகேமியாவுக்கும் இப்படியாக பிரச்சனைகள் வந்தன. அதற்கு அவன் என்ன செய்தான்?

நெகேமியா அலங்கத்தைக் கட்ட ஆரம்பித்ததும் சமாரியா நாட்டின் தலைவன் சன்பல்லாத்தும் அவனோடுகூட தொபியாவும் அரபியரும் அம்மோனியரும் அஸ்தோத்தியரும் சேர்ந்து இத்திட்டம் நிறைவேறாதபடி எதிர்த்தார்கள். எருசலேமின் யூதர்கள் அல்லாத இவர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புகளை நெகேமியா தேவனின் துணையோடு மேற்கொண்டான். ஆனால், பிரச்சனைகள் ஓயவில்லை. இப்போது ஜனங்களுக்குள் அநேகர் தங்கள் சகோதரர்மேல் முறையிட ஆரம்பித்தனர். சாப்பிட்டுப் பிழைக்கும்படி தானியத்தைக் கடனாக வாங்கினோம் என்றனர் சிலர். வேறு சிலர் தமது நிலங்களை திராட்சத்தோட்டங்களை, வீடுகளை அடமானம் வைத்து தானியம் வாங்கினோம் என்றனர். இன்னும் சிலர் தமது பிள்ளைகளை அடிமைகளாகக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது என்றனர். தங்கள் நிலங்கள் கைமாறிவிட்டதால் தங்கள் பிள்ளைகளை மீட்கமுடியவில்லை என்றும் முறையிட்டனர். இம் முறைப்பாடுகளைக் கேட்ட நெகேமியா கோபங்கொண்டான். புறஜாதியாரிடம் சிறைப்பட்டவர்களைக் கஷ்டப்பட்டு மீட்டுவர, இங்கே இவர்கள் ஒருவரை ஒருவர் ஒடுக்குவதைக் கண்டு நெகேமியா ஆத்திரமடைந்தான். ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும்படி வாங்குகின்ற வட்டியை விட்டுவிடும்படி சொன்னான்.

இன்று நெகேமியாக்கள் தேவை. "ஒடுக்கப்படுகிற யாவருக்கும் கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்" (சங்.103:6). கர்த்தரின் பார்வைக்கு சகலமும் வெளியரங்கமாய் உள்ளது என்பதையும், அவருக்கே நாம் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம். ஆகவே, நம்மைச் சுற்றிலும் நடக்கின்ற அநீதிகளைக் குறித்து விழிப்பாயிருந்து, ஒடுக்கப்படுகிறவர்களுக்கு நியாயம் கிடைக்க நெகேமியாவைப்போல நாமும் செயற்படுவோமாக. கர்த்தர் நிச்சயம் நம்மில் மகிழுவார்.

நாம் எந்நிலையில் இருந்தாலும், நம்மைச் சுற்றியுள்ள ஒடுக்கப்படுகிற ஜனங்களையும், அவர்கள் படுகிற இன்னல்களையும் பார்க்கும்போது நாம் என்ன செய்கிறோம்? நமது சுயநலத்தை விட்டு, பிறருக்கு நீதி கிடைக்கும்படி நம்மால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலையில் விழுந்துவிடாதீர்கள்

செப்டெம்பர்

**10**

புதன்

வேத வாசிப்பு : நெகேமியா 6:1-19

**'...என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை என்றேன்.'** நெகே. 6:11

தன்னை முற்றுமாய்க் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த ஒரு சகோதரன் காட்டுப் பகுதியிலுள்ள கிராமம் ஒன்றிற்குச் சென்று அங்கிருந்த ஏழை மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க ஆரம்பித்தான். நாட்கள் சென்றதும் அவன் தனது சொந்த நாட்டின் கிறிஸ்தவ மதத்தலைவர்களை அணுகி, அவர்களின் உதவியோடு கிராம மக்களின் தேவைகளைச் சந்திக்கவும் வழி செய்தான். அவனுடைய விடாமுயற்சியினால் அக்கிராமம் மட்டுமன்றி அயல் கிராமங்களிலும், சபைகளும், உதவி நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், இவ்வளர்ச்சியைக் கேள்விப்பட்ட சிலர் அக் கிராமங்களைத் தாம் பொறுப்பேற்கும் நோக்கத்தோடு அந்த சகோதரனை வேறு கிராமங்களுக்குத் திசைதிருப்பினார்கள். மதத்தலைவர்களின் உள்நோக்கைப் புரிந்துகொள்ளாத இச் சகோதரன் அவர்களுடைய பேச்சை நம்பி, அவர்கள் விரித்த வலையில் விழுந்தான். இதனால் அவன் அந்த இடத்தைவிட்டுச் செல்ல நேர்ந்தது.

எதிர்ப்புகள் மத்தியிலும் நெகேமியாவின் தலைமையில் அலங்கம் கட்டி முடிவடையப் போவதைக் கண்ட எதிராளிகள், தமது திட்டங்கள் வாய்க்க வில்லை என்று உணர்ந்துகொண்டனர், எனவே, நெகேமியாவை தமது வலைக் குள் தந்திரமாக வீழ்த்த திட்டமிட்டனர். பொல்லாப்புச் செய்யும் நோக்கோடு நெகேமியாவைத் தம்மோடு வந்து பேசும்படி நான்குமுறை அழைத்தார்கள். முத்திரைப் போடாத கடிதத்திற்கூடாக நெகேமியாவைப் பயமுறுத்தித் தம்மோடு பேசவரும்படி கூறினார்கள். நெகேமியாவைக்குறித்து பொய்யான தீர்க்கதரிசனம் கூற வைத்தார்கள். ஆனால், இவையெவற்றிற்கும் பயப்படாத நெகேமியா, "என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப்போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை" என்று கூறி, தனது பணியைத் தொடர்ந்தான்.

சத்துராதியான சாத்தான், தேவபிள்ளைகள் தம் பணியைத் தொடராத படி அவர்களைத் தடுத்து நிறுத்தப் பலவித வழிகளிலும் தந்திரமாக வலைகளை வீசிக்கொண்டேயிருப்பான். இப்படியான எதிர்ப்புகளைச் சந்திக்கும்போது இவ் வேலையைவிட்டு விலகிப்போனால் நலம் என்று எண்ணத்தோன்றும். அல்லது, அந்த சகோதரன்போல விரித்த வலையில் விழுந்துவிடவும் நேரிடும். 'உத்தம னுக்குக் கர்த்தர் துணை'. அந்த நம்பிக்கையுடன் நெகேமியாவைப்போல, சத்துருவின் சதியைக் கண்டு பயப்படாமல் முன் செல்லுவோமாக.

இதுவரை நான் எந்தவிதத்திலாவது சத்துரு விரித்திருப்பது வஞ்சக வலை என்று உணராமல் அதில் அகப்பட்டிருக்கிறேனா? அன்று நெகேமியாவிற்கு இருந்த தைரியமும் பெலமும் இன்று எனக்குள் இருக்கிறதா? சிந்திப்போம். கர்த்தரு டைய துணையுடன் புதுப்பெலன் பெற்றவர்களாகச் செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கு ஏற்ற தகுதி

செப்டெம்பர்

**11**

வியாழன்

வேத வாசிப்பு : நெகேமியா 7:1 - 4

**'நான் என் சகோதரனாகிய ஆனானியையும், அநேகரைப் பார்க்கிலும் உண்மையுள்ளவனும், தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத் தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன்.'** நெகேமியா 7:2

பட்டப்படிப்பை முடித்து, அதற்கேற்ற வேலையைப் பெற்றான் சுரேஷ். நாட்கள் சென்றதும் தன் முன்னேற்றத்திற்காக தொடர்ந்தும் மேற்படிப்புகளை மேற்கொண்டு, தான் வேலைபார்த்த இடத்திலேயே மேலதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தான். ஆனால், அவனைவிட படிப்புத் தராதரத்தில் குறைந்த வேறொரு வாலிபன் அந்த வெற்றிடத்திற்குத் தெரிவானது சுரேஷிற்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தனது அதிகாரியிடம் சென்று விசாரித்தபோது, "ஒருவனின் படிப்பு தராதரம் அவசியம்; ஆனால் அதிலும் மேலாக அவனுடைய உண்மையும், நேர்மையுமே மிக அவசியம். அதற்கே முதலிடம் கொடுக்கிறோம்" என்று பதிலளித்தார் அவர்.

எருசலேமின் காவல் விசாரணை என்பது மிக முக்கியமானதொரு பொறுப்பு. அந்தப் பணிக்குத் திறமையைவிட உண்மையும், தேவனுக்குப் பயந்தவனுமே உகந்தவன் என்று நெகேமியா கண்டுகொண்டான். இவற்றையே தேவனும் தன் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கிறார். இத் தகுதியை யோசேப்பு கொண்டிருந்ததால்தான் போர்த்திபாரின் வீட்டிலும், சிறையிலும்கூட யோசேப்புக்குப் பொறுப்புகள் அளிக்கப்பட்டது. யோசேப்பின் உண்மைத்துவமே அவனை எகிப்தின் அதிகாரியாக உயர்த்தியது.

இன்று உலகம் படிப்பு, தராதரம், அந்தஸ்து என்று இவற்றுக்கே உலகம் முதலிடம் கொடுத்து, அப்படிப்பட்டவர்களையே தேடி அலைகிறது. இவையனைத்தும் நிச்சயம் முக்கியமானவையே. ஆயினும், இவற்றுக்கும் மேலாக தேவனுக்குப் பயப்படும் பயம், உண்மை, உத்தமம், நேர்மை இவையே ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவையான மிக முக்கிய தராதரங்களாகும். இவை இல்லையானால் நாம் எந்த உயர்ந்த நிலையில் இருந்தாலும், அந்த நிலையில் தேவனுக்கும், சக ஊழியருக்கும், நம்மைச் சுற்றியுள்ள ஜனங்களுக்கும் ஏற்றவர்களாக வாழமுடியாது. தேவன் அழைத்த அழைப்பில் உண்மையாய் இருக்கவும் முடியாது. ஆகையால், படிப்பிற்கும் தகுதிக்கும் முதலிடம் கொடுத்து, அதில் உயரவேண்டும் என்று இராப்பகலாய் பாடுபடும் நாம், சற்று நம்மைக் குறித்துச் சிந்திப்போமாக. அவற்றிற்காக பாடுபடும் நாம், தேவனுக்குப் பயப்படும் பயம், உண்மை, உத்தமம், நேர்மை என்பவற்றுடன் தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாய் வாழவும் முயற்சிக்கலாமே! திறமையை உலகம் பாராட்டும். ஆனால் தேவன் பாராட்டவேண்டுமானால் உண்மையும் அவசியம்.

இதுவரை என் வாழ்வில் நான் எதற்கு முதலிடம் கொடுத்துள்ளேன்; தேவ பயத்திற்கா அல்லது திறமைக்கும் தராதரத்திற்குமா? தேவபயமும் உண்மையுமுள்ளவராயிருந்தும் உலகத்தால் நிராகரிக்கப்பட்ட தருணங்களை நாம் சந்தித்திருக்கிறோமா? அத்தருணங்களில் நமது பதிலுரை என்னவாயிருந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு முதலிடம்?

செப்டெம்பர்

**12**

வெள்ளி

வேத வாசிப்பு : நெகேமியா 8:1-5

**'ஜனங்கள் ...கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று வேதபாரகனாகிய எஸ்றாவுக்குச் சொன்னார்கள்.'** நெகே.8:1

இன்று பூமியதிர்ச்சி, சூறாவளி, புயல், போர் என்று பல வழிகளிலும் அழிவுகள் அதிகரித்துவருகிறது. இதனால் வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்று பல கட்டிடங்கள் நாசமாகின்றன. இப்படிப்பட்ட சமயங்களில் வசதிபடைத்த உலக நாடுகளிலிருந்து இயங்குகின்ற கருணை நிலையங்கள், சபைகள், தனிப்பட்டவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் பாதிக்கப்பட்ட ஜனங்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து கட்டிடங்களையும் சீர்திருத்துகின்றனர்; அல்லது, புதிதாகக் கட்டுகின்றனர். இப்படியாக தமக்கு உதவி செய்கிறவர்களை மக்கள் பலவழிகளிலும் வரவேற்று கனப்படுத்துவர். உதவிகள் செய்தவர்களைக் கனப்படுத்துவது மிகவும் சிறந்தது.

ஆனால், இடிந்துபோயிருந்தவை மீளக்கட்டியெழுப்பப்பட்ட எருசலேமில் அன்று இஸ்ரவேல் மக்கள் முதலில் யாரை, எப்படி கனப்படுத்தினார்கள்? உடைபட்டிருந்த எருசலேம் அலங்கமும், அதின் வாசல்களும் பல எதிர்ப்புகளின் மத்தியிலும் நெகேமியாவின் தலைமையிலும் திருத்தி அமைக்கப்பட்டதும், ஜனங்கள் ஒருமனப்பட்டுக் கூடி நெகேமியாவையும் எஸ்றாவையும் உயர்த்திக் கொண்டாடாமல், முதலாவது, கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொண்டுவரவேண்டும் என்று வேதபாரகனான எஸ்றாவுக்குச் சொன்னார்கள் (நெகே.8:1) என்று வாசிக்கின்றோம். ஆம்! இங்கு ஜனங்கள் அலங்கத்தையும் ஆலயத்தையும் மீளக் கட்டியெழுப்பிய நெகேமியாவுக்கும் எஸ்றாவுக்கும் அல்ல; முதலாவதாக, "கர்த்தருக்கே முதலிடம்" கொடுத்தார்கள் என்பது தெரிகிறது. இல்லையானால், நியாயப் பிரமாணங்களைக் கேட்க முன்வந்திருப்பார்களா!

ஏதோவொரு வகையில் நாமும் பல இழப்புகளுக்கூடாகக் கடந்து வந்திருக்கலாம்; அல்லது, இன்றும் கஷ்ட நிலைமைகளில் இருக்கலாம். இப்படியான வேளைகளில் யாரோ ஒருவருக்கூடாகத் தேவன் நம் தேவைகளைச் சந்திக்கக்கூடும். அப்போது நாம் அவர்களைக் கனப்படுத்தி நன்றியாக வாழ வேண்டியது மிக அவசியம். ஆனால், அதற்கும் மேலாக அந்த மனிதரை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்த தேவனை நாம் மறக்கலாகாது. தேவனுக்கே நாம் முதலில் நன்றிசொல்ல வேண்டும். அவர் அருளிய வேதத்தின்படி வாழவும், அவருக்கே பிரியமானபடி நடக்கவும் நாம் நம்மை ஒப்புவிப்பதே மிக முக்கியமாகும். அதைவிட்டு, மனிதர் செய்த உதவிகளுக்காக அவர்களுக்கு நன்றியாய் இருப்பதைவிட்டு, அவர்களுக்கு அடிமைகளாகிவிடக்கூடாது. அந்த உதவியாளர்களை நமக்குத் தந்தவர் தேவன் அல்லவா!

இதுவரை நமது குறைவுகள் இழப்புகளில் நமக்கு உதவி செய்தவர்கள் யார் யார்? அவர்களுக்காக நீங்கள் தேவனுக்கு நன்றி சொன்னதுண்டா? அவர்களை நமக்குத் தந்த தேவனுக்கு நாம், எமது முதல் நன்றியைச் சொல்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த வேதத்தில் எதைக் காண்கிறோம்?



வேத வாசிப்பு : நெகேமிய 8:6-18

**'ஜனங்கள் எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, அழுதபடியால்....' நெகேமியா 8:9**

உலகிலேயே இதுவரை மிகவும் அதிக எண்ணிக்கையில் அச்சிடப்பட்ட புத்தகம் என்றால் அது பரிசுத்த வேதாகமம்தான். இவ்வேதாகமமானது 450 மொழிகளுக்கும் மேலாக, நூறு மில்லியனுக்கும் அதிகமான எண்ணிக்கையில் அச்சிடப்பட்டுள்ளது. இன்னும் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படியான வேதாகம புத்தகத்தை இன்று நாமும் வாசிப்பது தியானிப்பது நமக்குப் பெரும் சிலாக்கியம் அல்லவா!

ஆனால், நெகேமியாவின் காலத்தில் இப்படியான வேதப் புத்தகம் இருக்கவில்லை. அவர்களிடம் இருந்தது தேவன் மோசேக்கூடாகக் கொடுத்த கட்டளைகளும், கற்பனைகளும் அடங்கிய நியாப்பிரமாணப் புஸ்தகமே. மக்கள் தேவனைத் தொழுதுகொள்ள ஒன்றுகூடும்போது வேதபாரகர்கள் மட்டும் இந்த நியாயப்பிரமாணப் புத்தகத்தை அனைத்து ஜனங்களும் கேட்க வாசிப்பார்கள். எருசலேம் அலங்கம் முழுமையாகத் திருத்தியமைக்கப்பட்டதும் ஜனங்கள் இந்த நியாயப்பிரமாணப் புத்தகத்தைக் கொண்டுவரும்படிக்கே கேட்டனர். வேதபாரகனாகிய எஸ்றா இந்தப் புத்தகத்தைக் கொண்டுவந்து, சகல ஜனங்களும் கேட்க வாசித்து, அதின் அர்த்தத்தை வெளிப்படுத்தினான். அந்த வார்த்தைகளைக் கேட்ட ஜனங்கள் அழுதார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காரணம், தாம் இதுவரை தவறவிட்ட, தம்மீது கர்த்தர் கொண்டிருந்த திட்டங்களையும், ஒழுங்குகளையும் அறிந்துகொண்டதால் சந்தோஷப்பட்டனர். அவற்றால் தம் வாழ்வைத் திருத்திக்கொண்டு அதில் மகிழ்ந்திருந்தனர்.

நமது சொந்த பாஷையில் எழுதப்பட்ட வேதாகமத்தை வைத்திருக்கும் நாம், இன்று எதற்காக அதை வாசிக்கிறோம்? சிலர் சிறுவயது முதல் பெற்றோரால் பழக்கப்பட்டதால் வாசிக்கின்றனர். சிலர் ஆறுதல், சமாதானம், வழிநடத்து தலைத்தேடி வாசிக்கின்றனர். சிலர் தேவனை இன்னும் அறிந்துகொள்ளவேண்டுமென்ற வாஞ்சையோடு வாசிப்பார்கள். இவை அனைத்தும் நல்ல காரியங்களே. ஆயினும், அன்று இஸ்ரவேலர் நியாயப்பிரமாணப் புத்தகம் வாசிக்கப்பட்டபோது, தேவனைவிட்டு விலகிப்போன தமது "ஆவிக்குரிய நிலையைக் கண்டு" அழுது தங்களைத் திருத்திக்கொண்டனர். இன்று நாம் என்ன செய்கிறோம்? அதை வெறும் புத்தகமாக நினைத்து வாசிக்கிறோமா? நமது ஆவிக்குரிய நிலையை உணர்ந்து தேவனுக்கேற்ப வாழும்படி நாம் நம்மைத் திருத்திக்கொண்டு தேவனை மகிழ்விக்கவேண்டும் என்ற நோக்கோடு வாசிக்கிறோமா? "தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியில் என்னை நடத்தும்." (சங்.139:23, 24) இதுவே நமது ஜெபமாகட்டும்.

வேதத்தை வாசிக்க தியானிக்க என்னை தேவனுக்கு முன்பாக நிறுத்தி ஆராய எனக்கிருக்கும் தடைகள் என்ன? நான் உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவ அறிக்கை



வேத வாசிப்பு : நெகேமியா 9:1 -37

**'தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவை களை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.' நீதிமொழிகள் 28:13**

மனிதன் எப்போது தேவனுடைய கட்டளையை மீறி கீழ்ப் படியாமற்போனானோ அன்றே மனுக்குலத்தைப் பாவம் ஆட்கொண்டுவிட்டது. அதிலிருந்து விடுபட்டு, திரும்பவும் மனிதன் தேவனோடு தொடர்புகொள்ளவேண் டுமாகில் அவன் தன் பாவங்களை உணர்ந்து அறிக்கையிடவேண்டியிருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் பலவேளைகளிலும் கீழ்ப்படியாமையால் பாவத்திற்கு அடிமைகளாகினார்கள். இதனால் அவர்கள் எதிராளிகளினால் சிறைபிடிக்கப்பட் டார்கள். ஆனால், மனதுருக்கமும், இரக்கமுமுள்ள தேவன் அவர்களது தவறு களை உணர்த்தியபோதெல்லாம் அவர்கள் தங்கள் குற்றங்களை அறிக்கை செய்து பாவ வழிகளிலிருந்து மனந்திரும்பினார்கள் என்று காண்கிறோம்.

இதையே தேவன் நெகேமியாவின் காலத்திலும் செய்தார். எருசலேமின் அலங்கமும், வாசல்களும் திருத்தியமைக்கப்பட்ட பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் ஒன்றுகூடி முதலாவது தேவனுடைய நியாயப்பிரமாணத்தை வாசிக் கும்படி கேட்டுக்கொண்டு அதற்கு செவிகொடுத்தார்கள். அந்த வார்த்தைகளால் உணர்த்தப்பட்டபோது தங்கள் பாவங்களையும், தங்கள் பிதாக்களின் அக்கிர மங்களையும் அறிக்கை செய்தார்களென்று கூறப்பட்டுள்ளது (நெகேமியா 9:2). ஆனால் அதற்கு முன்னர் தாங்கள் செய்த பாவங்களைச் சரிசெய்தார்கள் என்றும் வாசிக்கிறோம். இதுவே உண்மையான பாவஅறிக்கை. அவர்கள் மகா சத்தமாய் ஓலமிட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

தேவனுடைய வார்த்தை நமது நிலைமையை உணர்த்தும்போது, உண்மையாகவே மனந்திரும்ப நினைக்கிறவனால் அதனை வெகு எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. அவன் உள்ளத்திலே குத்தப்படுகின்றான். அது கண்ணீராய் பெருக்கெடுக்கும். இதைத்தான் அன்று அந்த மக்களிடம் காண்கி றோம். இன்று நமது காரியம் என்ன? ஒன்று, உண்மையான நொருங்குதல், செய்த பாவத்தை உணர்ந்து அதை விட்டுவிடுதல், அதனை அறிக்கையிட்டுப் புலம்புதல், இவை நம்மிலே காணப்படுகிறதா? அடுத்தது, நமது பாவங்களை யும், நமது குடும்பத்தாரின் பாவங்களையும் அறிக்கைசெய்து ஜெபிக்கிறோமா? அல்லது, பாவ அறிக்கையைக் கேலியாக எண்ணி, அல்லது, நாம் பாவமே செய்வதில்லை என்று சொல்லுகிறோமா? **'நமக்குப் பாவம் இல்லையென்போ மானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்'** (**1யோவான் 1:8**). இப்படியிருக்க நம்மை நாமே வஞ்சிக்கலாமா! பாவங்கள் மன்னிக்கப்படும்போது கிடைக்கின்ற விடுதலையை நாம் அனுபவித்துத்தான் உணரவேண்டும்.

வேத வாக்கியங்கள் நம்மையும் நமது தவறுகளையும் உணர்த்தும்போது அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் நமக்குண்டா? அப்படியாக ஏற்றுக் கொள்ள முடியாதபடிக்கு நமக்குள் இருக்கும் தடைகள் என்ன? கடைசியாக எப்போது நான் உணர்ந்து பாவஅறிக்கை செய்தேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி செய்துகொள்!



வேத வாசிப்பு : நெகேமியா 10:1-39

**'...நாங்கள் உறுதியான உடன்படிக்கைபண்ணி அதை எழுதி வைக்கிறோம்... என்றார்கள்.' நெகேமியா 9:38**

எருசலேம் நகரத்தின் அலங்க திருத்தவேலைகள் பூர்த்தியானதும் இஸ்ரவேல் ஜனங்கள் முதலாவதாக தமது தேவனைக் கனப்படுத்தி, அவர் தமக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்தின் புத்தகத்தை வாசிக்கக் கேட்டனர். அதன்போது தம் வாழ்க்கையின் நிலையைக்கண்டு மனமுடைந்து தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்தார்கள். அறிக்கை செய்ததோடு நின்றுவிடாமல், தாம் செய்த பாவங்களைத் திரும்பவுமாகச் செய்ய மாட்டோம் என்று உறுதியான உடன்படிக்கை பண்ணினார்கள்.

இப்படியாக அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையில் மூன்று முக்கிய காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று, அவர்கள் உண்மையாய்க் கர்த்தரைச் சேவித்து அவரது கட்டளைகளைக் கைக்கொள்வதாக உடன்படிக்கை செய்தார்கள் (வச.29). அடுத்தது, அந்நிய நுகத்தில் பிணைக்கப்படாமல் தங்களைக் காத்துக்கொண்டு உலகத்திலிருந்து விலகி இருப்பதாக உடன்படிக்கை செய்துகொண்டார்கள் (வச.30-31). கடைசியாக, தங்கள் நேரத்தினாலும், பணத்தினாலும், உடமைகளினாலும் தேவனுடைய வேலையை ஆதரிப்பதென்றும் உடன்படிக்கை செய்தார்கள் (வச.32-39).

இஸ்ரவேல் ஜனங்கள் செய்துகொண்ட இந்த உடன்படிக்கை அவர்களுக்கு மட்டுமல்ல, தேவனை நோக்கிக் கூப்பிடுகிற பிள்ளைகள் ஒவ்வொருவரும் இன்றைக்கும் செய்துகொள்ளவேண்டிய உடன்படிக்கைகளாகும். ஏனெனில் நாமும் உண்மையாக நம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் தேவனைத் தேட அழைக்கப்பட்டிருக்கின்றோம். அந்நிய நுகத்தில் பிணைக்கப்பட்டு, உலகத்தோடொத்த வாழ்க்கை வாழ்வதை விட்டுவிடவேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கின்றோம். தேவனுக்கும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் நமது நேரத்தையும், பணத்தையும், உதவிகளையும் செய்து அவர்களை ஆதரிக்கவும் கட்டளை பெற்றிருக்கின்றோம்.

இவற்றைக் குறித்து வேதத்தில் அநேக தடவைகள் நாம் வாசித்துள்ளோம். பல தடவைகள் செய்திகளுக்கூடாகவும் கேட்டிருக்கின்றோம். ஆனால், இவற்றுக்கு நாம் செவிசாய்த்துக் கீழ்ப்படிந்துள்ளோமா? நாம் உடன்படிக்கையில் இணையும்போது, நாம் தொடர்ந்து பாவம் செய்யாதபடிக்கு அது நமக்கு ஒரு வேலியைப்போல அமைகின்றது. நாம் செய்கின்ற உடன்படிக்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, தேவனுக்கும் நமக்கும் விரோதமாக நாம் தவறிப்போகக்கூடாது என்று அது நம்மை எச்சரிக்கிறது. உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கின்ற தேவன் நமது தேவன். அவருடைய பிள்ளைகள் நாங்கள் எப்படி?

எடுத்த தீர்மானங்கள், செய்த உடன்படிக்கைகளில் நிலைகொண்டு தேவனுக்காக வைராக்கியமாய் வாழமுடியாதபடி நம்மைத் தடுக்கின்ற காரணிகள் எவை? அவற்றை அடையாளங்கண்டு மேற்கொண்டு ஜெயம்பெற நான் என்ன செய்யப் போகிறேன்? என்பதைக்குறித்து சிந்தியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ சாதாரண மனிதனா!

செப்டெம்பர்
16
செவ்வாய்

வேத வாசிப்பு : 1தீமோத்தேயு 4:1-16

**'...ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.'** 1தீமோத்தேயு 4:12

ஒரு சாதாரண மனிதன் எவரும் எதிர்பார்த்திராத நேரத்தில் ஒரு காரியத்தையோ, ஒரு பணியையோ செயற்படுத்த முற்படும்போது அவனை அறிந்தவர்கள், 'இவனால் இது கூடுமா' என்ற கேள்வியை எழுப்புவார்கள். ஏனெனில், அவனால் அது முடியாது என்று அவர்கள் எண்ணுமளவுக்கு அவன் வெகு சாதாரணமான ஒருவன்.

நெகேமியா ஒரு சாதாரண மனிதன்தான். ஆனால், இடிந்துபோன அலங்கத்தையும், அதின் வாசல்களையும் திருத்தியமைத்து, தன் ஜனங்களை அவர்களது இன்னல்களிலிருந்து மீட்க முன்சென்றபோது அவனுக்குள் இருந்த அசாதாரணம் வெளிப்பட்டது. நெகேமியா ஒரு சாதாரண மனிதனாயினும் தான் பெற்ற தரிசனத்தை நிறைவேற்றியமைக்கு ஏழு முக்கிய காரணங்களை நாம் காணலாம். அவையாவன: 1.தேவ பயத்தினாலும், தேவ ஞானத்தினாலும் நிரப்பப்பட்டவனாயிருந்தான் 2.தனிச் சிறப்புக் குணங்களைக் கொண்டிருந்தான். 3.வார்த்தையிலும் நடத்தையிலும் உண்மை உத்தமம் நேர்மை உள்ளவனாய் இருந்தான். 4.விடாமுயற்சியுள்ள ஒருவனாயிருந்தான். 5.தனது குறிக்கோளை விட்டு விலகாதவனாயிருந்தான். 6.அவன் காலத்தில் அரசியல் தலைவன்போல் செயற்பட்டாலும் தன் ஜனங்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுச்சியை ஏற்படுத்தினான். 7.எதிர்ப்புகள் மத்தியிலும் அமைதியைக் கடைப்பிடித்து தன் பணியிலுள்ள காரியங்களைச் செயற்படுத்தினான்.

நாம் சாதாரணமானவர்கள்தான்; ஆனால் நமக்குள் ஒரு அசாதாரண பெலன் உண்டு. உலகம் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டாலும் நமக்குள் கிரியை செய்கிறவர் யார் என்பதை நாம் அறிவோம். தேவனுக்கு ஊழியம் செய்வதோ, அல்லது தேவனால் பெற்ற ஒரு தரிசன திட்டத்தை நிறைவு செய்வதோ ஒரு சாதாரண காரியம் அல்ல. ஆனால், நாம் தேவபெலத்தோடு முன்செல்லலாம். தேவபிள்ளைகளாகிய நாம் முதலாவது மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் இருக்கவேண்டும். இதைப் பவுல் அப்போஸ்தலன் சபையினருக்கும், தனிப்பட்டவர்களுக்கும் பல தடவைகள் புத்திமதியாகக் கூறினார். குறிப்பாகத் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது, "....விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என்று புத்திமதி கூறினார். தேவகிருபை நமக்கிருப்பதால் நம்மால் அது கூடும்.

நாம் சாதாரண மனிதராயினும் தேவனுடைய அழைப்பை உணர்ந்து, ஒருவனும் நம்மை அசட்டைபண்ணாதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருந்து, நெகேமியாவின் வாழ்க்கையில் காணப்பட்ட அந்த ஏழு முக்கிய காரணிகளையும் நம் வாழ்க்கையிலும் செயற்படுத்தி வெற்றி காண்போமாக.

நான் மிக சாதாரணமானவன்தானே என்று என்னைக்குறித்து நானே தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த வேளைகள் இருந்ததுண்டா? கைவிட்ட எந்தக் காரியத்தை யாவரும் ஆச்சரியப்படத்தக்கதாக முன்னெடுக்கப் போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தரின் சமுகத்தைவிட்டு ஓடாதே?

செப்டெம்பர்
**17**
புதன்

வேத வாசிப்பு : சங்கீதம் 139:1-16

**'...தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.' யோனா 1:3**

நாட்டின் சூழ்நிலை காரணமாக, பாதுகாப்பை மனதில் கொண்டு, தனது சகோதரர் வாழுகின்ற வெளிநாடொன்றுக்குப் போகும்படி பயணத்திற்கான வசதிகளுடன் தன் மகனை அனுப்பிவைத்தாள் ஒரு தாய். ஆனால் மகனோ, அந்த நாட்டிற்குப் போகவிரும்பாது, வேறொரு நாட்டிற்குப் பயணமானான். அவன் இன்று எங்கே என்ன செய்கிறானோ?

இந்த மகனைப்போலவே, வேதாகமத்தில், கர்த்தர் காண்பித்த நினிவே பட்டணத்திற்குப் போகும்படி கர்த்தரிடமிருந்து கட்டளைப் பெற்றான் யோனா. ஆனால் அவன், தான் போகவேண்டிய இடத்திற்குப் போகாமல் அதற்கு எதிர்த் திசையிலிருந்த நாடொன்றிற்குப் போகும்படியாகக் கப்பலேறிய சம்பவத்தை நாம் வாசித்திருக்கிறோம்.

யோனா இஸ்ரவேலில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளில் ஒருவன். இவன் வாழ்ந்த காலத்தில் அசீரியர்களின் தலைநகரமான நினிவே ஒரு மாநகரமாக மட்டுமல்ல, பாவம் பெருகிய இடமாகவும் இருந்தது. எனவே, அந்த நினிவே மக்களுக்கு வரவிருந்த அழிவைக்குறித்து அவர்களுக்கு எச்சரிக்கும்படி யோனா தீர்க்கதரிசியை நினிவே நகரத்திற்கு உடனடியாகப் போகும்படி கட்டளையிட்டார் கர்த்தர். யோனாவோ, தேவனின் அழைப்பிற்குக் கீழ்ப்படியாமல் நினிவேக்குப் போகாமல் தேவனுடைய சமுகத்தைவிட்டே ஓடிவிடும்படி தர்ஷீசுக்குப் போக ஆயத்தமாயிருந்த கப்பலில் ஏறினான். கர்த்தருடைய கட்டளையை மீறும் போதெல்லாம் நாம் அவருடைய சமுகத்தையும் இழந்துவிடுகிறோம் என்பதைக் குறித்து நாம் சிந்திப்பதில்லை.

மனித வாழ்வில் தேவசமுகம் என்று கூறும்போது, மனிதன் தேவனோடு இணைந்து வாழுவதையும், அதன்போது தேவனுடைய கிரியைகள் மனிதனுடைய வாழ்வில் வெளிப்படுவதையும் அது எடுத்துக் காட்டுகின்றது என்று கூறலாம். இப்படியான இணைப்பின் ஐக்கியத்தில் மனிதன் தேவனின் சத்தத்தைக் கேட்கிறவனாகவும், தனது வாழ்க்கையில் தேவ சித்தத்தையும், வழிநடத்துதலையும் நன்கு அறிந்தவனாகவும் இருப்பான். இப்படிப்பட்ட ஒரு மனிதன் தேவ சித்தத்தையும், வழிநடத்துதலையும் நன்கு அறிந்திருந்தும், அவற்றுக்குக் கீழ்ப் படியாமல், தேவனுடைய கட்டளைக்கு முரணாக, தான் விரும்பிய வழியில் தன் விருப்பப்படி செல்ல முயற்சிப்பானாகில் அப்பொழுதே அவன் தேவசமுகத்தில் இருந்து விலகி ஓடுகிறவனாகவே இருப்பான். அதன் விளைவுகள் மகா பயங்கரமாயிருக்கும். கடின பாதையாயினும் தேவசமுகத்தில் இருப்பதுவே நமக்கு நல்லது. கர்த்தர் அதனை மேன்மையானதாக மாற்றுவார்.

தேவ சமுகத்திலிருந்து விலகி வேறு திசை நோக்கி ஓடிய தருணங்கள் நமது வாழ்வில் நிகழ்ந்ததுண்டா? அதற்குரிய காரணங்கள் என்ன? நாம் அடைந்த துன்பங்கள் என்ன? தேவதிட்டத்திற்குள் அடங்கி அவர் விருப்பம் நிறைவேற்ற முடியாதபடி நமக்கிருக்கும் தடைகள்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலட்சிய மனப்பான்மை

செப்டெம்பர்
**18**
வியாழன்

வேத வாசிப்பு : யோனா 1:4-6

**'கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார். ...யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப்போய்ப் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரைபண்ணினான்' யோனா 1:4,5**

அநேக வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில், பண்ணையிலிருந்து நெடுந்தீவுக்குப் படகொன்றில் சென்ற அனுபவம் எனக்குண்டு. அப்போது படகின் மேல்தட்டிலிருந்து தேவனுடைய உன்னத படைப்பை நினைத்து ஆச்சரியப்பட்ட நான், சிறிது நேரம் படகின் கீழ்த்தட்டில் அமர்ந்திருக்கச் சென்றேன். ஆனால், அங்கே அமைதியாக அமர்ந்திருக்கக்கூடாதபடி அலைகள் எழும்பிய வேகத்தினால் படகு மேலும் கீழுமாக மிகவும் வேகமாக ஆடிக்கொண்டிருந்தது. இந்த ஆட்டத்தை யார்தான் அலட்சியம்செய்து அமைதியாக பயமின்றி இருக்க இயலும்? அப்போது, யோனா எப்படி தூங்கியிருப்பான் என சிந்தித்தேன்.

நினிவே பட்டணத்திற்குப் போவதற்கு தேவனால் கட்டளைபெற்ற யோனா, தான் செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லாது, அவ்விடத்திற்கு எதிர்த் திசையிலுள்ள நாட்டிற்குப் பயணமாகிக்கொண்டிருந்தான். ஆனால் அவன் தான் நினைத்த இடத்திற்குச் செல்லமுடியாதபடி தேவன் சமுத்திரத்தின்மேல் பெருங் காற்றை வரவிட்டார். இக்காற்றினால் கப்பல் உடைந்துபோய்விடுமோ என்று எண்ணுமளவுக்கு கப்பல் ஆடியது. கப்பலிலிருந்த அனைவரும் பயந்து தங்கள் தெய்வங்களை நோக்கிக் கூப்பிட்டார்கள். ஆனால், யோனாவோ அயர்ந்து நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான். இதைக் கண்ணோக்கிய கப்பலின் மாலுமி யோனா எழுப்பி, தாம் அழிந்துபோகாதபடி அவனும் அவனுடைய தேவனை நோக்கி கூப்பிடும்படி கூறினான். ஆனால், யோனாவோ சமுத்திரத்திலே ஏற்பட்ட பெருங்காற்றையும் மாலுமியின் வேண்டுகோளையும் "அலட்சியம்" செய்தான்.

"அலட்சிய மனப்பான்மை!" இது இன்று நம் அநேகருடைய வாழ்க்கையில் காணப்படும் ஆபத்தான மனப்பான்மையாகும். இந்த மனப்பான்மையுள்ளவர்கள், வாழ்க்கையில் ஏற்படுகின்ற எதிர்பாராத சூழ்நிலைகள், பாதகமான நிலைமைகளூக்கூடாக கர்த்தர் இவர்களுடன் பேசும்போது அவர் சத்தத்திற்குச் செவிகொடுக்காதவர்களாகவும், தேவபயமற்றவர்களாகவும், தேவ சமுகத்தை விட்டு இன்னமும் விலகிச் செல்லுகிறவர்களுமாகவே இருப்பார்கள். இது இறுதியில் மிகவும் பரிதாபமான நிலைமைக்கு இட்டுச்சென்றுவிடும். ஆகவே, யோனாவைப்போன்று நாமும், தேவ உணர்த்துதலை அலட்சியம்செய்து, நமது சுயபாதையில் செல்லுவோமானால், இன்றே மனந்திரும்புவோமாக. அலட்சிய மனப்பான்மை ஆபத்தையே விளைவிக்கும். தேவ சமுகத்தில் வாழும் வாழ்வு சமாதானத்தையே தரும்.

இதுவரைக்கும் நான் அலட்சியம் செய்த காரியங்கள் ஏதேனும் இருக்கிறதா? அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏற்படக் காரணங்கள் என்ன? நான் தேவனோடு இணைந்து செயற்பட்ட சந்தோஷ அனுபவங்கள் உண்டா? தியானிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான அறிக்கை

செப்டெம்பர்

19

வெள்ளி

வேத வாசிப்பு : யோனா 1:7-17

**'அதற்கு அவன் (யோனா): நான் எபிரெயன், சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றான்.' யோனா 1:9**

"வேலைதலத்தில் என்கூட பணிபுரியும் பிற மதத்தவர்கள் தங்கள் சொந்த நம்பிக்கைகளைக் குறித்தும், தமக்குரிய கட்டுப்பாடுகள் குறித்தும் பேசுவதுண்டு. ஆனால், நான் ஒரு கிறிஸ்தவள் என்பதையோ, கிறிஸ்துவைக்குறித்தோ யாரிடமும் பகிர்ந்துகொள்வதில்லை" என்றாள் ஒரு கிறிஸ்தவ சகோதரி. அவளுக்குப் பயமோ கூச்சமோ யாரறிவார்!

ஆனால் யோனா அப்படிப்பட்டவன் அல்ல. கடலின் கொந்தளிப்பு அமர வேண்டுமென்று பயணிகள் அனைவரும் தத்தமது தெய்வங்களை நோக்கிக் கூப்பிட்டனர். அத்துடன், இக்கொந்தளிப்பு யார் நிமித்தம் ஏற்பட்டது என்று சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள். அது யோனாவின் பெயருக்கு விழுந்தது. அவர்கள் யோனாவிடம், யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டதென்று தமக்குச் சொல்ல வேண்டுமென்றும், "நீ யார்? உன் தொழிலென்ன? நீ எங்கிருந்து வருகிறாய்? உன் தேசமென்ன? உன் ஜனத்தார் யார்?" என்று கேட்க ஆரம்பித்தனர். கடற்கொந்தளிப்பின் காரணத்தைத் தெரிந்திருந்த யோனா அந்தக் கேள்விகளுக்கான பதிலை மறைக்கவில்லை. "நான் எபிரெயன். சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன்" என்றும் தான் தேவனுடைய சமுகத்தைவிட்டு ஓடுகிறவனென்ற உண்மையையும் அவர்களுக்கு அறிக்கை செய்தான். யோனாவின் இந்த அறிக்கையாலும், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களாலும் கர்த்தரை அறியாத அந்த மக்கள் கர்த்தருக்குப் பயந்து, பலியிட்டுப் பணிந்துகொண்டார்கள் (வச.16). உண்மையில் யோனா அந்த ஜனத்தின் முன் குற்றவாளியாக நின்றாலும், தன் தவறை ஒளிக்காது, உண்மையை மறைக்காது அறிக்கைசெய்தான். அதுவே கர்த்தருக்கு சாட்சியாயிற்று.

இன்று கர்த்தரைக் குறித்து நாம் செய்யும் அறிக்கைதான் என்ன? நமது குற்றங்கள் உணர்த்தப்படும்போதும், நாம் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டாலும், ஆண்டவரைக் குறித்த உண்மை சாட்சியை நாம் அறிக்கை செய்கிறோமா? அறிக்கை செய்த யோனா கடலில் வீசப்பட்டதுபோல, நமது அறிக்கைகளும் நமக்கு ஆபத்துக்களை விளைவிக்கக்கூடும். என்றாலும் நாம் தேவனுக்கு உண்மையாயிருக்கிறோமா என்பதே சிந்திக்கவேண்டிய விடயம். அங்கேதான் தேவநாமம் மகிமைப்படுகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. **'மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்'** (மத்தேயு 10:32-33).

எனக்குச் சாதகமாக இருக்கவேண்டும் என்பதற்காக ஆண்டவரை அறிக்கை செய்யாமற்போன தருணங்கள் என் வாழ்வில் உண்டா? அதனை நான் எப்படிச் சரிசெய்து, என் வாழ்வில் தேவனை மகிமைப்படுத்தலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியான நம்பிக்கை

செப்டெம்பர்
**20**
சனி

வேத வாசிப்பு : யோனா 2:1-10

**'நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன்; ஆகிலும், இன்னமும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன்.' யோனா 2:4**

நமது வாழ்வில் பாடுகள் நெருக்கங்கள் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் முக்கிய காரணம் 'கீழ்ப்படியாமை'. ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் தன் வழியிலே செல்வானாயின், நிச்சயம் அவன் பல நெருக்கங்களைச் சந்திக்க நேரிடும். அப்போது, அவன், ஒன்றில், தனது தவறுகளை உணர்ந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவான். அல்லது, தனது வேதனைகள் நிமித்தம் நம்பிக்கை இழந்து தேவனைவிட்டு மேலும் விலகிச் செல்லவும் கூடும்.

இதிலே யோனா முதலாவது ரகத்தைச் சேர்ந்தவன். கடல் கொந்தளிப்புக்குத் தானே காரணம் என்ற உண்மையைக் கூறிய யோனா, பயணிகள் அனைவரும் காக்கப்படும் பொருட்டுத் தன்னைக் கடலில் எறிந்துவிடும்படி கூறினான். மாலுமிகளும் அவ்வண்ணமே செய்ததும் கடலின் கொந்தளிப்பு அமர்ந்தது. ஆனால், யோனாவின் கதை முடியவில்லை; அங்கேதான் ஆரம்பமானது. கர்த்தர் யோனாவை என்ன நோக்கத்திற்காக அழைத்தாரோ அதனை நிறைவேற்றும்படி யோனாவைக் காப்பாற்றினார். அவன் சமுத்திரத்தில் மாண்டு போகாதபடிக்கு அவனை விழுங்குவதற்கு ஒரு மீனுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஒரு மீனின் வயிற்றுக்குள் அகப்பட்ட ஒருவன் தான் இன்னமும் உயிரோடிருப்பதை உணரும்போது அவனால் துதிபாட முடியுமா? புலம்பலும், கேள்விகளும், கதறலும்தான் எழும்பும். ஆனால், யோனாவோ தன்னைத் தானே உணர்ந்து கர்த்தரை நோக்கி ஜெபித்தான். தன் தவறினாலேயே தனக்கு இந்த நிலை என்பதை ஏற்றுக்கொண்டான். இந்த நிலைமை கர்த்தரால் அனுமதிக்கப்பட்டது என்பதை உணர்ந்தான். தன் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கித் தொடர்ந்தும் கூப்பிட்டான். கர்த்தரைத் துதித்தான். இந்த தொய்ந்துபோன நிலையிலும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதற்கு யோனா கர்த்தரில் கொண்டிருந்த "உறுதியான நம்பிக்கையே" காரணமாகும்.

நாம் இன்று யாரில் அல்லது எதனில் உறுதியான நம்பிக்கை வைத்து இருக்கிறோம்? அன்று யோனா மீனின் வயிற்றுக்குள் இருந்ததுபோலவே இன்று நாமும் நமது தவறுகளினால் விடுபடமுடியாத பிரச்சினைகளில், சூழ்நிலைகளில் அகப்பட்டிருக்கலாம். என்றாலும் அந்த நெருக்கத்திலும் நமது தவறுகளை உணர்ந்து, கர்த்தரிடம் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையினிமித்தம் கர்த்தரையே நோக்கிக் கூப்பிடுகிறோமா? அவரைத் துதிக்கின்றோமா? நாம் தவறு செய்தாலும் கர்த்தரை நோக்கி நம்பிக்கையுடன் கூப்பிடும்போது, யோனாவுக்கு வழி திறந்தவர் நம்மைக் கைவிடுவாரா!

நான் நம்பிக்கையிழந்து சோர்ந்துபோன தருணங்கள் என் வாழ்வில் உண்டா? என் தவறுகளிலும் பார்க்க, நம்பிக்கையிழந்ததால் ஏற்பட்ட வருத்தம் அதிகம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபடியும் ஒரு தருணம்

செப்டெம்பர்

21

ஞாயிறு

வேத வாசிப்பு : யோனா 3:1-3

**'இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார்.' யோனா 3:1-2**

நமது வாழ்வில் தருணங்கள் கிடைப்பதே மிகப் பெரிய ஆசீர்வாதம். அதிலும் தவறவிட்ட தருணங்கள் இரண்டாந்தரம் கிடைப்பது மகா பெரிய ஆசீர்வாதம். அப்படியிருக்க, அந்த இரண்டாம் தருணத்தையும் அலட்சியம் செய்வோமானால் அது மகா பெரிய முட்டாள்தனமாயிருக்கும்.

தன் இனத்திற்குச் சத்துராதியான நினிவே மக்கள் அழிவதே யோனாவுக்கு நியாயமாகத் தோன்றியது. ஆகவேதான், அவர்களுக்கு வரவிருந்த அழிவைக்குறித்து அறிவிக்கும்படி கர்த்தர் யோனாவை அழைத்தபோது, அவன் வேறு வழி சென்றான். ஆனால், கர்த்தரோ யோனாவை விடவில்லை. கடலைக் கொந்தளிக்கப்பண்ணி, ஒரு மீனுக்குக் கட்டளையிட்டு யோனா தன்னை உணரும்படிக்கு ஒரு தருணத்தைக் கொடுத்தார். யோனா தன் ஆபத்தான நிலையிலிருந்து தன் தவறை உணர்ந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்த போது கர்த்தர் யோனாவை மீனின் வயிற்றிலிருந்து தப்புவித்து, நினிவேக்குச் சென்று தமது செய்தியை அந்த மக்களுக்கு அறிவிக்கும்படி மறுபடியும் கட்டளையிட்டார். இம்முறை யோனா மறுக்காமல் தனக்கு கிடைத்த இரண்டாம் தருணத்தில், கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும்படி புறப்பட்டுச் சென்றான்.

"இரண்டாந்தரம்!" அதாவது மறுபடியும் ஒரு தருணம். அன்று யோனாவிற்குக் கிடைத்ததுபோலவே, இன்று நமக்கும் தேவன் மறுபடியும் ஒரு தருணத்தைத் தருகிறார். மறுபடியும் பாவ வழிகளிலிருந்து மனந்திரும்புவதற்கும், கர்த்தருடைய அழைப்பை தொடர்ந்து உதாசீனம் செய்யாமல் அதனை நிறைவுசெய்யவும், மன்னிக்க முடியாதிருக்கின்றவர்களை மன்னித்து அவர்களோடு சமாதானமாக வாழவும், பொய்வழிகளை விட்டு உண்மையான தேவ வழிகளைப் பற்றிக்கொள்ளவும் கர்த்தர் "மறுபடியும் ஓர் தருணத்தைக்" கொடுக்கின்றார். இத் தருணத்தை நாம் நெகிழவிடின், இன்னுமொரு தருணம் நமக்குக் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. நம்மைத் திருத்திக்கொள்ளவும் தருணம் அருளப்படுகிறது; அதேசமயம், நாம் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லவும் தருணம் அருளப்படுகிறது. அதனை நாம் தவறவிடலாமா!

யோனாவின் அனுபவம் இன்று நம்மை எச்சரிக்கிறது. கர்த்தர் நம்மைத் தானே நம்பி அழைத்து, மனந்திரும்புதலின் செய்தியையும், வரப்போகும் அழிவின் செய்தியையும் கொடுத்தார். அதனை நாம் அடக்கி வைக்கலாமா? அன்று கர்த்தர் யோனாவைக் காப்பாற்றி மறுதருணம் அளித்தார். நமது காரியம் என்னவாய் இருக்குமோ?

கர்த்தருடைய அழைப்பை, அவர் மனதில் போடும் செய்தியை நான் உதாசீனம் செய்த தருணங்கள் இருக்கிறதா? சிலசமயங்களில் கர்த்தருடைய சித்தத்திற்கு உட்படாதிருப்பது ஏன்? கசப்புணர்வா? அல்லது வேறு எதுவுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதுள்ளவன் கேட்கக்கடவன்

செப்டெம்பர்

22

திங்கள்

வேத வாசிப்பு : யோனா 3:4 -10

**'...நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து...'** யோபு 3:4,10

வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, கணினி, இணையத்தளம் மற்றும் பலவகையான நவீன ஊடகங்களுக்கூடாக இன்று உலகில் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை நடைபெறும் சம்பவங்களின் செய்திகளை ஓரிரு நிமிடங்களில் நாம் தெரிந்துகொள்ளுகிறோம். உலகச் செய்திகளை மட்டுமல்ல, நமக்கு அன்பானவர்களின் செய்திகளையும், மற்றும் தேவசெய்திகளையும்கூடப் பெற்றுக்கொள்ளுகிறோம். இப்படியாக நாம் கேட்கின்ற தேவசெய்திகளுக்கு நாம் மெய்யாகவே செவிகொடுக்கின்றோமா?

யோனாவின் காலத்தில் செய்திகளை உடனுக்குடன் அறியக்கூடிய வசதிகள் இருக்கவில்லை. நினிவே மக்களுக்கு வரவிருந்த அழிவைக்குறித்து அறிவிப்பதற்கு யோனா தானிருந்த இடத்திலிருந்து மூன்றுநாள் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. மட்டுமல்ல, முழு மக்களும் கேட்கும்படி தேவனுடைய செய்தியைச் சொல்ல யோனா தொடர்ந்தும் ஒருநாள் முழுவதும் பிரயாணம் பண்ணவேண்டியிருந்தது. இச்செய்தியைக் கேட்ட நினிவே மக்கள் உடனடியா கவே தேவனை விசுவாசித்து உபவாசத்தோடு ஜெபித்தார்கள். மட்டுமல்ல, செய்தியைக் கேட்ட ராஜாவும் சாம்பலில் உட்கார்ந்து, "யாருக்குத் தெரியும்? நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு தம்முடைய உக்கிர கோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார்" என்று கூறி, ஜனங்கள் மிருக ஜீவன்கள் அனைத்தும் ஒன்றும் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் இருக்கவேண்டுமென்றும் கட்டளைகொடுத்தான். இப்படியே யோனா சொன்ன செய்தியைக் கேட்ட ராஜாவும் ஜனங்களும் மனந்திரும்பியதால், தேவன் அவர்களுக்கு அனுமதிக்கவிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்.

அன்று நினிவே மக்கள் ஒரே நாள்தான் செய்தியைக் கேட்டார்கள்; உடனே மனந்திரும்பினார்கள். இன்று ஒருநாளில் எத்தனை தடவைகள், எத்தனை செய்திகளைக் கேட்கிறோம்? அவற்றுக்குச் செவிகொடுத்து அந் நாளில் தேவவழிநடத்துதலின்படி பாவவழிகளைவிட்டு தேவனுக்குப் பிரியமான விதத்தில் வாழுகிறோமா? வெளிப்படுத்தல் விசேஷத்தில் தேவன் ஏழு சபைகளுக்கு, "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று கூறி சபைகளின் நிலைமைகளை அறிவிக்கிறதை வாசிக்கிறோம். இன்றும் தேவன், "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று கூறி நமக்கும் தமது செய்திகளை அறிவிக்கிறார். அந்த நினிவே மக்களைப்போல நாமும் பதிலுரைப் போமா? அல்லது அலட்சியம்பண்ணுவோமா?

தினமும் நான் எத்தனை தேவசெய்திகள் பாடல்களைக் கேட்கிறேன். இவை எனக்குப் பயனுள்ளவையாக இருக்கிறதா? தேவசெய்திகளைக் கேட்கிற என் வாழ்வில் ஏதாவது மாற்றங்கள் இதுவரை ஏற்பட்டதுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எரிச்சலடைகிறாய்?

செப்டெம்பர்
**23**
செவ்வாய்

வேத வாசிப்பு : யோனா 4:1-4

**'யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது. ...அதற்குக் கர்த்தர் நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்.' யோனா 4:1,4**

சுவிசேஷ செய்தியைக் கேட்டு மக்கள் மனந்திரும்பி வருவதைக் காணும்போது, மெய்யாகவே அந்த செய்தியைக் கொடுத்த ஊழியன் மகிழ்ச்சியோடு தேவனுக்கு நன்றிசெலுத்துவான். ஆனால் யோனாவின் பதிலுரை சற்று வித்தியாசமாகவே இருந்தது.

நினிவே மக்கள் புறஜாதி மக்கள். யோனாவின் காலத்தில் யூதர் தேவனுடைய வார்த்தையை புறஜாதியாருடன் பகிர்ந்துகொள்ள மாட்டார்கள். ஆனால், கர்த்தர் யோனாவை நினிவே மக்களிடம் அனுப்பியபோது, கர்த்தரையும், அவரது சுபாவத்தையும் யோனா நன்கு அறிந்திருந்ததால், புறஜாதியினராயினும் அவர்களும் மனம்திரும்பும் பட்சத்தில் தேவன் அவர்களை மன்னிப்பார் என்பதை எதிர்பார்த்தான். அவன் எதை எதிர்பார்த்தானோ அது நடந்தது. இது யோனாவுக்கு எரிச்சலை உண்டாக்கியது. இதனால் அவன் கர்த்தரை நோக்கி, "என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நல்லது" என்றான்.

யோனாவின் இந்த எரிச்சலுக்குக் குறிப்பாக இரு காரணங்கள் இருந்திருக்கக்கூடும். ஒன்று, தன்மூலமாக அறிவிக்கப்பட்டது நடைபெறவில்லை என்ற ஆதங்கம். அடுத்தது, தேவன் இந்தப் புறவினத்தாரைக் காப்பாற்றிய கோபம். தேவனுடைய வழியைவிட்டு விலகி தவறு செய்த யோனா, கர்த்தர் தன்மீது இரங்கி கொந்தளிக்கும் சமுத்திரத்திற்கும் மீனின் வயிற்றிற்கும் தன்னைத் தப்புவித்தார் என்பதை மறந்து, இந்த புறவினத்தாரைத் தப்புவித்ததைக்குறித்து எரிச்சலடைந்தது என்ன? இவற்றைப் பார்க்கும்போது, யோனா, கர்த்தரை அறிந்திருந்தும், கர்த்தருடைய தீர்க்கனாக இருந்தும், சுயநலமுள்ளவனாகவும், இரக்கமற்றவனாகவும், மன்னிக்கும் சுபாவமற்றவனாகவும் இருந்தான் என்பது விளங்குகிறது. வேறுபாடில்லாத அன்புகொண்ட கர்த்தருடைய ஊழியன் வேறுபாடு காட்டியது நமக்கும் ஒரு எச்சரிக்கையாக அமைகிறது.

யோனா மட்டுமல்ல, ஆபேலையும் அவனது காணிக்கையையும் அங்கீகரித்த கர்த்தர், காயீனின் காணிக்கையை அங்கீகரிக்காததால் காயீனுக்கு எரிச்சலுண்டானது என்று வாசிக்கிறோம் (ஆதி.4:5). சவுல் தாவீதின்மேல் எரிச்சல் அடைந்தான் என்றும் வாசிக்கிறோம். இவர்களுக்கெல்லாம் குறைவானவர்கள் நாம் அல்ல என்பதுபோல நாமும் இந்த எரிச்சலின் பிடிக்குள் அப்பப்போ அகப்படுகிறோமல்லவா. **'கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு. பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்'** (சங்.37:8). எரிச்சல் தொடர் பாவங்களுக்கு நம்மை இட்டுச்சென்றுவிடும்.

இதுவரையிலும் எனக்கு யார்பேரிலாவது எரிச்சல் உண்டாயிருக்கிறதா? அல்லது, எனக்கு உண்டானது எரிச்சல்தான் என்பதை வெளிக்காட்டாமலே என் எரிச்சலை வேறு விதங்களில் காட்டியுள்ளேனா? இதனால் எனக்கு நேர்ந்த பாதகமான விளைவுகள்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தமான அணுகுமுறை

செப்டெம்பர்
**24**
புதன்

வேத வாசிப்பு : யோனா 4:5-11

**'உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்ப தாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.' பிலிப்பியர் 4:5**

யோனா தீர்க்கதரிசி, நினிவேயின் மக்கள் மனம்திரும்பிய நிமித்தம் தேவன் அவர்களை மன்னித்ததால் மிகவும் கோபமும், எரிச்சலுமடைந்தான். கர்த்தரை நோக்கி, தான் இருப்பதிலும் சாவதே நலம் என்று கூறி நகரத்துக்குக் கிழக்கே போய், தனக்கொரு குடிசையைப் போட்டு, நகரத்திற்கு என்ன நடக்கும் என்று பார்க்கும்படி அதன்கீழ் உட்கார்ந்தான். இதற்காக கர்த்தர், கோபப்பட்டு யோனாவைக் கடிந்துகொண்டாரா? அல்லது, தண்டித்தாரா? இரண்டுமே இல்லை. மாறாக, "யோனாவின் தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும், அவனை அவனுடைய மனமடிவுக்கு நீங்கலாக்கவும் அவனுடைய தலையின்மேல் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளை யிட்டு அதை அவன்மேல் ஓங்கி வளரப்பண்ணினார்". யோனா அந்த ஆமணக் கின் நிமித்தம் மிகவும் சந்தோஷப்பட்டான். ஆனால், திரும்பவும் கர்த்தர் ஒரு பூச்சியைக்கொண்டு அந்த ஆமணக்கைப் பட்டுப்போகப்பண்ணினார். இதனால் யோனாவின் தலையில் வெயில்படும்படியாக வைத்தார். அப்போதும் யோனா, தான் இருப்பதிலும் செத்துப்போவது நலம் என்றான். தேவனோ யோனாவிடம், ஒரு இராத்திரியிலே முளைத்து ஒரு இராத்திரியிலே பட்டுப்போன ஆமணக்கிற் காக நீ இவ்வளவு பரிதபித்தால், அநேக மக்களும் மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிப்பேனோ" என்று தாம் காட்டிய இரக்கத்திற்கான காரணத்தை விளக்கிக்கூறினார். கர்த்தர், யோனாமீது கோபங்கொள்ளாமல் எத்தனை சாந்தமாக ஞானமாக யோனாவை அணுகினார் என்பதைக் குறித்து நீங்கள் முன்னர் சிந்தித்ததுண்டா?

சாந்தத்தைக் குறித்துப் பேசிய ஒரு தேவ ஊழியக்காரர், "பிரச்சினை களையும், முரண்பாடுகளையும் எதிர்நோக்கும்போது, அவைகளை முறித்துப் போடாமல், உன் சாந்தகுணத்தாலும், கொடுக்கின்ற நேரத்தாலும் அவைகளை வளைத்துப்போடு" என்று கூறினார். யோனாவைப் போன்றவருக்கு, அல்லது, வேறு பிரச்சினைகள் முரண்பாடுகளோடு இருப்பவர்களுக்குப் பதில் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அன்று யோனாவுக்கு ஏற்றநேரத்தில் ஏற்ற வழிமுறையில் சாந்தமாக அவனுக்கு அவனைக் கர்த்தர் உணர்த்திய பிரகாரம் நாமும் சாந்தமாக நடந்துகொள்கிறோமா? அல்லது, அவர்களுடன் உள்ள தொடர்பையே முறித்துப் போடுகிறோமா?

தேவபிள்ளையே, தேவன் தமது பிள்ளைகள் கனிநிறைந்த வாழ்வு வாழவேண்டுமென்றே விரும்புகிறார். அதிலே "சாந்தமும்" (கலா.5:22-23) ஒன்று. அந்த சாந்தம் நம்மிலும் வெளிப்படட்டும். கோபம் பிரிவினைகளை ஏற்படுத்தும்; சாந்தமோ உறவுகளைப் பெலப்படுத்தும்.

சாந்தமாக பதிலுரைப்பதாக எண்ணி யாரையாவது கோபப்படுத்தியிருக்கிறேனா? இதுவரை எத்தனைபேரை நான் கோபப்பட்டுத் தள்ளியிருக்கிறேன்? அல்லது, என் கோபத்தினால் எத்தனைபேர் என்னைத் தள்ளிவிட்டார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை

செப்டெம்பர்

# 25

வியாழன்

வேத வாசிப்பு : ரோமர் 2:1 - 6

**'...தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவை களின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?'** ரோமர் 2:4

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு மனிதனின் ஒருநாள் மனமாற்றம் அல்ல. அவன் மனம்மாறிய நாளிலிருந்து மரண நாள்வரை தன் சுபாவத்தைக் கிறிஸ்துவின் சுபாவமாக மாற்றிக்கொண்டே வளருவதாகும். சாந்த குணமுள்ள கிறிஸ்துவின் இன்னொரு குணாதிசயம் பொறுமை.

கர்த்தர், ஒன்று, தமது ஊழியக்காரனான யோனாவிடம் ஆரம்பம் முதல் இறுதிவரை அவனுடைய கீழ்ப்படியாமை, எரிச்சல் மத்தியிலும் எவ்வளவாய் பொறுமையாக இருந்தார் என்று பார்க்கிறோம். அடுத்தது, புறஜாதியாரான நினிவே மக்கள் பாவத்தில் மாண்டிருந்தாலும், அவர்களை உடனடியாக அழித்துப்போடாமல் நீடியபொறுமையாயிருந்து, அவர்கள் மனம் திரும்பியதும் அவர்களை அழிக்காமல் பாதுகாத்தார் என்றும் காண்கிறோம்.

யோனாவைப் பொறுத்தளவில் அவன் கர்த்தருடைய பொறுமை என்ற குணாதிசயத்தைக் கொண்டிருந்திருந்தால், கர்த்தர் தன்னோடு எத்தனை பொறுமையாக இருந்தார் என்பதையும், அதே பொறுமையோடுதான் நினிவே மக்களோடும் இருந்தார் என்றும், அதனாலேயே அவர்கள் மனம்திரும்பிய பட்சத்தில் அவர்களை மன்னித்தார் என்றும் உணர்ந்திருப்பான்.

இன்று தேவபிள்ளைகளாகிய நாம் ஊழியத்திலோ, வீட்டிலோ, வேலை ஸ்தலங்களிலோ பல்வேறுபட்ட மக்களுடன் பணிபுரிகிறோம். அவர்களுக்குள் கோபம், பொறாமை, எரிச்சல், பெருமை என்று எத்தனையோ உண்டு. இப்படி யானவர்களின் செய்கைகளோ, வார்த்தைகளோ நம்மைத் தாக்கும்போது நாம் அவர்களோடு எப்படி நடந்துகொள்கிறோம் என்பதுதான் நாம் தேவனுடைய பிள்ளைகளா இல்லையா என்பதற்குச் சாட்சி. நாமும் பொறுமையற்றவர்களாய், கோபித்து எரிச்சல்பட்டால் நாம் எப்படி கிறிஸ்துவைக் காட்டமுடியும்?

ஆத்திரப்பட்டு காரியத்தைப் போட்டு உடைப்பது மிகவும் இலகு. அது எங்கள் பாவ சுபாவத்தின் வெளிப்பாடு. பொறுமையோடு காரியத்தை முன்னெடுப்பது மிகவும் கடினம். ஆனால் அதுவே நமது ஆவிக்குரிய சுபாவத்தின் வெளிப்பாடு. **'உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக் களைக் காத்துக்கொள்ளுங்கள்'** (லூக்கா 21:19) என்று ஆண்டவர்தாமே கூறி யிருக்கிறார். ஆவியின் கனி வெறுமனே 'பொறுமை' அல்ல; அது 'நீடிய பொறுமை'. அதைத் தான் ஆண்டவர் நமது வாழ்வில் விரும்புகிறார். ஆகவே, இந்த நாளிலும் எம்மை ஆராய்ந்து பார்த்து, கிறிஸ்துவின் நீடிய பொறுமையை நாமும் தரித்துக்கொள்ள நம்மை ஒப்புவிப்போமாக.

பொறுத்திருப்பதற்கும், பொறுமையோடு காரியங்களை முன்னெடுப்பதற்கும் என்ன வித்தியாசம்? பொறுத்திராததால் என் காரியங்கள் கெட்டுப்போனதும், பொறுமையாயிராததால் பிறரை நோகடித்து, அநேக உறவுகளை இழந்து போனதுமான சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்ப்போமாக. திருந்துவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துகொள்ளுதல்

செப்டெம்பர்

**26**

வெள்ளி

வேத வாசிப்பு : 1தீமோத்தேயு 1:12-20

**'முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்.' 1தீமோத்தேயு 1:13**

மேலதிகாரியின் நெருக்குதலுக்கு ஆளான ஜெகன், அவர் தன்னைப் புரிந்துகொள்ளவில்லையே என்று மிகவும் வருத்தப்பட்டான். ஆனால், புதிய மேலதிகாரி வந்தபின்பு, இவனுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. நாட்கள் செல்லச்செல்ல, தனக்குக் கீழே பணிபுரியும் ஊழியர்களுடன் கடினமாக நடக்கவும் அவர்களை நெருக்கவும் ஆரம்பித்தான். இதனால் சக ஊழியர்களின் எதிர்ப்புக்குள்ளானான். இப்போ என்ன சொல்லுவது? ஜெகனைக் கடினமாக நடத்திய அந்த மேலதிகாரியிலும் பார்க்க, புரிந்துகொள்ளாத தன்மை இவனுக்குள்தான் அதிகம் இருப்பது விளங்குகிறதல்லவா!

பவுல், சவுலாக இருந்தபோது அவருக்குள்ளிருந்த கடின கோபகுணம், அவருடைய ஊழிய ஆரம்பத்திலும் வெளிப்படத்தான் செய்தது. பவுல் ஒரு கடினமான ஊழியக்காரனாக மற்றவர்களைப் புரிந்து நடக்காதவராகவே தென்பட்டார். இதனால் இணைந்து செயற்பட்ட பர்னபாவை விட்டுப் பிரிய நேர்ந்தது (அப்.15:37-40). பேதுருவுடன் முரண்பட நேர்ந்தது (கலா.2:11) இப்படியே ஊழியத்தில் பல பாடுகளையும் நெருக்கங்களையும் பவுல் முகங்கொடுக்க நேர்ந்தது. ஆனால், பிற்பாடு இந்தப் பாடுகள் நெருக்கங்களுக்கூடாக மற்றவர்களைப் புரிந்துகொள்ளுகின்ற உயர்ந்த சுபாவம் கொண்டவனாக மாறினார். இப் புரிந்து கொள்ளும் சுபாவத்தில் பவுல் அப்போஸ்தலன் வளர்ந்ததால்தான் தன்னோடு கூட ஊழியத்தில் இணைந்து செயற்பட்ட மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான் விலகிச் சென்ற பின்னர், தீமோத்தேயு என்னும் வாலிபனைத் தன் மகனைப்போல் நேசித்து, தனக்கு உதவி ஊழியனாக ஏற்படுத்தி, அவனைப் பெலப்படுத்தினான். பின்நாட்களில், மாற்குவைத் திரும்பவும் சேர்த்துக்கொண்டார் என்று வாசிக்கிறோம் (2தீமோ.4:11). பேதுருகூட பவுலை மேன்மைப்படுத்தி தனது நிருபத்தில் எழுதியிருக்கிறதை வாசிக்கிறோம் (2பேதுரு 3:15).

"புரிந்து கொள்ளும் சுபாவம்"! பெற்றோர் தம் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். பிள்ளைகள் பெற்றோர் தம்மைக் கண்டித்தாலும் அவர்கள் தங்கள் நன்மைக்காகவே தம்மைக் கண்டிக்கின்றார்கள் என்று புரிந்துகொள்ள வேண்டும். கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் புரிந்துகொள்ள வேண்டும். ஊழியக்காரன் தன் சக ஊழிக்காரனைப் புரிந்துகொள்ளவேண்டும். அதிகாரிகள் தமக்குக் கீழுள்ளவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையானால், நாம் எங்கும் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் வாழமுடியாது. பாடுகளையும், நெருக்கங்களையும், மனமுடைவுகளையுமே காண நேரிடும். பிறர் நம்மைப் புரிந்துகொள்ளவில்லையே என்று குறைசொல்லும் நாம் முதலில் பிறரைப் புரிந்து நடக்க முயற்சிப்போமாக.

சூழ்நிலையைப் புரிந்துகொள்ள நான் தவறியதால், யாராவது மனமடிவுக்கு ஆளாகியிருக்கிறார்களா? இதனைச் சரிசெய்ய என்ன செய்யப்போகிறேன்? புரிந்துகொள்ளுதலை என்னில் வளர்த்துக்கொள்ள என்ன செய்யவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுந்தாலும் எழுந்திரு!



வேத வாசிப்பு : சங்கீதம் 51:1-19

**'உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.' சங்கீதம் 51:11**

தவறான வாழ்க்கைமுறை, மறைவான பாவ வாழ்க்கை; ஆண்டவரை அறியாதவர்கள் மட்டுமல்ல, அறிந்தவர்கள், ஊழியர்கள்கூட சில மறைவான பாவத்தில் விழுந்துவிடுவதுண்டு. இப்படிப்பட்டவர்களில் சிலர் தாம் விழுந்துவிட்டோமே என்றும், தமது தவறுகள் வெளிவந்தால் வெட்கம் என்றும் வேதனையால் உள்ளம் உடைந்துவிடுகிறார்கள். திரும்பவும் எழுந்து கர்த்தருக்காய் வாழமுடியாதவர்களாக கர்த்தரைவிட்டும், சமுதாயத்தைவிட்டும் விலகி வாழ விரும்புகிறார்கள். ஆனால், தாவீது ராஜா அப்படியிருக்கவில்லை.

தாவீது, ஒரு ராஜாவாயிருந்தும் பத்சேபாளிடத்தில் பாவத்திற்குட்பட்டான். பின்னர் தனது பாவத்தை மறைத்து, தன்னைக் காத்துக்கொள்வதற்காக பத்சேபாளின் கணவனான உரியாவைக் கொன்றான். தாவீது தன் பாவத்தை மூடி மறைக்கப் பார்த்தான். ஆனால், கர்த்தரோ அவனது குற்றத்தை நாத்தான் தீர்க்கதரிசிக்கூடாக அவனுக்கு வெளிப்படுத்தினார். அப்போது தாவீது, தான் பாவத்திற்குட்பட்டதால் அரசஸ்தானத்திலிருந்து விலகவில்லை. மாறாக, "உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்" என்ற ஜெபத்தோடு தனது பாவத்தை அறிக்கைசெய்து தேவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டான். தாவீது பாவத்தில் தவறி விழுந்தாலும் தேவகிருபை, தேவ ஒத்தாசையோடு தயங்காது மீண்டும் எழுந்து செயற்பட்டான்.

தாவீது செய்ததுபோல மாத்திரமல்ல, கீழ்ப்படியாமை, பெருமை, சுயநீதி, சுயநலம், உலகத்தோடு ஒத்த வாழ்க்கை போன்ற அநேக காரணங்களாலும் இன்று தேவபிள்ளைகள் கர்த்தருடைய வழியிலிருந்து தவறி விழுந்துவிடுவதுண்டு. இப்படியாக தவறி விழுந்து, அதனால் மனமுடைந்து, பிறர் அறிந்துகொண்டார்களே என்ற வெட்கம் வேதனையோடு சபைகளிலும், சமுதாயத்திலுமிருந்து தம்மை விலக்கி வாழ்கிறவர்களில் ஒருவராக இன்று நீங்களும் இருக்கலாம். தேவபிள்ளையே, நமது கர்த்தர் "நெரிந்த நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணைக்காமலும் இருக்கிறவர்". ஆகையால், தம்மை உண்மையாய் நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் பதில் கொடுக்கிறவர். பாவத்தை வெறுக்கிறவர்; ஆனால், பாவியை நேசிக்கிறவர். எவன் தன் பாவத்தை உண்மையாகவே அறிக்கைசெய்கிறானோ அவனை ஏற்றுக்கொண்டு மன்னித்து அவனைப் புதிதாக்குகிறவர். ஆகவே, விழுந்துபோனாலும் கர்த்தரை நோக்கி அறிக்கைசெய்தால், தாவீதின் தலையை நிமிர்த்தினவர், நாமும் எழுந்து பிரகாசிக்க உதவுவார்.

பாவத்தில் விழுந்துபோன நினைவுகூட இல்லாமலிருந்து, கர்த்தரால் உணர்த்தப்பட்ட சந்தர்ப்பங்கள் என் வாழ்வில் காணப்பட்டதுண்டா? அல்லது, என்னை நானே ஒளித்துக்கொண்டிருக்கும் நான் இன்று கர்த்தரண்டை திரும்புவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனோடு தனித்திரு!

செப்டெம்பர்
28
ஞாயிறு

வேத வாசிப்பு : மாற்கு 4:1 – 34

'..அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்.' மாற்கு 4:34

தனிமையாக இருப்பதென்பது இலகுவான காரியமல்ல. தனிமையாக இருக்கும்போது ஒருவனுடைய சிந்தனை அநேகமாக பல வழிகளிலும் இழுப்புண்டுபோக வாய்ப்புகள் உண்டு. இவை சிலசமயம் நலமாகவும் இருக்கும்; சிலசமயம் தீமையாகவும் முடியும்.

இயேசு கிறிஸ்து உலகில் வாழ்ந்த நாட்களில் தமது போதனைகளை மக்களோடு பகிர்ந்துகொண்டபோது அநேகமாக உவமைகளைப் பயன்படுத்தினார். இவ் உவமைகளை எல்லாவேளைகளிலும், எல்லாராலும் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. சீஷர்கள்கூட அவற்றைப் புரிந்துகொள்ள முடியாதிருந்தபோது இயேசு தமது சீஷரோடு தனித்திருந்த வேளைகளில் அவற்றை அவர்களுக்கு விவரித்துக் கூறினார் என்று காண்கின்றோம். மட்டுமல்ல, இயேசு கிறிஸ்து தாமே பலவேளைகளிலும் தனிமையாகச் சென்று ஜெபம்பண்ணினார் (லூக்கா 5:16) என்றும் காண்கின்றோம். இயேசு தனிமையைப் பயன்படுத்திக்கொண்டார்.

இன்று நாமும்கூட தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது, அவர் நமக்கு எதைப் புரியவைக்க விரும்புகிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகின்றோம். காரணம், நாம் பிதாவோடு தனித்திருந்து வேதத்தை வாசித்துச் சிந்திப்பதில்லை. மட்டுமல்ல, வேதத்தை வாசிக்கும் போது அந்த வசனங்களில் நமது மனதை முழுமையாகச் செலுத்தாமல், எண்ணங்களை அங்குமிங்கும் அலையவிடுகிறோம். நம்மைச் சுற்றி பல சத்தம் கேட்பதால், வசனங்களுக்கூடாக தேவசத்தத்தைக் கேட்கமுடியாமல், உலக சத்தம் நமது செவியை அடைத்துப்போடுகிறதாய் இருக்கிறதல்லவா.

தேவனுடைய சத்தத்தையும் அவருடைய வழிநடத்துதலையும் தினமும் கேட்கவேண்டுமானால் தேவனோடு தனித்திருக்கவேண்டியது மிக அவசியம். தனிமையாக அமர்ந்து, சிந்தனையையும், செவிகளையும், பார்வையையும் தேவனை நோக்கித் திருப்பி, ஜெபத்தோடு வசனத்தைத் தியானிக்கவேண்டும். ஆனால், இப்படியாக ஒருசில நிமிடங்களாயினும் தனிமையாக தேவபாதத்தில் அமரமுடியாதபடி இன்று பல உலக காரியங்கள் நம்மை நெருக்கிப்போட அனுமதிப்பதாலேயே தேவன் நம்மோடு எப்படி இடைப்படுகிறார் என்றும், நமது வாழ்க்கையில் தேவவழிநடத்துதல் என்ன என்பதையும் புரிந்துகொள்ள முடியாதவர்களாய் இருக்கிறோம். பிரச்சினைகள், பாடுகள் நம்மை நோக்கி வரும்போது ஆண்டவரையே குற்றப்படுத்துகிறவர்களாய் காணப்படுகின்றோம். இது தேவனுக்குப் பிரியமாயிருக்குமோ! நம்மிலும்பார்க்க, நாம் தம்மோடு தனித்திருப்பதை ஆண்டவர் விரும்புகிறவர்; ஆகவே, நமது ஜெப நேரங்களை, இடங்களைச் சரிசெய்வோமாக.

உங்கள் வாழ்வில் இதுவரை தேவனோடு தனித்திருந்து பெற்றுக்கொண்ட ஆசிகளையும், ஜெபிக்க நேரமின்றி அவசர வாழ்வில் சிக்கியதால் தடுமாறி இழந்துபோன ஆசிகளையும் சிந்தித்தால் எது அதிகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியுள்ள வாழ்க்கைக்கு...

செப்டெம்பர்

29

திங்கள்

வேத வாசிப்பு : யோசுவா 1:1-9

**'பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.' யோசுவா 1:9**

வாழ்க்கையில் தான் கையிட்டுச் செய்யும் வேலைகள் எல்லாவற்றிலும் வெற்றி காணவேண்டும் என்று ஒருவன் நினைப்பது தவறல்ல. ஆனால், சிலவேளைகளில் அந்த வெற்றி கிடைப்பதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்!

மோசேயின் மரணத்தின்பின் இஸ்ரவேல் ஜனங்களை வாக்களிக்கப்பட்ட கானானுக்குள் வழிநடத்தும் பொறுப்பை தேவன் யோசுவாவிடம் கொடுத்தார். யோசுவா தான் தேவனிடத்திலிருந்து பெற்ற பொறுப்பை வெற்றியோடு நிறைவு செய்து முடித்ததற்கு மூன்று முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று யோசுவா கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தங்களை இறுகப் பற்றிக்கொண்டான். அடுத்தது, எதிராளிகளோடு போராடவேண்டிய வேளைகளில் மட்டுமல்ல, எல்லாவேளைகளிலும் தேவபெலத்தைப் பெற்று, திடமனதோடு தன் பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டு சென்றான். இறுதியாக, கர்த்தருடைய வார்த்தையை நம்பி, அதற்கு எப்போதும் கீழ்ப்படிந்து, ஜனங்களையும் அவ் வழியிலேயே நடத்தினான்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களில் பற்று, தேவபெலன், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் ஆகிய இம் மூன்றையும் தன் வாழ்க்கையில் இணைத்துச் செயற்படுத்தியதின் நிமித்தம் யோசுவா தன் வாழ்க்கையின் சகல நிலைகளிலும் வெற்றியைக் கண்டுகொண்டான். தான் தேவனிடத்திலிருந்து பெற்ற பொறுப்பை வெற்றியோடு நிறைவு செய்தான்.

இன்று நமது வாழ்விலும் அனைத்து நிலைகளிலும் வெற்றிகாண வேண்டும் என்று வாஞ்சிக்கின்றோம். அந்த வாஞ்சையின் நிறைவைக் காண முதலாவது தேவனை நோக்கிக் கூப்பிடுகின்றோம் என்பது உண்மை. ஆனால் நாட்கள் நகர நாம் தொடர்ந்தும் வெற்றியைக் காண்போமோ என்ற சந்தேகம் இருதயத்தை ஆட்கொள்கின்றது. சந்தேகம் வந்துவிட்டால் வாழ்க்கையை முன்னோக்கிப் பார்க்கும்போது பயமும் நம்மைப் பற்றிக்கொள்கின்றது. இதனால் வாழ்க்கை எப்போதும் தோல்வியாகவே காணப்படுகின்றது.

வாழ்வில் தோற்றுப்போன நிலையில் இன்று நீங்கள் இருப்பீர்களாகில் அந்த நிலையிலிருந்து மீண்டுகொள்ள முதலாவது, நிலைபரங்களைப் பார்ப்பதைவிட்டு, நிலையான தேவனை நோக்கிப் பாருங்கள். இரண்டாவதாக, யோசுவாவைப்போன்று தேவன் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். மூன்றாவதாக தினமும் தேவனிடமிருந்து பெலத்தைப் பெற்று உங்கள் இருதயத்தையும், சிந்தனையையும் பெலப்படுத்திக்கொள்ளுங்கள். நான்காவதாக, தேவனின் வார்த்தைக்கு எப்போதும் கீழ்ப்படியுங்கள்.

வாழ்க்கையில் எனக்கேற்பட்ட தோல்விகளில் நான் விட்ட தவறுகள் என்ன? எனக்குக் கிடைத்த வெற்றிகளின் காரணிகள் என்ன? அடிக்கடி தேவனுடைய நடத்துதலில் சந்தேகம் ஏற்படுகிறதா? அது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பிடம் மாறும்போது...

செப்டெம்பர்
**30**
செவ்வாய்

வேத வாசிப்பு : லூக்கா 15:11 - 22

**'அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, ...எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.' லூக்கா 15:17,20**

ஒருவன் தான் இருக்கவேண்டிய இடத்திலிருந்து தான் இருக்கக்கூடாத இடத்திற்கு இடம் மாறிச்சென்றால், அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் வேதனையானதாக மாறிட இடமுண்டு.

இயேசுவானவர் கூறிய உவமைகளில் மனந்திரும்பிய குமாரனின் உவமை அனைவருக்கும் தெரிந்ததே. இதற்கூடாக ஒரு தகப்பனின் அன்பு, கெட்டுப்போன ஒரு மகனின் மனமாற்றம், மூத்த மகனின் எரிச்சல் சுபாவம் போன்றவற்றை நாம் அநேகமாக சிந்திப்பதுண்டு. இன்னுமொரு காரியத்தையும் இன்றைய நாளில் சிந்திப்போம். ஆம், ஒருவன் தான் இருக்கவேண்டிய இடத்தை விட்டு தன் இஷ்டப்படி இன்னுமொரு இடத்தை நாடிச் செல்லும்போது அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்றும் இவ் உவமைக்கூடாகக் காண்கின்றோம்.

இந்த உவமையில், சொத்து, சுகம், பாதுகாப்போடு தனது தகப்பன் வீட்டில் வாழ்ந்த இளைய மகன், தகப்பனுடைய இருப்பிடத்தைவிட்டு தன் இஷ்டப்படி தன் சிநேகிதரோடு சந்தோஷமாக வாழுவதற்காகத் தன் சொத்தைப் பிரித்து வாங்கிக்கொண்டு சென்றுவிட்டான். நாட்கள் செல்லச்செல்ல அவன் நினைத்ததுபோல் வாழ்வு அமையவில்லை. தந்தை வீட்டில் தான் அனுபவித்த சந்தோஷமான குடும்ப உறவு, வசதிகள், சமாதானம், பாதுகாப்பு, ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, தன் நண்பரிடத்தில் பெற்றுக்கொள்ளலாமென்று நினைத்துப் புறப்பட்டு வந்த சந்தோஷம், நட்புறவு அனைத்தையுமே இழந்தான். தான் இருக்கவேண்டிய இருப்பிடத்தை விட்டு வெளியேறி வேறிடம் சென்றதால் அவன் பல பாடுகள், வேதனைகள், இன்னல்கள், மனஉடைவுகளை அனுபவித்தான்.

தேவபிள்ளைகளாகிய நாமும்கூட இந்த இளைய மகனைப்போன்றே சிலவேளைகளில் நமது பரம பிதாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பாதுகாப்பு, வழிநடத்துதல், சமாதானம், சந்தோஷத்திலும்பார்க்க உலகத்தாரிடமிருந்து பெற்றுக்கொள்பவை மேலானவை என்று எண்ணி தேவனிடமிருந்து விலகிச் செல்லுகிறோம்; தேவசித்தப்படி பெற்றுக்கொண்ட வேலையிலிருந்து அதிக ஊதியத்தை நாடி விட்டுவிலகுகிறோம். குடும்பத்தில் ஏற்படும் நெருக்கங்களால் குடும்பத்தையே விட்டுவிலகத் துணிகிறோம். அல்லது, நாம் ஆராதிக்கும் சபை பிடிக்காததால், சபையையே விட்டுவிலக யோசிக்கிறோம். அன்று அந்த இளைய மகனின் நிலைமை இன்று நமக்கு வரக்கூடாது. கர்த்தர் ஒரு நோக்கமின்றி நாம் இருக்கும் இடத்தில் நம்மை வைத்திருக்கமாட்டார். இருக்கும் இடத்தில் பிரச்சனை என்றால் தேவனை நோக்கிப் பார்ப்போம். அதுவே எமக்கு எப்போதும் சந்தோஷத்தையும் பாதுகாப்பையும் தரும்.

நான் இன்று இருக்கும் இடம், அது வேலைஸ்தலமோ, குடும்பமோ, சபையோ, அல்லது வேறு எதுவோ அங்கே தேவசித்தப்படிதான் இருக்கிறேனா? தேவசித்தப்படி இருக்கும்போதும் சிலசமயம் புறப்பட்டுப்போகும்படியான சோதனை வருவது ஏன்? அவற்றை எப்படி ஜெயிப்பது என சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவபுஸ்தகம்

வேத வாசிப்பு : வெளிப்படுத்தல் 20:11-15

**'...அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது' பிலிப்பியர் 4:3**

உலகிலே, எவராலும் நிலைநாட்டப்படாத சாதனைகள் புரிகின்றவர்களின் பெயர்கள் "கின்னஸ்" புத்தகத்திலே எழுதப்படுவது நாம் அறிந்ததே. இப் புத்தகத்தில் தமது பெயர்கள் எழுதப்படுவதற்காகவே பல முயற்சிகளை எடுக்கிறவர்கள் உண்டு. அதற்காகவென்றே பல தியாகங்களைச் செய்து அப் புத்தகத்தில் தம்முடைய பெயர் எழுதப்படும்வரை சோர்ந்துவிடாமல், இறுதிவரை போராடுவார்கள். இறுதியாக அந்த முயற்சியிலே வெற்றியைக் கண்டுகொள்ளும்போது அவர்களது மகிழ்ச்சிக்கு அளவேயிராது. ஆனால், இந்த மகிழ்ச்சி இவ்வுலகில் வாழ்வுள்ளவரை மட்டுமே.

ஆனால், ஒரு மனிதன் இவ்வுலக வாழ்விலும் அவனது மரணத்தின் பின்னரும் மகிழ்ச்சியோடு ஜீவிக்கவேண்டுமேயானால், அவனது பெயர் "ஜீவபுஸ்தகத்தில்" எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று வேதாகமம் நமக்கு உணர்த்துகிறது. இப்படியாக ஜீவபுஸ்தகத்தில் தம்முடைய பெயர் குறிக்கப்பட்டவர்கள் வாழவேண்டிய ஒரு வாழ்க்கை முறையுண்டு. அவர்கள் தாம் விரும்பியபடி வாழமுடியாது. அவர்கள் தம்முடைய வாழ்வைக்குறித்து ஜாக்கிரதை உள்ளவர்களாகக் காணப்படவேண்டும். ஜீவமார்க்கத்தை அறிந்து, அதையே தெரிந்துகொண்டு, அதிலே நடக்க எப்போதும் தம்மை ஒப்புக்கொடுத்து வாழவேண்டும்.

தன்னுடைய ஜீவனை ஆதாயப்படுத்திக்கொள்ள விரும்பிய தாவீது ராஜா, கர்த்தரை நோக்கி, **'ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். 'உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு'** (சங்.16:11) என்று விண்ணப்பம் செய்தார். நமக்கு முன்பாக இரு வழிகள் உண்டு. ஒன்று ஜீவ வழி, மற்றது மரண வழி. **'இதோ நான் உங்கள் முன்னே ஜீவவழியையும், மரண வழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'** (எரே.21:8). இந்த இரு வழிகளிலும் நாம் எதைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்?

நமது பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படவேண்டும் என்று வாஞ்சை நமக்குண்டானால், ஜீவவழியைத் தெரிந்துகொண்டு அதிலே நடக்க நம்மை தேவ கரத்தில் ஒப்புவிப்போமாக. ஜீவ புஸ்தகத்தில் நமது பெயர் எழுதப்பட்ட நிச்சயம் நமக்கு இருக்குமானால், தேவன் அருளிய ஜீவமார்க்கத்தில் நாம் நடக்கிறோமா என்று அடிக்கடி நம்மை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. உலகோடு அழிந்துபோகும் கின்னஸ் புத்தகத்தில் பெயர் இடம்பெறுதவற்காக ஒருவன் தன் சொந்த விருப்பு வெறுப்புகளை உதறித் தள்ளி, இராப்பகலாய் அதற்காக உழைக்கவேண்டியிருக்க, என்றும் அழியாத ஜீவபுஸ்தகத்தில் நமது பெயர் என்றும் இடம்பெற நாம் எவ்வளவாக உழைக்கவேண்டும் என்று சிந்திப்போம்.

ஜீவவழிக்கும் மரணவழிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இந்த உலக வாழ்விலே என்னால் அதனைப் பகுத்தறியக்கூடியதாக இருக்கிறதா? ஜீவபுஸ்தகத்தில் என் பெயர் இடம்பெற நான் எதனை விட்டுவிலகவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய நுகம்

ஒக்டோபர்

2

வியாழன்

வேத வாசிப்பு : உபாகமம் 7:1-16

**'...அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?' 2கொரி. 6:15**

பொதுவாக இரட்சிக்கப்பட்ட வாலிபப் பிள்ளைகள் ஆண்டவராகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களோடு திருமண பந்தத்தில் இணையக்கூடாது என்பதைக் குறிப்பிடுவதற்கு இந்த வசனத்தை எடுத்துக்காட்டிப் போதிப்பதுண்டு. ஆனால், இந்த வசனம் திருமண வாழ்வுக்கு மட்டுமல்ல, நம்மை அவிசுவாசிகளோடு பிணைக்கக்கூடிய எந்தவித உறவுகளாக இருந்தாலும், உதாரணத்திற்கு வியாபாரமாக இருந்தாலும் நாம் அவர்களோடு நம்மைப் பிணைத்துக்கொள்ள இடமளிக்காதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றே எச்சரிக்கின்றது.

சாதாரணமான ஒரு வியாபார காரியத்திலே அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமேயானால், கடைசிவரை இணைந்திருக்கவேண்டிய ஒரு திருமண பந்தத்திலே எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்? இன்று கிறிஸ்துவை அறிந்த பிள்ளைகள் என்று கூறிக்கொள்பவர்களும்கூட பலவேளைகளில் தேவகட்டளையாயிருக்கும் இந்த வசனத்தை மறந்து, அவிசுவாசியுடன் தமது வாழ்க்கையை இணைத்துக் கொள்ளத் தீர்மானிப்பது எவ்வளவு வேதனைக்குரியது. சிலர் "அவிசுவாசியான என் துணையை, திருமணத்திற்குப் பின்பு கிறிஸ்துவண்டை வழிநடத்த என்னால் கூடும்" என்று தம்முடைய தவறான தீர்மானத்திற்கு சாக்குப்போக்குக் கூறுவதும் உண்டு. ஆனால், நாட்கள் செல்லச்செல்ல வேதனையும் கண்ணீரும் நிறைந்த வாழ்க்கை, கணவன் மனைவிக்கிடையே தர்க்கம், குடும்பங்களுக்கிடையே சண்டை சச்சரவு, இறுதியில் விவாகரத்து என எத்தனை பரிதாபமான முடிவுகள்?

எகிப்திலிருந்து மீட்கப்பட்ட தமது ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளில், **'அந்நிய ஜனங்களோடே சம்பந்தம் கலவாயாக, உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக'** (உபா.7:3) என்று கர்த்தர் தெளிவாகவே கூறியுள்ளார். இதற்கு முக்கிய காரணம், தமது மக்கள் அந்நிய தெய்வ வணக்கத்திற்கு இழுவுண்டுபோவார்கள் என்பதேயாகும். தேவனோடு நெருங்கி ஜீவித்த சாலொமோன் ராஜாகூட, தேவபிரசன்னத்தை இழந்து, பாவத்தில் விழுந்தது, அந்நிய பெண்களோடு அவர் ஏற்படுத்திக்கொண்ட பிணைப்பாலாகும். ஞானம் அறிவு செல்வம் என்று எல்லாவற்றிலும் பிரசித்தி பெற்று விளங்கிய சாலொமோனைக்குறித்த இறுதிக் குறிப்புகள் எவ்வளவு வேதனையானது. இயேசு கிறிஸ்துவையே சொந்த இரட்சகராக ஏற்று, அவருக்காக வாழ வாஞ்சிக்கும் மகனே, மகளே, ஒரு அவிசுவாசியின் அன்பிலே அழகிலே மயங்கி, திருமணத்திலும், வாழ்வில் எந்த நிலையிலும் தவறான தீர்மானம் செய்ய எத்தனிக்காதபடி ஜாக்கிரதையாக இருப்போமாக.

அந்நிய நுகத்தில் பிணைக்கப்படாமல் தேவனுடைய பிரமாணத்தின்படி கீழ்ப்படிந்து நடக்க எனக்கு இருக்கும் தடைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு : 1கொரிந்தியர் 3:16.17

**'...நீங்களே அந்த ஆலயம்' 1கொரிந்தியர் 3:17**

ஆராதனைக்கு வருகின்ற அனைவரையும் கவருகின்ற அந்த ஆலயம், அன்று சுத்தமாக்கப்படாததாலும் அலங்காரம் செய்யப்படாததாலும் அலங்கோலமாகக் காணப்பட்டது. வழமை போலவே ஆலயம் மக்களால் நிரம்பி வழிந்தது. ஆனாலும், "அழகான இந்த ஆலயம் இத்தனை அலங்கோலமாகக் காணப்படுகிறதே" என்று அனைவரது முகங்களிலும் ஒரு கேள்விக்குறி! போதகர் ஏன் இதைக் கவனிக்கவில்லை? ஆலயத்தைச் சுத்தம் செய்பவனுக்கு இன்று என்ன நடந்தது? ஆராதனையை ஆரம்பிக்கும்படி முன்னே வந்து நின்ற போதகர், ஒருமுறை சபை மக்கள் அனைவரது முகங்களையும் நோக்கிப் பார்த்துவிட்டு, "நீங்கள் உங்கள் உள்ளத்தில் என்ன சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்கான பதிலை பின்னர் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு ஆராதனையைத் தொடர்ந்தார். பிரசங்கவேளை வந்ததும் ஏசாயா 66:1லிருந்து **'வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி, நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?'** என்று ஆரம்பித்தார். பின்பு ஆலயத்தின் பரிசுத்தத்தைக்குறித்து கூறி, இறுதியாக, "நீங்களே அந்த ஆலயம். இன்று உங்கள் ஆலயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று கர்த்தர் கேட்கிறார்" என்று பிரசங்கத்தை முடித்தார். இதைக் கேட்ட அனைவரும் தங்கள் இருதயங்களிலே உணர்த்தப்பட்டவர்களாய் வீடு திரும்பினர். தாம் வழிபடும் ஆலயத்திற்கு பரிசுத்தமும், அலங்காரமும் எந்தளவுக்கு முக்கியமோ, அதைவிட மேலாக தேவனின் ஆலயமாகிய தமது வாழ்க்கை, எத்தனை தூய்மையாக பரிசுத்த அலங்காரத்துடன் காணப்படவேண்டும் என்பதை உணர்ந்து கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ ஆரம்பித்தனர்.

ஆலய அலங்கரிப்பில் இன்று நாம் காட்டுகின்ற தீவிர கரிசனையை, தேவ ஆவியானவர் தங்கி வாழுகின்ற ஆலயமாகிய நமது வாழ்வின் அலங்கரிப்பில் காட்டுகிறோமா? தேவாலயத்தின் பரிசுத்தத்தைக்குறித்து வைராக்கியம் காட்டுகின்ற நாம் எமது வாழ்வைக் குறித்து என்ன செய்கிறோம்? புற அலங்கரிப்பு நல்லது; ஆனால், உள் அலங்கரிப்பு அவசியமானது. நமது வாழ்க்கை பரிசுத்தத்தினாலும், ஆவிக்குரிய குணங்களினாலும் அலங்கரிக்கப் படவேண்டியது கட்டாயம். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார் என்பதாக வேதம் நம்மை எச்சரிக்கிறது. கெடுத்தால் என்னும்போது, அது வெளியே மாத்திரமல்ல உள்ளும் கெடுக்கப்படக்கூடாது என்பதை உணர்த்துகிறது. ஆகவே, நமது சரீரமாகிய தேவனுடைய ஆலயத்தைத் தூய்மையோடும் பரிசுத்த அலங்காரத்தோடும் காத்துக்கொள்ளத் தீர்மானம் செய்வோமாக.

இன்று நான் எந்தவிதமான அலங்கரிப்புக்கும் சுத்தத்திற்கும் அதிக கவனம் செலுத்துகிறேன்? பரிசுத்த அலங்காரத்தின் முக்கியத்துவம் தெரிந்திருந்தும் என் வாழ்வின் எந்தப் பகுதிகளில் நான் இன்னமும் அழுக்குடன் இருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்காக....

ஒக்டோபர்

# 4

சனி

வேத வாசிப்பு : சங்கீதம் 138:1 - 8

**'கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்.' சங். 138:8**

"எனக்காக இந்த சரீர வேதனையை யாராவது சுமக்க முடியுமா?" வருத்தப் படுக்கையிலிருந்த ஒரு சகோதரிதான் கேட்டார். "எந்த மனுஷனாலும் என் வேதனையைப் பங்குபோட முடியாது, என் இயேசுவைத்தவிர" என்று அவளே பதிலுரைத்தாள்.

தாவீதுராஜாவின் வாழ்க்கையிலே எப்போதும் சத்துருக்களின் பயமுறுத்தல்களும், போர்ச் சூழ்நிலைகளும் அதிகமாய் இருந்தன. ஆனால், தாவீது, **'எனக்கு விரோதமாய்ச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம்பேருக்கும் நான் பயப்படேன்'** என்று தைரியத்தோடு கூறினார் (சங்.3:6). அதுமட்டுமன்றி, மரண ஆபத்துகள் நேர்ந்தபோதும், **'நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்'** என்று நம்பிக்கையோடு பறைசாற்றினார் (சங்.23:4). இப்படியாக பாதகமான சூழ்நிலைகளிலும் தாவீது ராஜா தைரியத்தோடு கர்த்தரைப் பாடித் துதித்துக்கொண்டிருந்தார். ஆம், தான் நம்பியிருக்கிற கர்த்தர் தனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

இயேசு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள், அவரது சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு வந்த ஸ்திரீகள் ஒருவரை ஒருவர் பார்த்து, "கல்லறையின் வாசலில் இருக்கிற கல்லை எமக்காக யார் புரட்டித் தள்ளுவான்" என்று கூறிக்கொண்டனர். ஆனால், என்ன ஆச்சரியம்! அவர்கள் கல்லறையினிடத்திற்கு வந்தபோது, கல் ஏற்கனவே புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள் (மாற்.6:1-5). ஆம்! அவர்களுக்காகக் கர்த்தர் யாவையும் செய்து முடித்திருந்தார். அந்த ஸ்திரீகளால் புரட்டமுடியாதிருந்த கல் அவர்கள் அவ்விடத்துக்கு வருமுன்னரே புரட்டப்பட்டிருந்தது.

தேவபிள்ளையே, உன்னால் சுமக்கமுடியாத பாரங்கள், தாங்கமுடியாத வேதனைகள், இவற்றை யார் உனக்காகத் தாங்குவார்? யார் சுமப்பார் என்று ஏங்குகிறாயா? அன்று கல்லறையின் வாசலில் உயிர்த்தெழுந்தவராய் காட்சியளித்த ஆண்டவராகிய இயேசு இன்றும் ஜீவிக்கிறார். அவர் உன் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் தடைகள் அனைத்தையும் நீக்கி, உனக்காக யாவையும் செய்து முடித்தவராய் உன் முன் நிற்கிறார் என்பதை மறவாதே! தடைகள் தாமதங்கள் நிச்சயம் நம் வாழ்வில் நம்மைத் திகைக்க வைக்கும். ஆனால், அந்த சமயங்கள்தான் நாம் ஆண்டவரை இறுகப் பற்றிக்கொள்ளும் நேரம். அவருடைய கரங்களில் உன் பாரங்களை விட்டுவிட மாத்திரம் நீ உண்மையுள்ளவனாயிரு. தடைகளை நீக்கி, நமக்காக யாவையும் செய்து முடிக்க இயேசு இன்றும் வல்லவராகவே இருக்கிறார்.

எனக்கு உதவ யாரும் இல்லையே என்று கலங்கி நின்ற வேளைகளில் ஆண்டவருடைய கரம் நம்மைத் தாங்கிய அனுபவம் உண்டா? அன்று தாவீதிடம் இருந்த மனத்திடம் இன்று நம்மிடம் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கில் உண்மையுள்ள தேவன்

ஒக்டோபர்

5

ஞாயிறு

வேத வாசிப்பு : எபிரெயர் 11:8-19

**'வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.'** எபிரெயர் 10:23

அடிமைத்தனத்திலிருந்து தமது ஜனத்தை மீட்ட கர்த்தர், அவர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, அவர்களைக் கைவிடாமல் காப்பாற்றி, வழிநடத்தி, தாம் வாக்குப்பண்ணிய கானான் தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அதே ஆண்டவர்தான், **'நான் அல்பாவும் ஒமேகாவும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன்'** (வெளி.1:11) என கூறி இன்றும் நம்மை நடத்தி வருகிறார். அன்று மீட்கப்பட்ட தமது ஜனத்திற்கு எப்படியாக வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, அவர்களை வழுவாது வழிநடத்தினாரோ, இன்றும் அப்படியே நம்மையும் வழிநடத்த வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் முதலில் விசுவாசிக்கவேண்டும். **'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'** என்பதை நாம் நம்பினால் இன்றும் அவர் தரும் வாக்குத்தத்தங்களை நமதாக்கி, அவற்றை நமது இருதயத்திலே பதித்து, அவருக்குள் நாம் மகிழ்ச்சியாயிருக்கலாமே. அப்பொழுது கார்மேகம் நம்மைச் சூழ்ந்தாலும், எப்பெரும் தடைகள் நமது வாழ்க்கையில் குறுக்கிட்டாலும், எந்தத் துன்பம் வாழ்வை சூழ்ந்தாலும், நாம் தயங்காது, கலங்காது முன்செல்லலாம்.

தேவன் அருளும் வாக்குத்தத்தங்களாவன:- **'பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன், என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்'** (ஏசா.41:10). **'நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை'** (ஏசா.49:23). **'நான் அவர்களுக்குச் சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்'** (எரே.33:6). **'நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'** (யாத். 15:26). **'கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார், இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார், இனித் தீங்கைக் காணாதிருப்பாய்'** (செப். 3:15). **'உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்'** (உபா. 28:4).

வாக்குமாறாதவர் தாம் சொன்னதை நிறைவேற்றுவார். ஆயிரமாயிரமான வாக்குத்தத்தங்கள் நமது கரங்களிலிருக்கும் வேதத்தில் இருக்கும்போது, அவற்றை விசுவாசித்துக் காத்திருக்கலாமே. நிச்சயம் நமது வாழ்க்கையில் அவற்றின் நிறைவைக் காணமுடியும்.

கர்த்தர் அருளிய வாக்குத்தத்தம் ஒன்று என் வாழ்வில் நிறைவேறிய சந்தர்ப்பத்தைச் சற்று திரும்பிப் பார்ப்பது நல்லது. கர்த்தர் சொன்னார்; சொன்னபடியே செய்கிறார். இந்நிலையில் நான் வாக்கில் உண்மையாயிருக்கிறேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் மறந்தாலும்..

ஒக்டோபர்

6

திங்கள்

வேத வாசிப்பு : ஏசாயா 51:1-16

**'...நான் உன்னை மறப்பதில்லை.' ஏசாயா 49:15**

வாழ்வில் துன்பதுயரங்கள் அதிகரிக்கும்போது, சூழ்நிலை மாறும்போது, தனிமை ஆட்கொள்ளும்போது, அல்லது இழப்புகள் ஏற்படும்போது, யாராவது எம்மைப் பார்த்து, "நீ பயப்படாதே. நான் உன்னை மறப்பதில்லை. எந்தச் சூழ்நிலையிலும், எந்தத் துன்பவேளையிலும். உன் அருகில் இருந்து உதவி செய்வேன்" என்று கூறினால் நமக்கு எப்படி இருக்கும்! அவர்களை நம்புவோம்; உள்ளத்தைத் திறந்து அவர்களோடு பேசுவோம் அல்லவா!

பலவிதமான சோதனைகளாலும் வேதனைகளாலும் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வாலிப சகோதரனைப் பார்த்து, ஒரு தேவ ஊழியன், "தம்பி பயப்படாதே, எந்தவேளையிலும் நான் உன்னோடுகூட இருந்து உனக்கு உதவி செய்வேன்" என்று கூறி, அவனைக் கவனித்து வந்தார். ஆனால், சடுதியாக அந்த தேவஊழியன் வெளிநாடு செல்லவேண்டி வந்தது. இதையறிந்த வாலிபன் மிகவும் துக்கப்பட்டான். பல வழிகளிலும் உடைபட்ட அவன் உள்ளம் இன்னும் அதிக வேதனையால் நிறைந்தது. 'வெளிநாடு சென்ற இந்த ஊழியன் என்னை மறந்துவிடுவாரோ' என்று ஏங்கி அழ ஆரம்பித்தான். இதை அறிந்த அந்த ஊழியன் அவனை அழைத்து, "தம்பி, நீ இன்னுமா என்னை நம்பவில்லை. பயப்படாதே, நான் எங்கே இருந்தாலும் 'உன்னை மறப்பதில்லை' உன்னோடு என் தொடர்பு எப்போதும் இருக்கும் என்று ஆறுதல் கூறிச் சென்றுவிட்டார். நாட்கள் நகர்ந்தன. அவர் கூறியதுபோலவே, கடிதத் தொடர்புகொண்டார். ஆனால், மேலும் நாட்கள் நகர்ந்தன. முன்புபோல கடிதங்கள் வரவில்லை. இறுதியில் முற்றுமாக நிறுத்தப்பட்டது. இதனால் வேதனையடைந்த அந்த வாலிபன் ஒருநாள், 'இவ் உலகிலே யாரைத்தான் நம்புவது? என்னை மறக்காது உதவிசெய்ய இவ்வுலகிலே யாரும் உண்டோ?' என்ற கேள்வியோடு, கண்ணீரோடு ஆலயத்தில் அமர்ந்திருந்தான். அப்போது கர்த்தர் அவனோடு இடைப்பட ஆரம்பித்தார். அந்நாள் அவனுக்குக் கிடைத்த வாக்குத்தத்தம் "நான் உன்னை மறப்பதில்லை" என்பதே. வாக்குத்தத்தத்தை இறுகப்பற்றிக்கொண்டு, கர்த்தருக்குள் வளர ஆரம்பித்தான். நாட்கள் செல்லச்செல்ல, வாக்குமாறாத கர்த்தர் அவன் அறியாத அநேகரை எழுப்பி, இக்கட்டுகள், கஷ்டங்கள், துன்பங்கள் அனைத்திலுமிருந்து அவனை விடுவித்தார். எத்தனை மகிழ்ச்சி!

தேவபிள்ளையே, கலங்காதே. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள் தந்து கர்த்தர் நம்மைத் தாங்குகிறார். மனிதன் நம்மை மறந்துவிடலாம். ஆனால், கர்த்தர் மறப்பதில்லை. கர்த்தர் எப்போதும் உன் அருகிலேயே இருப்பார். நாம் அவருடைய ஆளுகையின் மக்கள் அல்லவா! ஆகவே அவரையே பற்றிக் கொண்டு, நமது உள்ளத்தை அவரிடம் ஊற்றிவிடுவோமாக.

கர்த்தர் என்னை மறந்துவிட்டாரோ என்று சந்தேகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என் வாழ்வில் ஏற்பட்டதுண்டா? அந்தவேளையிலெல்லாம் நான் எப்படி நடந்திருக்கிறேன். அவரது வாக்கை விசுவாசிக்கும் நான் இன்று எப்படி நடக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னே நடப்பவர்

ஒக்டோபர்

**7**

செவ்வாய்

வேத வாசிப்பு : ஏசாயா 43:1-5

**'தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார். கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்து போவார்.' மீகா 2:13**

அடிமைத்தனத்திலிருந்து தமது மக்களை மீட்ட தேவன், காடு மேடுகளுக்கூடாகவும், வனாந்தரப் பாதையிலும், எதிராளிகள், கள்வர்கள் கொள்ளைக்காரர் நடுவிலும் அவர்கள் சிக்கிக்கொள்ளாதபடி, அவர்களுக்கு முன்சென்று, இறுதிவரை வழிநடத்திச் சென்றார் என்பதை வேதாகமம் விளக்குகிறது.

பாவத்திற்கு அடிமையாக இருந்த நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் இன்று மீட்கப்பட்டு, அவரால் வழிநடத்தப்பட்டு வருகிறோம். என்றாலும், எதிர்கொள்ளும் பாடுகள் பாதையை மூடிவிட்டதுபோல நாம் உணரக்கூடும். பகைவரின் பயமுறுத்தல்கள் நமது ஆவிக்குரிய வாழ்வுக்குத் தடைபோலத் தெரியலாம். அல்லது, நாம் செல்லவேண்டிய பாதையைக் கண்டுகொள்ள முடியாதபடி பலவித சூழ்நிலைகள் நம்மைக் குழப்பக்கூடும். சற்று நின்று நாம் கடந்துவந்த பாதைகளைத் திரும்பிப் பார்ப்போமாக. இதுவரை காலமும் நமது வாழ்வில் எத்தனை தடைகள், தாமதங்கள், எதிர்ப்புகள், இன்னும் அநேக காரியங்கள் முன்செல்ல முடியாதபடி நம்மைத் தடுத்திருக்கின்றன. ஆனாலும், தேவகிருபையால் நாம் இவ்விடம் மட்டும் வரவில்லையா? அப்படிப்பட்ட கடினமான பாதைகளுக்கூடாக நம்மை நடத்தியவர் இனியும் நடத்த மாட்டாரோ! பின்னே நாம் ஏன் கலங்கவேண்டும்?

**'பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன், உன்னை பேர்சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன், நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது, வேகாதிருப்பாய்'** என்றும், **'நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்'** (ஏசா.45:2) என்றும் வாக்குத் தந்து, இன்றும் நம்மை நடத்துகிற கர்த்தர் நமக்கு முன்னே செல்லுகிறார் என்பதை நம்புவோமாக.

"...மீட்பர் பின் செல்வேனே, எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்" என்று பாடுகிறோம். நமது மீட்பர் நமக்கு முன்செல்லுகிறார் என்ற விசுவாசம் இல்லாமல் இப்பாடலைப் பாடமுடியுமா? நமது பரம பிதாவைச் சென்றடையாதபடிக்கு நமக்குத் தடையாக நின்ற பாவம் என்ற தடைச்சுவரையே தகர்த்தெறிந்து, நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கிய கிறிஸ்து இந்த சாதாரண உலக வாழ்வில் நம்மை வழிநடத்த வல்லமையற்றுப் போவாரோ?

இதுவரை தடுமாறித் தவித்தவேளைகளில் என்ன நடந்தது என்று சற்று மீட்டுப் பார்ப்போம். அந்தத் தடுமாற்றம் தேவனுடைய வழிநடத்துதலுக்கு நாம் காத்திராததால் ஏற்பட்டதா? அல்லது, கர்த்தருடைய சமுகம் இல்லாததால் ஏற்பட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையிலும் உறவாகும் தேவன்

ஒக்டோபர்

**8**

புதன்

வேத வாசிப்பு : பிலிப்பியர் 4:6-9

**'இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னோடேகூட இருக்கிறார்.' யோவான் 16:32**

சிலசமயங்களில் பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்கள் என்று யாவரும் நம்மைச் சுற்றியிருப்பினும், தனிமை உணர்வு நம்மைத் தாக்குவதை நாம் மறுக்கமுடியாது. கிறிஸ்தவ ஜீவியத்தில் தனிமை நமக்கு வேதனை தருகின்ற நேரம் அல்ல; அது ஆசீர்வாதமான நேரமாகவே இருக்கிறது. ஏனெனில், நமது தனிமையில் கிறிஸ்து எம்மோடுகூட இருக்கிறார். அந்த நம்பிக்கை நமக்கு இராவிட்டால், சாத்தான் நமது சிந்தனையை ஆட்கொண்டு, தேவ சித்தத்தின் பாதையிலிருந்து எம்மை விலக்கிப் போடுவான்.

தகப்பனால் அதிகமாக நேசிக்கப்பட்ட மகன், சகோதரரின் சதியால் பிரிக்கப்பட்டு, அந்நிய நாட்டிற்கு விற்கப்பட்டு, அங்கேயும் அநியாயமாக சிறையில் இருக்கவேண்டியிருந்தது. சிறையில் இருந்தாலும், தனிமை உணர்வு தன்னை ஆட்கொள்ள இடமளிக்காததால் கர்த்தருடைய பிரசன்னம் அவனது உள்ளத்தை நிரப்பியிருந்தது. அதனால், அநேக தேவ இரகசியங்களைத் தேவனிடத்திலிருந்து கற்றறிந்தான். இறுதியாக, தன் குடும்பத்திற்கும், மற்றும் அனைவருக்கும் ஆசீர்வாத பாத்திரமாக மாறினான். அவன்தான் யோசேப்பு. தாவீதின் வாழ்விலும் பலவேளைகளில் தனிமை அவரை ஆட்கொண்டது. ஆனாலும், தாவீது சோர்ந்துபோகவில்லை. தனிமை வேளைகளில் தேவபிரசன்னத்தினால் தன் இருதயத்தை நிரப்பி தேவனோடு வாழ்ந்தார் தாவீது. இயேசு உலகில் வாழ்ந்தபோது தாமே தனிமையையே நாடிச் சென்று ஜெபத்தில் தன் நேரத்தைச் செலவிட்டு, தன் பிதாவின் பிரசன்னத்தைப்பெற்று, வல்லமையோடு தேவசித்தத்தை நிறைவேற்றினார்.

ஆம்! நமது தனிமை ஆண்டவருக்கு மறைவானது அல்ல. நோக்கமின்றி அவர் நமக்குத் தனிமையை அனுமதிக்கமாட்டார் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். தனிமை என்று உணரும்போது, சோர்புக்கு இடமளிக்காமல், ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் நேரத்தைச் செலவிடலாமே. நம்மை நடத்தும் தேவனோடு நாம் உள்ளத்திலே உறவாடலாமே. தனிமை உணர்வு மெதுமெதுவாக நம்மைவிட்டு அகலும்போது, தேவபிரசன்னமும், வழிநடத்துதலும், தேவ இரகசியங்களும் நமக்குள்ளே அற்புதமாக வெளிப்படும். தனிமையில் உளலும் தேவபிள்ளையே, **'கர்த்தர் நித்தமும், உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்'** (ஏசா.58:11). இது தேவவாக்கு.

தனிமை என்று நான் கருதுவது எதனை? அந்த வரட்சியின்போது நான் யாரை அல்லது எதனை இதுவரை நாடிப் போயிருக்கிறேன்? அதனால் எனக்கு ஏற்பட்ட நன்மைகள் தீமைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுக்குப் பிரியம்

ஒக்டோபர்
**9**
வியாழன்

வேத வாசிப்பு : மத்தேயு 3:13-17

**'என் பிரியமே! நீ ரூபவதி, நீ ரூபவதி. உன் கண்கள் புறாக் கண்கள்.' உன்னதப்பாட்டு 1:15**

தன் தகப்பனைப் பிரியப்படுத்தும் மகன், எப்போதும் தன் தகப்பனுக்குக் கீழ்ப்படிகிறவனாகவும், தகப்பன் சித்தத்தையே தன் வாழ்க்கையில் நிறைவேற்றுகிறவனாகவும் இருப்பான். தகப்பனும் அவனைக் குறித்து மகிழ்ச்சியடைவான். இதற்கு மாதிரி இயேசு உலகில் வாழ்ந்த வாழ்க்கைதான். பரமபிதா தமது குமாரனைக் குறித்து, **'இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'** (மத்.3:17) என்று சாட்சி கொடுத்திருக்கிறார். குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவுக்கு ஒரேபேறான குமாரனாக இருந்தும், மனுக்குலத்தின் பாவத்தை நீக்க, பிதாவின் சித்தப்படி விண்ணுலகம் விட்டு மண்ணுலகிற்கு வந்து, கீழ்ப்படிவோடு, தம்மைத் தாழ்த்தினார். அவர் இவ் உலகிலே வாழ்ந்தபோது, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதையே தமது போஜனமாகக் கொண்டிருந்தார். அதன்பிரகாகரம் மனுமக்களுக்கு பாவத்தில் இருந்து மீட்பைப் பெற்றுத் தந்தார். உண்மையாகவே இயேசு பிதாவின் நேச குமாரனாகவே ஜீவித்தார்.

"என் பிரியமே" என்று மணவாளன் தன் மணவாட்டியைப் பார்த்து அன்போடு அழைத்த இந்த உன்னதப்பாட்டு வார்த்தை, இன்று திருச்சபைக்கும் மணவாளனாகிய இயேசுவுக்கும் உள்ள உறவை நமக்கு வெளிப்படுத்துகிறது. நாம் யார்? இத் திருச்சபையின் அங்கத்தினர். இன்று ஆண்டவர் நம்மைப் பார்த்து, "என் பிரியமே" என்று அழைக்கத்தக்கதாக நாம் அவருக்கப் பிரியமாய் வாழுகிறோமா என்பதை நம்மை நாமே கேட்டுப் பார்ப்போமாக.

இன்று, இயேசுவின் பிள்ளை என்று சொல்லிக்கொள்கிற நாம், "என் பிரியமே" என்று ஆண்டவர் நம்மை அழைக்கவும், "இவன் எனக்குப் பிரியமானவன்" என்று பிறர் மத்தியில் நமது பரம பிதா சாட்சிசொல்லவும் தக்கதாக நமது வாழ்வு இருக்கிறதா? நாம் யாருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறோம்; நாம் யாருக்குப் பிரியமாக நடக்கிறோம்?

இப்பாதை கடினம் என்று நாம் நினைக்கலாம். ஆனால், 'கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்' என்று பெயர் பெற்ற தாவீது ராஜா பலவேளைகளிலும், **'என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்'** (சங்.40:8) என்றும், **'உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன், உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக'**(சங்.143:10) என்றும், விண்ணப்பம்செய்து, கர்த்தருக்குப் பிரியமானதை தன் வாழ்க்கையில் நிறைவேற்றுவதையே வாஞ்சித்து வாழ்ந்தார். நாம் மெய்யாகவே தேவனுடைய பிள்ளைகள் என்றால் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருப்போம் அல்லவா!

"நான் என் நேசருடையவன், அவர் பிரியம் என்மேல் இருக்கிறது" என்று சொல்கிற நான் உண்மையாகவே அவருடைய நேசத்திற்கு ஏற்றபடி வாழுகிறேனா? எங்கே நான் தவறுகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தும காப்புறுதி

ஒக்டோபர்

**10**

வெள்ளி

வேத வாசிப்பு : எபிரெயர் 9:7-22

**'நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்.' யாத்திராகமம். 12:13**

நம்மில் பலர் பலவித "காப்புறுதிகளை" செய்திருக்கலாம். வீடுகள், பொருட்கள், சொத்துக்கள், வாகனங்கள் மாத்திரமல்ல, எமது வாழ்க்கைக்கும் பலவித காப்புறுதி முறைகள் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் காப்புறுதி என்பது என்ன? நம்முடைய பணத்தை நாமே முன்கூட்டி முதலீடு செய்து, மாதத்திற்குரிய தவணைப் பணத்தையும் செலுத்தவேண்டும், நமக்கு எதிர்பாராத நஷ்டம் அல்லது ஆபத்துக்கள் இழப்புக்கள் ஏற்படும்போது நாம் செலுத்தியதற்கும் மேலதிகமான பணம் நமது தேவைக்குக் கிடைக்கும் என்று நம்புகிறோம். நாம் செத்தாலும் நமது குடும்பத்துக்கு ஒரு தொகை பணம் கிடைக்கும் என்று நம்புகிறோம். சுருக்கமாகச் சொன்னால் இது நமது பாதுகாப்பிற்காக நமக்கு நாமே ஏற்படுத்துகிற முன்னேற்பாடு. இது நல்லதுதான்.

ஆனால், ஒரு காரியத்தை நாம் மறுக்கமுடியாது. நாம் எடுக்கின்ற இந்தப் பாதுகாப்பு முயற்சிகளும் அதன் தற்காப்புகளும் இவ் உலக வாழ்வு முடிந்துபோகும்போது, அதுவும் முடிந்துபோகும். அத்துடன் அந்தக் காப்புறுதி நமக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்யுமேதவிர அந்த நஷ்டம்வராதபடி நம்மை காப்பாற்ற முடியாது. ஒன்றை நாம் புரிந்துகொள்ளவேண்டும் அதாவது எந்தக் காப்புறுதியானாலும் நமது அழியாத ஆத்துமாவைக் காப்பாற்றிக்கொடுக்க அதனால் முடியாது. அழிந்துபோகின்ற சகலத்திற்கும் காப்புறுதி கொடுக்கின்ற இந்த உலகத்திற்கு, அழியாத நமது ஆத்துமாவிற்குக் காப்புறுதி கொடுக்கவே முடியாது. ஏனெனில், இந்த உலகமே ஒருநாள் அழிந்துபோகுமே! தனக்கே காப்புறுதி இல்லாத உலகத்தால் நமது ஆத்துமாவிற்குப் பாதுகாப்பு கொடுப்பது எப்படி?

ஆனால் நமது ஆத்துமாவுக்கு ஒரு காப்புறுதி உண்டு. அதற்கு நாம் முதலீடு செய்யவோ, மாதாந்த தவணைப் பணம் செலுத்தவோ அவசியமில்லை. நமது அழியாத ஆத்துமாவிற்குரிய காப்புறுதியை ஆண்டவர் அநாதியாய் ஒழுங்கு செய்து, அதற்கான முதலீட்டையும் தொகையாகவே செலுத்திவிட்டார். ஆம், அந்த முதலீட்டுக் கிரயம் நமது ஆண்டவராகிய இயேசுவின் இரத்தமே. அந்தத் திட்டத்தில் நாமும் பங்கடைந்து நமது ஆத்துமாவைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். எனக்காக ஒருவர் காப்புறுதிக் கிரயத்தைச் செலுத்திவிட்டார் என்று விசுவாசிப்பதே அது. அழியாத நமது ஆத்துமா நித்திய வேதனைக்குட்படாமல், ஆண்டவரோடு என்றும் வாழுவதற்கு இந்த ஆத்தும காப்புறுதி நமக்கு அவசியம். இந்தத் திட்டத்தில் நாமும் இணைந்து, மற்றவரையும் இணைத்திருக்கிறோமா?

என்னுடையது என் குடும்பத்தினுடையதுமான பாதுகாப்பிற்காக நான் இன்று ஏற்படுத்தியிருக்கிற பாதுகாப்பு ஒழுங்குகள் என்ன? இயேசுவின் இரத்தமா அல்லது உலக பாதுகாப்பா எதற்கு நான் முக்கியத்துவம் கொடுத்துள்ளேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் அடிச்சுவடு

ஒக்டோபர்

**11**

சனி

வேத வாசிப்பு : கலாத்தியர் 6:6-9

**'நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.' கலாத்தியர் 6:9**

கிறிஸ்தவன் ஒருவன், தானும் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கவே விரும்பி அதற்காகவே முயற்சிப்பான். அந்த ஆவல் நமக்கிருக்கிறதா? அப்படியானால் கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பது தெரியவேண்டும். பாவமற்றவராக உலகிற்கு வந்து, மனுக்குலத்தின் பாவத்தைத் தம்மேல் சுமந்து, மனிதனுக்காகவே மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் எம்மோடு ஜீவித்துக்கொண்டிருக்கிற ஆண்டவரே, இயேசு கிறிஸ்து என்பதை நாம் விசுவாசிக்கிறோம். இந்தக் காரியத்தை அவர் வெகு இலகுவாக செய்துமுடிக்கவில்லை. இந்த மீட்பைச் சம்பாதித்துக் கொடுப்பதற்காக இவ்வுலகிலே பல நிந்தைகள், அவமானங்கள், எதிர்ப்புக்கள், கோபங்கள் போன்றவற்றை அவர் எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஆனாலும், தாம் வந்த நோக்கத்திலிருந்து அவர் பின்வாங்கவில்லை. தாம் வந்த நோக்கத்தை நிறைவு செய்யும்வரை சோர்ந்துபோகாமல் அவர், **'நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார்' (அப்.10:38).**

கிறிஸ்து நிறைவேற்றிய மகா இரட்சிப்பின் கிரியையை அவரைத் தவிர யாராலும் செய்யமுடியாது; அதற்கு அவசியமும் இல்லை. ஆனால், அவர் நடந்த பாதையில் நடக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்து நடந்த பாதை எதிர்ப்புகள், போராட்டங்கள், அவமானங்கள், நிந்தைகள் நிறைந்த பாதை என்றால், அவர் சென்ற பாதையில் நடக்க வாஞ்சிக்கும் நம்மையும் அவை யாவும் நிச்சயம் எதிர்கொள்ளும். அவற்றின் மத்தியிலும் நாம் ஆண்டவரைப்போல நன்மை செய்கிறவர்களாக வாழமுடியுமா? நமக்குத் தீமை செய்த ஒருவன் ஆபத்திலே சிக்கித்தவிக்கும்போது அவனுக்கு நன்மை செய்ய நம்மால் தீவிரமாக செல்லமுடியுமா? இது கடினம், இது கூடுமான காரியம் இல்லை என்று நாம் எண்ணினால், கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்வதும் நமக்கு கடினமாகவே இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் வாழவும், அவரைப்போலவே மாறவும் வாஞ்சிக்கின்ற மகனே, மகளே, **'உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். நீங்கள் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லுங்கள்'** (ரோம.12:9,21). **'ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்'** (யாக்.4:17). ஆகவே, நன்மை செய்வதால் பாடுகள், அவமானங்கள், வந்தாலும், சோர்ந்துபோகாமல், கிறிஸ்துவைப்போல வாழ நம்மை அர்ப்பணிப்போமாக. நாம் உயிரோடு இருக்கும்வரை நன்மை செய்கிறதைத்தவிர நமக்கு வேறென்ன வேண்டும்!

அவமானங்களைச் சந்திக்கும்போது அவற்றிற்கு காரணர் என்று நாம் அறிகிறவர்களைக் குறித்து நமது மனஎண்ணம் என்ன? தீமைசெய்யமாட்டேன், ஆனால், அவருடன் எந்தத் தொடர்பும் வேண்டாம் என்று விலகி நடப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணை மறைக்கும் ஏமாற்றம்

ஒக்டோபர்
**12**
ஞாயிறு

வேத வாசிப்பு : யோவான் 20:1-17

**'...இயேசு நிற்கிறதைக் கண்டாள். ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.' யோவான் 20:14**

மகதலேனா மரியாள் என்ற பெண், ஏழு பிசாசுகளினால் அலைக்கழிக்கப்பட்டு அதிக வேதனைக்குட்பட்ட ஒருத்தி. அவளை இயேசு குணப்படுத்தினார். அப்போதே அவள் தன் வாழ்க்கையிலே இயேசுவை ஏற்றுக்கொண்டாள்(லூக்.8:2). இயேசுவின் போதனைகளைக் கேட்டு அவருக்குப் பின்சென்றாள். இயேசுவின் சிலுவையண்டையில் மாத்திரமல்ல, அவரை அடக்கம்செய்தபோதும் கூடவே இருந்தாள். மூன்றாம் நாள் கல்லறையண்டைக்குச் சென்றபோது, கல் புரட்டப்பட்டிருந்ததைக் கண்டு, பேதுருவிடம் ஓடி, அவரைக் காணவில்லை என்ற செய்தி சொன்னவள் இவளே. பேதுருவும் யோவானும் ஓடிவந்து வெறுமையான கல்லறையைக் கண்டு திரும்பிப் போய் விட்டார்கள். ஆனால், இவளோ அழுதுகொண்டு நின்றாள். அவளிடம் அதிக அன்புகூர்ந்த இயேசு, மரணத்திலிருந்து உயிர்த்தவராய், **'ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?'** என்றார். அப்போதுகூட, இத்தனை காலமும் கேட்டுப் பழகின அக்குரலை அவள் அறியாதவளாய், அவரைத் தோட்டக்காரன் என்று எண்ணி, **'ஐயா அவரை வைத்த இடத்தைச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்வேன்'** என்றாள்.

ஆம்! மரித்துப்போன சரீரத்துக்கு பரிமளதைலம் பூச ஓடி வந்தவளுக்கு வெறுமையான கல்லறை "ஏமாற்றத்தை" கொடுத்தது. இந்த ஏமாற்றம், தன் ஆண்டவர் முன்னே நின்றும், அவர் பேசியும் அவரை அடையாளம் காண முடியாதபடி அவளுடைய மனதை மறைத்துப்போட்டது. அதனால் இயேசு அருகில் நின்றும், அவரே இயேசு என்று அவளால் அறியக்கூடாதிருந்தது.

கிறிஸ்துவை நன்கு அறிந்த பிள்ளைகளின் வாழ்க்கையிலும்கூட இன்று பலவிதமான ஏமாற்றங்கள் ஏற்படத்தான் செய்யும். பிள்ளைகளின் அன்புக்காக காத்திருக்கும் பெற்றோர் வாழ்க்கையில் ஏமாற்றம்; பெற்றோரின் சொத்துக்காக காத்திருந்த பிள்ளைகளுக்கு ஏமாற்றம்; இன்னும் எத்தனையோ வழிகளில் ஏமாற்றம். இவ் ஏமாற்றத்தால் இன்று நாமும் ஏதோவகையில் மனமுடைந்து வெறுப்போடிருக்கலாம். ஆனால், எல்லாமே நம்மை ஏமாற்றினாலும் நம் அருகில் ஆண்டவர் நிற்கிறார். இந்த இயேசுவை நம்மால் அடையாளம் காண முடிகிறதா? ஏன் நம்மால் முடிகிறதில்லை? பாவத்திலிருந்து நம்மை மீட்டு, இன்றுவரை நம்மை வழிநடத்திவருகின்ற நமது ஆண்டவரைவிட நமது ஏமாற்றம்தான் நமக்குமுன் பெரிதாகத் தெரிகிறது. அது நமது கண்களை மறைத்துப்போடுகிறது. "மரியாளே" என்று அன்று அப்பெண்ணை அழைத்தவர் நம்மையும் அழைக்கிறார். நமது ஏமாற்றங்கள் சந்தேகங்களிலும் பார்க்க நமது ஆண்டவர் பெரியவர் அல்லவா!

ஆண்டவர் என்னோடிருக்கிறார் என்பதை மறக்கச்செய்த எனது வாழ்வின் சம்பவங்களை நினைத்துப் பார்க்கிறேன். இந்த சந்தர்ப்பங்களில் என் சந்தேகத்தைத் தீர்த்த அனுபவங்கள்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிசேஷப் பணியில் பின்வாங்காதே!

ஒக்டோபர்
**13**
திங்கள்

வேத வாசிப்பு : அப்போஸ்தலர் 18:1-18

**'நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.' அப்போஸ்தலர் 18:10**

இரட்சிப்பின் சுவிசேஷம் அறிவிக்கப்படாதபடி தாராளமாக தடைகள் எழும்பியிருக்கிறது. வேதவசனமே கேட்கக்கூடாதபடி கதவுகள் பூட்டப்படுகின்ற இருளான காலங்கள் வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலும் கர்த்தருடைய வார்த்தையை வல்லமையோடு பரப்புவதற்காக விரைந்து செல்லும் தேவ பிள்ளைகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களில் ஒருவனாக, நாம் இருக்கிறோமா? தேவனுக்கு விரோதியான சத்துரு பல வழிகளிலும் எதிர்ப்பு களையும் பயமுறுத்தல்களையும் கொண்டுவந்து நம்மைப் பின்னடையச் செய்வான். எதிர்ப்புகளைச் சமாளிக்கமுடியாமல் அந்த இடத்தைவிட்டே சென்று விட்டால் நலம் என்று நாமும் எண்ணக்கூடும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தள்ளாடும்போது, ஒருகணம் அமர்ந்திருந்து தேவனுக்காக அயராது உழைத்த, தேவ சித்தத்தைப் பூரணமாகத் தன் வாழ்க்கையில் நிறைவுசெய்த பவுலின் வாழ்க்கையை சற்றுத் திரும்பிப் பார்ப்பது நல்லது.

பவுலின் சுவிசேஷப் பணியில் எத்தனை தடைகள் ஏற்பட்டன. மூப்பர், பரிசேயர், சதுசேயர் என்று பலர் பவுலைப் பயமுறுத்தினார்கள். பல இடங்களில் பவுல் பல உபத்திரவங்களை அனுபவித்தார்; சிறையில் அடைக்கப்பட்டார். ஆனாலும், அவர் பின்வாங்கிப்போகவில்லை. யாராலும் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே" என்று கர்த்தர் தரிசனமாகிக் கூறிய வார்த்தையைப் பவுல் தன் மூச்சோடு கலந்துவிட்டார். பவுலைப் பலமாய் எதிர்த்த இடத்திலே தொடர்ந்தும் ஒரு வருஷம் ஆறு மாதமும் தங்கியிருந்து உபதேசம்பண்ணினார் என்று வாசிக்கிறோம்.

நம்மைத் தமக்கென்று பெயர் சொல்லி அழைத்தவர் உண்மையுள்ள தேவன். அவர் "தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்" (சங்.91:4); "தமது கரத்தின் நிழலினால் உன்னை மூடுவார்" (ஏசா.51:16). தமது கண்மணிபோல் உன்னைப் பாதுகாத்து, உனக்காகத் தமது தூதர்களுக்குக் கட்டளையிடுவார் (சங்.91:11). மனிதனால் கொடுக்கமுடியாத இத்தனை பாதுகாப்பைக் கொடுக்கும் ஆண்டவர் நம்மோடு இருக்கும்போது, நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. நம்மால் புறப்பட்டு வேறு இடத்திற்குச் செல்ல முடியாவிட்டாலும், ஆண்டவர் நம்மை எங்கே வைத்திருக்கிறாரோ அங்கே சுவிசேஷத்தை அறிவிக்கலாமே. அந்த இடத்தில் அநேகரை இரட்சிப்பிற்குள் கொண்டுவருவது தேவசித்தமாய் இருந்தால், அவர் நம்மைப் பாதுகாத்து நடத்துவார். இரட்சிப்பு ஆண்டவருடையது; அறிவிக்கவேண்டியது நமது பொறுப்பு.

இதுவரையிலும் எத்தனைபேருக்கு நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து இருக்கிறேன்? ஆண்டவருடைய அன்பை அறிவித்தும், ஏற்றுக்கொள்வார் இல்லையே என்று சோர்ந்துபோன தருணங்கள் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவர் காப்பார்!



வேத வாசிப்பு : சங்கீதம் 10:1-18

**'திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.'** எரேமியா 49:11

இனத்திற்கு விரோதமாய் இனம்; நாட்டுக்கு விரோதமாய் நாடு, இந்தப் போர்களில் சிக்கித்தவிக்கிறவர்கள் ஏராளம். இவர்கள் பாதுகாப்பு நாடி, சொந்த இடத்தைவிட்டு வேறிடம் செல்லும்போது தங்கள் குடும்பம், இனம் எல்லாவற்றிலுமிருந்து பிரிக்கப்படுகிறார்கள். இதனால், பல வழிகளிலும் தாக்குண்டு பரிதாபமான நிலையில் ஜீவிக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றும் பரிதபிக்கும் தேவபிள்ளையே, உன்னை, உன் பிள்ளைகளை, உறவுகளைத் தம்மிடம் ஒப்புவிக்கும்படி ஆண்டவர் அழைக்கிறார்.

**'ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும், உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள், அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்'** (மத்.10:29-31) என்று கூறிய இயேசு, **'மரித்தேன், ஆனாலும், இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'** (வெளி.1:18) என்று வாக்குப்பண்ணியுள்ளார். இவரிடம் நமது அன்பானவர்களை ஏன் ஒப்புவிக்கக் கூடாது? அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நமது குடும்பத்தவர்கள் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். வாக்குத்தத்தத்தின் ஜனமாகிய இஸ்ரவேலர் எத்தனைமுறை அந்நிய ஜனங்களின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டு, சிதறடிக்கப்பட்டுப் போனார்கள். ஆனாலும், இரக்கமும் மனஉருக்கமுமுள்ள வாக்குமாறாத தேவன் அவர்களை கைவிடவில்லை. கண்மணிபோல அவர்களைப் பாதுகாத்து திரும்பவும் அவர்களது தேசத்தில் கூட்டிச்சேர்த்தார்.

இவற்றையெல்லாம் நாம் அறிந்திருந்தாலும், சூழ்நிலைகள் நெருக்கும்போது விசுவாசத்திலும் தளர்ந்துபோகிறோம். என் ஆண்டவர் மரணத்தையே ஜெயித்தவர் என்ற எண்ணமே அந்த சந்தர்ப்பத்தில் வருவதில்லை. கலங்கித் தவித்து மனுஷ பாதுகாப்புக்களை நாடி ஓடுகிறோம். பாதுகாப்பு என்று கருதி அடைக்கலம் புகுந்த எத்தனை ஆயிரங்கள் இன்று உலகில் இல்லை. இந்த நிலைமை ஏன்? நாம் தினந்தோறும் தேவனுடைய வார்த்தையில் நம்மை உறுதிப்படுத்துவதில் குறைவுபட்டுள்ளோம் என்றால் மிகையாகாது.

**'நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன்'** (யோவா.14:18) என்று வாக்களித்த இயேசு, நமது உறவுகளுக்காக ஏறெடுக்கும் ஜெபங்களை மாத்திரம் புறக்கணிப்பாரா? திக்கற்றவர்கள் எல்லார்மேலும் அவர் கண்ணோக்கமாய் இருக்கிறார். அவருடைய ஓங்கிய புயத்துள் நாம் நம்மவர்களை ஒப்புவிப்பது ஒன்றுதான் நம்மால் செய்யக்கூடிய காரியமாகும்.

ஆபத்துக்கள் நேரிட்டபோது, 'கடவுளே' என்று பழக்கதோஷத்திலே கதறினாலும், இதுவரை யார் பாதுகாப்பை நாடியிருக்கிறேன். மனுஷ பாதுகாப்புக்கும் ஆண்டவர் அருளும் பாதுகாப்புக்கும் வித்தியாசத்தை உணர்ந்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தரிடத்தில் இருதயத்தை ஊற்றிவிடு!

ஒக்டோபர்
**15**
புதன்

வேத வாசிப்பு : ஏசாயா 54:6-14

**'என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ, நான் திராட்ச ரசமாயிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை. நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்.'** 1சாமுவேல் 1:15

தேவபயத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு குடும்பத்தில் சடுதியாக புயல் வீச ஆரம்பித்தது. குடும்பத்திற்காக உழைக்க வென்று வெளிநாடு சென்ற கணவன் பிரிந்துபோனான். கையில் பணம் குறைந்தது, இறுதியில் கஷ்ட நிலைமைக்குள் தள்ளப்பட்டாள் அந்தத் தாய். உறவினர் சிறிது காலம் உதவி செய்தனர். பின்பு, ஒருவர் பின் ஒருவராக பின்வாங்கி விட்டனர். செய்வதறியாதவளாகக் கலங்கி நின்றாள். துக்கமும் வேதனையும் அவளைத் தாக்கியது. கண்ணீரே அவள் தஞ்சமாயிற்று. "என் இருதயத்தின் பாரத்தையும், வேதனையையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லையே" என்று அடிக்கடி கூறுவாள். ஆனாலும், வறுமையிலும் ஏளனப் பேச்சுக்கள் மத்தியிலும் வாழ்ந்த அவளுடைய வாழ்க்கையிலும் ஒளிவீச ஆரம்பித்தது. அவளும் பிள்ளைகளும் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டார்கள். யார் கைவிட்டாலும் கைவிடாத ஆண்டவரை இறுகப் பற்றிக்கொண்டார்கள். என்ன ஆச்சரியம்! கஷ்டங்கள் மத்தியிலும் மகிழ்ச்சியைக் கண்டார்கள். நெருக்கங்கள் மத்தியிலும் வழிகள் திறந்ததைக் கண்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தனக்கொருவர் இருக்கிறார் என்ற நிச்சயம் அவளுக்கு உண்டாயிற்று. இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன என்று கேட்டபோது, அவள், "தேவசமுகத்திலே இருதயத்தை நான் ஊற்றினேன், அவ்வளவும்தான். அன்றிலிருந்து இதுவரை அறிந்திராத சமாதானம் என் இருதயத்தை நிரப்பிற்று" என்றாள் அவள்.

புறக்கணிப்பு, ஏளனம் எல்லாவற்றாலும் தாக்குண்ட அன்னாள் வேறு வழியின்றி ஆலயத்தில்போய், தனது வேதனையை எவரும் அறியாதபடிக்கு ஆண்டவரிடம் மாத்திரமே இருதயத்திலே பேசினாள். சத்தம் வெளியே கேட்காத தால் ஆசாரியன் ஏலி அவள் வெறித்திருக்கிறாள் என நினைத்தான். அவனுக்கு அன்னாளின் இருதயத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவளோ தன் இருதயத்தை தேவசமுகத்தில் ஊற்றிக்கொண்டிருந்தாள் (1சாமு.1:12-16). அதன் பலன் இன்றும் அன்னாள் நமக்கெல்லாம் ஒரு முன்னுதாரணமாய் விளங்குகிறாள்.

**'நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப் பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன். இதற்காக நான் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்'** (எரே.31:25,26). இவரே நமது தேவன். பின்னர் ஏன் கலக்கம்? மனுஷரிடம் நமது இருதயத்தை ஊற்றுவதால்தான் அதிக கலக்கமடைகிறோம். தேவசமுகத்தை நாடுவோமாக. சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். சந்தோஷமும் மகிழ்ச்சியும் நமது இருதயத்தை நிச்சயம் நிரப்பும்.

சாதாரணமாக தினமும் ஜெபிக்கின்ற ஜெபத்திற்கும், இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும் ஜெபத்திற்கும் வேறுபாடு கண்டிருக்கிறேனா? உள்ளம் உடையும் போது மனுஷரையா ஆண்டவரையா, யாரை நாடுகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனை நம்பு

ஒக்டோபர்
**16**
வியாழன்

வேத வாசிப்பு : எபிரெயர் 11:1-6

**'மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையா யிருக்கிறேன்.' அப்போஸ்தலர் 27:25**

பின்லாந்து தேசத்திற்கு அருகிலுள்ள சமுத்திரத்திலே, கப்பலொன்று அமெரிக்கா நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அந்தக் கப்பலின் கப்டன் கடமையுணர்வுள்ள தேவனுக்குப் பயந்த ஒருவர். அவர் கூறியது: "கடைசியாக ஐந்து கிழமைகளுக்குமுன் இந்தக் கடற்பாதைக்கூடாக நான் கப்பலை ஓட்டிச்சென்றபோது, என் வாழ்க்கையிலே பெரும் மாற்றம் ஏற்பட்டது. காரணம் ஜோர்ஜ் முல்லர் அவர்கள், எம்மோடு இக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். சடுதியில் நமது கடல்வழி பனியால் நிறைந்திருந்ததைக் கண்டேன். 24 மணிநேரமாக கப்பல் முன்னே செல்லமுடியாதபடி இருந்தது. அப்போது முல்லர் அவர்கள் என்னிடத்தில் வந்து, "கப்டன், கியூபெக்கில் நான் சனிக்கிழமை மத்தியானம் நிற்கவேண்டுமே" என்றார். நானோ, "அது முடியாது" என்றேன். அதற்கு அவர், "நன்று, நான் போய்ச்சேரவேண்டிய இடத்திற்கு உனது கப்பல் என்னைக் கொண்டுபோய்ச் சேர்க்காவிட்டாலும், என் தேவன் வேறுவழியால் என்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார். கடந்த 47வருட அனுபவத் தில், ஒருநாள்கூட போகவேண்டிய இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்துக்குப் போய்ச் சேர நான் தவறியதில்லை. நாம் ஜெபிப்போம்" என்றார். நானோ இவருக்கு பைத்தியமோ என்று நினைத்தேன். அவரிடம், "முல்லரே, இது எத்தனை அடர்த்தியான பனி என்பதை நீர் அறிவீரா" என்று கேட்டேன். அவரோ, "என் கண்கள், இந்த அடர்ந்த பனியில் அல்ல; உயிருள்ள தேவனிடத்தில், வாழ்க்கை யில் சகல சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்துகிறவரிடத்தில் உள்ளது" என்று சொல்லிவிட்டு முழங்காற்படியிட்டார். மிகவும் சுருக்கமான ஒரு ஜெபம் செய்து எழுந்தார். அதைத் தொடர்ந்து நானும் ஜெபிக்க ஆரம்பித்தேன். முல்லர் அவர்களோ என் தோள்களில் கையை வைத்து, "சகோதரனே, நீர் ஜெபிக்கத் தேவையில்லை, பதில் கொடுத்துவிட்டார் என்பதை நான் விசுவாசிக்கிறேன். இனிமேல் நீர் ஜெபிப்பதற்கு ஒன்றுமில்லை" என்றார். இருவரும் எழுந்து வெளியே வந்துப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! பனி மறைந்துவிட்டிருந்தது.

முல்லர் அவர்கள் பிரசங்கத்திற்குச் சென்றார். ஆனால் பவுலோ கைதி யாக, ரோம அரசாங்கத்தின் முன் நிறுத்தபடுவதற்காக கொண்டுசெல்லப்பட்டார். ஆனாலும், அவர் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. கடலில் மூழ்கிவிடு வோமோ என்ற பயந்தவர்களையும் அவர் பலப்படுத்தினார். எப்படி? 'என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர்' சொன்ன வார்த்தைகள் நிறைவேறும், நிறைவேண்டும் என்பதைப் பவுல் உறுதி யாக நம்பினார். ஆனால் இன்று நாம் சிறைக்கைதிகளாக அல்ல; சுதந்தரமாக வாழுகிறோம். கைதியானாலும்கூட அந்த நம்பிக்கை நமக்குண்டா?

தேவ வழிநடத்துதலின் உறுதிவேண்டும் என்பதற்காக இன்றும் நான் தரிசனத்தை நாடி நிற்கிறேனா? வேதவாக்கியத்தில் தேவன் அருளிய வாக்கு களை நம்பி நான் முன்செல்கிறானா? அல்லது, அதனைச் சந்தேகிக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமத்தில் நிலைத்திரு

ஒக்டோபர்
**17**
வெள்ளி

வேத வாசிப்பு : சங்கீதம் 101:1-6

**'இதோ, தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை. பொல்லாதவர்களுக்குக் கைகொடுக்கிறதுமில்லை.'** யோபு 8:20

என் வழிகளிலெல்லாம் இயன்றவரையிலும் உத்தமமாய் இருந்தும், என் வாழ்வில் ஏன் இத்தனை சோதனையும், வேதனையும் என்று எத்தனைபேர் மனக்கலக்கத்தோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உத்தமர்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போமா!

1. **'கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண்'** (நீதி. 10:29)

2. **'உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்'** (நீதி. 11:5).

3. **'உத்தமர்களின் வாய் அவர்களைத் தப்புவிக்கும்'** (நீதி. 12:6).

4. **'உத்தமர்களை மோசப்படுத்தி, பொல்லாத வழியிலே நடத்துகிறவன், தான் வெட்டின குழியில் தானே விழுவான். உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள்'** (நீதி. 28:10).

கர்த்தருக்குப் பயந்தவனும், உத்தமனுமாயிருந்த யோபுவின் வாழ்க்கையில்தான் எத்தனை இழப்புகள், வேதனைகள், போராட்டங்கள். அவருடைய சிநேகிதர்கள் பலவித வார்த்தைகளைக் கூறி அவரைக் குழப்பினார்கள். ஆனாலும் யோபுவோ, **'என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை விட்டு விலகேன்'** (யோபு 27:5) என்று கூறினார். ஏனெனில், **'தேவனுடைய வழி உத்தமமானது'** (சங்.18:30) **என்றும், அவர் 'உத்தமனை வெறுக்கிறதுமில்லை'** (**யோபு 8:20**) என்றும் யோபு நன்கு அறிந்திருந்தார். யோபு மாத்திரமா, நோவாவைப் பாருங்கள். நோவாவின் காலம் அக்கிரமமும் பாவமும் நிறைந்த காலமாயிருந்தது. அப்படிப்பட்ட காலத்திலும் நோவா இறுதிவரை தன் உத்தமத்தில் தவறவில்லை. அழிவு வந்தபோது, நோவாவும் அவருடைய வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்பட்டார்கள். **'கர்த்தர் உத்தமர் என்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதி இல்லையென்றும்'** (சங். 92:14) அறிந்திருந்த தாவீது, **'நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்'**(சங். 41:12) என்று ஜெபித்தார். அந்த உறுதியோடுதான், எதிர்கொண்ட போராட்டங்கள், பயமுறுத்தல்கள் அனைத்தையும் தாவீது மேற்கொண்டு வெற்றியோடு முன்சென்றார்.

உத்தமம் என்பது குற்றம்சுமத்தப்படாத வாழ்க்கை. நமது உத்தமம் நம்மைக் காப்பதில்லை. ஆனால், கர்த்தருக்குமுன் உத்தமமாய் நடப்பவர்களுடைய வாழ்க்கையில் போராட்டங்கள் வந்தாலும் தேவன் அவர்களைக் கைவிடமாட்டார் என்பது நிச்சயம். ஆகவே, நமது வழிகளை உத்தமமாய் காத்துக்கொள்வோமாக.

இதுவரை நான் குற்றஞ்சாட்டப்பட்ட வேளைகள் எவை என்பதைச் சிந்திக்கலாம். அப்படியிருந்தும் தேவகரம் என்னைத் தாங்கிய அனுபவங்கள் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்கம் மகிழ்ச்சியாய் மாறும்!

ஒக்டோபர்

# 18

சனி

வேத வாசிப்பு : நெகேமியா 1:1-11

**'...நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன?' நெகேமியா 2:2**

நெகேமியா, பெர்சிய ராஜாவின் பானபாத்திரக்காரனாக இருந்தபோது, யூதாவிலிருந்து வந்த சில மனுஷர்களிடம், சிறையிருப்பில் மீந்து தப்பிய யூதர்களின் செய்தியைக் கேட்டறிந்தார். தேசத்திலே மக்கள் மகா தீங்கு அனுபவிப்பதையும், எருசலேமின் அலங்கம் இடிபட்டும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாகக் கிடக்கிறதையும் அறிந்த நெகேமியாவின் உள்ளம் துக்கத்தால் நிறைந்தது. ஆகவே, எப்படியாகிலும் எருசலேமிற்குச் சென்று தன் சகோதரரையும், இடிபட்ட அலங்கத்தையும் பார்த்து வரவேண்டுமென்று தீர்மானித்தார். இதற்காக ராஜாவின் கண்களில் தனக்குத் தயவு கிடைக்கவேண்டுமென்று ஜெபித்தார். தனது ராஜாவிடம் சென்ற நெகேமியாவின் முகம் வாடிப்போய், துக்கத்தால் நிறைந்திருந்தது. தன் சமுகத்தில் எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கிற நெகேமியாவின் முகம் வாடி இருந்ததைக் கண்ட ராஜா, அதைக் குறித்து விசாரித்து, நெகேமியாவின் விருப்பத்தை நிறைவேற்றினார் என்று வாசிக்கிறோம்.

**'அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும் ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடுகள் இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்'** (ஆப.3:17,18) என்று ஆபகூக் கூறியதுபோல, "வாழ்க்கையின் எந்த சூழ்நிலையிலும், எந்தத் துன்பம் வந்தாலும் "நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் ஜீவிப்பேன்" என்று பாடல் பாடி மகிழ்ந்திருக்கும் நாம், சூழ்நிலைகள் பாதகமாக மாறும்போது துக்கிப்பது ஏன்?

அன்று நெகேமியாவின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து ராஜாவின் கண்களில் தயைசெய்த அதே தேவன், இன்றும் நமது ஜெபங்களைக் கேட்கிறார் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **'துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார். அவர் நம்முடைய பாடுகளை ஏற்று நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்'** (ஏசா. 53:3,4) என்று வாசிக்கிறோம். 'இருந்தார், சுமந்தார்' என்று முடிந்துபோனதாக எழுதப்பட்டிருக்கிறது. அதாவது அவர் நமது துக்கத்தைச் சுமந்து தீர்த்துவிட்டார். அப்படியானால், இன்று ஏன் துக்கம் என்கிறீர்களா? இந்த உலகம் இருக்கு மட்டும் துன்பமும் இருக்கத்தான் செய்யும். ஆனால், இயேசு என் துக்கத்தைச் சுமந்தார் என்று விசுவாசிக்கும்போது, அவர் அருளும் ஆறுதலும் அந்த கடும் துக்கத்தை மேற்கொள்ளும் தயையும் நமக்குக் கிடைக்கிறது. ஆகவே, இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருக்கக் கற்றுக்கொள்வோமாக.

இன்று என் மனதை அழுத்தும் துக்கம் என்ன? இயேசு எனக்கு விடுதலையும் ஆறுதலும் தந்துவிட்டார் என்று விசுவாசிக்கமுடியாமல் நான் தடுமாறுவதற்குக் காரணம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் தாமதம் ஏன்?

ஒக்டோபர்
19
ஞாயிறு

வேத வாசிப்பு : அப்போஸ்தலர் 22:8-16

'இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன?' அப்போஸ்தலர் 22:16

கிறிஸ்துவின் பிள்ளைகளைத் துன்பப்படுத்தி, இரட்சிப்பின் செய்தி அறிவிக்கப்படாதபடி தடை ஏற்படுத்தத் தீவிரித்தவன் சவுல். இந்த சவுலையே, கர்த்தர் சந்தித்தார். தான் துன்பப்படுத்துகிறவர் யார் என்றும், அவர் எதற்காகத் தன்னைத் தெரிந்துகொண்டார் என்பதையும் கேட்ட சவுல், முகங்குப்புற விழுந்து தன்னை ஒப்புக்கொடுத்தார். தேவனுக்குச் சாட்சியாக விளங்கப்போகின்ற இந்த சவுலிடம் வந்த அனனியா, "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் நீங்கி, கழுவப்பட நீ இன்னமும் தாமதிக்கிறது என்ன?" என்று கேட்டான்.

பின்னர் பவுல் என்று அழைக்கப்பட்ட இந்த சவுல், முன்னமே தெரிந்தெடுக்கப்பட்ட' ஒருவர். தேவனுடைய திருச்சித்தத்தை அறிந்து, அவரைத் தரிசித்து, அவருடைய வார்த்தையைக் கேட்டு, தேவனுக்கே சாட்சியாக இருக்கும்படிக்கு தேவன் அவரை அழைத்திருந்தார். அப்படிப்பட்ட மேன்மையான அழைப்பைப் பெற்றிருந்தாலும் அவர் செய்யவேண்டியச் சில காரியங்கள் இருந்தன. தேவன் அழைத்தார் என்ற நிச்சயத்தை அனனியா மூலம் அறிந்தவுடன் அவர் அவசரப்பட்டு எழுந்துபோக முடியாது. அவர் தானே சிலவற்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது. முதலாவது பவுல் தனது பாவங்கள்போகக் கழுவப்படவேண்டும். ஆண்டவர் அவரை இரட்சித்ததன் மேன்மையான ஒரு அடையாளத்தை அவர் முதலில் தரித்துக்கொள்ளவேண்டும். இரட்சிப்பின் செய்தியைப் பிறருக்கு அறிவிப்பதற்கு முன்னர் அந்த இரட்சிப்பின் நிச்சயத்தை அவர் பெற்றுக்கொண்டு சில நியமங்களை நிறைவேற்றவேண்டும்.

ஆண்டவராகிய இயேசு தமது ஊழியத்தை ஆரம்பிக்க முப்பது வருடங்கள் காத்திருந்தார் என்றும், தமது ஊழியத்தை ஆரம்பிக்க முன்னர் தேவ நீதியை நிறைவேற்றவேண்டிய பொறுப்பில் தவறாதவராக, தாமே தம்மை ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தார் என்றும் வாசிக்கிறோம். ஆண்டவரே, ஒரு நியமப்படி ஒழுங்காக நடந்தாரென்றால் நமது காரியம் என்ன?

இப்படியிருக்க, இந்நாட்களில் ஊழியம் செய்யவேண்டுமென்று தீவிரிக்கும் சிலர், தாமே தமக்குள் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறாதவர்களாகவும் தேவனுடைய சித்தத்திற்கும் நீதிக்கும் தம்மை ஒப்புவிக்காதவர்களாகவும் இருப்பது துக்கத்துக்குரியது. அதற்கு ஒரு காரணம், அவர்களுக்குள் இருக்கும் பயம். சமுதாயத்திற்கு பயந்து தேவனை முழு மனதோடு சேவிக்கப் பயம். இது தவறு. முதலாவது தேவகட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். நமக்கு மீட்பு வேண்டும். என் பாவங்கள் கழுவப்பட்ட நிச்சயம் எனக்கு வேண்டும். அந்த நிச்சயத்தை, அந்த விடுதலையைப் பெற்றுக்கொள்ளாதவனால், அந்த மகிமையான விடுதலையைக் குறித்து அடுத்தவனுக்கு விளக்கமுடியாது. நாம் எப்படி?

கிறிஸ்தவ பின்னணியத்திலே பிறந்து வளர்ந்திருந்தாலும், பாவ மன்னிப்பின் நிச்சயம், மறுபிறப்பின் அனுபவத்தை நான் பெற்றிருக்கிறேனா? பெற்றுக்கொண்ட நிச்சயமாவது இன்றும் இருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனைக் கனம்பண்ணுங்கள்

ஒக்டோபர்
**20**
திங்கள்

வேத வாசிப்பு : 1சாமுவேல் 2:27-36

**'நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் ...கேட்கிறார்.' மல்கியா 1:6**

மகன் தகப்பனைக் கனம்பண்ணுகிறான். மனைவி புருஷனைக் கனம்பண்ணுகிறாள். வேலைக்காரன் எஜமானைக் கனம்பண்ணுகிறான், ஊழியன் தன் அதிகாரியைக் கனம்பண்ணுகிறான். இப்படியே ஒவ்வொருவரும் நமக்குமேல் உள்ளவர்களைக் கனம்பண்ணுகிறோம். ஆனால், இவர்கள் எல்லாரிலும் மேலாக நமக்கு ஒருவர் இருக்கிறார். அவரே முழுமையான கனத்துக்குப் பாத்திரர். அவருடைய கனத்தை நாம் அவருக்குக் கொடுக்கிறோமா?

கர்த்தருக்குப் பயந்தவனும், தாழ்மையுள்ளவனும் ஆசாரியனுமான ஏலியின் குடும்பம் ஆசீர்வதிக்கப்படவேண்டியதற்குப் பதிலாக, தேவ கோபாக்கினைக்குட்படுத்தப்பட்டது. காரணம் என்ன? ஏலியின் பிள்ளைகள் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டிய கனத்தைக் கொடுக்கவில்லை. கர்த்தருடைய பலிபீடத்தை அசுத்தமாக்கி, தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்து, பாவ வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஆசாரியனின் பிள்ளைகளாக இருந்தும் இவர்கள் தங்கள் தகப்பனையும் தேவனையும் கனப்படுத்தவில்லை.

கிறிஸ்துவுக்குள் வாழும் பிள்ளையே, நாளை மாறிப்போகும் இவ்வுலகிலே, நித்தமும் மாறுகின்ற மனிதனுக்கு, பல சுயகாரணங்களுக்காக கனம் கொடுக்க முந்திக்கொள்ளும் நாம், நம்மை நேசித்து, ஆலோசனை சொல்லி, பாதுகாத்து, வழிநடத்தி வருகின்ற ஆண்டவருடைய விஷயத்தில் என்ன செய்கிறோம்? கனம்பண்ணுவது என்று சொல்லும்போது, இன்று அவர் மனிதனாக நம் முன் இல்லை; ஆனால், ஜீவனுள்ள வார்த்தை இருக்கிறது. அந்த வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது நாம் அவரைக் கனம்பண்ணுகிறோம். ஒரு நாளை ஆரம்பிக்கும்போது, முதலாவது, நமது பரம பிதாவின் பிரசன்னத்தை நாடி, அவருடைய ஆசீர்வாதத்தோடு அந்த நாளை ஆரம்பிக்கும்போது நாம் அவரை கனம்பண்ணுகிறோம். நமது வருவாயில் தசமபாகத்தையும் அதற்கும் மேலாகவும் கொடுத்து அவருடைய ஊழியத்தைத் தாங்கும்போது நாம் அவரைக் கனம்பண்ணுகிறோம். நாம் உயர்த்தப்படும்போதும் அவருக்கு நன்றி சொல்லுவோமானால் அதுவும் அவரைக் கனம்பண்ணுவதாகும். **'என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டைபண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்'** என்று கர்த்தரே கூறியுள்ளார் (1சாமு. 2:30).

பெற்றோராய், பிள்ளைகளாய், வாலிபராய் நாம் எந்நிலையில் இருந்தாலும், அந்தந்த நிலையில் தேவன் நமக்கு வகுத்துத் தந்திருக்கும் அவருடைய பரிசுத்த வழியில் நடந்து அவருக்கே முழுக் கனத்தையும் செலுத்துவோமாக.

யாரையாவது கனஈனப்படுத்தி, அதனால் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்திருக்கிறோமா? மனுஷனைக் கனஈனப்படுத்துவதே நமக்குக் கஷ்டங்களை விளைவிக்கும்போது, தேவனுடைய காரியம் எப்படியிருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் உண்மை

ஒக்டோபர்
**21**
செவ்வாய்

வேத வாசிப்பு : சங்கீதம் 89:1-52

**'...உங்களிடத்தில் உண்மை உண்டோ இல்லையோ என்று உங்கள் வார்த்தைகள் சோதிக்கப்படுமளவும் நீங்கள் காவலில் இருக்கவேண்டும்.' ஆதியாகமம் 42:16**

தாவீது ராஜாவைப்போல உண்மையுள்ளவன் இல்லை (1சாமு.22:14) என்று கூறப்பட்டுள்ளது. தாவீது உண்மையுள்ளவராய் இருந்ததற்குக் காரணம், அவர் தான் விசுவாசிக்கும் "கர்த்தர், உண்மையும் நீதியும் உள்ளவர்" என்று அறிந்திருந்தார். ஆகவேதான், **'இதோ உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறீர்'** (சங்.51:4) என்று ஜெபித்தார். அப்படியே மனஉண்மையோடு துர்க்குணத்திற்குத் தன்னை விலக்கிக் காத்துக்கொண்டார்.

உண்மையுள்ள தேவனைத் தெய்வமாகக் கொண்டிருக்கின்ற நாம், உண்மையாயிருக்கவேண்டியது எத்தனை அவசியம்! **'தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.'** (யோவா.4:24). நம்மிடத்தில் சரி பிழைகள் இருக்கலாம். ஆனால், அவற்றையும் அறிக்கை செய்துவிடுகின்ற உண்மையான இருதயம் நம்மிடம் உண்டா? உண்மையான உள்ளத்தோடு, தேவனைத் தொழுதுகொள்ளும்போது, தேவன் அவனை உற்றுநோக்குகிறார். அவனை நிறைவான ஆசீர்வாதங்களினால் நிரப்புகிறார். இக்கட்டுக்கள் எல்லாவற்றிலுமிருந்து காத்துக்கொள்ளுகிறார். உண்மையாகவே தன்னை நோக்கிக் கூப்பிடும் தன் பிள்ளைகளுக்கு உத்தரவு அருளிச்செய்கிறார். மாத்திரமல்ல, உண்மையுள்ளவனை ஏற்றவேளையில் அவனது சத்துருக்களுக்கு மேலாக அவர் உயர்த்துகிறார்.

இன்று பலவிதமான இக்கட்டுகளில் அகப்பட்டுத் தவித்திருக்கும் தேவ பிள்ளையே, "நான் தேவனை நேசிக்கிறேன். ஆனால், என் வாழ்க்கையை அவர் ஆசீர்வதிக்கப்படவில்லையே" என்கிறாயா? கஷ்டங்கள் இன்னும் தீரவில்லை, கூப்பிடுதலுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை, வேலைஸ்தலத்தில் இன்னும் ஒரு உயர்வுமில்லை என்றெல்லாம் ஏங்குபவர்கள் பலர். தேவன் உன்னை ஆசீர்வதிக்கவில்லை என்று சொல்லும் நீ, முதலில், உன் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவனாக இருக்கிறாயா என்பதை இன்று சிந்தித்துப்பார். நீ உன் வெளிவாழ்விலே நல்ல கிறிஸ்தவன்போல ஜீவிக்கலாம். ஆனால் உள்ளம் உண்மையுள்ளதா? ஏனெனில் தேவன் இருதயத்தைக் காண்கிறார்; உன் முகத்தை அல்ல. நமது பேச்சிலே நாம் காட்டுகின்ற உண்மைத்துவம் நமது வாழ்விலும் வெளிப்படவேண்டும். ஆகவே, நாம் எந்தெந்த இடத்தில் உண்மையற்றவர்களாய் இருக்கிறோமோ, அவற்றையெல்லாம் உண்மையோடு அறிக்கைசெய்து மனந்திரும்புவோமாக. உண்மையுள்ள தேவன் நமது உள்ளத்தின் உண்மைத்துவத்தைக் கண்டு நம்மை ஆசீர்வதிக்கட்டும்.

நாவில் ஒன்றும் வாழ்வில் ஒன்றுமாக உண்மைத்துவம் அற்று வாழ்ந்த நாட்களை நினைவுகூருவோம். உண்மையாயிருந்து கஷ்டங்கள் அனுபவிப்பதற்கும், உண்மையற்றவனாய் இருந்து சந்தோஷமாயிருப்பதற்கும் வேறுபாடு உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாமலிரு!

ஒக்டோபர்

22

புதன்

வேத வாசிப்பு : மத்தேயு 26:59-63

**'...இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார்....' மத்தேயு 26:63**

அநேக மக்கள், பாவத்திலிருந்து விடுதலை பெற்றார்கள். நோயிலிருந்து சுகம் பெற்றார்கள். பசித்த வயிற்றுக்கு உணவு உண்டார்கள். பாரச்சுமைகள் நீங்கி ஆறுதலடைந்தார்கள். இன்னும் எத்தனையோ நன்மைகளை இயேசுவிடமிருந்து பெற்ற மக்கள் அவருக்குப் பின்னால் சென்று, அவர் கூறும் அருளுரைகளைக் கேட்டார்கள். ஆனாலும், இந்த ஜனங்களோ குற்றமற்றவரான இயேசுவின்மீது, பொய்யான குற்றங்களைச் சுமத்தி, "அவரைச் சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டார்கள். இயேசுவை விசாரித்தவர்கள் கூட ஆச்சரியப்பட்டு, அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் குறித்து விசாரித்தார்கள். ஆனால் இயேசுவோ, 'பேசாமலிருந்தார்'.

இப்படியொரு கட்டத்தில் நாம் நிறுத்தப்பட்டால் என்ன செய்வோம்? 'இத்தனை நன்மைகளையும் என்னிடத்தில் பெற்றவன் இன்று என்மேல் பொய்க் குற்றங்களை அநியாயமாய்க் கூறுகிறானே; நான் எப்படி பேசாமலிருப்பது? எனக்கு ஏற்படுத்தின அவமானங்கள் அனைத்தையும் மன்னித்து, மறந்து, திரும்பவும் என் நண்பனாக ஏற்று அன்பு செலுத்தினேனே. ஆனால், இன்று அவற்றையெல்லாம் மறந்து, பொய்யான குற்றச்சாட்டுக்களை என் அதிகாரிக்கும் கூறுகிறானே; நான் இன்னும் எப்படி பேசாமலிருப்பது? அவனைப் பழிக்குப் பழி வாங்கலாமா' என்று சிந்திக்கமாட்டோமா?

ஆனால், கிறிஸ்துவின் பிள்ளைகள் நாம் அப்படி நடக்கமுடியாது. **'ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காலமுண்டு'** (பிர.3:1). தேவபிள்ளைகள் பேசாமல் இருக்கவேண்டிய காலமும் உண்டு. சகோதரனே! வேலைஸ்தலத்தில், அநியாயமாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள உனக்கு, உன் குற்றமற்ற நிலையைச் சத்தம் போட்டுச் சொல்லி, உன் அதிகாரியோடு பேசித்தீர்க்க வேண்டும்போல இருக்கிறதா? வேண்டாம், 'பேசாமலிரு'. சகோதரி, குடும்பத்தில் உனக்கு எதிராக பேசப்படும் பேச்சுக்களைத் தாங்கிக்கொண்டு மௌனமாக இருந்த நீ, இன்று, எல்லாப் பேச்சுக்கும் ஒரு முடிவுக்கு கொண்டுவர முயற்சிக்கிறாயா? வேண்டாம் 'பேசாது இரு'. ஏன் தெரியுமா? குற்றமற்ற ஆண்டவர் அன்று உனக்காகவே பேசாதிருந்தார். சகல அநியாயங்களையும் மௌனமாகவே சகித்தார். அநியாயமாக சிலுவையில் அறையப்பட்டார். அதற்காக அவர் தோற்றுப்போனாரா? அவர் உயிர்த்தெழுந்தபோது எல்லோரும் வெட்கி நாணிப்போனார்களே. அந்த இயேசு தாமே உனக்காக உன் சத்துருக்களோடு வழக்காடி, உன் குற்றமற்றநிலையை வெளியரங்கமாக்கட்டும். நீயோ, 'பேசாமலிரு'.

நான் நினைத்ததெல்லாவற்றையும் பேசிக் கொட்டிவிட்டு, பின்னர் தடுமாறிய சம்பவங்களை நினைத்துப்பார்ப்போம். பேசாதிருக்கும்படிக்கு என்னைக் கட்டுப்படுத்த நான் என்ன செய்யவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள் திறக்கட்டும்!

ஒக்டோபர்
23
வியாழன்

வேத வாசிப்பு : லூக்கா 24:13-35

**'...இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்து போனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.' லூக்கா 24:15,16**

இயேசுவின் சீஷர்கள் மூன்றரை வருடங்களாக அவருடன் கூடவே வாழ்ந்து, பல காரியங்களைக் கற்று, அற்புதங்களைக் கண்டு அனுபவித்திருந்தார்கள். இருந்தும் அவர்கள் உணர்வடையவில்லை. இயேசு அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டபின், அவரது சீஷர்களில் இருவர் எம்மாவு என்னும் ஊருக்குப் போய்க்கொண்டிருக்கையில், அவர்கள் அருகிலே இன்னும் ஒருவர் நடந்து வந்தார். அவரும் இவர்களின் சம்பாஷணையில் கலந்துகொண்டார். இவர்கள் அவருக்கு இயேசுவைப்பற்றி தாம் கேள்விப்பட்டவைகளையெல்லாம் கூறினார்கள். ஆனாலும் தம்மோடு நடந்து வந்த "அவர் யார்" என்று அறியாதவர்களாகவே இருந்தார்கள். கடைசியாக அவர்கள் உணவு அருந்த அமர்ந்தபோது, அவர்தாமே அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தபோதுதான் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அதுவரை தம்மோடு நடந்து வந்தவர், தங்கள் ஆண்டவராகிய இயேசு என்பதை உணர்ந்தார்கள்.

இயேசுவுக்கு என்ன நடந்ததோ என்ற கவலையோடு எருசலேமை விட்டு எம்மாவூருக்குப் பயணமான சீஷர்கள், அவர் உயிர்தெழுந்தவராக தமக்கு அருகிலே இருந்ததைக் கண்டும் உணராமல் இருந்தது ஏன்? ஆம், இயேசுவை பிரிந்ததால் உண்டான கவலை வேதனை அவர்கள் கண்களை மறைத்திருந்தது. அநேக சமயங்களில் நமது வாழ்விலும் இப்படித்தான் நேரிடுகிறது. மேலும், அவர் அப்பத்தைப் பிட்டு அவர்களிடம் கொடுத்தபோதுதான் அவர்கள் இயேசு என்று அறிந்தனர். கடைசி இராப்போஜனத்தில் அவர் என்ன செய்தாரோ அதை இங்கேயும் செய்தபோது அவர்களுக்கு விளங்கியது.

ஆண்டவரோடு நெருங்கி ஜீவித்து, அவருடைய வழிநடத்துதல்களை, ஆசீர்வாதங்களை நாமும் அனுபவிக்கிறோம். அவருக்குள் மகிழ்ந்திருக்கிறோம். ஆனால் வாழ்வில் பாடுகள் துன்பங்கள் வரும்போது நமக்கு அருகிலே இருக்கும் ஆண்டவரையே உணரமுடியாதபடி சோர்வடைந்து, துக்கத்திலேயே மூழ்கி போய்விடுகிறோமே. மாத்திரமல்ல, சிலசமயங்களில் நமக்கு ஞாபகமூட்டுமாற் போலவும் சில காரியங்கள் நடக்கத்தான் செய்கிறது. அப்போதுதான், ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் என்பதை நாமும் புரிந்துகொள்கிறோம். தேவபிள்ளையே, தமது ஜனத்தோடிருந்து அவர்களை வழிநடத்திய தேவன், தமது குமாரனுடைய இரத்தத்தையே கொடுத்து மீட்டுக்கொண்ட நமது விடயத்தில் பாராமுகமாய் இருப்பாரா? நமது துக்கங்கள் நமது கண்களை மறைத்துவிடாதபடி காத்துக் கொள்வோமாக.

கர்த்தர் என்னைக் கைவிட்டுவிட்டாரோ என்று நாம் குழம்பித் தவித்த சந்தர்ப்பங் களை நினைத்துப்பார்ப்போம். இன்று நாம் இருக்கும் சூழ்நிலையில், அன்று நம்மை நடத்திய தேவனை நினைவூட்டி தைரியமாக இருக்க முடிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரி அணையாமல்...

ஒக்டோபர்
24
வெள்ளி

வேத வாசிப்பு : சங்கீதம் 18:1-30

**'தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர். என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்.' சங்கீதம் 18:28**

வெளிச்சம் வேண்டுமானால் வெளிச்சம் கொடுக்கும் விளக்கின் திரி தொடர்ந்து எரிந்துகொண்டேயிருக்க வேண்டும். அதற்கு எண்ணெய் குறைவுபடாமல் ஊற்றப்படவேண்டும். இல்லையேல், திரி அணைந்து, இருள் சூழ்ந்துவிடும். இருளிலே விஷப் பூச்சிகளும், துஷ்டமிருகங்களும் தமது ஆதிக்கத்தை ஆரம்பித்துவிடும். கிறிஸ்தவ வாழ்க்கையும் ஒளி கொடுக்கும் திரியைப் போன்றது. அது மங்கி அணைந்துபோக இடமளிக்கக் கூடாது. கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்க்கை அணைந்துபோகுமானால், இருளின் அதிபதியாகிய சாத்தான் அதனைத் தனது இருப்பிடமாக மாற்றிப்போடுவான். இப்படியிருக்க, இருளின் வாழ்வை வெறுத்து, நித்திய ஒளியாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொண்ட தேவபிள்ளையே! நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நாம் ஒளிகொடுக்கும்படியாக வாழுகிறோமா? அல்லது ஒளி மங்கி, அணைந்து போகும் நிலையில் இருக்கிறோமா? தேவனோடுள்ள அந்த உறவில் நாம் குறைவுபட்டுப் போனோமா? மங்காமல் பாதுகாக்கும் வார்த்தையான ஒளியை நாம் மறந்தால் நமது ஒளியும் மங்கிப்போகும். அனுதினமும் நம்மை உந்தித் தள்ளி வழிநடத்தும் பரிசுத்தாவியானவரை விட்டுவிலகினால் ஒளி அணைந்து போகும். இன்று நமது நிலைமை என்ன?

கர்த்தருக்காக வைராக்கியமாக ஜீவித்த தாவீது ராஜாவின் வாழ்விலும் பலவேளைகளில் ஒளி மங்கிப்போகக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. என்றாலும், **'கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும்** (சங். 4:6)' என்று தாவீது ஜெபித்தார். கர்த்தர் அந்த் விண்ணப்பதிற்குச் செவிகொடுத்து, தாவீதின் வாழ்வைத் திரும்பவும் பிரகாசமடையும்படி செய்தார்.

இன்றும், ஒளி கொடுக்கும் தேவபிள்ளைகளின் வாழ்க்கைத் திரியை அணைத்துப்போட, சாத்தான் பல வழிகளிலும் கிரியை செய்துவருகிறான். வேலைப்பளுவைக் கூட்டி ஜெபவேளைகளைக் குறைத்துவிடச் செய்கிறான். ஆண்டவரோடுள்ள இந்தத் தொடர்பு குறையும்போது தேவபிரசன்னமும் நமது வாழ்க்கையிலே குறைந்துவிடும். உள்ளமும் குழம்பிவிடும்; சோர்வு ஏற்படும். வாழ்வும் மங்க ஆரம்பித்துவிடும். இதற்கு இடமளிக்கலாமா?

தேவபிள்ளையே, நமது விளக்கை ஏற்றி, நம்மை ஒளிவீசச் செய்ய ஆண்டவர் ஆயத்தமாயிருக்கிறார். நமது விளக்குத் திரி மங்கிப்போகாமல் பாதுகாக்கப்பட தூய ஆவியானவர் நமக்குத் துணை நிற்கிறார். ஆகவே, இப்போதே நம்மை ஆராய்ந்து, மங்கிப்போன நமது வாழ்க்கைப் பகுதிகளை உண்மைத்துவத்துடன் அறிக்கைசெய்து, 'தேவரீர் என் விளக்கை ஏற்றி, இருளை வெளிச்சமாக்கும்' என்று நம்மை ஒப்புவிப்போமா!

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டபின்பு, வாழ்வில் ஒளி பிரகாசித்த வேளைகளையும், இருள் சூழ்ந்த சந்தர்ப்பங்களையும் ஒப்பிடும் போது நமக்கு என்ன விளங்குகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கொருவர் இருக்கிறார்

ஒக்டோபர்

25

சனி

வேத வாசிப்பு : சங்கீதம் 142:1 -7

**'...நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்.' மத்தேயு 12:20**

"சர்வத்தையும் படைத்த என் சர்வ ஜீவ தயாபர பிதாவே, சிறு நாணற்புல்லாக என்னை படைத்தீரே. நன்றி! இதுவரை காலமும் என்னை ஆச்சரியமாகப் பாதுகாத்து, போஷித்து வளர்த்து வந்தீர். நன்றி! ஆனால் இன்று நான் என்னைச் சுற்றியுள்ளவற்றினால், மரங்களாலும், கற்களாலும், வழிப்போக்கராலும் அதிகமாய் நெருக்கப்பட்டு முறிந்துபோகும் நிலையில் இருக்கிறேன். நெருக்கத்தை நீக்கி, எனக்கு நியாயம்செய்து என்னை விடுவித்தருளும். அப்போது உமக்காக நான் என்னையே கொடுப்பேன்" என்று ஜெபித்ததாம் நெரிந்துபோன நிலையிலிருந்த ஒரு 'நாணற் புல்'. அவ்வழியே வந்த ஒரு பெண், அந்தப் புல்லைக்கண்டு அதனை மெதுவாகத் தூக்கி, ஒரு தாபரத்தைக் கொடுத்து தண்ணீர் கிடைக்க வழியும் செய்துவிட்டுப் போனாளாம். அந்தப் புல் தேவனுக்கும் அவளுக்கும் நன்றி கூறியது. நாட்கள் நகர்ந்தன. எபிரெய ஆண் குழந்தைகளைக் கொன்றுவிடும்படி எகிப்து ராஜாவினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தனது அழகான ஆண் குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது என்ற குழப்பத்தோடு, நதியோரம் நடந்து வந்த அதே பெண்ணின் மன ஆதங்கத்தை அறிந்த அந்த நாணற்புல், 'இதோ என்னையெடுத்து ஒரு பெட்டி செய்து உன் குழந்தையைக் காப்பாற்று' என்று சொல்லுவதுபோல் காற்றில் அசைந்தாடியதாம். அதுவே குழந்தை மோசேயைக் காப்பாற்றிய நாணற்புல்; அது பெட்டியாக மாறியது. அழிந்துபோக இருந்த தன்னை எடுத்துப் பயன்படுத்திய தேவனுக்கு அது நன்றி சொன்னதாம். (இது ஒரு கற்பனை)

எல்லாப் பக்கமும் நெருக்கப்பட்டு, முறிந்துபோகும் நிலையில் சோர்ந்து போயிருக்கும் என்னை யார் விடுவிப்பார்; யார் எனக்கு நியாயம் செய்வார் என்று மனமுடைந்திருக்கும் தேவபிள்ளையே, **'தீங்கின் காலத்திலும், நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ் செய்வேன்'** (எரே.15:11) என்று வாக்களித்த கர்த்தர் உனக்கிருக்கிறார். அவர் நீதியுள்ளவர், அன்புள்ளவர், இயல்பாகவே உன்னை வழிநடத்த வல்லவர். உன் ஆவியில் நீ நொந்திருக்கும்போது அவர் உன்னை ஒதுக்கமாட்டார், நொறுக்க மாட்டார். நீ "ஒன்றுக்கும் உதவாதவன்" என்றுன்னை தள்ளமாட்டார். மெதுவாகத் தூக்கி, உன்னை நடத்துவார். மங்கும் உன் ஒளியை அணைக்க மாட்டார். அதை இன்னும் பற்றியெரியச் செய்வார். உலகம் உன்னை உதவாது என்று தள்ளலாம். ஆனால் ஆண்டவர், உன்னைத் தாங்குவார். நீ அவரை நோக்கிக் கூப்பிடு. அவர் உன்னை விசாலத்திலே வைப்பார். இவை வெறும் வார்த்தை ஜாலம் அல்ல; இது சத்தியம். கர்த்தருடைய பிள்ளைகளின் அனுபவம். இந்த அனுபவம் இன்று நமதாகட்டும்.

நொருங்குண்ட சூழ்நிலைகளில் நான் இதுவரை யாரிடம் தஞ்சம் புகுந்தேன்? யார் உதவியை நாடினேன்? அதனால் என்ன நேர்ந்தது? ஆனால், கர்த்தரைச் சார்ந்து நிற்கும்போது அது என்ன அனுபவத்தைத் தரும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த நிலைமையிலும்

ஒக்டோபர்

**26**

ஞாயிறு

வேத வாசிப்பு : பிலிப்பியர் 4:4-19

**'நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.' பிலிப்பியர் 4:11**

ஏழ்மையான அல்லது கஷ்டமான நிலையில் வாழுவோர், எந்த நிலையிலும் வாழக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் சகல வசதிகளோடும் வாழப் பழகிவிட்டால் சடுதியான மாற்றங்கள் இழப்புகள் ஏற்படும்போது, இருப்பதுபோதும் என்ற மனநிறைவோடு வாழுவது சற்றுக் கடின மாகத்தான் இருக்கும். அத்துடன் தாம் வாழ்ந்த வாழ்க்கையைத் தொடருவதற் காக கடன் எடுக்கவும் தயங்கமாட்டார்கள்.

அநேக வருடங்களின் பின்னர் சொந்த இடத்திற்குத் திரும்பிய ஒரு சகோதரி, தன் சிநேகிதியைச் சந்திக்கச் சென்றபோது, திகைத்துவிட்டாள். இதைக் கவனித்த அந்த சிநேகிதி, "ஏன் அப்படியே திகைத்துவிட்டாய், உள்ளே வா" என்று கூப்பிட்டாள். "சகல வசதிகளோடும் வாழ்ந்த என் சிநேகிதி இந்த ஏழ்மையில் எப்படியாக வாழுகிறாள்" என்ற கேள்வி இவளின் உள்ளத்தில் எழுந் தது. அதை அடக்கிக்கொள்ள முடியாமல் தன் சிநேகிதியை நோக்கி, "சகல வசதிகளோடும் வாழ்ந்த நீ, இந்த ஏழ்மையான நிலையில் மனநிறைவோடும், சந்தோஷத்தோடும் எப்படி வாழ்கிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அவள், "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். அவர் என் குறைவுகளை யெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குகிறார் என்ற உறுதியை எனக்குள் வளர்த்துக்கொண்டேன். அதனாலேதான், எந்த நிலைமை யிலும் நான் சந்தோஷமாயிருக்க எனக்கு முடிகிறது" என்றாள் அவள்.

பவுல் சகல வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்த ஒருவர். எப்போது இயேசு வுக்காய் தன்னைக் கொடுத்தாரோ, அன்றே அவருடைய வாழ்வு எளிமையாய் மாறியது. சூழ்நிலைகள் மாறினாலும் ஆண்டவருக்குள் மகிழ்ச்சியுடன் வாழு கின்ற வாழ்வை அவர் கற்றுக்கொண்டார்.

ஆகாயத்துப் பட்சிகளிலும் மேலானவர்கள் நாம். அந்தப் பட்சிகளையே போஷித்து வழிநடத்தும் தேவன், தமது சாயலாக உருவாக்கப்பட்ட நமது தேவைகளை ஏற்றவேளையிலே சந்திப்பார் என்ற விசுவாசம் நமக்கு அவசியம். இந்த உறுதி, கிறிஸ்து இயேசுவுக்குள், எந்நிலையிலும் மனநிறைவோடும், சந்தோஷத்தோடும் ஜீவிக்க எம்மை வழிநடத்தும். "ஈவை எண்ணு சொல்லி ஒவ்வொன்றாய், அப்போ தேவ ஈவு ஏராளம் என்பாய்" என்று எப்போதும் பாடி, வறுமையிலும் நிறைவுடன் வாழ நம்மால் முடியுமா? ஏன் இந்த வறுமை, ஏன் நிம்மதியற்ற வாழ்வு என்று வேதனைப்படுவதை விட்டுவிட்டு, ஆண்டவர் நமக்கு தந்திருக்கும் ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்ப்போமாக. அதுகூட இல்லாமல் பலர் இருக்கிறார்களே என்பதைச் சிந்தித்துப்பார்த்தால் உள்ளவற்றிற்காக தேவனை மகிமைப்படுத்துவது கடினமாயிராது.

வாழ்வில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வான நிலைமைகளை சற்று சிந்தித்துப் பார்ப் போம். குறைவில் ஆண்டவர் நிறைவாயிருந்ததையும், நிறைவில் நாம் ஆண்ட வரை மறந்து தூரப்போன சந்தர்ப்பங்களையும்கூட சிந்தித்துப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன எதிர்ப்பு வந்தாலும்...

ஒக்டோபர்
**27**
திங்கள்

வேத வாசிப்பு : ஆதியாகமம் 4:1-15

**'ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.' மத்.10:36**

"இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட நாள்முதல் வாழ்க்கையில் பலவித எதிர்ப்புகள், பாடுகள். கிறிஸ்தவர்களான என் வீட்டாரே என் மாறுதலை உணராதவர் களாக எனக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே. நான் வேதப் பைத்தியம் என்கிறார் களே" என்று ஒரு வாலிபன் வேதனைப்பட்டான். இப்படிப்பட்ட அனுபவம் நமக்கு ஏற்பட்டதுண்டா? நமது வீட்டாரே நம்மை எதிர்க்கும்போது கடினம்தான்.

ஆதாம் ஏவாளின் குடும்பத்தில் காயீன், ஆபேல் என இரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் இருவருமே தம் கரங்களின் பிரயாசத்தினால் முதலா வது தேவனைக் கனப்படுத்த அறிந்திருந்தார்கள். காயீன் நிலத்தைப் பயிரிடுகிற வன். ஆபேல் மந்தைகளை வைத்திருப்பவன். இருவருமே தமது காணிக்கை களோடு கர்த்தரின் சமுகத்தை நாடிச்சென்றனர். கர்த்தர் ஆபேலின் காணிக் கையை அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்க வில்லை. இது காயீனுக்கு எரிச்சலைக் கொடுக்கவே, ஆபேலை அவன் கொன்றுபோட்டான். மனித வரலாற்றில் முதல் குடும்பத்தில் முதல் எதிரி குடும்பத்திற்குள்ளேதான் உருவானான். காயீன் தன் சொந்த சகோதரனை மறைவிடத்திலே கொன்றான். ஆனால் தேவன் அதைக் கண்டார்.

இயேசு யூத வம்சத்திலே ஒரு யூதனாகவே பிறந்தும், அவரை ஏற்றுக் கொள்வது யூதருக்குக் கடினமாயிருந்தது. தமது சொந்தக் கிராமத்திலே அற்புதங்கள் செய்யவும் அவரால் கூடாதிருந்தது.

கிறிஸ்தவர்களாகிய நமது குடும்பத்தினர் கூறும் குறைகளும் குற்றங்க ளுமே, கிறிஸ்துவுக்குள் முன்னேறும் நம்மை அதிகமாகத் துக்கப்படுத்துகிறது. இதுதானா கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை என்று நம்மை வெறுப்படையச் செய்கிறது. ஆனால், எந்தவொரு வேதனைக்கும் வெறுப்புக்கும் இடமளிக்காத படிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இது சாத்தான் கொண்டு வருகிற சோதனை. வேறு காரியங்களில் நம்மைத் தாக்கமுடியாத சாத்தான் நமது சொந்தக் குடும்பத்தினருக்கூடாகவே நம்மைத் தாக்கவும், கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் ஊழியத்தை தடுக்கவும் முயற்சிப்பான். ஆனால், நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவருக்காக வாழத் தீர்மானம் செய்தபின் நாம் ஏன் தடுமாறவேண்டும்? பலவேளைகளிலும் நமது தீர்மானத்தைக் குழப்ப சண்டை சச்சரவுகள் குடும்பத்தில் உருவாகலாம். நமது வாயின் வார்த்தைகளிலேயே நம்மை குற்றம்பிடிக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் வரும். ஆனால் தேவன் யாவை யும் அறிவார். ஆகவே, தைரியத்தை இழந்துவிடாமல் யார் நம்மை எதிர்த்தா லும் அவர்களுக்காக ஜெபிப்போம். நாம் காட்டும் அன்பும் சாந்தமும் அவர்கள் கிறிஸ்துவைப் புரிந்துகொள்ள ஏதுவாகட்டும்.

கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்த நாள்முதல் எனக்கு வந்திருக்கிற எதிர்ப்புகள் எப்படிப்பட்டவை? அவற்றை மேற்கொள்ள இதுவரை நான் எடுத்த முயற்சி களும், இப்போது நான் எடுக்கும் முயற்சிகளுக்கும் வேறுபாடு உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பாராதே!

ஒக்டோபர்

28

செவ்வாய்

வேத வாசிப்பு : ஆதியாகமம் 19:1-26

**'உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே...' ஆதி.19:17**

சோதோம் கொமோரா மக்களின் அக்கிரமம் மிகவும் பெரிதாக இருந்ததால், கர்த்தர் அத்தேசத்தை அழித்துவிடத் தீர்மானித்தார். ஆயினும், லோத்துவின்மீது கர்த்தர் வைத்த இரக்கத்தின் நிமித்தம், அவனையும் அவன் மனைவி பிள்ளைகளையும் தமது தூதர்களைக் கொண்டு தப்புவிக்க சித்தம் கொண்டார். எனவே, தேவனால் அனுப்பப்பட்டு அங்கே வந்த இரு தூதர்களும், லோத்தைத் துரிதப்படுத்தி, "இந்த நாடுகளை நாம் அழிக்குமுன் நீயும் உன் வீட்டாரும் உங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ள பின்னிட்டுப் பார்க்காமல், துரிதமாய் ஓடுங்கள்" என்றார்கள். லோத்தும், அவன் மனைவி, பிள்ளைகளும் ஓடும்போது, லோத்துவின் மனைவி தூதர்களின் கட்டளையை மீறித் திரும்பிப் பார்த்தாள்; உப்புத் தூணானாள்.

அன்றைய சோதோம் கொமோராவைப் பார்க்கிலும், இன்று அக்கிரமம் அதிகம் அதிகமாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. இதன் மத்தியில் வாழும் ஆண்டவர் நம்மை நமது பாவக்கட்டிலிருந்து கிருபையாய் மீட்டு, திரும்பிப் பாராமல் முன்னே போகும்படி நம்மைப் பாதுகாத்து நடத்திவருகிறார். இந்தப் பாதுகாப்பிற்குள் வந்துவிட்ட நாம் எப்படி லோத்துவின் மனைவியைப்போல பின்னிட்டுப் பார்க்கமுடியும்? மாறாக, நம்மைத் தப்புவித்தவர் கரத்தையே பிடித்துக்கொண்டு நாம் முன்செல்வோமானால் வரப்போகும் நித்திய அழிவுக்கு நாம் தப்பித்துக் கொள்ள முடியும். இது இரண்டும் இல்லாமல் தடுமாறுகிறோமா? **'இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.' (யாக்.1:8).** இந்த நிலையற்ற வாழ்வை விட்டு ஒரேமனமாக ஆண்டவரை நோக்கி முன்செல்லுவோமாக. லோத்துவின் மனைவியின் நிலைமை நமக்கு வேண்டாம். நித்திய தேவனோடு நித்தியத்தில் வாழவேண்டும் என்ற வாஞ்சை நமக்கு இருக்குமானால், விட்டுவந்த பாவத்திற்குள் திரும்பவும் இழுவுண்டுபோகும் சோதனைக்குத் தப்பித்துக்கொள்ளலாம்.

குடிப்பழக்கத்திலிருந்து வெளிவந்துவிட்டு, இன்று திரும்பவும் குடியை நாடுகிறாயா? கெட்ட சிநேகிதரின் சகவாசம் திரும்பவும் உன்னைத் தீய பழக்கங்களுக்குள் அழைத்துச் செல்கின்றதா? ஊதாரித்தனமான வாழ்வு திரும்பவும் உன்னை கடன்பட ஏவுகின்றதா? ஆடம்பரமான மாய்மால ஜீவியம் திரும்பவும் உன் இருதயத்தை மகிழ்விக்க முயல்கிறதா? ஆம்! விட்டுவந்த பாவ வழியைத் திரும்பவும் திரும்பிப் பார்த்து உன் வாழ்வைக் கெடுத்துக்கொள்ள முன்பதாக, செவ்வையான வழிகளிலே உன்னைத் தொடர்ந்தும் நடத்தக் காத்திருக்கும் இயேசு கிறிஸ்துவிடம் திரும்பிவிடு. உன் தவறுகளை அறிக்கையிட்டு மனந்திரும்பு. அப்பொழுது, **'வழி இதுவே, இதிலே நடவுங்கள்' (ஏசா.30:21)** என்னும் தேவ சத்தம் உன்னை தேவனுடைய வழியில் நடத்தும்.

வேண்டாம் என்று அருவருத்து விட்டுவிட்ட எந்தக் காரியத்தையாவது இன்று என் மனம் நாடுகிறதா? இதற்குத் தூண்டுகோலாக இருப்பது எது? அதனை இனங்கண்டு முதலில் அவற்றைத் தள்ளிவிட தேவபெலத்தைக் கேட்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையைக் காத்துக்கொள்

ஒக்டோபர்
**29**
புதன்

வேத வாசிப்பு : லூக்கா 21:8-19

**'உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்.' லூக்கா 21:19**

அடிமைத்தன வீடான எகிப்திலிருந்து இஸ்ரவேலரை மீட்டு, கானானுக்குள் வழிநடத்திய மோசே, வழியிலே பல இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது. வழிநெடுக ஜனங்கள் எடுத்ததற்கெல்லாம் முறுமுறுத்தார்கள். அப்போதெல்லாம் மோசே மிகவும் பொறுமையாக முறையீடு களைக் கேட்டு, தேவனிடம் கூறி, தேவ ஆலோசனையோடு ஜனங்களை நடத்திச் சென்றார். அப்படியே ஒருமுறை தண்ணீருக்காக திரும்பவும் ஜனங்கள் முறுமுறுத்து, மோசேக்கு எதிராகக் கலகம்பண்ணினார்கள். கர்த்தர் மோசே யிடம், **'அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்து பேசுங்கள். அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்'** (எண்.20:8) என்று சொன்னார். ஆனால் மோசேயோ மனதிலே வெறுப்படைந்தவராய், **'கலகக்காரரே, கேளுங்கள். உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ'** (எண்.20:10) என்று சொல்லி கன்மலையை அடித்துவிட்டார். தண்ணீர் வந்தது. ஆனால் பொறுமையை இழந்த மோசே கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை இழந்துவிட்டார். எவ்வளவோ பொறுமையோடு வழிநடந்து வந்த மோசே இங்கே பொறுமையை இழந்துவிட்டார். அது எத்தனை பெரிய இழப்பை அவருக்குக் கொடுத்துவிட்டது!

தேவ அழைப்பைப் பெற்று, தேவ பெலத்தோடு ஊழியம் செய்து வரும் சகோதரனே, சகோதரியே நீ எவ்வளவு பொறுமையோடு செயலாற்றுகிறாய்! வழுவிப்போகும் இருதயமுள்ள மனிதர்கள் பரம கானான் பாதையில் வழுவிப் போகாதவாறு வழிநடக்க நீ அவர்களை வழிநடத்தும் உன்னத பணியில் இருக்கிறாய். இப்படிப்பட்ட நீ தேவனின் பதில் தாமதிக்கும்போது பொறுமையை இழக்கலாமா? ஜனத்தின் முறுமுறுப்பும், மறைமுகமான பேச்சுக்களும், உன் செவிகளில் விழுவதால் பொறுமையை இழந்து கோபப்படுகிறாயா? கவனமாய் இரு. சிலசமயங்களில் உன் கோபத்தினால் ஆத்துமாக்களைக்கூட இழந்து போகக்கூடிய நிலைமை வரக்கூடும். கோபப்படும் உன் பெலவீனமான சுபாவத்தை வைத்து பகைவன் குழப்பங்களை ஏற்படுத்துவான். தேவனுடைய ஊழியப் பாதையில் துன்ப கஷ்டம் வரத்தான் செய்யும். ஆனால் நம்முடைய வழிகளை அறிந்திருக்கும் பரமபிதா நமக்கிருக்கும்போது நாம் ஏன் நீடிய பொறுமையுடன் நடக்கக்கூடாது?

தேவபிள்ளையே, ஒருவிசை கோபத்தைப் புறம்பே தள்ளு. தேவ அன்பினாலும், பொறுமையினாலும் உன்னை அலங்கரித்துக்கொள். நம்மை அழைத்தவர் அன்போடு நம்மைச் சிட்சித்தாலும், நம்மை நடத்துவார். உன் பொறுமையை இழந்து, உன்னைத் தன்னும் இழந்துவிடாதபடி கவனமாயிரு.

அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு பொறுமையிழந்து காரியத்தைக் கெடுத்துப்போட்ட சந்தர்ப்பங்களை நினைத்துப்பார்ப்போம். அந்த சூழ்நிலைகளை நான் எவ்வண்ணம் மேற்கொண்டிருக்கலாம்? இனி என்ன செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தர் நீதி செய்வார்.

ஒக்டோபர்
30
வியாழன்

வேத வாசிப்பு : சங்கீதம் 37:1-40

**'துன்மார்க்கருடைய புயங்கள் முறியும், நீதிமான்களையோ கர்த்தர் தாங்குகிறார்.' சங்கீதம் 37:17**

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகம். இயேசுவை ஏற்று, அவரது வழியில் வாழவேண்டும் என்று வாஞ்சிக்கும் ஒருவன், அநீதி நிறைந்த இந்த சமுதாயத்திலும், துன்மார்க்கரின் வலையிலும் சிக்கித் தவிக்கிறான் என்பது உண்மை. அப்போது, எந்தப் பெரிய விசுவாசியும் ஒருகணமாவது தடுமாறாமாட்டான் என்று சொல்லமுடியாது. "எமக்கு நீதி எப்போது கிடைக்கும்? நீதி உலகத்திற்குத் தெரியாது. துன்மார்க்கரின் பொய் யான குற்றச்சாட்டுக்களால் மனமுடைந்து, மதிப்பற்றுப் போனோமே" என்றெல் லாம் வேதனைப்பட நேரிடுகிறது. அதிலும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக் கிற பலரே கிறிஸ்துவின் பிள்ளைகளைத் துன்பப்படுத்தி, அவர்களது நீதியை அவமாக்கும் காரியங்களில் இறங்கும்போது அது அதிக வேதனையைக் கொடுக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்குள் அகப்பட்டு மனமுடைந்திருக் கும் சகோதரனே சகோதரியே, நீ கலங்காதே.

நமது ஆண்டவர் நீதிபரர். அப்படியிருந்தும் அவர் உலகில் வாழ்ந்த போது, அநீதியின் கொடுமையை அதிகமாக அனுபவித்தார். அவருடைய நீதி எடுபட்டுப்போயிற்று. ஆனாலும் அவர் அவமானத்தை எண்ணாது தன் பிதாவின் நீதியைத் தரித்தவராக இறுதிவரை வழுவாதவராக வாழ்ந்தார். பிதாவோ, இயேசுவோடு கூடவேயிருந்து, சிலுவை மரணத்திலும் தம் குமாரனைத் தாங்கி, நீதியின் பொற்கிரீடத்தை அவருக்குக் கொடுத்து, மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு, எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார். அவர் திரும்பவும் நீதி செய்கிறவராக வரும்போது, அவரைக் குத்தினவர்களும் அவரைக் கண்டு புலம்பத்தான் போகிறார்கள்.

அந்த நீதியுள்ள ராஜாதி ராஜாவின் பிள்ளையான நாம் எத்தனை வேதனைகளை அனுபவித்தாலும் அவர் நம்மைவிட்டு விலகமாட்டார். தம்முடைய கரத்தினால் தாங்குவார். நமது நீதியை வெளிப்படுத்துவார். **'அவர்கள் (நீதிமான்கள்) அவரை நம்பியிருக்கிறபடியால், அவர்களை துன் மார்க்கருடைய கைக்குத் தப்புவித்து இரட்சிப்பார்'** (சங். 37:40) ஆகையால், நாம் கலங்காது வெட்கப்படாது, எந்த அவமானத்திலும் பொறுமையோடு கர்த்தருக்குள்ளான நீதியிலே நிலைத்திருக்கலாம். **'...உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்'** (ஏசா.58:8). ஆகவே, அவசரப்பட்டு நமது நீதியை நாமே விளங்க வைக்க முயற்சிக்கவேண்டாம். கர்த்தரே அந்தப் பொறுப்பை எடுத்துக்கொள்ளட் டும். அப்போது நாம் அசைக்கப்பட மாட்டோம்.

உண்மையாகவே நாம் தவறு செய்யாதவிடத்து, அநீதியாகக் குற்றஞ்சாட்டப் பட்ட வேளைகளை நாம் சந்தித்திருக்கிறோமா? அந்த நேரங்களில் நாம் எப்படி நடந்திருக்கிறோம்? நமது ஆத்திரமும், நமது நீதியை நிலைநாட்டவேண்டும் என்ற வெறியும் நமக்கு என்ன பலனைத் தந்திருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதியினால் நிரம்பியிரு!

ஒக்டோபர்
31
வெள்ளி

வேத வாசிப்பு : சங்கீதம் 136:1 -26

**'கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.'** சங்கீதம் 136:1

நாம் கடந்து வந்த பாதையை சற்றுத் திரும்பிப் பார்ப்போமானால், எத்தனை ஆச்சரியமாக கர்த்தரின் சமுகம் நம்மோடுகூட வந்துள்ளது என்பதை உணரமுடியும். எத்தனை கஷ்டங்கள், துக்கங்கள், கேள்விகள், சந்தேகங்கள், சோர்வுகள், வருத்தங்கள், எதிர்ப்புகள், அவமானங்கள்! இவைகளின் மத்தியிலும் நம்மை நடத்தி வந்த பரமபிதாவின் அன்பு எத்தனை பெரியது! அதை எண்ணி ஆண்டவரை துதிப்போமா!

துதி என்பது இன்னொருவர் சொல்லி வருவதில்லை. அது உள்ளத்தில் இருந்து ஊற்றெடுக்கவேண்டும். அது ஊற்றெடுக்கவேண்டுமானால் நாம் ஆண்டவரை நமது வாழ்வில் அனுபவித்திருக்க வேண்டும்.

பிள்ளையற்றிருந்த லேயாள், அற்பமாக எண்ணப்பட்டாள். கர்த்தர் அவளது சிறுமையைப் பார்த்து அவள் கர்ப்பத்தை ஆசீர்வதித்தார். அடுத்தடுத்து அவளுக்கு நாலு குமாரர்கள் பிறந்தார்கள். நான்காவது மகன் பிறந்தபோது, அவள், **'கர்த்தரைத் துதிப்பேன்'** (ஆதி.29:35) என்று கூறி அவனுக்கு 'யூதா' என்று பெயர் வைத்தாள். இன்று நமது வாழ்க்கையில் நம்முடைய சிறுமையைப் பார்த்து நமக்குப் பதில் கொடுத்த அந்த அன்பின் இயேசுவைத் துதிக்கிறோமா?

தாவீது பாடிய அத்தனை துதி கீதங்களும் அவர் சொகுசான சூழ்நிலையில் இருந்தபோது எழுதவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர் எதிர்ப்புகள், இழப்புகள், நிந்தைகள், அவமானங்கள் என்று பல அனுபவங்களுக்கூடாகக் கடந்து செல்லவேண்டியிருந்தது. ஆனாலும், அவர் எப்போதும் தன் வாழ்க்கையைத் துதியினால் நிரப்பி, அத்துதிக்கூடாக தமது அனுபவங்கள் அனைத்தையும் வெற்றியோடு கடந்து சென்றார். அப்படியிருக்க, நமது வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் மலைபோன்ற துன்பங்கள், துயரங்கள், தொல்லைகள், வறுமை இவையனைத்திலும் நமது நிலை என்ன?

அருமை சகோதரனே, சகோதரியே, எல்லா நிலையிலும் உன்னைத் தாங்கி வழிநடத்திவரும் உன் இயேசுவை நீ துதிக்கிறாயா? அல்லது, வாழ்வின் சோதனைகளால் சோர்ந்து, பற்றற்றவனாக தளர்ந்துபோய் இருக்கிறாயா? இதுவரையிலும் உன்னை நடத்தி வந்தவரை மறந்து, உன் சூழ்நிலையின் காரணமாக நீ தேவனைச் சந்தேகிக்கலாமா? தம்மையே உனக்காக முழுமையாக ஈந்தவர் உன்னைக் கைவிடுவாரா? அவருடைய கிருபை என்றும் நமக்குண்டு. நீ மறந்தாலும் உன்னை மறவாத இயேசுவானவர், இறுதிவரை தம் தயவினாலும் கிருபையினாலும் உன்னைத் தாங்கி வழிநடத்துவார். ஆகையால், உன் சந்தேகத்தைக் களைந்து, இப்பொழுதே உன் தேவனைத் துதிக்க ஆரம்பித்துவிடு. தேவனைத் துதிப்பதே நமக்கு பெலன்.

அன்றாடம் என் ஜெபத்திலும், கூட்டு ஜெபங்களிலும் நான் துதிக்கும்போது அது பழக்கதோஷத்திலிருந்து வெளிவருகிறதா? அல்லது, உண்மையாகவே என் ஆண்டவரை அனுபவித்து ருசித்துத் துதிக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானா?

நவம்பர்

1

சனி

வேத வாசிப்பு : யோவான் 6:61 - 71

**'அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.' யோவான் 6:66-67**

பல வருடங்கள் நண்பர்களாக இருந்த இருவரில் ஒருவன் திடீரென பிரிந்துவிட்டான். அவன் சொன்னது இதுதான்: "இதுவரையிலும் நம் இருவருடைய சிந்தனைகள், செயல்கள், தீர்மானங்கள் யாவும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியே இருந்தன. நாம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்போம். இப்போது அவன் மாறிவிட்டான். என்னோடு நேரம் செலவழிப்பதில்லை. களியாட்டங்களுக்கு வருவதில்லை. அவனது போக்கே மாறிவிட்டது. இந்த வாழ்வின் சந்தோஷங்களைத் தியாகம்பண்ணி அவனோடு நடக்க எனக்கு சம்மதமில்லை" என நட்பை முறித்துப் போட்ட அவன் கூறினான்.

ஒரு பையன் கொண்டுவந்த ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு இயேசு ஐயாயிரம் பேருக்கும் அதிகமான மக்களைப் போஷித்ததை மக்கள் கண்டனர் (யோவான் 6:1-14). அதை உண்டு பசி தீர்த்த அவர்கள்: **மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றனர்** (யோவா.6:14) அதுமாத்திரமல்ல, இயேசுவைத் தேடிக்கொண்டு படகுகளில் ஏறி கப்பர்நகூம்வரைக்கும் சென்றனர். எப்போது இங்கே வந்தீர் என்று ஆவலுடன் கேட்டனர். அந்த ஜனக்கூட்டம் எதற்காகத் தம்மைப் பின்தொடருகிறார்கள் என்பதை அறிந்திருந்த இயேசு, பிதாவின் சித்தத்தைச் செய்வது குறித்தும், ஜீவ அப்பத்தைக் குறித்தும், மனுஷகுமாரன் படப்போகிற பாடுகள், அடிக்கப்படப் போகிற சரீரம், சிந்தப்படப் போகிற இரத்தம் இவற்றைக்குறித்தும் பிரசங்கிக்கத் தொடங்கினார். நடந்தது என்ன? இது கடின உபதேசம் என்று சொல்லி சீஷரில் அநேகர் பின்வாங்கிப்போனார்கள். அப்படியானால் அன்று அவர்கள் இயேசுவைப் பின்பற்றியதன் நோக்கம் என்ன? இன்று நாம் இயேசுவைப் பின்பற்றுகின்ற நோக்கம் என்ன? நீயும் போய்விட மனதாயிருக்கிறாயா? என்று இயேசு நம்மிடமும் கேட்கிறார்.

**'இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும். அப்பொழுது என் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும்.' ஏசாயா 48:18,19**

இன்றைய சமுதாய அமைப்பில் இயேசு கற்பித்த பாதையில் அவரோடுகூட நடப்பதற்கு எனக்குக் கடினமாய்த் தெரிகிற வழிகள் எவை? இதனால் நானும் பின்வாங்கிப் போய்விடுவேனா? சிந்திப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேவனுக்கே சொந்தம்!

நவம்பர்

2

ஞாயிறு

வேத வாசிப்பு : எபேசியர் 1: 1-14

**'...அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.' எபேசியர் 1:4-6**

ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதற்காக ஒரு ஸ்தாபனத்துடன் பேசி ஒழுங்கு செய்தனர் ஒரு தம்பதியினர். அந்த ஸ்தாபனத்திற்குச் செலுத்துவதற்காகப் பணம் சேகரித்தனர். வரப்போகிற குழந்தைக்குத் தேவையான சகல ஆயத்தங்களையும் வீட்டிலே பூர்த்தி செய்தனர். யார் தங்கள் மகளாக வரப்போகிறாள் என்றோ, அவள் முகம் எப்படிப்பட்டது, பெயர் என்ன, நிறம் என்ன என்று எதுவுமே தெரியாதபோதே அவர்கள் அக் குழந்தைக்காக எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அதாவது அவர்களுக்கு அவள் வேண்டும். அதுதான் உண்மை.

தேவனின் அன்பு நமக்காக எவ்வளவாய் ஏங்கி தவித்தது என்பதை பவுல் எபேசியருக்கு எழுதிய பகுதியில் உணர்வுபூர்வமாக விளக்கியுள்ளார்.

1. கடவுள் நம்மை உலகத்தோற்றத்தின் முன்பே தெரிந்தெடுத்திருக்கிறார் (வச.4) இது எத்தனை ஆச்சரியம். நமது முதல் மூச்சு வெளிவருமுன்னரே தேவன் நம்மைத் தெரிந்துவிட்டார். தள்ளப்பட்டுவிட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட மனதுடனே போராடும் தேவபிள்ளையே, யார் உன்னைத் தள்ளிவிட்டாலும் தேவன் உன்னைத் தெரிந்தெடுத்துவிட்டார்.

2. நம்மை சுவீகார பிள்ளைகளாக தத்தெடுப்பதென்று தேவன் முன்கூட்டியே தீர்மானித்து விட்டார்(வச.5) பாவத்தின் பிடிக்குள் கிடந்த நமக்காக விலைக்கிரயம் ஈந்து நம்மைத் தமக்குச் சொந்தமாக்குவதற்கு இயேசு முன்பே தீர்மானித்து விட்டார். ஆகவே, உலகத்தின் பயமுறுத்தலால் கலங்கி நிற்கவேண்டிய அவசியமே நமக்கில்லை. ஏனெனில் நாம் உலகிற்குச் சொந்தமில்லை.

3. தேவன் தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தை நம்மேல் ஊற்றியிருக்கிறார். (வச.8,9) நமக்கு யாருமில்லையே, நாம் வீணர் என்று கலங்கும் தேவ பிள்ளையே, நாம் பிறரால் உதாசீனப்படுத்தப்பட்டாலும், நம்மைக்குறித்து மகிழ்ந்திருக்கும் ஒரு ஆண்டவர் நமக்குண்டு.

**'என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.' சங்கீதம் 139:16**

என் வாழ்வில் நான் ஒன்றுமில்லை என்று கலங்கிநின்ற சந்தர்ப்பங்களின் காரணிகள் எவை? உலகத்தோற்றத்தின் முன்னரே என்னை அறிந்திருந்த ஆண்டவர் என்னில் வைத்திருக்கும் நோக்கம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் விசேஷித்தவன்!

நவம்பர்

3

திங்கள்

வேத வாசிப்பு : யாத்திராகமம் 33:1-3, 12-16

**'...பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும்..' யாத்திராகமம் 33:16**

"ஆண்டவரோடு நல்லுறவில் வாழத் தெரியாத நான் ஒன்றுக்கும் உதவாதவன்." இப்படி அநேக வாலிபர்கள் மாத்திரமல்ல, பெரியவர்கள்கூட தங்கள் உள்மனதில் போராடுகிறார்கள் என்பதை அவர்களுடன் பேசிப்பார்த்தால் விளங்கும். ஒரு வாலிபர் கூட்டத்தில், அவர்களுடைய பிரச்சனைகளைக்குறித்து எழுதும்படி கேட்கப்பட்டது. அவர்களில் ஒருவராவது கர்த்தருக்குள் சந்தோஷமாகவோ, பிரச்சனைகள் இருந்தாலும் அதற்கு முகங்கொடுத்து வெற்றியாக வாழுவதாகவோ எழுதவேயில்லை. இந்த உலகிற்குத் தாம் பாரமாக இருப்பதாகவே அவர்களுடைய கருத்துக்கள் அமைந்திருந்தது.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வழிநடத்திய கர்த்தரை மறந்து ஒரு கன்றுக்குட்டியைச் செய்து கொண்டாடிய இஸ்ரவேலர் தாமாகவே தான் தேவனைவிட்டு விலகி கர்த்தருடைய கோபத்திற்கு ஆளானார்கள். மோசேயின் உருக்கமான விண்ணப்பத்தைக் கேட்ட கர்த்தர், **தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபம்கொண்டார் (யாத். 32:14)** என்று வாசிக்கிறோம். என்றாலும், "நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன்" என்று கர்த்தர் சொன்னபோது, மோசே செய்த ஜெபம் மிக உருக்கமானது. **'உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற் போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்'** (யாத்.33:15). தேவசமுகம் இல்லையானால் தாம் ஒன்றுமில்லை என்பதை மோசே உணர்ந்திருந்தார். கர்த்தர் தமக்குச் சொந்தமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனம் பூமியிலே விசேஷித்தவர்கள் என்று விளங்கவேண்டுமானால் கர்த்தர் அவர்களுடனே செல்லவேண்டும் என்பதன் அவசியத்தில் அத் தலைவன் உறுதியாயிருந்தான்.

அந்த உறுதி இன்று நமக்குண்டா? கர்த்தர் நம்மை கைவிடுவதில்லை. நாமேதான் நமது தவறுகளினாலே அவரைவிட்டு விலகிவிடுகிறோம். என்றாலும், தம்மண்டை திரும்புகின்ற எவரையும் அவர் புறக்கணியார். நாம் கர்த்தருக்கென்று கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். நாம் அழிந்துபோகப் பிறந்தவர்கள் அல்ல. நமக்காக விசேஷித்த நன்மையையே முன் நியமித்த தேவன் நம்மைக் கைவிடுவாரா? "பிதாவே, நீர் என்னுடன் வராவிட்டால் என்னை இன்றைக்கே நிறுத்திப்போடும்" என்று நம்மை இன்று ஒப்புக்கொடுக்கமுடியுமா!

**'அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.' எபி.11:40**

தேவன் என்னைக் கைவிட்டாரா என்று சந்தேகம் எழுந்தவேளைகளில் நானா தேவனா, யார் கைவிட்டது என்பதை இன்று நம்மால் கணக்கிடமுடிகிறதா? என் விசேஷம் எத்தனை மகிமையானது என்பதைச் சிந்திப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் உருவாக்கப்பட்டவன்!

நவம்பர்

4

செவ்வாய்

வேத வாசிப்பு : ஏசாயா 44:21 -28

**'உன் மீட்பரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கின வருமான கர்த்தர்...' ஏசாயா 44:24**

தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றப்பட்ட ஒரு இளம் பெண், "நான் ஏன் பிறந்தேன்" என்று கதறினாள். வாழ்வில் துயரங்கள் நெருக்கும்போது இப்படிப்பட்ட கேள்விகள் துளைத்தெடுக்காத மனுஷரே இல்லை. கேள்விகள் தவறல்ல; ஆனால், நம்மை அழித்துப்போட இடமளிக்கக்கூடாது.

நாம் தற்செயலாக பிறந்தவர்கள் அல்ல; தேவதிட்டத்தில் பிறந்தவர்கள். நாமாக உருவாகவில்லை; நம்மை ஒருவர் உருவாக்கினார். '...அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) **சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும்.... சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.'** (கொலோ.1:16) **'...தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர்'** (எபி.2:10) மாத்திரமல்ல, வெறுமையிலும் ஒழுங்கின்மையிலும் இருளிலும் கிடந்த பூமியில், "உண்டாகக்கடவது" என்ற வார்த்தையினால் சகலத்தையும் சிருஷ்டித்த தேவன், மனுஷனை மண்ணிலிருந்து தமது சாயலிலும் ரூபத்திலும் படைத்தார் என்று அறிவோம். தம்மோடு உறவாடவென்று படைக்கப்பட்ட மனுஷன் பாவம் செய்து தேவ உறவிலிருந்து பிரிக்கப்பட்டபோதும், அவனை அழித்துப்போடாமல், மீட்கும்படி தம்முடைய ஒரேபேறான குமாரனையே பாவநிவாரண பலியாக ஈந்து, மறுபடியும் தேவன் மனுஷனைத் தமக்குச் சொந்தமாக்கினார் என்பதுவும் நாம் அறிந்ததே! இப்படியிருக்க எப்படி நாம் நமது வாழ்வுக்கு எஜமான்களாக முடியும்? நாம் விரும்பியா வந்து பிறந்தோம்? அப்போ, நமது வாழ்வை நாமே முடித்துக்கொள்ள நினைப்பதும், என்னை ஏன் உருவாக்கினார் என்று கேட்பதும் எப்படி?

மனித வாழ்வு மிகவும் பெறுமதி வாய்ந்தது என்பதை நாம் ஏன் சிந்திப்பதில்லை. நாம் கடவுளுக்கென்று, அவருடைய சந்தோஷத்திற்கென்றே படைக்கப்பட்டவர்கள். அவரோடு நித்திய நித்திமாய் வாழவென்றே மீட்கப்பட்டவர்கள். பாவம் நிறைந்த இவ்வுலகில் நாம் வாழும்வரை போராட்டங்கள் வரத்தான் செய்யும். அதற்காக நாம் தோற்றுப்போனவர்கள் ஆகிவிடமுடியாது. ஏனெனில், நமக்கு ஒரு படைப்பாளி, சொந்தக்காரர், நடத்துனர் உண்டு. ஆகவே, நாம் மனமுறிவடையவேண்டிய அவசியமில்லை. தேவபிள்ளையே! தலைநிமிர்ந்து எழுந்து நில். உன் பெறுமதியைக் குறித்துச் சிந்தித்துப்பார்!

**'...சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும் வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?'** ஏசா.51:12

என்னுடைய் பெறுமதியை நிர்ணயிப்பது நானா, அல்லது இந்த உலகமும் மக்களுமா? அல்லது, என்னை உருவாக்கிய கர்த்தரா? பின்னை ஏன் எனக்குள் தேவையற்ற போராட்டங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேவசாயலில் படைக்கப்பட்டவன்!

நவம்பர்

5

புதன்

வேத வாசிப்பு : கொலோசெயர் 3:8-17

**'...தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.' கொலோசெயர் 3:10**

"என் முகம் அப்பாவைப்போல இருக்கிறது." பெருமை பேசிய அண்ண னில் எரிச்சலடைந்த தம்பி, "அது சரி. முதலில் அப்பாவின் குணங்களைக் கற்றுக்கொள். அப்போதான் நீ அப்பா பிள்ளை" என்று போட்டான் ஒரு போடு.

கடவுள் நம்மைத் தமது சாயலிலும் தமது ரூபத்திலும் படைத்தார் என்று நாம் பெருமை பேசும்போது, அதற்கேற்றபடி நமது வாழ்வு இருக்கிறதா என்பதை சிந்திக்கவேண்டும். சகலத்தையும் நேர்த்தியாகப் படைத்த தேவன், எந்தவொரு படைப்புடனும் தாம் உறவாடமுடியாது என்று கண்டாரோ என்னவோ; தம்முடன் உறவாட, தமக்கென்று மனிதனைப் படைக்க எண்ணினார். இது அவரது அநாதி திட்டம். அதன்படி தமது சாயலில் மனிதனைப் படைத்து அவனில் மகிழ்ந்திருந் தார். ஆனால், மனிதன் தன் கீழ்ப்படியாமையால் தன்னைக் கறைப்படுத்தி, தேவ மகிமையை இழந்துவிட்டான் என்று இன்றும் முதல் மனிதனில் நாம் குற்றம் பேசு கிறோம். இழந்துவிட்ட அந்த மகிமையைத்தானே இயேசு சிலுவையில் மீண்டும் பெற்றுத் தந்திருக்கிறாரே! பின்னர், இன்னமும் நாம் பழைய கதையை ஏன் பேச வேண்டும்? அதைவிட்டு, மகிமையை மீண்டும் பெற்றுத் தந்தவருடைய, நம்மைச் சிருஷ்டித்தவருடைய சாயலை நாம் நமது வாழ்வில் வெளிப்படுத்துகிறோமா என்பதே நாம் கவனிக்கவேண்டிய விடயம்.

கிறிஸ்தவன் என்பவன் நற்காரியங்கள் செய்பவன், நல்ல தீர்மானங்கள் நல்ல சிந்தனைகள் உள்ளவன் என்பதிலும் மேலாக, அவன் கிறிஸ்து நடந்த பாதையில் சரியாய் நடக்கிறவன் என்பதே முக்கியம். கிறிஸ்துவின் இரத்தத்தால் புதுப்பிக்கப்பட்ட அவன், தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பான அறிவை உடையவனாக வாழ்ந்து காட்டுபவன். எல்லா மனுஷருக்குள்ளும் அன்பு உண்டு. ஆனால், எதனையும் எதிர்பாராத கிறிஸ்துவின் அர்ப்பணிப்பின் அன்பை உடையவன்தான் தேவசாயலை வெளிப்படுத்துபவன். எல்லா மனுஷ ரும்தான் சேவை செய்கிறார்கள். ஆனால், தன்னை அடிமையாய் ஒப்புவிக்கிற வனே தேவசாயலை வெளிப்படுத்துகிறவன். தேவபிள்ளையே, தேவசாயலை வெளிப்படுத்துகின்ற ஒரு உன்னத வாழ்வைத்தான் தேவன் நமக்குத் தந்திருக்கி றார்; அதைத்தான் எதிர்ப்பார்க்கிறார். பாவம் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்துவின் சாட்சிகளாக, கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்துகிறவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதே தேவசித்தம். அதற்கு நாம் உண்மையாயிருக்கிறோமா?

**'மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக் கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.' எபேசியர் 4:24**

என் வாழ்வுக்கும் அடுத்தவன் வாழ்வுக்கும் வித்தியாசம் உண்டா? எப்பொழுதா வது யாராவது, உன்னில் ஒரு வித்தியாசம் உண்டு என்று சொன்னதுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேவனுடைய பிள்ளை!

வேத வாசிப்பு : யோவான் 1:1-5, 9-14

**'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர் களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.' யோவான் 1:12**

தகப்பனும் தாயும் கண்முன்னே வெட்டுண்டு கிடக்க கதறி அழுது நிராதரவாய் நின்ற குழந்தைகளைப் பார்த்து, "ஐயோ பாவம்" என்று கூறிச் சென்றவர்கள் அநேகர். அந்தவேளையில் ஒரு தம்பதியினர் அக்குழந்தைகளைத் தமது குடும்பத்தில் சேர்த்துக்கொள்ள முன்வந்தனர். இப்போது அவர்களுக்குச் சட்டப்படி ஒரு பெற்றோர், குடும்ப உறவு, பாதுகாப்பு எல்லாமே கிடைத்திருக்கி றது. அவர்களும் இப் புதிய பெற்றோருடன் மகிழ்ச்சியாக வாழுகின்றனர்.

அவர்கள் பிறப்பின்படி, ஒரு பெற்றோருக்குப் பிள்ளைகள். அவர்களை இழக்க நேர்ந்தபோதும், இப்போது இந்தப் பெற்றோர் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வை, ஒரு புதிய உறவைக் கொடுத்தனர். குழந்தைகளும் அதனை மனதார ஏற்றுக்கொண்டதனாலே அவர்களும் ஒரு புதிய வாழ்வை ஆரம்பித்தனர். அதை அவர்கள் மறுத்திருந்தால் என்னவாகியிருக்குமோ யாரறிவார்? உலகத்திலேயே இப்படியொரு மறுவாழ்வு கிடைக்கும்போது, கிறிஸ்துவுக்குள்ளான மறுவாழ்வு நமக்கு எந்தப் பெரிய கிருபையான வாழ்வைப் பெற்றுத் தருகிறது என்பதை நாம் உணரவேண்டும். நாம் பிறக்கும்போது ஒரு பெற்றோருக்குப் பிள்ளைகள். அது சரீரீதியான பிறப்பு. பாவசுபாவத்தில் பிறந்த நாம் பாவத்திலே அழிந்துவிடாத படிக்கு, இயேசு நமக்கு ஒரு புதிய வாழ்வு தருகிறார். நமது பெற்றோரால் தர முடியாத பெரிய விடுதலையை நமக்குத் தருகிறார். நமது உள்ளான வெளி யான வாழ்வை மாற்றி, நமது நோக்கம் விருப்பம் செயல் யாவையும் மாற்றிப் போடுகிறார். இப்போது நாம் புதிய குடும்பத்தின் அங்கத்தினர். நமது பிதா, தமது குமாரனில் கொண்டுள்ள அதே அன்பை நம்மிலும் பொழிகிறார் எனில் இதைவிட மேன்மையானதொன்றை நாம் எங்கே பெறமுடியும்? (யோவான் 17:23) சரீர மரணத்தின் பின்னர் அல்ல; இப்போதே நாம் பரலோக பிதாவின் பிள்ளைகள் என்ற அதிகாரத்தைப் பெற்று வாழுகிறோம். நாம் சாதாரணமானவர்கள் அல்ல; தேவாதி தேவனுடைய பிள்ளைகள். தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டதுபோல, நாமும் அவரை நமது பிதாவாக ஏற்றிருக்கிறோமா?

**'நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினாலே பிதாவான வர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.' 1யோவான் 3:1**

உறவுகள் இருந்தும் தனித்து விடப்பட்டதுபோன்ற மனநிலைமையில் இருக்கின் றோமா? அல்லது, உறவுகளை இழந்து தனித்து நின்று தவிக்கிறோமா? அந்த வேளைகளில் கிறிஸ்து நமக்குத் தரும் புதிய வாழ்வு உறவு பாதுகாப்பு இவற்றை நினைத்து வாழ்வில் தேவனோடு கிட்டிச் சேருவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கீழ்ப்படிவுள்ள பிள்ளை!

நவம்பர்

7

வெள்ளி

வேத வாசிப்பு : ரோமர் 6:12 – 23

**'நீங்கள் நன்றாய் ஓடினீர்களே. சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?' கலாத்தியர் 5:7**

"என் மகன் சொற்கேட்டு நடக்கிற நல்ல பிள்ளையாகத் தான் இருந்தான். ஆனால், இப்போது பல மாற்றங்கள் தென்படுகிறது. அவன் நமக்குக் கீழ்ப்படிவுள்ள பிள்ளைதானா? அல்லது, கீழ்ப்படிகிறவன்போல நம்மை ஏமாற்றுகிறானா?" அநேக பெற்றோருடைய அங்கலாய்ப்பு இது.

மனிதனுடைய சிந்தனைகள் விருப்பங்கள் நடத்தை எல்லாமே பருவ மாற்றத்திற்கேற்ப மாற்றமடையத்தான் செய்கிறது. அது இயல்பு. ஆனால் எந்தப் பருவமானாலும் நமது சுபாவம், குணாதிசயம் மாற்றமடைகிறதா என்பது கவனிக் கப்படவேண்டியது அவசியம். முன்னே பாவத்திற்கு அடிமைகளாக இருந்த நாம், இன்று கிறிஸ்துவின் இரத்தத்தாலே மீட்கப்பட்ட தேவபிள்ளைகள் என்பதை மனப் பூர்வமாய் ஏற்று, பாவ சட்டத்தைவிட்டு கிறிஸ்துவின் சுவிசேஷ சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்கிறோம் என்பதே நமது விசுவாசம் (ரோமர் 6:17). இப்படியிருக்க விட்டுவந்த பாவ பழக்கங்களைத் திரும்பிப் பார்ப்பது எப்படி? சாதாரண உலக காரியங்களிலேயே நமது தொழிலிலோ வேறெதிலோ சிறந்து விளங்கவேண்டுமானால் நமக்கு ஒரு பயிற்சியாளர், அல்லது ஒரு எஜமான் அவசியம் தேவை. நமது எஜமான் யார்? கிறிஸ்துவா? அல்லது விட்டுவந்த பாவமா? யாருக்கு நம்மை ஒப்புவிக்கிறோமோ யாருக்குக் கீழ்ப்படிகிறோமோ அவர்களுக்கே நாம் அடிமைகளாகிவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை.

நமது கடந்த காலங்களில் நாம் விரும்பி அணைத்துக்கொண்ட பல வற்றை இன்று சிந்திக்கும்போது அருவருப்பாக இருக்கிறது. "நான் இப்படியா இருந்தேன்? இப்படியா நடந்தேன்?" என்று நினைக்கும்போது வேதனை உண்டா கிறது. அப்படிப்பட்ட அருவருப்பிலிருந்து நம்மை மீட்டுக்கொண்ட கிறிஸ்துவின் அன்பை மறுபடி நாம் உதாசீனம் செய்வது ஆபத்தானது. இன்றைய காரியங்கள், நாம் கீழ்ப்படிவுடன்தான் நடக்கிறோம் என நம்மை எண்ணவைத்து வஞ்சிக்கிறது என்பதை நம்மில் யார் உணருகிறோம்? எது பாவம், எது நீதி என்பதைப் பகுத்தறியக்கூட முடியாத நிலையில் நாம் இருக்கிறோம் என்பதுதான் உண்மை. தேவனுக்குக் கீழ்ப்படிவதே நம் மூச்சாகும்படி நம்மை ஒப்புவிப்போம்.

**'மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக் கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?' ரோமர் 6:16.**

கிறிஸ்துவை எஜமானாகக் கொண்டிருக்கிற நான், முழுமனதுடன் அவருக்கே கீழ்ப்படிந்து வாழுகிறேனா? அல்லது, பாவத்தையும் எஜமானாக்கிக்கொண்டு கீழ்ப்படியாமைக்குள் விழுந்துகிடக்கிறேனா? நமது கிறிஸ்தவ வாழ்வும், கீழ்ப்படி வும் வெளிவேஷமாகக் கூடாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் புதிதாக்கப்பட்ட புதிய மனுஷன்!

நவம்பர்

8

சனி

வேத வாசிப்பு : எபேசியர் 4:17-24

**'தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.' கொலோசெயர் 3:10**

போதிய அளவில்லாத உடைகள், இன்றைய ரசனைக்கு ஒவ்வாதவை, பழுதடைந்து வெளுத்துவிட்டவை, மாத்திரமல்ல இன்றைய வயதுக்கும் வாழ்வு முறைக்கும் ஒவ்வாதவை என்று பல உடுப்புகளை அகற்றிவிட்டேன். ஆனால், இன்று சந்தையிலே வலம் வருகின்ற பல ஆடைகள் இதுதான் இன்றைய நாகரீகம் என்பதுபோல நமது கண்களை மறைக்கின்றன. அவை எவ்வளவுதூரம் நமக்கு ஒத்துவரும் என்பதிலும், வேண்டாம் என்று தள்ளிவிடுகிற ஆடை அமைப்புகளே வேறு உருவில் நமக்குள் திணிக்கப்படுகின்றன என்பதைக் குறித்தும் நாம் விழிப்பாயிருப்பது நல்லது. இப்போது எனக்கு உடுப்புகள் குறைந்து விட்டாலும், இருப்பவை நேர்த்தியானவை. இனிமேல் பழைய ஆடைகளுக்கோ, புதிய வடிவங்கொண்டு ஏமாற்றும் ஆடைகளுக்கோ இடம் கிடையாது.

ஆடை விஷயமே இவ்வளவென்றால் ஆண்டவர் விஷயத்தில் எவ்வளவு நாம் விழிப்பாயிருக்கவேண்டும்! கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு நமக்கு இனி வேண்டாம் என்று தள்ளிவிட்ட பல விடயங்கள் திரும்பவும் வஞ்சகமாக நம்மைக் கறைப்படுத்தும் என்பதில் எச்சரிப்பாயிருப்பது அவசியம். கிறிஸ்து இல்லாத மக்களின் பல பழக்கவழக்கம் (அவை நல்லவையாக இருக்கலாம்) கலாச்சாரம், பாரம்பரியம் என்ற பெயர்களைத் தாங்கிக்கொண்டு, கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்விற்கு சோதனையாக இருப்பதையும் ஏன் நாம் சிந்திப்பதில்லை. புதிய மனுஷனைக் குறித்த எச்சரிப்பை பவுல், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சபைக்குத் தான் எழுதினார். ஆக, பழைய மனுஷனைக் களைந்துவிட்டாலும், பழைய வாழ்வுக்குள் விழுந்துபோகக்கூடிய சோதனைகள் நமக்கு வரலாம் என்பது தெரிகிறது. என்றாலும், கிறிஸ்துவுக்குள் நாம் வருவது பழைய உடைகளை முற்றாய் களைந்தெறிவது போன்றது. அதற்காக நாம் பூரணர் அல்ல. நாம் கிறிஸ்துவுக்குள் வளருகிறோம் என்பதுவே உண்மை. ஆனால், அந்த வளர்ச்சி யின்போது நாம் புதிதாகப் பிறந்தவர்கள், கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகள் என்பதை மறந்துவிடுவது, திரும்பவும் நம்மைச் சோதனைக்குள் வீழ்த்திவிடும்.

**'அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, ...மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.' எபேசியர் 4:22,24**

ஆராதனை, பிரசங்கம், ஊழியம் என பங்குபற்றும் நாம் உண்மையாகவே புதிய மனுஷனைத் தரித்தவர்களாய், நம்மைப் புதிதாக்கியவருக்குச் சாட்சிகளாக இருக்கிறோமா? பழைய வாழ்வைவிட்டு கிறிஸ்துவுக்குள் வந்தாலும், அவருக்குள் வளரமுடியாதபடிக்கு நமக்குள் இருக்கும் தடைகள் என்ன? வெளிவேஷங்களை இனங்கண்டு களைந்துவிடுவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அழைக்கப்பட்டவன்!

வேத வாசிப்பு : 1தெசலோனிக்கேயர் 5:16-24

**'பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான்.' வெளிப்படுத்தல் 19:9**

திருமண இராவிருந்திற்காகச் சென்றபோது, மண்டப நுழைவாயிலில் வெளிநாட்டுப் பாணியில் ஒரு பெயர் அட்டவணை போடப்பட்டிருந்ததைக் கண்டோம். அதன்படியே அவரவர் தத்தமது இருக்கைகளில் அமரவேண்டும். விருந்துக்கு அழைப்புக் கிடைத்திருந்தாலும், பெயர்கள் தவறியிருந்தால் கஷ்டம் தான். ஆகவே, நமது அழைப்பு அட்டைகளை தற்பாதுகாப்பாக எடுத்துச் சென்றோம். ஒரு சாதாரண விருந்தின் அழைப்புக்கு இத்தனை மரியாதை என்றால், கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் அழைப்பு எத்தனை முக்கியமானது!

நாம் பெற்றிருக்கிற அழைப்பு சாதாரணமானது அல்ல. நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படிக்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1கொரி.1:2) பரிசுத்தத்திற்கென்று தேவன் நம்மை தனிப்பட்ட விதத்திலே அழைத்திருக்கிறார். பாவங்களை நீக்கி, சுத்திகரித்து, வேறுபிரித்த கிறிஸ்து, தமது பிள்ளைகளாக வாழ அழைத்திருக்கிறார்.

மேலும், எல்லோருடனும் சமாதானமாக வாழ்வதற்கே அல்லாமல் சண்டையிடுவதற்கு நாம் அழைக்கப்படவில்லை (1கொரி.7:15). கிறிஸ்து தம்முடைய சமாதானத்தையே நமக்குள் தந்திருக்க, நமது சக மனிதருடன், வாழ்க்கைத் துணையுடன் சமாதானம் இழந்து வாழ்வது ஏன்?

கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக வாழ நாம் அழைப்புப் பெற்றிருக்கிறோம் (கொலோ.3:15) ஒருவருக்கொருவர், ஒருவரோடொருவர், இதுதான் கிறிஸ்தவ ஐக்கியம். சமாதானமாய் வாழ அழைக்கப்பட்ட நாம், நமது அழைப்பை உணர்ந்து வாழ்ந்தால், ஒரே சரீரமாக வாழுகின்ற வாழ்வு கடினமாயிராது.

நாம் நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம் (1தீமோ.6:12). அழிவுக்கல்ல; ஆண்டவரோடு நித்தியமாய் வாழவே நாம் படைக்கப்பட்டோம். பாவம் நம்மை தேவனைவிட்டுப் பிரித்துப்போட்டாலும் கிறிஸ்துவினூடாக அந்த நித்திய வாழ்வுக்குரிய புதுப்பித்தலை நாம் பெற்றிருக்கிறோம். இதற்காகவே கிறிஸ்து நமக்கு தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்.

**'ஆகிலும், யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்.' 1கொரிந்தியர் 1:24**

இந்தப் பெரிய அழைப்பைப் பெற்ற நமது அழைப்பு அட்டைகள் பத்திரமா? இந்த மேன்மையான அழைப்புக்குப் பாத்திரராக வாழுவதற்கு நமக்கிருக்கும் தடைகள் என்ன? ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்குரிய அழைப்பிற்குப் பாத்திரராக வாழ நம்மை ஒப்புவித்திருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேவனுக்கு அடிமை!

நவம்பர்
**10**
திங்கள்

வேத வாசிப்பு : 1பேதுரு 2:11-17

**'சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்.'** 1பேதுரு 2:16

'அழகான நாயைக் கட்டிவைத்திருப்பது ஏன்' என்று கேட்டதற்கு, 'ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய இந்த நாயை வீட்டிலே சுதந்திரமாக இருக்கவே அனுமதித்தேன். ஆனால், அதுவோ வருகிறவர்கள்மேல் பாய்ந்து கடிக்கிறது; செருப்புகளைக் கடித்துவிடுகிறது. கண்டித்தாலும் கேட்கிறதில்லை. கட்டிவைக்காமல் என்ன செய்ய' என்றாள் நண்பி. நாமும் இப்படித்தானோ!

சிவில் சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்து நடக்கும்படி பேதுரு எழுதிய போது, கொடூரமாக அரசாட்சி செய்த நீரோ மன்னனின் அரசாட்சியின் கீழிருந்த ரோம ராஜ்யத்தின் சட்டதிட்டங்களையே குறிப்பிட்டார். "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" என்று 'பிரதான ஆசாரியன் முன்பாக சூளுரைத்த பேதுரு, இப்போ இப்படி எழுதலாமா, நாம் பிரமாணத்திற்குட்பட்டவர்கள் அல்லவே' என்று கிறிஸ்தவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால், "...கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்" என்று பேதுரு எழுதியிருப்பதையும் கவனிக்கவேண்டும். இங்கே, உலகோடு ஒத்துப்போகும்படியல்ல; மாறாக, உலக சட்டதிட்டத்திற்குக் கீழ்ப்படிவது தேவனுடைய நாமத்துக்கு மகிமை கொண்டுவரவேண்டும் என்பதே பேதுருவின் ஆலோசனை. அதாவது, ஒரு ஆட்சியின்கீழ் உபத்திரவத்திற்குட்படுகிறோம் என்றால், அது தேவனுக்கு நாம் கீழ்ப்படிந்ததற்காக இருக்கவேண்டுமே தவிர, நாட்டின் சட்டத்தை மீறியதற்காக இருக்கக்கூடாது. அது நமது தேவனுக்கு அபகீர்த்தியைத்தான் கொண்டுவரும். அப்படித்தான் பேதுருவும் மற்றவர்களும் பல உபத்திரவங்களுக்கும் மரண தண்டனைக்கும் உட்பட்டார்கள்.

நாம் பிரமாணத்திற்கு அடிமைகளல்ல என்பது நாம் பிரமாணத்தால் அல்ல, கிருபையால் மீட்கப்பட்டோம் என்பதாகும். அதற்காக, நாம் விடுவிக்கப்பட்டது நமது மனவிருப்பப்படி நடக்க அல்ல. தமது பிள்ளைகள் தமக்கு மகிமை கொண்டுவரவேண்டும் என்றே தேவன் பத்துக் கட்டளைகளைத் தந்திருக்கிறார். அதை நாம் புறக்கணிக்கலாகாது. நாம் பாவத்தினின்று விடுவிக்கப்பட்டாலும் இன்று நாம் தேவனுக்கு அடிமைகள் என்ற நினைவு நமக்கு இல்லையானால் மறுபடியும் பாவத்தில் விழமாட்டோம் என்று சொல்லமுடியாது.

**'நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? கூடாதே.'** ரோமர் 6:15

தேவ நாமம் தூஷிக்கப்படும்படிக்கு நமது நாட்டின் சட்டதிட்டங்களில் எதனை (வீதிக்கடவை, வரி செலுத்துதல் உட்பட) நான் மீறியிருக்கிறேன்? உலகோடு ஒத்துப்போகாமல் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால் இதுவரை நான் ஏதாவது கஷ்டங்களுக்கு உட்பட்டிருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேவனுடைய சுதந்திர புருஷன்!

நவம்பர்
**11**
செவ்வாய்

வேத வாசிப்பு : கலாத்தியர் 4:1-11

**'ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.' கலாத்தியர் 4:7**

திடீரென சுகவீனமுற்ற தகப்பன் தனது வளர்ப்பு மகளை அழைத்து, "மகள் நீ என் சுவீகார புத்திரியாக இருந்தும் உன்னை நாங்கள் செல்வமாகவே வளர்த்தோம். இப்போ..." என்று வருத்தப்பட்டார். அதற்கு அவள், "அப்பா, நான் வளர்ப்புப்பிள்ளை என்று பாராமல் உங்களது சகல சந்தோஷங்களிலும் எனக்கு உரிமை கொடுத்தீர்கள். இப்போது உங்கள் கஷ்டத்திலும் எனக்கு உரிமை கொடுங்கள் அப்பா" என்றாள். அப்பா பூரித்துப்போனார்.

ரோம சட்டத்தின் கீழ், ஒருவன் சுவீகார புத்திரனாகும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டால், முன்னர் அவன் ஒரு அடிமையாக இருந்திருந்தாலும்கூட, இப்போது தகப்பனுடைய சகல உரித்துகளுக்கும் அவன் உரிமைக்காரனாக முடியும். அவன் ஒருபோதும் இரண்டாந்தர மகன் அல்ல; மற்றப் பிள்ளைகள் போலவே அவனும் தன் தகப்பன் வீட்டில் கருதப்படுவான். பாவத்திற்கு அடிமை களாயிருந்த நாம் இன்று கிறிஸ்துவின்மூலம் "அப்பா பிதாவே" என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருப்பதால் (ரோமர் 8:15) இன்று நாம் தேவனுடைய சுதந்திர பிள்ளைகளானோம். நமக்கு அப்பாவிடம் எல்லா உரிமையும் சந்தோஷமும் உண்டு. அதேபோல 'அப்பா பிதாவே' என அழைத்த இயேசு, பிதாவின் சித்தத்தை பாடுகளிலும் நிறைவேற்றியதுபோல, பாடுகளிலும் பரம பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பு நமக்கும் உண்டு.

"நாம் தேவனுடைய அடிமைகள்" என்ற எண்ணம், பாவத்திற்கு நம்மை விலக்கி, தேவனுடைய கட்டளைகளை முழுமனதுடன் ஏற்று கீழ்ப்படிந்து தேவனுக்கு நமது வாழ்வினால் மகிமை கொண்டுவர நம்மை நடத்துகிறது. அது போலவே, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற உரிமை, நாம் கிறிஸ்துமூலம் தேவனுடைய சகலவற்றுக்கும் உரிமையாளர்கள் என்ற உறுதியை நமக்கு அளிக்கிறது. நாம் தேவனுடைய சுதந்திரர் என்ற கிருபை கிடைத்திருப்பதனால், அவர் நமக்களித்திருக்கும் சகல சந்தோஷங்களில் மாத்திரமல்ல, அவருக்காகப் பாடனுபவிப்பதிலும் நமக்கும் உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

**'நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப் படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.'** ரோமர் 8:17

நான் தேவனுடைய பிள்ளை என்பதனால் எனக்குக் கிடைத்திருக்கிற உரிமைகள் என்ன? நான் தேவனுக்குச் சுதந்திரபிள்ளை என்றால் பிதாவின் சித்தத்தைச் செய்ய நான் என் வாழ்வில் என் லௌகீக சுதந்திரத்தை நான் இழக்க என்னை ஒப்புவித்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் குயவன் கையிலுள்ள களிமண்

நவம்பர்
**12**
புதன்

வேத வாசிப்பு : ரோமர் 9:20-23

**'...குயவன் களிமண்ணுக்குச் சமானமாக எண்ணப்படலாமோ? உண்டாக்கப்பட்டது தன்னை உண்டாக்கினவரைக் குறித்து, அவர் என்னை உண்டாக்கினதில்லை என்றும், உருவாக்கப் பட்டது தன்னை உருவாக்கினவரைக் குறித்து அவருக்குப் புத்தியில்லையென்றும் சொல்லத்தகுமோ?'** ஏசாயா 29:16.

சிறிதும் பெரிதுமாக வேறுபட்ட உருவங்களைக்கொண்ட அழகழகான மண்பாத்திரங்கள் விற்பனைக்கு ஆயத்தமாயிருந்த சாலைக்குள் நம்மை அழைத்துச் சென்ற பெரியவர், "இவற்றையெல்லாம் இந்தக் கைதான் செய்தது, இவை யாவும் என்னுடையவை" என்று தளர்ந்திருந்தாலும் உரமேறிப்போன தன் கைகளைப் பெருமையுடன் காட்டினார். "அந்தக் கூஜா தன் கழுத்தை நீட்டி, இவருக்கும் எனக்கும் என்ன என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்" என்று வேடிக்கையாகக் கேட்டோம். "அடித்து நொறுக்கிவிடுவேன்" என்றார் கோபமாக. "அதுதான் இவற்றுக்கு வாய் இல்லை" என்றான் அவருடைய சின்ன மகன்.

தமக்கும் மனிதருக்கும் இடையே உள்ள உறவை தேவன், பரிசுத்த வேதாகமத்திலே பலவிதங்களில் வெளிப்படுத்தி காட்டியுள்ளார். உலகம் சற்றுத் தாழ்வாக எடைபோடுகின்ற ஒரு குயவனுக்குத் தம்மை ஒப்பிடுமளவுக்கு பழைய ஏற்பாட்டிலேயே தம்மை தாழ்த்திகொண்டார் ஆண்டவர். களிமண்ணுக்கு உயிர் இல்லை; அது வெறும் ஜடம்தான். ஆனால், அந்தக் களிமண் மதிப்புள்ள பாவனைக்குரிய ஒரு உருவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அது குயவனின் கையில் இருந்துதான் பெறவேண்டும். பினையப்பட்டு, காலினால் மிதிக்கப்பட்டு, யந்திரத்தில் உருட்டப்பட்டு, சூளையில் போடப்படவேண்டும். இதைப் பார்க்கும்போது, குயவனுக்கும் களிமண்ணுக்கும் ஒரு சந்தோஷமான உறவு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், களிமண் குயவன் கையில் இருந்தால்தான் அதற்கு ஒரு பெறுமதி கிடைக்கும். இப்படியிருக்க, பெறுமதிமிக்க தாக மாற்றப்பட்ட களிமண், இன்னும் உடைந்து நொருங்கக்கூடிய நிலையில் இருப்பதால்(இன்று நம்மைப்போல) தன்னில்தானே பெருமைபாராட்டுவது எப்படி?

நமது வாழ்வு தேவனுடைய கரங்களில் இருக்கிறது. நம்மை உருவாக்கிய தேவனுடைய கட்டுபாட்டுக்குள் நாம் இருக்கிறோம். தம்மையே பலியாக்கி நம்மைப் பெறுமதிமிக்கவராக மாற்றிய தேவன் தமக்கென்றே நம்மை உருவாக்கினார். இந்த நினைவு எப்பொழுதும் நமக்குள் இருக்குமானால் எந்தப் பெருமையும் நம்மைத் தேவனைவிட்டுப் பிரித்துவிட முடியாது. தேவையற்ற கேள்விகள் நம் மனதை அலைக்கழிக்கவும் முடியாது.

**'கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண். நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.'** ஏசாயா 64:8

இன்று என் வாழ்வைக் குறித்து என் மனதில் அலைமோதும் கேள்விகள் என்ன? தேவனுடைய கைகளில் களிமண்ணாய் அடங்கி இருப்பதில் எனக்கென்ன தடை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் எஜமானின் பொறுப்புள்ள ஊழியன்

நவம்பர்

13

வியாழன்

வேத வாசிப்பு : மத்தேயு 25:14 - 30

**'அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.' மத்தேயு 25:21**

மருந்தாளராக வைத்தியசாலையிலே பணிபுரிந்த காலத்திலே நிரம்பி வழியும் வெளிநோயாளர் பகுதியில் சற்று வேகமாக பணிபுரியவேண்டிய கட்டாயம்; அவ்வளவு ஜனக்கூட்டம். அதிலும் ஒரு மாதத்திற்கு மருந்து கொடுக்கும்போது வேகமாக எண்ணிக்கொடுப்பது சற்றுக் கடினம்தான். ஒருநாள், குளிசைகள் சரியாக எண்ணிக் கொடுக்கப்படுகிறதா என்று வெளிநோயாளர் மத்தியில், நோயாளரின் மருந்துப் பொட்டலங்களை வைத்தியசாலை முகாமையாளர் கண்காணித்துக்கொண்டிருந்ததைக் கண்டு திடுக்குற்றேன். 84குளிசைகள் இருக்கவேண்டிய பொட்டலத்தை அவர் அவிழ்த்து எண்ணினார். என் இருதயத்து துடிப்பு அதிகரித்தது. ஆனால் அவரோ, தலையசைத்து ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டுப் போனதை இப்போ நினைத்தாலும் எனக்கு உடல் சிலிர்க்கும்.

இயேசு சொன்ன உவமையிலே அந்த எஜமான் தன் ஊழியக்காரரின் திறமையை அறிந்தவனாக அவரவர் திறமைக்குத் தக்கதாகவே தன்னிடம் இருந்ததைப் பிரித்துக் கொடுத்தான். அவனவனுடைய திறமைக்கு மிஞ்சியோ குறைவாகவோ எதுவும் கொடுக்கப்படவில்லை. தங்கள் எஜமான் திரும்பி வருவார் என்பதுவும் ஊழியருக்குத் தெரியும். ஆக, இந்த ஊழியரில் எவனாவது தன் பொறுப்பில் தவறினால், அது அவனது சோம்பேறித்தனமாக இருக்கும்; அல்லது, அவன் எஜமானில் கொண்டிருக்கும் வெறுப்பின் அடையாளமாக இருக்கும். இவை இரண்டும் இல்லையானால் அவன் உழைத்திருப்பான்.

நமது எஜமானனாகிய ஆண்டவர் தமது ஊழியராக நம்மை ஏற்று, பல தாலந்துகளின் மூலதனங்களைக் கொடுத்திருக்கிறார். அது நேரமாக இருக்கலாம்; பலவித திறமைகளாக இருக்கலாம். ஆனால், அவை நமது தகுதிக்கேற்றதாகவே இருக்கும். ஏனெனில் அவர் நமது எஜமான். அவர் தமது ஊழியரை அறிந்து வைத்திருக்கிறார். அவர் வரும்வரைக்கும் அதைப் பயன்படுத்துவதும் பெருக்குவதும் நமது பொறுப்பு. நாம் எவ்வளவு அல்லது என்னென்ன கொடுக்கப்பட்டோம் என்பதல்ல; ஆண்டவர் கொடுத்ததை அவரது நாமத்திற்காக நாம் எப்படிப் பயன்படுத்திப் பெருக்குகிறோம் என்பதே காரியம்.

**'பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனை புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.' மத்.25:30**

உலகம் தரும் சத்தத்தை நான் கேட்கலாமா? பிறரோடு என்னை ஒப்பிட்டு என் எஜமானனைச் சந்தேகிக்கிறேனா? என் எஜமான் வரும்போது என்னை உத்தம ஊழியனாகக் காண்பாரா? அல்லது எப்படிக் காண்பார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விழித்திருக்கவேண்டிய ஊழியன்

நவம்பர்

14

வெள்ளி

வேத வாசிப்பு : மத்தேயு 24:44-51

**'ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்கு போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?' மத்தேயு 24:45**

எதிர்பாராத நேரத்திலே விருந்தாளிகள் வீட்டுக்கு வந்துவிட்டால், 'ஐய்யய்யோ' என்று சொல்லிக்கொண்டு சிதறிக் கிடக்கும் பொருட்களையும், வீசிக்கிடக்கும் உடுப்புகளையும் அவசர அவசரமாக எடுத்துக்கொண்டு ஓடு வோமா? எந்நேரமும் வீடு சுத்தமாக இருந்தால் ஏன் இந்தப் பரபரப்பு! என்றும் சுத்தமாயிருந்தால், வாங்க என்று தயக்கமின்றி வரவேற்கலாமே. மறுபுறத்தில், ஒரு திருமண வைபவம், சுற்றுலாப் பயணம் என்றால் நாட்கள் மாதங்களாக எவ்வளவு பிரயாசம் எடுத்து முன்ஆயத்தம் செய்வோம்? ஒருநாளில் முடிந்துவிடு கின்ற காரியத்துக்கு இத்தனை ஆயத்தம் என்றால் நித்தியத்தில் வாழப்போகும் நித்திய வாழ்வுக்காக நாம் எவ்வளவு ஆயத்தம் செய்யவேண்டும்!

ஆண்டவரைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொண்ட அத்தனைபேரும் அவருக்கு ஊழியர்தான். நாம் பொறுப்புடன் நடக்கிறவர்களாக மாத்திரமல்ல, விழித்திருந்து உண்மையாய் உழைக்கின்ற ஊழியராக இருக்கவும் அழைப்பு பெற்றிருக்கிறோம். எஜமான் திரும்பிவரும் நாளை வரப்போகிற கிறிஸ்துவே அறியமாட்டார். அது பிதாவுக்கடுத்த விடயம். ஆனால் அவர் வருவது உறுதி. ஆகவே, நம்மை ஆயத்தம் செய்வது மாத்திரமல்ல, பிறர் விடயத்திலும் நாம் உண்மையாய் இருக்கவேண்டியதின் அவசியத்தையும் நாம் சிந்திக்கவேண்டும். ஆயத்தம் என்பதை எளிதாகக் கூறினால், 'எஜமானுக்கு என்றும் முற்றிலும் கீழ்ப்படிவதே' ஆகும். அதேசமயம் சபைக்கு உள்ளும் புறமும் ஆண்டவர் நமக்குப் பொறுப்பாகத் தந்திருக்கும் மக்களையும் நாம் ஆயத்தம் செய்ய வேண்டிய அவசியமும் நமக்குண்டு. அந்த விடயத்திலும் நாம் விழிப்புள்ளவர்க ளாக இருக்கவேண்டும் என்பதையே ஆண்டவர் நமக்கு உணர்த்துகிறார்.

அடிமைகளாக இருந்த நம்மை கிருபையாய் மீட்டு தமது ஊழியராக ஏற்படுத்திய எஜமானர், நம்மைச் சுற்றியுள்ள அதாவது, ஆண்டவரை அறியாத மக்கள் விடயத்தில் தம்மைப்போல நாமும் உண்மையாய் இருக்கவேண்டும்; விழிப்புடன் வேலைசெய்யவேண்டும் என்றே விரும்புகிறார். அவர் வரும்போது நம்மை அப்படிப்பட்ட விழிப்புள்ள ஊழியராகக் காணவேண்டுமே!

**'இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படாத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.' வெளி.16:15**

என் தேவனைச் சந்திக்க முதலில் நான் ஆயத்தமா? பிறர் விடயத்தில் விழிப்புடன் பணி செய்கிறேனா? அல்லது பிறனுக்கு இடறலாக இருக்கிறேனா? இன்று கிறிஸ்து வருவாரானால் என்னைத் தூங்குகிற பொல்லாத ஊழியனாகக் காண்பாரா? அல்லது எப்படிக் காண்பார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேவனுடைய பிள்ளை

நவம்பர்
15
சனி

வேத வாசிப்பு : 1யோவான் 3:1-3

**'நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.' 1யோவான் 3:1**

ஒரு குடும்ப ஐக்கிய விருந்துக்கு அழைப்புக் கிடைத்தது. "நான் உங்கள் குடும்பத்தவள் இல்லையே" என மறுத்தேன். "நீங்களும் எனக்கு மகள் தான்" என்றார் அந்தப் பெரியவர். "என் தகப்பனைவிட வேறு யாருக்கும் நான் மகளாக இருக்கமுடியாது" என்றேன் நான். "பரவாயில்லை, பெறாமகள் என்று நினைத்து வாருங்கள்" என்று அவர் அன்போடு அழைத்தார். 'இவர் என் தகப்பன்' என்று பிள்ளைகள் சொல்லுவதிலும், 'இவன் என் மகன்' என்று சொல்லத்தக்கதாக தகப்பனுக்குப் பெருமை சேர்ப்பது பிள்ளையின் பெரிய பொறுப்பு என்று நினைத்துக்கொண்டேன். அந்தப் பெரிய பொறுப்பை நிறைவேற்றும் பாக்கியத்தை தேவாதி தேவன் நமக்குத் தந்திருப்பது கற்பனை பண்ணமுடியாத ஒரு அதிசயம்.

நாம் தேவனுடைய அடிமைகள்தான்; அவருடைய பொறுப்புள்ள விழிப் புள்ள ஊழியர்தான். அதிலும் மேலாக அவர் நம்மை நேசிக்கிறார் என்பதுவும், நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக அழைத்திருக்கிறார் என்பதுவும் நமது பெறுமதியைப் பன்மடங்கு உயர்த்தியிருக்கிறது! இது எப்போதோ நடைபெறப் போகின்ற விடயம் அல்ல; இன்று இப்போதே நாம் அவருக்குப் பிள்ளைகள்தான். தேவன் தம்முடைய குமாரனை எவ்வளவு நேசித்தாரோ அவ்வளவுக்கு நம்மை யும் நேசிக்கிறார் என்ற அறிவு நமக்கு இருக்குமானால் இயேசுவைப்போலவே நாமும் வாழவேண்டும் என்று யாரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை. நாம் தேவனுடைய குடும்பத்தில் இருப்பதால், கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரைப்போலவே இருப்போம்(வச.2) என்பது நமது அறிவுக்கெட்டாத அதிசயம். மாத்திரமல்ல, நாம் தேவனுடைய பிள்ளைகளாதலால் பாவத்தின்மீது நமக்கு வெற்றி நிச்சயம்(வச.4-9). மேலும், சகோதர அன்பு நமக்குள் ஊற்றெடுக்கிறது (வச.10-18). நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருந்து அவருக்குக் கீழ்ப்படிவதால் அவருக்குள் நாம் தைரியங்கொண்டிருக்கிறோம் (வச.19-24).

இந்தப் பெரிய பாக்கியத்தைப் பெற்றிருக்கும் நாம் மனுஷ அன்புக்கு ஏங்கி, பாவத்திற்கு இடமளித்து, நினைப்பதைச் சாதிக்க வீண்வைராக்கியம்காட்டி, வீண்சண்டைகள் வாதங்களுக்கு இடங்கொடுத்து, பிசாசின் பிள்ளைகள் போல வாழுவது சரியா? இயேசுவைப்போல மாற நம்மை இன்றே ஒப்புவிப்போம்.

**'...நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதை யும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும் படி வேண்டிக்கொள்ளுகிறேன்.' யோவான் 17:23**

நான் தேவனுடைய குடும்பத்தில் ஒருவன் என்ற எண்ணம் என்னில் ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதா? "என் பிள்ளை" என்று ஆண்டவர் என்னில் பெருமைப்பட முடியாதபடிக்கு எனது வாழ்விலுள்ள கறைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கீழ்ப்படியமாட்டாத பிள்ளையல்ல!

நவம்பர்

**16**

ஞாயிறு

வேத வாசிப்பு : தீத்து 3:1 - 9

**'...முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், ...பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்.' தீத்து 3:3**

"நான் நன்றாய் திருப்பிக் கொடுத்தேன்." இப்படி நாம் சொன்ன சந்தர்ப்பங்கள் உண்டல்லவா? இந்த வார்த்தை இனிமையானதல்ல. இப்படிச் சொல்லும் போது வெறுப்பும் கோபமும் பழிவாங்குதலுமே வெளிப்படுகிறது. இப்படிச்சொன்ன ஒருவரிடம், "நாம் இயேசுவைப் பிரதிபலிக்கவேண்டியவர்கள் அல்லவா" என்ற போது, "என் நியாயம் எடுப்பட்டுப்போகும்போது பார்த்துக்கொண்டிருப்பதற்கு நான் இயேசுவல்ல" என்றார் அந்தக் கிறிஸ்தவ ஊழியர். இது கீழ்ப்படிவுள்ள ஒரு கிறிஸ்தவன் சொல்லும் பதில் அல்ல.

ஏதேன் தோட்டத்தில் நடந்ததும் இதுதான். 'என் காரியத்தை நானே தீர்மானிப்பேன்' என்பதுபோல ஏவாள் தேவனுடைய வார்த்தையை மீறி, தன் இச்சைப்படி நடந்து மனுக்குலத்திற்கே பாவத்தைச் சம்பாதித்துக் கொடுத்து விட்டாள். 'என் நியாயத்தை நானே எடுத்துரைப்பேன்' என்று சொல்லும்போது தேவன் நம்மீது கொண்டிருக்கும் ஆளுகையிலிருந்து நாம் விலகிவிடுகிறோம். இப்படிப்பட்டவர்களாகத்தான் நாம் முன்னர் இருந்தோம் என்று பவுல் எழுதுகிறார். ஆனால் இனி அப்படி இருக்கமுடியாது. ஏனெனில், இயேசுவின் பரிசுத்த இரத்தத்தால் பாவம் நிறைந்த வாழ்விலிருந்து பரிசுத்தாவியானவர் வழிநடத்தும் வாழ்வுக்குள் நாம் கடந்துவந்துவிட்டோம். எல்லாப் பாவங்களும் கழுவப்பட்டவர்களாய் நித்திய ஜீவனைப் பெற்றவர்களானோம். நாம் தேவனுடைய சுதந்திரரானதால் அவருடையவைகள் யாவும் நம்முடையவைகள்.

இப்படியிருக்க, நாம் திரும்பவும் பழைய சுபாவத்திற்கும் இச்சைக்கும் திரும்பலாமோ? ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையாலே வந்த பாவத்தை இயேசு தோற்கடித்த பின்பும், இயேசுவின் இரத்தத்தாலே நாம் நீதிமான்களாக்கப் பட்டும், திரும்பவும் கீழ்ப்படியாமையாலே நாம் பாவத்திற்குப் பங்காளிகளாக லாமா? நம்மிலுள்ள கீழ்ப்படியாமையின் தன்மையைவிட்டு வெளிவர பரிசுத்த ஆவியானவர் துணை நிற்கிறார். நம்மை ஆராய்ந்து மனந்திரும்புவோமாக.

**'நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.'** 1பேதுரு 1:14,15

சந்தர்ப்பங்கள் நேரிடும்போது நம்மையும் மீறி நாம் பிசாசின் குணங்களை அள்ளி வீசுவது ஏன்? தேவனுக்குக் கீழ்ப்படிந்து அதாவது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, இயேசு நடந்த பாதையில் நடக்க நமக்குள்ள தடைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கிறிஸ்துவின் மந்தையில் ஒரு ஆடு

நவம்பர்

**17**

திங்கள்

வேத வாசிப்பு : எசேக்கியேல் 34:11 -16

**'என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்கு வேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.'** எசேக்கியேல் 34:15

விடுதி மாணவிகளான நாம், இவ்விரண்டு பேராக ஒழுங்கான வரிசையில் கடற்கரைக்கு உலாவச் சென்றோம். அப்போது, "நீங்கள் சுதந்திரமாக விளையாடலாம். ஆனால், என் கண்களுக்குத் தப்பி எங்கேயும் போகக்கூடாது" என்று நமது ஆசிரியை கட்டளையிட்டதை நான் இன்னமும் நினைத்துப் பார்ப்பேன். அதையும் மீறிச் சென்ற மாணவிகளின் கால்களில் (எனக்கும்) கிடைத்த அடியையும் மறக்கமுடியாது. அன்று அது வெறுப்பூட்டும் தண்டனைபோலத் தெரிந்தாலும், ஒரு ஆசிரியைக்கு நம்மில் இத்தனை கரிசனை என்றால், நமது ஆண்டவர் தமது மந்தையாகிய நம்மில் எவ்வளவு கரிசனையாயிருப்பார் என்பதை இன்று என்னால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

பாபிலோனிய சிறையிருப்பில் தவித்த யூதருக்கு கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கன் மூலம் உரைத்த வார்த்தைகளைத்தான் இன்று வாசிக்கிறோம். தன் ஆடுகளைத் தன் கண்காணிப்புக்குள் வைத்து, போஷித்துக் காப்பாற்றி வழிநடத்துகிறவனே ஒரு உத்தம மேய்ப்பன். தமது ஜனத்தை மேய்க்கும் பொறுப்பை கர்த்தர் இஸ்ரவேலின் ராஜாக்களிடம் கொடுத்திருந்தார். அவர்களோ தங்கள் மேய்ச்சலின் மக்களைச் சிதறடித்துவிட்டார்கள். ஆனால் கர்த்தர் தமது ஜனம் சத்துருவால் அழிக்கப்பட இடமளிக்கவில்லை. "இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து அவைகளைத் தேடிப்பார்ப்பேன்" (வச.11) என்று கர்த்தர் உறுதியளித்தார். அப்படியே தமது ஜனத்தை மறுபடியும் யூதாவிலே கொண்டுவந்து சேர்த்தார் என்பதை வேதாகமத்திற்கூடாக படிக்கிறோம். அது சரித்திரம்.

நமது தலைவர்கள், அவர் ஒரு குடும்பத் தலைவனோ, வழிகாட்டிய ஊழியரோ, யாராயினும், தங்கள் பணியில் தவறும்போது, நாம் ஏமாந்து விட்டோம், கைவிடப்பட்டோம் என்று எண்ணத்தோன்றும். அப்படிக் கலங்கவேண்டிய அவசியமில்லை. நமக்கு ஒரு உன்னத மேய்ப்பர் உண்டு. தமது மந்தையைத் தாமே மேய்ப்பதாக அன்று யூதாவுக்கு வாக்களித்தவர் இன்றும் நமது விஷயத்திலும் வாக்குமாறாதவராகவே இருக்கிறார். சகல கட்டுப்பாடும் அவரது கரத்துக்குள் இருக்கிறதை நாம் நம்புவோமானால், எந்த நிலையிலும் நாம் அவரையே நோக்கித் திரும்புவோம். எந்தப் பாதகமான நிலைவரத்தையும் தமது ராஜ்யத்தின் மகிமைக்காக, நன்மைக்கு ஏதுவாக அவர் மாற்றிப்போடுவார்.

**'அவர் நம்முடைய தேவன், நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.'** சங்கீதம் 95:7

இன்று எனது மேய்ப்பனாக நான் யாரைக் கொண்டிருக்கிறேன்? கர்த்தர் என் மேய்ப்பர் என்று சொன்னாலும், அவர் என்னை நடத்துவதற்கு அவர் வார்த்தையின்படி நடக்க நான் தேவனிடம் திரும்பி என்னைக் கொடுத்திருக்கிறேனா? ஆண்டவரின் மந்தையில் நான் ஒரு கீழ்ப்படிவுள்ள ஆடாக இருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்டுபிடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

நவம்பர்

**18**

செவ்வாய்

வேத வாசிப்பு : சங்கீதம் 23

**'உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?' லூக்கா 15:4**

'நல்ல மேய்ப்பன்' என்ற பிரபல்யமான ஓவியத்திலே, மேய்ப்பனாக இயேசுவின் ஒரு கையில் கோல், மறு கைக்குள் ஒரு ஆட்டுக்குட்டி. அது தன் தலையை நிமிர்த்தி இயேசுவைப் பார்க்கிறது. கீழே மேய்கின்ற சில ஆடுகள் அக்குட்டியைப் பார்க்கிறதுபோல காட்சி அமைந்திருக்கிறது. அதனைப் பார்க்கும் போதெல்லாம், "அந்த ஆட்டுக்குட்டியும் என்னைப்போலவே மந்தையை விட்டுத் தொலைந்து, ஆண்டவர் தேடிப் பிடித்து, கண்டித்து அடித்ததில் அதன் காலும் ஒடிந்து.., அதுதான் தூக்கி வைத்திருக்கிறாரோ!" என்று எண்ணுவேன். என்றாலும் இயேசுவின் தோளிலே சாய்ந்திருப்பது ஒரு தெய்வீக சுகம்தான்!

ஒரு உண்மையான மேய்ப்பன், தனக்குச் சொந்தமான ஆடுகளில் ஒரு குட்டிகூட தொலைந்துபோக, அல்லது மிருகங்களால் தாக்கப்பட இடமளிக்கவே மாட்டான். மேய்ப்பனாய் தன் ஆடுகளை நேசித்த தாவீது, கர்த்தரைத் தன் மேய்ப்பராய் நினைத்து உணர்வுபூர்வமாய் பாடிய சங்கீதம், சந்ததி சந்ததியாய் உலகத்தின் கடைசிவரை மக்களால் விரும்பப்படும் ஒரு சங்கீதமாயிருக்கும் என்று தாவீதே நினைத்திருக்கமாட்டார். இந்த சங்கீதத்தில் நமது அன்றாட வாழ்வுக்குத் தேவையான சகலமும் அடங்கியிருக்கிறது. "தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு, நம்மைக் குறைவின்றித் தாங்குகிறவர்; இளைப்பாறுதலும் புத்துணர்வும், சுகமும் வழிநடத்துதலும் கொடுக்கிறவர்; நமது வாழ்வில் ஒரு நோக்கம் கொண்டிருக்கிற ஆண்டவர், நமது வாழ்வில் சோதனைகளை அனுமதித்தாலும், பாதுகாப்புக் கொடுக்கிறவர். அவருடைய உண்மைத்துவம் நம்மை நல்வழிப்படுத்துகிறது. நம்மை அபிஷேகிக்கிற தேவன் தமது உன்னத ஆசிகளால் நம்மை நிரம்பி வழியச்செய்து, நித்தியத்திலே பத்திரமாகப் பாதுகாக்கிறார்." இவற்றைவிட ஒரு மனிதனுக்கு வேறென்ன வேண்டும்? பின்னர் ஏன் நாம் முறுமுறுக்கவேண்டும். நமது மேய்ப்பருடைய சகல ஐசுவரியத்திற்கும் நாம் சொந்தக்காரராயிருக்கும்போது நாளை மாறிப்போகும் குறைவுகளில் நாம் தடுமாறலாமா! காணாமற்போன நம்மைக் தேடிப்பிடித்துத் தம்முடன் சேர்த்துக் கொண்ட ஆண்டவர் நம்மில் எவ்வளவு நேசம் வைத்திருக்கிறார்!

**'நான் காணாமற்போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டு வந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்.' எசேக்கியேல் 34:16**

இயேசுவின் மந்தையைவிட்டு நான் தவறிப்போன வேளைகள் எவை? கர்த்தரே என் மேய்ப்பர் என்று சொல்லியும், எந்தவொரு சூழ்நிலையிலும் தேவகரத்துக்குள் அடங்கி இருக்க எனக்கிருக்கும் தடைகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்காக என் மேய்ப்பரா?

நவம்பர்

**19**

புதன்

வேத வாசிப்பு : யோவான் 10:10-15

**'நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்.' ஏசாயா 53:6**

ஐயாயிரம் ரூபாய் நோட்டொன்று கைதவறி சாக்கடையில் விழுந்து விட்டால், சாக்கடையில் யார் கை வைப்பது என்று விட்டுவிட்டுப் போவோமா? இல்லை. சாக்கடைதான் என்றாலும், அந்த ரூபாய் நோட்டு என்னுடையது என்பதற்காக எந்த அழுக்கையும் தாங்கிக்கொள்ள நாம் முன்வர மாட்டோமா? இந்த ரூபாய் நோட்டுக்காக நாம் அழுக்கடையவும் தயாராய் நிற்கும்போது, நம்முடைய அக்கிரமங்களைச் சுமந்த இயேசுவை நாம் என்ன சொல்லுவோம்?

தன் மந்தையின் ஆடொன்று தொலைந்துவிட்டால், மேய்ப்பன் அதைத் தேடிக் கண்டுபிடிப்பான் என்று இலகுவில் சொல்லிவிடலாம். ஆனால் அதற்காக அவன் எத்தனை கஷ்டங்களைச் சந்திக்கவேண்டி நேரிடும் என்பதையும் சிந்திக்க வேண்டும். அப்போராட்டத்தில் அவனுக்கும் ஆபத்து வராது என்று சொல்ல முடியாது. ஆகவேதான் இயேசு, **'நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்'** என்றும், தன் மேய்ச்சலின் ஆட்டுக்கு ஆபத்து நேரிடும்போது, **'கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப் போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்'** என்றும் சொன்னார்.

நல்ல மேய்ப்பன் இயேசு நம்மை ஏதோ முட்புதரிலிருந்து தேடிக் கண்டு பிடித்தாரா, இல்லை. பாவத்தின் அழுக்குப் பிடியில் கட்டுண்டு கிடந்த நம்மைத் தம் உயிரைக் கொடுத்தே மீட்டு, தமது பிள்ளையாக்கிக்கொண்டார். ஆக, ஒரு தப்பிப்போன ஆட்டைப்போல வழிதப்பி அலைந்த நம்மை பாவத்தின் ஆளுகையி லிருந்தும், மரணத்திலிருந்தும் மீட்டுவிட்டு தமது வேலை முடிந்தது என்றிருக்க வில்லை. பாவத்தினால் அழுக்கடைந்த நம்மை அவர் சுத்திகரித்திருக்கிறார். இன்னுமின்னும் நாம் அவருக்குள் உறுதிப்பட உறுதிப்பட நாம் சுத்திகரிக்கப்படுகி றோம். இப்படிப்பட்ட ஒரு நல்ல மேய்ப்பர், நம்மைக் கண்காணித்து நடத்துகிறவர் (1பேதுரு 2:25) நமக்கிருக்கும்போது, திரும்பவும் அவரைவிட்டு உலக ஆசை களுக்குள் நாம் இழுவுண்டு செல்லுவது எப்படி? எனக்காகவும் ஒருவர் பாடுகள் அனுபவித்து, தமது ஜீவனைக் கொடுத்தாரே என்பதைச் சிந்திப்போம்.

**'அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாக ...நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.' தீத்து 2:14**

எனக்காக என் இயேசு அடைந்த அவமானங்களையும் சாவையும் அறிந்திருந் தும் அடிக்கடி நான் சறுக்குண்டுபோவது ஏன்? என் மேய்ப்பரும் கண்காணியுமான வரிடத்தில் என்னை முழுதாக ஒப்புக்கொடுக்க எனக்கிருக்கும் தடைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் யாருடைய சீஷன்?

நவம்பர்

**20**

வியாழன்

வேத வாசிப்பு : யோவான் 13:31-38

**'நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதி னால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்...' யோவான் 13:35**

மகாத்மா காந்தி அவர்கள் இயேசுவின் போதனைகளை ஏற்றுக்கொண் டாராயினும், இயேசுவைத் தன் கடவுளாக ஏற்றுக்கொள்ளாததற்கு கிறிஸ்தவர் களே காரணம் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் நடந்தது என்னவெனில், மேலைத்தேசத்திலே அவர் கிறிஸ்தவ ஆலயத்தினுள் செல்ல முயன்றபோதும், புகைவண்டியில் பிரயாணம்செய்ய முயன்றபோதும், அவர் வெள்ளை இனத்தவர் அல்லாத காரணத்தால் வெளியே தள்ளப்பட்டாராம். அவர் அறிந்திருந்த கிறிஸ்துவின் அன்பை, அவரால் கிறிஸ்தவர்களிடம் காணமுடியவில்லை.

பாவத்தில் மூழ்கிய முழு உலகமும் அன்பு ஒன்றிற்காவே ஏங்குகிறது என்பதை மறுக்கமுடியாது. பூரணத்துவம் உள்ள தேவஅன்பை விட்டுப் பிரிந்த மனிதனுடைய முதற்தேவை அன்பு. ஆகவேதான், தம்மையே கொடுக்கும்படி தேவனே மனிதனாய் வந்து, தமது ஜீவனைக்கொடுத்து, தமது பரிபூரண அன்பை வெளிப்படுத்தினார். ஆனால், மனிதனோ அந்த அன்பைத் தேடி இன்னும் அலையத்தான் செய்கிறான். ஆனால், அந்த தெய்வீக அன்பை அனுபவிக்கும் நாம் அதனைப் பிறருக்குக் கொடுக்கின்ற பொறுப்பில் இருக்கிறோம். தேவனிடத் திலும் பிறனிடத்திலும் அன்புகூருங்கள் என்பது ஏற்கனவே கொடுக்கப்பட்ட கட்டளை. ஆனால், இப்போ இயேசுவானவர், "நான் உங்களில் அன்பாயிருந் ததுபோல..." என்று ஒரு புதிய காரியத்தை நமக்குக் கட்டளையிட்டார். இயேசு நம்மில் காட்டிய அன்பு எப்படிப்பட்டது? நாம் சத்துருக்களாய் இருந்தபோதும் நம்மிடமிருந்து எதையும் எதிர்பாராது, நமக்காகத் தம்மையே கொடுத்தாரே, அதுதான் தெய்வீக அன்பு. அப்படிப்பட்ட அன்பை நாம் ஒருவரிலொருவர் காட்டும் போதுதான் நாம் இயேசுவுக்கு சீஷர்கள், அவரைப் பின்பற்றுகிறவர்கள்.

ஆனால் நாம் என்ன செய்கிறோம்? சாதாரணமாக ஒரே வீட்டுக்குள், ஒரே சபைக்குள், ஒருவரையொருவர் நேசிக்கவும், பொறுத்துக்கொள்ளவும், நமக்கு முடியாதிருக்கும்போது எப்படி கிறிஸ்துவின் அன்பை வெளிக்காட்டுவது? எப்படி நாம் இயேசுவின் சீஷரென்று சொல்லுவது? எல்லாரும் அன்பைத்தான் போதிக்கின்றார்கள். எல்லா மக்களும் சுபாவ அன்புள்ளவர்கள்தான். அப்போது நமக்கும் பிறருக்கும் ஏது வித்தியாசம்? கிறிஸ்து நம்மை நேசித்ததுபோல... இதுதான் நமக்கு அடையாளம். கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனைக் கொடுத் தார். ஆகக் குறைந்தது நாம் பிறரை வேதனைப்படுத்தாமலாவது இருக்கலாமே!

**'எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர் களாயிருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும்.' 1பேதுரு 4:8**

என்னால் அன்புகூரப்பட முடியாதவர்கள் யார் யார்? இவர்கள் விடயத்தில் நான் என்னை எவ்விதத்தில் அன்புள்ளவனாக மாற்றப்போகிறேன்? அது முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கிறிஸ்துவின் ஊழியன்

நவம்பர்

**21**

வெள்ளி

வேத வாசிப்பு : யோவான் 12:24-26, கொலோசெயர் 1:21-23

**'ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்.' யோவான் 12:26**

"ஒரு நல்ல எஜமானி கிடைப்பது பெரிய பாக்கியம். ஒரு வீட்டிற்கு வேலைக்குச் சென்றபோது, அந்த அம்மாவிடம் ஒரு வித்தியாசத்தைக் கண்டேன். அவர் சொன்னபடி செய்து, அவருடன் கூடவே இருந்து பலவற்றைக் கற்றேன். கடினமான வேலைகளையும் இலகுவாகச் செய்யவும் கற்றேன். இன்று எங்கே சென்றாலும் நல்ல வேலையாள் என்று நான் நற்பெயர் எடுப்பது அந்த அம்மா வின் வழியில் நான் தொடர்ந்து நடப்பதால்தான்" என்றாள் ஒரு பணிப்பெண்.

ஒரு சிறந்த வேலையாள் அல்லது ஊழியன் தன் எஜமான் நடக்கிற பாதையிலேதான் நடப்பான். இல்லையானால் அவன் தன் எஜமானுக்கு ஊழிய னாக இருக்கமுடியாது. தமது சீஷர்கள் நடக்கவேண்டிய ஊழியப் பாதையைக் குறித்து ஆண்டவர் கற்றுக்கொடுத்ததை வாசிக்கிறோம். எஜமானாகிய கர்த்தர் எப்படி தமது சித்தத்தை வெறுத்து, பிதாவின் சித்தத்திற்குத் தம்மை ஒப்புவித் தாரோ, அப்படிப்பட்ட அர்ப்பணமுள்ள வாழ்வையே சீஷரும் பின்பற்றவேண்டும் என்று இயேசு உணர்த்தினார். கிறிஸ்துவுக்காக வாழ்வதற்காக ஒருவன் தனது வாழ்வை 'வெறுப்பது' என்பது அவன் மரிப்பது, அல்லது தேவன் தந்த அழகிய வாழ்வை அழித்துப்போடுவது என்பது அர்த்தமாகாது. மாறாக, நாம் சாகவேண்டி நேரிட்டாலும் அது தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவே இருக்கவேண்டும் என்பதே காரியம். நம்மை மையமாகக்கொண்ட வாழ்வை விட்டுவிடவேண்டும். வாழ்ந்தால் இயேசுவுக்காய், அது எந்த நிலையில் நாம் இருந்தாலும் பரவா யில்லை. நமது பாதுகாப்பு நமது வாழ்வு என்று சொல்லி நாம் நமக்காகப் பாடுபடுவதை விட்டுவிட்டு, ஆண்டவரை சுதந்திரமாய் சேவிக்கப் பழகவேண்டும். வாழ்வின் கட்டுப்பாட்டை ஆண்டவரிடம் விட்டுவிடுகிறவன் நிச்சயம் அந்த நித்திய சந்தோஷத்தைப் பெறுவான்.

நமது எஜமானனைத் தெரிந்துகொள்ள நமக்குச் சுதந்திரம் உண்டு. நமது தெரிவு நமது முடிவை நிர்ணயிக்கும். கிறிஸ்துவைத் தன் எஜமானாகக் கொள்ளுகிறவன் கிறிஸ்துவுடனேதான் இருப்பான்; அவர் நடந்த பாதையில்தான் நடப்பான். அது சிலுவைப் பாதை. தேவனுக்கு மாத்திரமே மகிமை கொண்டு வருகிற இப் பாதை இவ்வுலகிற்கு ஒவ்வாது. அந்தக் கடின பாதையில் செல்லுகி றவனே கிறிஸ்து இருக்கும் அந்த உன்னத ராஜ்யத்தில் அவருடன் இருப்பான்.

**'அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.' வெளிப்படுத்தல் 22:4**

எனக்கு எஜமான் யார்? கிறிஸ்துதான் என் எஜமான் என்று சொல்லுகிற என்னால் இந்த உலகைத் தள்ளிவிடமுடியாதபடி எனக்கிருக்கும் பிரச்சனைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கிறிஸ்துவின் சிநேகிதன்



வேத வாசிப்பு : யோவான் 15:14 -17

**'நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.' யோவான் 15:14**

திருமண வாழ்வில் ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஒரு தம்பதியினரிடம் அவர்களுடைய சந்தோஷத்தின் இரகசியம் என்ன என்று கேட்ட போது, "கணவன் மனைவியாக இணைந்தாலும், நமக்குள் நல்ல நட்புறவை வளர்த்துக்கொண்டோம். கணவனாய் மனைவியாய் ஒருவருக்கொருவர் எதையாவது மறைக்கலாம்; ஆனால், நல்ல நண்பர்களிடம்தான் நம்மால் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ள முடியும்" என்று சொன்னார்கள்.

தேவாதி தேவன் மனுஷனாய் வந்ததே மனுஷ அறிவுக்கு எட்டாத ஒரு பெரிய அதிசயம். வந்தவர் தமக்குச் சீஷர்களையும் ஊழியர்களையும் தெரிந்துகொண்டதில் ஆச்சரியமில்லை. ஆனால், மனுஷரைத் தமது நண்பர்கள் என்று சொன்னது உண்மையாகவே நம்மால் கிரகிக்கமுடியாத ஒரு விடயம். கிறிஸ்து நமக்கு எஜமானனாய் இருப்பதால் நம்மை அடிமை என்றோ ஊழியர் என்றோ அழைப்பதே நியாயம். ஆனால் அவரோ நம்மை 'சிநேகிதர்' என அழைக்கிறார். தாம் பிதாவிடத்தில் தெரிந்துகொண்ட யாவையும் அவர் தமது நண்பர்களிடம் ஒளித்துவைக்காமல் வெளிப்படுத்திவிட்டார். தமது மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்கு ஏறுதல், பரிசுத்தாவி கொடுக்கப்படல், உலகத்தில் தமது நண்பர்களாய் வாழவேண்டிய வாழ்வுமுறை, நித்திய வாழ்வு யாவையும் இயேசு வெளிப்படையாகக் கூறிவிட்டார். அதுதான் சிநேகிதத்தின் நேசம்.

அன்று சோதோம் கொமோராவை அழிப்பதற்கு முன்பு, கர்த்தர், "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ" (ஆதி.18:18) என்றார். இந்த ஆபிரகாமின் விசுவாச வாழ்வு, 'தேவனுடைய சிநேகிதர்' என்று அழைப்புப்பெற ஏதுவாயிற்று (யாக்.2:23). ஆனால், கெத்சமெனே தோட்டத்திலே இயேசுவை வாழ்த்தி முத்தத்தால் காட்டிக்கொடுக்க வந்த யூதாஸை இயேசு, "சிநேகிதனே" என்று அழைத்தது எப்படி? (மத்.26:50). இயேசு அவனுக்கும் எதையும் மறைக்கவில்லை. அவனே தன்னைக் காட்டிக்கொடுப்பான் என்பதையும் அவனுக்கே மறைமுகமாக உணர்த்தவும் இயேசு தவறவில்லை. ஆனால், யூதாசுக்குள் வேர்கொண்டிருந்த பணஆசை நட்புக்கு துரோகம் செய்யவைத்துவிட்டது. ஆண்டவர் அவனிடம் கொண்டிருந்த நட்புறவை அவன் அவமதித்துவிட்டான்.

**'நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.' யோவான் 15:15**

கிறிஸ்து நம்மைச் சிநேகிதர் என்று அழைக்க நாம் எத்தனை பாக்கியம் பெற்றிருக்கவேண்டும்! இந்த உறவில் உண்மைத்துவமாய் ஆண்டவருக்கு நாம் உண்மையுள்ள நண்பர்களாய் இருக்கிறோமா! அல்லது, ஒரேயொரு முத்தம் கொடுத்து காட்டிக்கொடுக்கிற துரோகிகளாய் இருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் உலகத்திற்குப் பகைவன்

நவம்பர்
23
ஞாயிறு

வேத வாசிப்பு : யோவான் 15:16-25

**'...நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.' யோவான் 15:19**

புறக்கணிக்கப்பட்ட அனுபவம் உங்களுக்குண்டா? "ஏன் என்னைச் சேர்க்கமாட்டீங்க; நான் என்ன குற்றம் செய்தேன்?" நட்புக்கு ஏங்கி வருந்திக் கேட்ட குரலுக்கு நண்பன் என்று நம்பப்பட்டவன் சொன்ன பதில்: "நீ எங்களுடன் இருந்தால் நாங்கள் செய்வதை வீட்டில் சொல்லிவிடுவாய்." அவன் நல்லவன் என்பதனால் அல்ல; அந்த நல்லவனாகையால் தங்கள் தீய செயல்கள் வெளிப் பட்டுவிடும் என்பதனாலேதான் நண்பர்கள் இவனைத் தள்ளினார்கள்.

இப்பாவ உலகில், ஒளி இருள், சந்தோஷம் துக்கம், அன்பு பகை என்று எதிரும் புதிருமான பல காரியங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டே இருக் கின்றன. நம்மிலும் மாம்சமும் ஆவியும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டுதான் இருக்கிறது. இந்த ரீதியில் கடவுளுக்கும் பிசாசுக்கும் இடையில் நாம் நிற்கிறோம். கடவுளைச் சேவித்தால் சாத்தான் நம்மைப் பகைப்பான்; கிறிஸ்துவைப் பகைக் கின்ற சாத்தானையும், இவ் உலகையும் சேவித்தால் நாம் தேவனுக்குப் பிள்ளை களாக முடியாது. முதல் பெற்றோரின் முதல் பிள்ளைகள் காயீன் ஆபேல். இதில் காயீன், ஆபேலைப் பகைத்தது ஏன்? (ஆதி.4:1-16) ஆபேலின் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு காயீனுடையது தள்ளப்பட்டதால்தானே! இங்கே, ஆபேல் சிறந்த தைக் கொடுத்ததால் காயீன் கோபம் கொள்ளவில்லை; மாறாக, ஆபேலுடைய முதன்மையான காணிக்கையானது, காயீனுடையது முதன்மையானதும் சிறந்த தும் அல்ல என்பதை வெளிக்காட்டியதால்தான் காயீன் ஆத்திரமடைந்தான். இதனால் அவனுக்குள் ஒளிந்திருந்த வெறுப்பு எரிச்சல் கோபம் கொலைவெறி என்று எல்லாமே வெளிவந்தது. **'என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்'** (1யோவான் 3:13).

மனித வாழ்வுக்கென்று தேவன் வகுத்த தராதரமும் பெறுமதியும் மேன்மையானது. நாம் தேவனுக்கு ஏற்றபடி வாழும்போது, அது சாத்தானின் கேடானவற்றை வெளிப்படுத்தும். குடிகார நண்பர்கள் மத்தியில் குடியை வெறுக் கின்ற ஒருவன் இருந்தால், அவன் குடிப்பதில்லை என்பதை அல்ல, மற்றவர்கள் குடிப்பது தவறு என்பதையே சுட்டிக்காட்டும். இதனால்தான் மற்றவர்கள் இவனை வெறுக்கிறார்கள். நாம் உலகை சிநேகித்து, உலகின் இலகு வழியில் வாழ்வை ருசி பார்ப்போமானால், தேவனுக்குப் பிள்ளைகளாக இருக்கவேமுடியாது.

**'...உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கி றது.' யாக்கோபு 1:27**

நான் யாருக்கு நண்பனாக இருக்கிறேன்? தேவனைப் பிரியப்படுத்துகின்ற உத்தம வாழ்வு வாழ இவ்வுலகில் எனக்கிருக்கும் தடைகள்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே கிறிஸ்துவின் சாட்சி

நவம்பர்
**24**
திங்கள்

வேத வாசிப்பு : அப்போஸ்தலர் 1:3-14

**'பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.' அப்போஸ்தலர் 1:8**

ஒருவருக்காகச் சாட்சி சொல்லும்போது, அந்த ஒருவருக்கு நான் என்ன செய்தேன் என்பதல்ல; அந்த ஒருவர் எனக்கு என்ன செய்தார் என்பதைக் கூறுவதே சாட்சியாகும். இப்படியிருக்க, "நான் கர்த்தருக்காக இப்பணியைச் செய்ய கர்த்தர் கிருபை செய்தார்" என்று சொன்னால், சொல்லுகிறவன் எப்படி கர்த்தருக்குச் சாட்சியாவான்? மாறாக, "தமது பணியில் கர்த்தர் என்னையும் இணைத்துக்கொண்டார்" என்று சொன்னால் எப்படியிருக்கும்?

இயேசுவானவர் தமக்குச் சாட்சிகளாக தமது சீஷரை நியமித்தபோது, நீங்கள் போய் கண்டதையும் கேட்டதையும் உங்கள் இஷ்டப்படி சாட்சியாக அறிவியுங்கள் என்று அனுப்பவில்லை. கண்டதும் கேட்டதும் அனுபவித்ததுமாகிய மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் மரித்து உயிர்த்த இயேசுவின் நாமத்தினிமித்தம் பிரசங்கிக்கப்படவேண்டும் என்றும், **'நீங்களே இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்'** (லூக்.24:47,48) என்றும் சீஷர்களுக்குத் தெளிவாகக் கட்டளையிட்ட ஆண்டவர், அப்படியே அவர்களை உலகிற்குள் அனுப்பிவிடவில்லை. முதலில், **'நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும்** எருசலேம் **நகரத்தில் இருங்கள்'** என்றுதான் ஆண்டவர் கட்டளையிட்டார்.

முதலாவது, காத்திருக்கவேண்டும்; பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆவியானவர் இவர்களை பெலத்தாலும் வல்லமையாலும் நிரப்புவார்; பின்னரே புறப்பட்டுப்போய், 'இயேசுவே ஆண்டவர்' என்று சாட்சியாய் அறிவிக்க வேண்டும். இதுதான் ஒழுங்கு. பரிசுத்தாவியானவர் தருகின்ற அந்த உன்னத பெலனானது, ஒரு சாதாரண மனுஷராகிய நம்மை தைரியம், வைராக்கியம், அதிகாரம், திடநம்பிக்கை, கெட்டித்தனம் எல்லாம் நிரம்பிய ஒருவனாகப் பெலப்படுத்துகிறது. ஆகவே, பரிசுத்தாவியானவரின் இப்பெலன் இல்லாமல் எவனும் 'இயேசுவே ஆண்டவர்' என்று சாட்சி பகரமுடியாது. நாமோ தலைகீழாகவே செயற்படுவதுண்டு. நமது சொந்தப் பலத்தில் சாட்சி சொல்லி, அது சிலசமயம் தேவனுக்கு விரோதமான சாட்சியாகிவிடுவதற்கும் வாய்ப்பாகிவிடுகிறது.

**'நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.' யோவான் 15:27** நாம் இதுவரை யாருக்காக எவ்விதமாக சாட்சி சொல்லியிருக்கிறோம்? இயேசுவின் மரணத்தில் உயிர்ப்பில் ஆவியானவரின் பெலத்தில் மூழ்காமல் சொன்ன சாட்சிக்கும், தேவாவியானவரின் வழிநடத்துதலில் நாம் பகிர்ந்துகொண்ட சாட்சிக்கும் நாம் வேறுபாட்டை உணர்ந்திருக்கிறோமா? இன்று என் வாழ்வும், என் வாயின் சொற்களும் யாருக்கு நான் சாட்சி என்பதை வெளிக்காட்டுகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே ஜீவிக்கிற தேவனுக்கு சாட்சி!

நவம்பர்

**25**

செவ்வாய்

வேத வாசிப்பு : ஏசாயா 43:9-21

**'இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.' அப்போஸ்தலர் 2:32**

ஒரு கிராமத்துள் பிரவேசித்த ஒரு ஊழியர் மக்களைச் சந்தித்துப் பேசிவிட்டு, இயேசுவைக் குறித்து மெதுவாக ஆரம்பித்தார். "என்னைத் தொட்ட இயேசு உங்களைச் சந்திக்கும்படி எனக்குச் சொன்னார்" என்று அவர் சொன்னதும், ஒரு வாலிபன், "அவர் எங்கே இருக்கிறார்? உங்களைத் தொட்டவர் என்னையும் தொடவேண்டும்" என்றான். ஊழியர் பிரமித்துப்போனார்.

பிறவின மக்கள் மத்தியில் நமது வார்த்தைப் பிரயோகங்களில் கவனம் தேவை. மக்கள் இயேசுவைக் காண விரும்புகிறார்கள். ஆகக்குறைந்தது சாட்சியையாவது தேடுகிறார்கள். தேவன் இயேசுவை எழுப்பியதற்குத் தாங்கள் சாட்சி என்று அன்று பேதுரு சொன்னது உண்மை. உயிர்த்த இயேசுவை பேதுரு கண்டார். பூட்டப்பட்ட அறைக்குள் இயேசு வந்தார் என்று சீஷர் சாட்சி சொன்னதும் உண்மை. ஆனால், அந்நேரம் அங்கிருக்காத தோமா, "அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்" (யோவா.20:25) என்று சவால்விட்டான். இயேசுவோடு இருந்து, அவருடைய பாடு மரணம் உயிர்ப்பைப்பற்றி அவருடைய வாயினாலேயே பல தடவைகள் கேட்ட தோமாவே கிறிஸ்துவின் உயிர்ப்புக்குச் சாட்சி தேடினால், இந்த உலகம் நம்மைச் சும்மா விடுமா? உலகம் பொல்லாதது; அதை நாம் ஏமாற்றமுடியாது. உலகம் நம்மில் சாட்சியைத் தேடுகிறது.

**'நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்'** (ஏசா.43:12) என்று அன்று அழைப்பு விடுத்த கர்த்தர், கிறிஸ்து இன்றும் உயிரோடிருக்கிறார் என்பதற்கு நம்மையே சாட்சிகளாக வைத்துள்ளார். பவுல் எருசலேமிலே செய்த பிரசங்கத்திலே, **'நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கும் முன்பாக அவருக்குச் (கிறிஸ்துவுக்கு) சாட்சியாயிருப்பாய்'** என்று தனக்குச் சொல்லப்பட்டதாக முழங்கினார் (அப்.22:15). பவுல் இயேசுவுடன் வாழவில்லை. ஆனால், பவுலின் ஜீவியம், அவரது மரணம்கூட கிறிஸ்து ஜீவனுள்ள தேவன் என்பதற்குச் சாட்சியானது.

**'அன்றியும் அவரே(கிறிஸ்து) உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்.' அப்போஸ்தலர் 10:42.**

இன்று எனது வாழ்க்கை பேச்சு நடத்தை யாவும் கிறிஸ்து உயிருள்ள தேவன் என்றா, அல்லது செத்துப்போன ஒருவர் என்றா சாட்சி பகருகிறது? என்னைக் காண்கிறவர்கள் கிறிஸ்துவையும் அவரது காயங்களையும் என்னில் காணத்தக்கதாக எனது வாழ்க்கை இருக்கின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் ஜீவதண்ணீர் ஊற்று

நவம்பர்
26
புதன்

வேத வாசிப்பு : யோவான் 4:8-15

**'...என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.' யோவான் 7:38**

ஒரு கிராமத்தில் 52 குடும்பங்களுக்கு ஒரேயொரு குழாய்க் கிணறு. அந்த மக்களுக்குப் பல கஷ்டங்கள் இருந்தும், "எங்களுக்குத் தண்ணீர் வேண்டும்" என்ற குரல் அவர்களுடைய தாகத்தின் சோகத்தை வெளிப்படுத்தியது.

இயல்பாகவே மனிதனுடைய சரீரம், உணவும் தண்ணீரும் கேட்கும். அவனுடைய ஆத்துமா ஆண்டவரைக் கேட்கும். அப்படித்தான் தேவன் அதைப் படைத்திருக்கிறார். சரீர தாகத்தைமட்டும் அறிந்த சமாரியப் பெண் தண்ணீரைக் குறித்து அதிகம் பேசினாள். அவளைத் தங்கள் கைப்பொம்மையாகப் பாவித்த எவரும் அவளுக்குள் ஒரு ஆத்தும தாகம் உண்டு என்பதை சொல்லிக்கொடுத்த தில்லை. அவளிடம் வருகிறவர்களுக்கே தாகம் இருந்திருக்குமோ என்னமோ?

பழைய ஏற்பாட்டிலே இந்த ஆத்தும தாகம் மனுஷனுக்குள் உண்டு என்பதைக் காட்டும் பல வசனங்கள் உண்டு (சங்.42:1, ஏசா.55:1). கர்த்தரே ஜீவ ஊற்று (சங்.36:9) என்றும், அவரே ஜீவ தண்ணீரின் ஊற்று (எரே.17:13) என்றும் வாசிக்கிறோம். இந்த ஜீவத் தண்ணீரில் பருகுகிறவனுக்கு கர்த்தரைக் குறித்த தாகம் என்றும் அவிந்துபோகாது. கர்த்தரைப் புறக்கணிக்கிறவனிடத்தில் கர்த்த ரைக்குறித்த தாகமும் இராது. பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று மிகுந்த சத்தமிட்டு, தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்ற அழைப்பைக் கொடுத் தார். சமாரியப் பெண்ணிடம் ஜீவ தண்ணீரைக்கொண்டு நித்திய ஜீவனைக் குறித்துப் பேசிய ஆண்டவர், இங்கே, அருளப்படப்போகிற பரிசுத்தாவியானவரை குறிப்பிடுகிறதைக் காண்கிறோம். பரிசுத்தாவியானவரால் நடத்தப்பட ஒருவன் தன்னை ஒப்புவிக்கும்போது நித்திய வாழ்வு அவனுக்கு நிச்சயம். மேசியாவாக வந்த இயேசுவைத் தவிர, இந்த தண்ணீரை அருள யாராலும் கூடாது. ஒருவன் இத் தண்ணீரில் பருகி நிறைந்து வழியும்போது, பரிசுத்தாவியானவரின் ஊற்று, ஆவியின் கனி, தெய்வீக பண்பு அவனுள்ளிருந்து பாய்ந்தோடும் என்ற வாக்கை இயேசு தந்திருக்கிறார். இன்று அநேகர் அந்த ஊற்றண்டைக்கு வந்து தாகம் தீர்க்கும்படிக்கு, அத்தண்ணீரில் பருகுகின்ற கிருபை பெற்ற நம்மையே அந்த ஊற்றின் வாய்க்கால்களாக வைத்திருக்கிறார் ஆண்டவர். நமக்களிக்கப்பட்ட அந்தப் பொறுப்பில் நாம் உண்மையாயிருக்கிறோமா!

**'நான் அவனுக்குக் கொடுக்கிற தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்' இயேசு. யோவான் 4:14**

இன்று எனக்குள்ளிருக்கும் ஊற்று எது? தேவஅன்பின் ஊற்றா? பிசாசின் கசப்பின் ஊற்றா? எனக்குள் பரிசுத்தஆவியானவர் வாசம்பண்ணுவது உண்மைதானா? அப்படியென்றால் எனக்குள்ளிருந்து அப்பப்போ கசப்பு வெளிவருவது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியானவர் தங்கி வாழும் ஆலயம்

நவம்பர்

27

வியாழன்

வேத வாசிப்பு : 1கொரிந்தியர் 6:13-20

**'உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக் கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?' 1கொரிந்தியர் 6:19**

வாடகை வீட்டிற்குக் குடிவந்தவர்கள், தங்கள. இஷ்டப்படி சுவர்களில் ஆணிகளை அடித்து, மாற்றமுடியாத பல மாற்றங்களைச் செய்து வீட்டை அலங் கோலப்படுத்தினால் சொந்தக்காரன் விடுவானா? வீட்டைவிட்டுப் புறப்படும்படி சொல்லமாட்டானா? சமீபத்தில் இப்படியொரு சம்பவத்தை நேரில் கண்டேன். அப்போது, நாமும் வேறொருவருக்குச் சொந்தமான வீட்டில், அவரோடுகூடவே தானே வாசம்பண்ணுகிறோம் என்ற எண்ணம் உண்டானது. இன்று நான் குடியிருக்கும் இந்த சரீரம் என் சொந்தம் அல்ல; இது ஆண்டவருடையது.

என் சரீரம், என் வாழ்வு, என் விருப்பம், என் உரிமை என்று பலர் சொல் லக்கூடும். இதுதான் சுதந்திரம், விடுதலை என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் சுயஇச்சையால் பிடிக்கப்பட்டவர்கள். பாவத் தில் கிடந்த நாம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் என்றும், அதனால் நாம் நமக்குச் சொந்தமல்ல என்றும் நாம் நன்கு அறிந்தவர்கள். முன்னர் பாவத்திற்கு அடிமையாயிருந்து, இப்போது கிறிஸ்துவின் இரத்தமாகிய விலைக்கிரயத்தால் மீட்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட நமது சரீரமும் நமது ஆத்துமாவும் மீட்டவருக்குத் தானே சொந்தமாகமுடியும்! எப்பொழுது கிறிஸ்து நம்மை மீட்டெடுத்தாரோ, அப்போதே பரிசுத்தஆவியானவர் நமக்குள்ளே வந்து வாசம்பண்ணி நம்மைப் பொறுப்பெடுக்கிறார். ஆக, இப்போது நமது சரீரம் நமக்குச் சொந்தமல்ல! கிறிஸ்துவுக்கே சொந்தம். தூயஆவியானவர் வாசம்பண்ணும் இந்த சரீரத்தை நமக்கு இஷ்டப்படி, நாம் வகுக்கும் வழிகளின்படி எப்படி வாழமுடியும்?

அடுத்தது, நமது சரீரம் பரிசுத்தஆவியானவர் தங்கி வாழும் ஆலயம் போலவே, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையும் தேவன் தங்கி வாழும் ஆலய மாக இருக்கிறது. கிறிஸ்து தமக்கென்று ஏற்படுத்திய திருச்சபையானது, தன்னுள் தூயாவியானவர் வாழுகின்ற அந்த இடத்தில் பிசாசின் ஆவியை இருத்துவது எப்படி? ஆவியானவரும் சாத்தானும் ஒரே இடத்தில் இருக்கமுடியாது? பின்னர், இயேசு வாழும் இல்லம் என்று சொல்லிக்கொண்டு பிரிவினை, தர்க்கம், கோபம் என்றும் மேலும் பல பாவங்களுக்கும் திருச்சபை இடமளிப்பது எப்படி?

**'ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.' 1கொரிந்தியர் 3:17**

எனக்குச் சொந்தமில்லாததில் நான் சொந்தம் கொண்டாடுகிறேனா? என் சரீரமும், நான் அவயவமாயிருக்கிற என் திருச்சபையும் தேவாவியானவர் தங்கி வாழுகின்ற ஆலயமாக சாட்சி பகருகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கிறிஸ்துவின் சரீரம்!

நவம்பர்

28

வெள்ளி

வேத வாசிப்பு : எபேசியர் 1:17-23

**'நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங் களாயுமிருக்கிறீர்கள்.'** 1கொரிந்தியர் 12:27

காலில் சின்ன விரலின் நகம் கல்லில் மோதுண்டு தாக்கப் பட்டால் என்னவாகும்? நடை நிற்க, முழு உடலும் நோவெடுக்க, வாய் 'ஐயோ' என்று ஓலமிட, கை கல்லைத் தூக்கி வீசிவிட்டு நகத்தைத் தடவிக்கொடுக்க, மொத்தத்தில் முழு சரீரமும் துடி துடித்துப்போகிறது. இது எப்படி? இதற்குக் காரணம், நமது தலையும் அதனுள் உள்ள கட்டுப்பாட்டு நிலையமும்தான்.

கிறிஸ்து இன்றும் உலகில் வாழுகிறார் என்பதற்கு அவரைத் தலையாக கொண்ட திருச்சபையாகிய அவருடைய சரீரமே சாட்சி. சபைக்கும் கிறிஸ்து வுக்குமுள்ள தொடர்பையும், சபையின் அவயவங்களாகிய நமக்குள் இருக்க வேண்டிய ஒருமைப்பாட்டையும் குறித்தும் பவுலடியார், நமது சரீர அமைப்பைக் கொண்டே அழகாக விளக்கிவைத்துள்ளார். **'எல்லாவற்றையும் எல்லாவற்றா லும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற் றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'** (எபே.1:23) கடவுள் மனிதனாகி, பல பாடுகள்பட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து, விலா எலும்பு குத்தப்பட்டு மரணம் நிரூபிக்கப்பட்டு, அடக்கம்பண்ணப்பட்டு, மரித்தோர் ஸ்தானத்திற்கு இறங்கி, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, நாற்பதாம் நாள் பரத்துக்கேறி, பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்தாவியானவர் அருளப்பட்டு உருவாகியது தான் 'திருச்சபை'. கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுத்திராவிட்டால் இன்று திருச்சபை இல்லை. ஆக, இத்திருச்சபைக்கு கிறிஸ்துவே தலையானார். அப்போ சரீரம் யார்? கிறிஸ்துவின் விசுவாசக்கூட்டத்தார் கூடிவருவதுதான் சபை என்றால், சபைக்கு கிறிஸ்து தலையானால், சரீரம் நாமல்லவா? நாம் என்றால் நான் ஒரு வனா? இல்லையே! விசுவாசக் கூட்டத்தார் அனைவருமே. ஆகவே, அந்த சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களும் நாமேதான் என்பது புரிகிறது.

ஆக, சரீரம் யாருக்குக் கட்டுப்படவேண்டும்? தலையைத் தவிர வேறு யாருக்கு? இன்று திருச்சபையின் சரீரமாயிருக்கிற நாம் யாருக்கு அல்லது எதற்குக் கட்டுப்படுகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும், அவர் நம்மேல் பாராட்டிய கிருபையும் நம்மை அவரது சரீரமாக உயர்த்தியிருக்க, சரீரம் தலைக்குக் கட்டுப்படாமல் புண்பட் டால், அதன் நோவு யாரைப் பாதிக்கிறது? கிறிஸ்துவை அல்லவா! இது தகுமா?

**'அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.'** கொலோசெயர் 1:18

நான் ஆராதிக்கும் சபை கிறிஸ்துவின் சரீரமாக சாட்சி பகருகிறதா? சபையை நோகடிப்பது என்பது, கிறிஸ்துவை நோகடிப்பது என்றால் இது எப்படி? அந்த சாட்சிக்கு அவயவமான நான் எவ்விதத்திலாவது பங்கம் விளைவிக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையாகிய சரீரத்தின் அவயவம்

நவம்பர்
**29**
சனி

வேத வாசிப்பு : 1கொரிந்தியர் 12:12-31

**'அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.'** எபே 4:16

"கண்ணாடி போடுவதற்கு மூக்கும் காதும் மறுத்துவிட்டால் கண் எப்படிப் பார்க்கும்?" இப்படியாக சபை ஒற்றுமையைக் குறித்து முழக்கினார் பிரசங்கியார். சபையிலிருந்து எழுந்தது ஒரு குரல். "அப்படி மறுத்தால் இருக்கவே இருக்கிறது 'contact lens.' விபத்திலே வெட்டுண்ட தன் கையை எடுத்துக்கொண்டு பல மைல்கள் ஓடி, வைத்தியர்கள் உதவியுடன் அதைப் பொருத்திக்கொண்ட ஒருவரிடம், 'இது எப்படி உங்களால் முடிந்தது' என்று கேட்டபோது, "இது என் கை ஐயா" என்றாராம். சம்பவத்தை நாம் பத்திரிகையில் வாசித்திருக்கிறோம்.

சிறிதும் பெரிதும் பலதரப்பட்ட பணிபுரிகிறதுமான பல அவயவங்களை ஒன்றுகூட்டி, உணர்வு நரம்புகளாலும் இரத்தக் குழாய்களினாலும், தசைநார் களாலும் ஒன்றிணைத்து சரீரத்தைப் படைத்து, அதைத் தலையோடு இணைத்து, அதன் மூலமாக பின்னால் வரும் சபையையும், அதன் தலையாக கிறிஸ்துவும், சரீரமாக சபையும், அவயவங்களாக நாமும் இருப்போம் என்பதை அந்தப் படைப்பிலேயே வெளிப்படுத்திய தேவஞானத்தின் முன் தலைவணங்குவோமாக. சிறிதோ பெரிதோ நமது சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும், விரலிலுள்ள நகம் கூட நமக்கு முக்கியம். அதேபோல கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவய வங்களும் வேறுபட்டவை, வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டவை. ஆனால், சரீரம் முழுமையாக இயங்குவதற்கு எல்லா அவயவங்களும் தேவை. ஒவ்வொருவருக்கும் ஏதோவொரு திறமை உண்டு. அதைக் கண்டுகொண்டு பயன்படுத்துவது முழுச் சபையினதும் கடமை. அதேபோல, ஒருவன் பெலவீனப் பட்டால், உடைந்துபோனால் அவனை வெட்டிப்போடாமல், தாங்கி நிமிர்த்தி, பெலவீனத்தைச் சுட்டிக்காட்டி வெட்கப்படுத்தாமல் அன்பினால் வென்று வெற்றி நடை போடுமானால், அதுதான் சபையும், சபை வளர்ச்சியும் ஆகும். மாறாக, அவயவங்கள் ஒன்றுக்கு விரோதமாக ஒன்று போரிட்டால் அதன் வேதனை கிறிஸ்துவுக்குத்தான். நாம் ஒருவனை நோகடிக்கும்போது கிறிஸ்துவே வேதனைப்படுகிறார்.

**'ஆதலால், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.'** 1கொரிந்தியர் 12:26

திருச்சபையில் நான் எந்த அவயவமாய் இருக்கிறேன்? எனது திருச்சபையில் நான் யாருடனாவது மனக்கசப்பில் இருக்கிறேனா? ஏன் என்னால் மற்றவரைப் பொறுத்துக்கொள்ள முடியாதிருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவன்

நவம்பர்
**30**
ஞாயிறு

வேத வாசிப்பு : எண்ணாகமம் 6:22 - 27

**'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.'** எபேசியர் 1:3

"வைத்தியசாலைக்கு அவசரமாகச் செல்லவேண்டியிருந்ததால் ஞாயிறு ஆராதனை முடியுமுன்பே வந்துவிட்டேன்" என்றார் ஒரு விசுவாசி. "சென்ற கிழமை, 'வழுவாதபடி உங்களைக் காக்கவும்...' என்று போதகர் வழமையைவிட அற்புதமாக அளித்த ஆசீர்வாதத்திற்கு நிற்காததால்தானோ சென்ற கிழமை நீர் வழுக்கி விழுந்து, இப்போது ஆஸ்பத்திரிக்கு அலைகிறீர்?" என்றார் மற்றவர்.

வனாந்தரத்திலே அலைந்து திரிந்த இஸ்ரவேலர் தேவனுடைய துணையின்றி வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை தம்மால் நெருங்க முடியாது என்பதை அறிந்திருந்தனர். தங்கள் அடிப்படைத் தேவைகளான உணவு, தண்ணீர், பாதுகாப்புக்காக தேவனையே நோக்கிப் பார்க்க நேர்ந்தது. ஆனால், வாழ்வுக்குரிய ஒழுங்குகளையும் பிரமாணங்களையும் அளித்த தேவன், உணவும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பெலப்படுத்தவும் தவறவில்லை. இன்றைய வாசிப்புப் பகுதியிலே, இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பது எப்படி என்று கர்த்தர் மோசேக்குக் கற்றுக்கொடுத்ததை வாசிக்கிறோம். ஆக, ஆசீர்வதிப்பது தேவ சித்தம். அடுத்தது, அவர் என்ன சொல்லுகிறார்: கர்த்தர் காக்கிறவர்; கர்த்தர் கானானுக்கு வழிநடத்தும்படி கிருபையாய் இருக்கிறார்; அவரே சமாதானம் அருளுகிறவர். பாதுகாப்பு, கிருபை, சமாதானம் இவற்றின் ஊற்றான தேவன் கூடவே இருப்பதே மேலான ஆசீர்வாதம். இவையின்றி அவர்கள் கானானைச் சேர்ந்திருக்க முடியாது.

இது இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல, நமக்குந்தான். இந்தப் பகுதியிலே 'உன்னை, உன்மேல்' என்று ஆறு தடவைகள் கூறப்பட்டுள்ளது. ஆகவே, பரம கானானை நோக்கிப் பயணிக்கும் நாமும் இதனைச் சுதந்தரிக்கலாம். யூதாவும் இதனையே குறிப்பிட்டுள்ளார். நம்மைக் காக்கவும், தமது சந்நிதானத்தில் மாசற்றவர்களாய் நம்மை நிறுத்த கிருபையாயும், மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் அருளுகிறவருமாகிய தேவன் நம்மோடிருப்பதே உலகம் என்ற வனாந்தரப் பாதையில் பயணிக்கும் நமக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைத் தருகிறது.

**'வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், அவர் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.'** யூதா 24,25

தேவஆசீர்வாதம் என இதுவரை நாம் நினைத்திருந்தது என்ன? பாதுகாப்பிற்காக சமாதானத்திற்காக யாரை நாடுகிறோம்? ஏற்கனவே சகல ஆசீர்வாதத்தாலும் ஆசீர்வதிக்கப்பட்ட நான் ஏன் தடுமாறுகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் சிந்தை

டிசம்பர்

1

திங்கள்

வேத வாசிப்பு : பிலிப்பியர் 2:1 -5

'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது.' பிலிப்பியர் 2:5

மீண்டுமாக ஒரு வருடத்தின் கடைசி மாதத்தில் வந்து நிற்கிறோம். ஆனாலும், இது வருடத்தின் கடைசிமாதம் என்ற நினைவிலும் பார்க்க, கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்யவேண்டிய மாதம் என்ற நினைவுதான் அநேகரின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் என்பது உண்மை. வருடந்தோறும் கிறிஸ்மஸ் வந்துகொண்டேதான் இருக்கிறது. நாமும் வருடந்தோறும் தவறாமல் கிறிஸ்மஸ் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் கிறிஸ்மஸ் என்பது என்ன? ஏன் கொண்டாடுகிறோம்? இதற்கும் கிறிஸ்துவுக்கும் என்ன சம்மந்தம்? இவற்றுக்குப் பதில் நமக்குத் தெரியும். ஆனால் நாம் இவற்றைக் குறித்து அதிகம் சிந்திக்கிறோமா?

கிறிஸ்மஸ் கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் நாள். பாவத்தில் மாண்டுகொண்டிருக்கும் மானிடரை மீட்பதற்காய் பரலோகத்தின் தேவன் மானிடனாய் இவ்வுலகில் வந்ததை நினைவுகூரவே கிறிஸ்மஸ் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்மஸ் என்றதும் நாம் கிறிஸ்துவைக் குறித்துச் சிந்திப்பதிலும் பார்க்க, கொண்டாட்டத்தையும், அதற்கான ஆயத்தங்களையும், கடந்த வருடத்தைவிட இவ்வருடத்தில் இன்னும் எவ்வளவு சிறப்பாகச் செய்யலாம் என்றும் சிந்திப்பதுமே எமது வழமையாகிவிட்டது. ஆனால் எத்தனை தடவைகள் நாம் நத்தாரை கொண்டாடியும், எமது சிந்தை கிறிஸ்துவின் சிந்தையாய் மாறவில்லையே, அது ஏன்? கிறிஸ்துவையே சிந்திக்க நேரமற்ற நமது சிந்தை எப்படி கிறிஸ்துவின் சிந்தையாக மாறக்கூடும் என்று சிந்தித்துப் பாருங்கள்!

அப். பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது "கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" என்கிறார். இவ்வசனத்துக்கு முந்திய வசனத்தில் "அவனவன் தனக்கானவைகளையல்ல. பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" என்கிறார். ஆம், ஆண்டவர் தனக்காக அல்ல, எமக்காகவே சகலவற்றையும் செய்து முடித்தார். அவரது சிந்தை ஒரு தன்னலமற்ற சிந்தை. அவர் இவ்வுலகிற்கு வந்தது எமக்காகவே. இவ்வுலகில் இருந்த காலங்களில் சுயநலமில்லாமல் மற்றவர்களுக்காகவே சகலவற்றையும் செய்தார். அவர் எமக்காக சிலுவையில் அறையுண்டு எமக்காக உயிர்த்தெழுந்து இன்றும் எமது கூப்பிடுதலுக்குச் செவிகொடுக்கிறவராய் இருக்கிறார். அவரது சிந்தை ஒரு சுய நலமற்ற சிந்தை. அவரது சிந்தை எம்மில் உருவாகவேண்டுமெனில் எமது சுயம் சாகவேண்டும். எமது சுயம் சாகவேண்டுமெனில் எம்மை ஆண்டவர் கையில் முழுமையாக ஒப்புக்கொடுக்கவேண்டும். எம்மில் அவர் வாழவேண்டும். அப்போ எமது சிந்தையும் அவரது சிந்தையாய் மாற ஆரம்பிக்கும்.

சென்ற ஆண்டு கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்திற்கும் இவ் வருடக் கொண்டாட்டத்திற்கும் என் குடும்பத்தில் ஏதேனும் வித்தியாசம், அல்லது முன்னேற்றம் உண்டா? இந்த ஆண்டிலே, கிறிஸ்மஸ் தினத்திலே எனக்கானவையைவிட்டு பிறனுக்கானவையை நோக்கும்படி நான் என்ன செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவைக்காகப் பிறந்தவர்

டிசம்பர்

**2**

செவ்வாய்

வேத வாசிப்பு : பிலிப்பியர் 2:6-11

**'...சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்.' பிலிப்பியர் 2:8**

உலகத்திலே பிறக்கும் எவருக்குமே ஒருநாள் மரணம் நிச்சயம். ஆனாலும் எவருமே பிறக்கும்போது, 'நான் மரிப்பதற்குத் தான் பிறந்திருக்கிறேன்' என்று நினைப்பதில்லை. மரணம் எம்மை நெருக்கிப் பிடிக்கும் வரையிலும், நாம் வாழுதற்கே பிறந்தவர்களாகவே எம்மைக் குறித்து நினைத்துக்கொள்வதுண்டு. ஆண்டவராகிய கிறிஸ்துவோ, பிறக்கும்போதே, தனது வாழ்வில் பிதாவின் சித்தம், 'தனது சிலுவை மரணமே' என்பதை அறிந்த வராக, உணர்ந்தவராக பிறந்தார். அவர் சிலுவையின் மரணபரியந்தமும் பிதா வின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தவராகி வாழ்ந்தார். தனது பன்னிரண்டாவது வயதில் எருசலேம் தேவாலயத்தில், போதகர்கள் நடுவில் அவர் பேசிக்கொண்டி ருந்தபோது, அவரது தாய், தந்தை அவரைக் காணாமல் தேடிவந்தனர். அப்பொழுது அவர் அவர்களுக்குக் கொடுத்த பதில், "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கு அடுத்த வைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?" என்பதே. சிறுவயது முதலே அவர் பிதாவின் விருப்பத்தையும், அவர் நிறைவேற்றவேண்டிய பணியையும் தொடர ஆரம்பித்துவிட்டார். எல்லா வற்றிற்கும் மேலாக தனது பாடுகளும், மரணமும் பிதாவின் அநாதி திட்டம் என்பதை அவர் உணர்ந்து வாழ்ந்தார்.

எமது வாழ்விலும், ஒவ்வொருவருக்கும் தேவன் ஒவ்வொரு திட்டத்தை வைத்திருக்கிறார். நாம் ஏனோதானோவென்று வாழவோ, அல்லது பிறந்தோம், வாழ்ந்தோம், மரித்தோம் என்று இருக்கவோ உருவாக்கப்படவில்லை. எமது வாழ்வுக்கும் தேவன் ஒரு பெரிதான நோக்கத்தை வைத்திருக்கிறார். அந்த நோக்கம் என்னவென்பதை அறிந்து வாழ நாம் பிரயாசப்படுவதுண்டா? நமது ஆண்டவர் எமது வாழ்வுக்கு வைத்திருக்கும் அந்த உன்னதமான திட்டத்தை அறிந்து அதற்கிசைந்து வாழ நாம் என்றைக்காவது வாஞ்சித்ததுண்டா? தேவ திட்டத்தின்படி வாழவேண்டுமானால் முதலாவது, எம்மை அவர் கைகளில் முற்றிலுமாக அர்ப்பணிக்கவேண்டும். பவுலைப்போல, **'இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'** (கலா.2:20) என்று நாமும் அறிக்கை யிடக்கூடியதாக இருக்கவேண்டும். தன் விருப்பம்போல வாழ்ந்து கொண்டிருந்த பவுல் தேவனால் தொடப்பட்டபோது, **'எனக்கு லாபமாய் இருந்தவைகளை கிறிஸ்துவுக்காய் நஷ்டம் என்று எண்ணுகிறேன்'** (பிலி.3:7) என்று சொன்னாரே; அது எப்படி அவரால் கூறக்கூடியதாய் இருந்தது? அவர் தன்னை கிறிஸ்துவுக் காக, அவரது பணிக்காய் முழுமையாய் அர்ப்பணித்திருந்தார். நாம் இரட்சிக்கப் பட்டு விட்டோம், நாமும் அவரது பிள்ளைகள்தான் என்று சொல்லிக்கொண்டி ருக்கும் நாம் எங்கே நிற்கிறோம்?

தேவசித்தத்திற்கு எமது வாழ்வைத் தத்தம்செய்து அவர் பணி செய்ய எமக்கு இருக்கும் தடைகள் என்ன? "என் சித்தமோ ஒன்றும் வேண்டாம் என் பிரியனே என் நேசரே" என்று பாடுகிற நாம் அப்படியே ஒப்புக்கொடுத்திருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயமானவர்

வேத வாசிப்பு : சங்கீதம் 78:1-12

**'உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்று மில்லை.'** எரேமியா 32:17

**'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர்'** (ஏசா.9:6). நமது ஆண்டவரின் நாமங்களில் ஒன்று அதிசயமானவர். ஆம், அவர் அதிசயங்களின் தேவன்.

எம்மோடு நாளாந்தம் பழகுபவர்கள் அல்லது குடும்ப அங்கத்தினரைக் குறித்து நாம் குறிப்பிட்டுச் சொல்லும்போது, இவர் மிகவும் அன்பானவர், அல்லது, இவருக்குப் பாட்டு என்றால் மிகவும் பிடிக்கும்; அல்லது அடிக்கடி கோபம் வரும்; இப்படியாக பல காரியங்களை நாம் சொல்லுவதுண்டு. அதே போல் தேவனைக்குறித்து எண்ணும்போது எமது மனதில் எழுகின்ற முதலாவது காரியம் என்ன? பலசமயங்களில், அவர் எமக்கு அதிசயமான தேவனாக இருந்திருக்கிறார். அவரது அதிசயமான வழிநடத்துதலை, அதிசயமான அற்புதங்களை, அதிசயமான மீட்பை, அதிசயமான காரியங்களான பலவற்றை எமது வாழ்வில் நாம் ருசி பார்த்திருக்கிறோமா?

எகிப்திலே அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் மக்களை, அடிமைத் தனத்திநின்று அதிசயமாய், அற்புதமாய் வழிநடத்திய தேவனின் வல்ல செயல் களை நாம் யாத்திராகமம் புத்தகத்தில் வாசிக்கலாம். ஆனால், இஸ்ரவேலரோ எகிப்தைவிட்டுப் புறப்பட்ட மாத்திரத்தில் எல்லாவிதமான அதிசயங்களையும் ஒரு நொடிப்பொழுதில் மறந்து தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களது சுயதேவைகள் வரும்போது, தேவன் செய்த அதிசயங் களைவிட அவர்களுக்கு அவர்களது தேவைகள்தான் முக்கியமாகப்பட்டது.

இன்று எமது வாழ்விலும் ஆண்டவர் எத்தனையோ அதிசயங்களைச் செய்திருக்கிறார். எத்தனையோ இக்கட்டுகளில் நம்மைத் தப்புவித்து அதிசய மாய் வழிநடத்தி வந்திருக்கிறார். ஆனால் எமக்குக் கஷ்டங்களும், தேவை களும் திடுதிடுவென்று வந்து எம்மைத் திக்குமுக்காடச் செய்யும்போது எல்லா விதமான அதிசயங்களையும் மறந்து, அதிசயமான தேவனையும் மறந்து, முறுமுறுக்கவும், தேவனைச் சபிக்கவும், தேவனுக்குக் கண்ணில்லையா என்று கேள்வி கேட்கவும் ஆரம்பித்து விடுகிறோமா?

நமக்கு ஒரு பாலகன் கொடுக்கப்பட்டார், அவர் அதிசயமானவர். தேவாதி தேவனாகிய அவர் ஒரு மனுஷனாய் வந்து பிறந்ததே ஒரு பெரிய அதிசயம் அல்லவா! அவரை அண்டிக்கொண்டு வாழ்ந்தால் எமது வாழ்வை அவர் அதிசயமாய் வழிநடத்துவார். அவரது அதிசயங்களை தொடர்ந்தும் நம் வாழ்வில் ருசிபார்க்கிறவர்களாக நாம் இருப்போமா?

இதுவரை நமது வாழ்வில் தேவன் செய்த அதிசயங்களைக் குறித்து நாம் திரும்பிப் பார்த்ததுண்டா? கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்போது, நாம் முறுமுறுத்த சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக் கர்த்தர்

டிசம்பர்

4

வியாழன்

வேத வாசிப்பு : சங்கீதம் 32:1-11

**'உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.' சங்கீதம் 32:8**

**'அவர் நாமம் ஆலோசனைக் கர்த்தர்'** (ஏசா.9:6). நமது வாழ்வில் ஏதாவது பெரிய பிரச்சினைகள் எழும்பும்போது, குடும்பத்தில் சண்டைகள் எழும்பும்போது, அல்லது ஒரு முக்கியமான தீர்மானம் எடுக்கும் முன்பு, சிலர் ஆலோசகர்களை நாடிப்போவதுண்டு. இரு கண்களும் தெரியாத ஒரு குருடன், எந்தப்பக்கம் போவதென்று தெரியாமல் நடுச்சந்தியில் தடுமாறிக்கொண்டிருந்தானாம். ஒருவர் அவனருகில் சென்று எங்கே போக வேண்டும் என்று கேட்டு, கரங்களைப் பிடித்து, அழைத்துச் சென்றால், அந்தக் குருடனுக்கு அவர் யார்? ஆலோசனை தந்து வழிகாட்டும் வழிகாட்டிதானே!

எமது வாழ்க்கையிலும் பல தடவைகளில் நாம் தடுமாறிப்போவதுண்டு. எல்லாப் பக்கங்களும், இருண்டுபோய் கிடக்கும்போது எப்பக்கம் செல்வதென்று திசை தெரியாமல் திணறிப்போகும் சந்தர்ப்பங்களும் உண்டு. அந்த நேரங்களி லெல்லாம் நாம் யாரை நோக்கி எம் கண்களைத் திருப்புவது? எமக்கு ஆலோச னைக் கர்த்தர் உண்டு என்பதை நாம் நினைத்து அவரிடம் திரும்பியதுண்டா? அழகான ஒரு பாரம்பரியப் பாடலின் வரிகள் இவ்விதமாக எழுதப்பட்டுள்ளது. "விண்ணொளியே நள்ளிருட்டில் என்னை நடத்துமே, ஓர் அடிதான் உம்மிடம் நான் கேட்பேன். தூரக்காட்சி காட்டும் என்று சொல்லேன்." எமது வாழ்க்கைப் பாதையில், எம்மைக் கரம் பிடித்து எம்மீது தமது கண்ணை வைத்து எமக்கு ஆலோசனை தரும் ஆண்டவர் உண்டு என்பதே எமது நம்பிக்கையாகட்டும். ஏனெனில் அதுவே சத்தியம்.

**'பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே'** (ஏசா. 48:17). தேவன் எப்படி எமக்கு ஆலோசனை கொடுக்கிறார், எப்படி நம்மை நடத்துகிறார்? அவரது வார்த்தைகள் மூலமாகவே நடத்துகிறார். நாம் அவற்றை அனுதினமும் தியானித்துப் படித்தால் அவர் நம்மை வழிநடத்துவதை நம்மால் உணரமுடியும். **'உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோச னைக்காரருமாயிருக்கிறது'** (சங்.119:24). இச் சங்கீதத்தை எழுதியவருக்கு, தேவ னுடைய சாட்சிகள் ஆலோசனைக்காரராய் இருந்திருக்குமேயானால் எமக்கு ஏன் அவைகள் ஆலோசனைக்காரராய் இருக்கக்கூடாது?

நமக்கு ஒரு பாலகன் கொடுக்கப்பட்டார் அவரே ஆலோசனைக் கர்த்தர்; அவரை, அண்டினால் ஆலோசனை தராமல் போவாரா? அவர் எம் பக்கத்தில் இருந்தால் எமக்கு விரோதமாய் இருப்பவர் யார்? கர்த்தரை தனக்கு ஆலோசனைத் தருபவராய் கொண்டிருக்கும் மனுஷன் பாக்கியவான். நீங்கள் யாரை ஆலோசனைக்காரராய் கொண்டுள்ளீர்கள்!

மனுஷ ஆலோசனையை நாடி துவண்டுபோன வேளைகளை நினைத்து பார்க்கி றேனா? அல்லது "உன் மீது என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" என்ற வார்த்தையை நான் அனுபவித்துப் பார்த்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமையுள்ள தேவன்

டிசம்பர்

# 5

வெள்ளி

வேத வாசிப்பு : சங்கீதம் 29:1-11

**'உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.' (2நாளாகமம் 20:6)**

**'அவர் நாமம் வல்லமையுள்ள தேவன்'** (ஏசா.9:6). நாம் ஆராதிக்கும் தேவன் வல்லமையுள்ளவர் என்பதை நாம் உணர்ந்தவர்களாய் அவரை ஆராதிக்கிறோமா? அவரால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை. அவரோடு ஒருவரும் எதிர்த்து நிற்கவும் முடியாது. 29ம் சங்கீதத்திலே அவருடைய சத்தம் எவ்வளவு வல்லமையுள்ளது என்பது விபரிக்கப்பட்டுள்ளது. இப்பேர்ப்பட்ட ஆண்டவரை எமது இரட்சகராக கொண்டிருப்பது எப்பேர்ப்பட்ட பாக்கியம். இதை நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா?

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் மூன்று வாலிபரும், ராஜா உருவாக்கிய பொற்சிலையை வணங்காததினால் அக்கினிச் சூளையிலே போடப்படவேண்டும் என்று ராஜாவினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தாம் ஆராதிக்கிற வல்லமையுள்ள தேவனை நினைத்து பார்த்து, அவரால் எல்லாமே கூடும் என்பதை தங்கள் வாழ்க்கையில் அனுபவரீதியாக அவர்கள் உணர்ந்திரா திருந்தால், இப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் கர்த்தருக்காய் உறுதியாக தீர்மானம் எடுக்க முடிந்திருக்குமோ? அவர்கள் தமக்கு முன்னிருந்த உபத்திரவத்தைக் கண்டு பயப்படவில்லை. அவர்கள் கண்கள் வல்லமையுள்ள தேவனையே நோக்கிப் பார்த்தது. அவர்கள் ராஜாவைப் பார்த்துக் கூறியது என்ன? **'நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார், அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.'** (தானி.3:17).

எமது வாழ்விலும் பிரச்சினைகள், துன்பங்கள் வரும்போது, தேவன் அதிலிருந்து எம்மை விடுவிப்பார் என்று விசுவாசித்து ஜெபிப்பதுண்டு. ஆனால் தற்சமயம் நாம் நினைத்தபிரகாரம் காரியம் ஆகவில்லையாயின், ஆண்டவர்மீது கோபப்படுவதும், அவர் ஏன் எனக்கு இப்படிச் செய்தார் என்று விசனமடைவதும், அவர் வல்லமையைக் குறித்து சந்தேகம் கொள்வதுமுண்டு. ஆனால், இந்த வாலிபர்களின் கூற்றோ சற்றே வித்தியாசமானதாய் இருந்தது. **'...நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை என்பது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்'** (தானி.3:17,18). எமது வாழ்வில் நடக்கும் காரியங்களைக் குறித்து நாம் அவரது வல்லமையையும், மகிமையையும் எடைபோட்டுவிட முடியாது. அவரது வல்லமை அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. நமக்கொரு பாலகன் பிறந்தார் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதை மறவாதிருப்போம்.

தேவனுடைய வல்லமை நம் வாழ்வில் வெளிப்பட்ட சந்தர்ப்பங்களை நினைந்து பார்ப்போம். அந்த வாலிபர்களைப்போல நம்மால் சூளுரைக்கமுடியுமா? தேவ வல்லமை என் வாழ்வில் வெளிப்பட நான் என்ன செய்யவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய பிதா

டிசம்பர்

6

சனி

வேத வாசிப்பு : மத்தேயு 7:7-11

**'...அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.'** (யோவான் 1:12)

**'அவர் நாமம் நித்திய பிதா'** (ஏசா.9:6). கடவுள் என்றால், அவர் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர் என்றும், எம்மை ஆட்டிப்படைக்கும் ஒரு சக்தி என்றும், நாம் அவருக்கென்று காரியங்களைக் கிரமமாய்ச் செய்தால், அவரும் எமக்குப் பதில் செய்வார் என்றும் பலவிதமான கருத்துக்கள் உலா வருகின்றன. அப்படியிருக்க, எமது ஆண்டவர் அதிசயமான, வல்லமையுள்ள, ஆலோசனைக் கர்த்தரான தேவன் மாத்திரமல்ல, எமக்கு அருகில் இருக்கும் அன்பான தந்தையுமாயிருக்கிறார் என்பது ஆச்சரியமான காரியம் அல்லவா. அவரை நாம் விசுவாசித்து, ஏற்றுக்கொண்டால், அந்த நிமிஷமே நாமும் அவரது பிள்ளைகள், அவர் நமது நித்திய பிதா.

சிறுகுழந்தைகள், அப்பாவின் கையைப் பிடித்துக்கொண்டு வீதியில் நடக்கும் காட்சியைப் பார்த்திருப்பீர்கள். அக்குழந்தை ஒழுங்காக சிறிது நேரம் நடக்கும், பின்னர் துள்ளும், பின்னர் பாயும், வீதியில் கிடக்கும் சிறிய கற்களைத் தன் பிஞ்சுக் கால்களால் உதைக்கும், பின்னர் தொப்பென்று கீழே விழுந்துவிடுவதுமுண்டு. அப்பா மீண்டும் தன் கையினால் பிள்ளையைத் தூக்கிவிடுவார். மீண்டும் அப்பிள்ளை தனது விளையாட்டை ஆரம்பிக்கும். இதற்குக் காரணம் தனது ஒரு கையினால் அப்பாவைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறேன் என்று பிள்ளைக்கு இருக்கும் நம்பிக்கைதான்.

நாமும் இக்குழந்தைகள்போல எமது பரம பிதாவின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டால் எம் வாழ்வை நம்பிக்கையோடு வாழலாம். இந்த உலகம் நம்மை விழுத்த நினைக்கலாம். வழியில் வரும் இடர்களைக் கண்டு நாம் ஒடிந்தும்போகலாம். ஆனாலும், நாம் பற்றிப்பிடித்திருக்கும் கரம் உறுதியானதாய் இருக்கும்போது நாம் ஏன் தடுமாறவேண்டும்? ஒரு தகப்பனிடத்தில் ஒரு பிள்ளை மீனைக் கேட்டால் அவர் பாம்பைக் கொடுப்பாரோ, அப்பத்தைக் கேட்டால் கல்லைக் கொடுப்பாரோ? "பொல்லாதவர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவைக் கொடுக்க எண்ணும்போது, பரமபிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமான காரியம்" என்று இயேசு சொன்னார்.

தனிமை உணர்வினால் கலங்கி நிற்கும் தேவபிள்ளையே, நித்திய பிதாவாகிய உன் தேவனின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொள். அவரே உன்னை நித்திய வழியில் நடத்துவார். எமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். அவர் நித்திய பிதா. அவர் என்றென்றும் நம்மோடே இருப்பார். அவர் அனுதினமும் நமது கரத்தைப் பிடித்து வழிநடத்துவார்.

'அப்பா பிதாவே' என்று அழைக்கும் தகுதியை ஆண்டவர் நமக்குத் தந்திருக்க, நாம் கர்த்தரைச் சந்தேகித்து, அவர் நம்முடன் இல்லையென்று நொந்துகொண்ட வேளைகளைச் சிந்தித்து மனந்திரும்புவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப்பிரபு

வேத வாசிப்பு : யோவான் 14:27-31

**'நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்.' யோவா.4:14**

**'அவர் நாமம் சமாதானப் பிரபு'** (ஏசா.9:6) புயல் காற்று வீசிக்கொண்டிருக்கிறது. மழையும் மெதுவாகப் பெய்துகொண்டிருக்கிறது. மரங்களெல்லாம் வேகமாக அசைந்துகொண்டிருக்கிறது. அந் நேரத்தில் இனிமையான ஒரு மெல்லிய குரல் காற்றோடு கலந்து காதில் ரீங்காரமிடுகிறது. நிமிர்ந்து பார்த்தபோது, அசைந்து கொண்டிருக்கும் அந்த மரத்தின் கொப்பில் இருந்து ஒரு சிறிய குருவி அமைதியாகப் பாடிக்கொண்டிருந்தது. இவ்வளவு அமர்க்களத்தின் மத்தியிலும் எப்படி அக் குருவியினால் அமைதியாகப் பாட முடிந்தது. அக் குருவியைச் சுற்றி அமைதியின்மை இருந்தாலும், அக்குருவியின் மனதில் அமைதி இருந்ததால் அது அமர்க்களத்தின் மத்தியிலும் அமைதியாகப் பாடுகின்றது. இன்று உலகம் கொடுக்கும் சமாதானம் எது? பணம், பொருள், அந்தஸ்து, அமைதியான சூழல் இவைகளை நம்பி வாழ்வோர் இதில் ஆட்டம் கண்டதும் அமைதியின்றி சமாதானமின்றி அவதிப்படுகிறார்கள். ஆனால், தேவ சமாதானத்தைப் பெற்றவர்களோ, உலகம் ஆட்டம் கண்டாலும், சுற்றியிருப்பவைகள் எல்லாம் எதிராகச் சுழன்றாலும் உள்ளத்திலே அமைதியோடு வாழ்வார்கள். அக் குருவியைப்போல அவர்களாலும் பாடமுடியும்...

"என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை, உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக" (யோவா.14:27) என்று இயேசு சொன்னார். ஆம், ஆண்டவர் எமக்குத் தரும் சமாதானம் நித்திய ஜீவ காலமாய் எம் உள்ளத்தில் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும். உலகத்தின் பாடுகளும், வேதனைகளும் ஒருவேளை எம்மை வேதனைப்படுத்தலாம். கவலை எம்மைப் பிடிக்கலாம், கண்ணீரும் வழியலாம். ஆனால், தேவன் எம் உள்ளத்தில் வைத்திருக்கும் சமாதானத்தை யாராலும் பறித்துவிடமுடியாது. அது தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தேவன் கொடுத்த ஒரு அருட்பெருங் கொடை எனலாம். ஏனெனில், அவர் சமாதானப்பிரபு; அவரை அண்டிக்கொள்வோருக்குச் சமாதானம் உண்டு.

ஆண்டவரை அண்டிவிட்டால் எல்லாமே இன்பமாகவே இருக்குமென்று எண்ணி செழிப்பான வாழ்வை எதிர்பார்ப்பவர்கள் பலர். அது தவறான கருத்து. அப்படிப்பட்ட எண்ணங்கொண்டோர் துன்பத்தைக் கண்டதும் துவண்டுவிடுவர். ஆண்டவரை அண்டி வாழுவோர், துன்பத்திலும் சமாதானத்துடன் வாழுவார்கள். மரணத்திலும் அவர்களால் பாடமுடியும். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். இந்த சமாதானப் பிரபுவாகிய கர்த்தர் அருளும் சமாதானம் ஒன்றே பாடு நிறைந்த இவ்வுலக வாழ்வில் நம்மை சமாதானமாக வாழவைக்கும்.

இன்று என் மனதினுள் இருக்கும் போராட்டங்களுக்கு என்ன காரணம்? தம்முடைய சமாதானத்தைத் தருவதாக ஆண்டவர் வாக்களித்தும், நான் அவ்வப்போது சமாதானத்தை இழந்து தவிப்பது ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரலோக மேன்மையைத் துறந்து

டிசம்பர்

**8**

திங்கள்

வேத வாசிப்பு : பிலிப்பியர் 2:1 -11

**'...தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.' பிலிப்பியர் 2:7**

அப். பவுல் எபேசியருக்கு இவ்விதமாய் எழுதியுள்ளார். **'கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.'** (எபே.2:8) இரட்சிப்பு தேவனுடைய ஈவு. என்றாலும், அதற்காக தேவன் கொடுத்த கிரயம் மிகப் பெரியது. பரலோகத்தின் தேவன் தமது மேன்மையைத் துறந்து, தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, இப்பாவ உலகில் மனுஷர் சாயலானார். எம்மை மீட்பதற்காக தமது இரத்தத்தையே கிரயமாகக் கொடுத்தார். இதுவே அவரது பிறப்பின் ஆழமான அர்த்தம். இந்த அர்த்தத்தை உணர்ந்தவர்களாக நாம் அவரது பிறப்பினைக் கொண்டாடுகிறோமா? எம்மை மீட்பதற்காக, எமக்கு இரட்சிப்பு அளிப்பதற்காக அவர் தமது மேன்மையைத் துறந்து இவ்வுலகிற்கு வந்தார். வருடா வருடமாய் கிறிஸ்மஸ் கொண்டாடும் எமது வாழ்வில் அவர் வந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா?

நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ், தேவனை அறியாதோருக்கு உண்மையான கிறிஸ்மஸின் அர்த்தத்தைப் புரியவைக்கவேண்டும். அதன் அர்த்தம் முதலாவது எமது வாழ்வில் வெளிப்பட்டால்தான், மற்றவர்களுக்கும் அதைப் புரியவைக்கமுடியும். 'தேவன், நமக்கு இரட்சிப்பை இலவசமாகத் தந்துவிட்டார். அதை தேவையான நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். இப்போது அதையிட்டு கவலைப்படத் தேவையில்லை' என்று எண்ணுவோர் ஏராளம். எமது சாதாரண வாழ்க்கையில்கூட இலவசமாகக் கிடைக்கும் பொருள்களுக்கு நாம் மதிப்புக் கொடுப்பதில்லை. அதிக விலை கொடுத்து வாங்கினால்தான் அதன் அருமை எமக்குத் தெரியும். அதைப்போலவே இரட்சிப்பையும் நாம் ஒரு இலவசப் பொருளாகக் கருதி கரிசனையற்றிருப்பதுண்டு. இன்றே மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ளுவோம். தேவன் தமது பிள்ளைகளுக்கு இரட்சிப்பை இலவசமாகக் கொடுத்தார் என்பது சத்தியம். ஆனால் அந்த இரட்சிப்பு மிகவும் விலையேறப் பெற்றது. ஏனெனில், ஆண்டவருடைய விலையேறப்பெற்ற இரத்தம், அவரது பரலோக மேன்மை யாவையும் தேவன் இந்த இரட்சிப்புக்காக கிரயமாகக் கொடுத்திருக்கிறார். ஆகவே இதன் விலை அதிகம்.

இரட்சிப்பாகிய ஈவை எமக்குப் பெற்றுத்தரவே அவர் தமது மேன்மையைத் துறந்து, அடிமையின் ரூபமெடுத்து, மாட்டுத் தொழுவத்திலே மானிடனாய் வந்து பிறந்தார். இந்த சிந்தனை எம் ஒவ்வொருவர் மனதிலும் இருக்கவேண்டும். நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் இந்த அர்த்தத்தைப் பிரதிபலிக்கவேண்டும். இந்த சந்தோஷத்தினால் எமது கிறிஸ்மஸ் மகிழ்ச்சிமிக்கதாக மாறட்டும். ஆண்டவர் தந்த இந்த விலையேறப்பெற்ற ஈவுக்காக நன்றிகூருவோம்.

எனக்காகவே கடவுள் மனுஷனாக வந்தார் என்ற செய்தி என் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன? அந்த ஈவை மற்றையோருக்கு வெளிக்காட்டும்படியாக இந்தக் கிறிஸ்மஸ் நாட்களை நான் எப்படிக் கழிக்கப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உடை



வேத வாசிப்பு : 2கொரிந்தியர் 5:17-21

**'...இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்.' எபிரெயர் 2:4**

எமது இரட்சிப்புக்கும், கிறிஸ்து பிறப்புக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நேற்றைய தியானத்திலே பார்த்தோம். இரட்சிப்பு என்பது எமக்குத் தலைச்சீரா என்று பவுல் எபேசியருக்கு எழுதும் போது குறிப்பிடுகிறார் (எபே.6:17). தலைச்சீரா எமது தலையைப் பாதுகாப்பதற்காக அணியப்படும் ஒன்று. மோட்டார் சைக்கிளில் செல்லும் ஒருவர் எப்போதுமே தலைச்சீராவை அணிந்து செல்லவேண்டும். அவரது தலைக்கு எப்போது ஆபத்து வரும் என்பது அவருக்குத் தெரியாததால் அவர் ஆயத்தமுள்ளவராக எப்பவுமே அதை அணிந்து செல்லவேண்டும். அதுபோலவே இரட்சிப்பு என்பது ஒவ்வொருவருக்குள்ளும் ஒன்றித்துப்போன ஒன்றாக இருக்கவேண்டும். எப்போதும் நாம் அதை அணிந்துகொண்டிருத்தல் வேண்டும்.

பொதுவாகக் குளிர்காலங்களில் அதிகமான மயிர்கொட்டி புழுக்களைக் காணலாம். அவைகள் பார்ப்பதற்கு அருவருப்பானவையாகவும், பயிர்களுக்குத் தீங்கு விளைவிப்பனவாகவும் இருப்பதால், அவற்றைக் கண்டதும் நாம் அழித்து போடுவதுண்டு. ஆனால் அவற்றிலிருந்து உருவாகும் வண்ணாத்திப்பூச்சிகளை நாம் பார்த்து ரசிக்கிறோம். மயிர்கொட்டிப் புழுபோல அருவருப்பாகப் பாவத்தில் கிடக்கும் ஒருவன், இரட்சிக்கப்படும்போது அழகான வண்ணாத்திப் பூச்சிபோல புதிய சிருஷ்டியாகிறான். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோய் எல்லாம் புதிதாகின்றன (2கொரி.5:17). கிறிஸ்மஸ் நாட்களிலே விசேஷமாக கிறிஸ்து தந்த இரட்சிப்பைக் குறித்துக் கரிசனையோடு இருக்கவேண்டிய நாம், பழைய மனுஷனைக் களைந்து, புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளவேண்டிய நாம், அவற்றைவிடுத்து, எமது பழைய உடைகளை களைந்து எவ்விதமாக நாகரீகத்துக்கு ஏற்றவகையில் புத்தாடைகளை இக்கிறிஸ்மஸ்க்கு அணியலாம் என்பதை குறித்தே அதிக சிரத்தையுடன் இருக்கிறோம். கிறிஸ்மஸ் நாட்களில் salvation (இரட்சிப்பு) என்ற சொல் மறைந்து எல்லார் மனிதிலும் sale (மலிவு விற்பனை) என்ற சொல்தான் இருக்கிறது.

இரட்சிப்பு என்பது பரலோகத்துக்குப் போகும் டிக்கட் அல்ல, 'நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று சொல்லிக் கால்நீட்டி அமர்ந்திருப்பதற்கு.' அது தொடர்ந்து வளரவேண்டிய ஒன்று. அந்த வளர்ச்சிக்காக, முதிர்ச்சிக்காக நான் பிரயாசப்படவேண்டும். அது தேவனுக்குக் கீழ்ப்படிவதின்மூலம் எனக்குள் நான் வளர்த்துக்கொள்ளும் ஒன்று. இரட்சிப்பு என்பது ஒரு புதிய வாழ்வின் ஆரம்பம். பழைய ஆடைகளைக் களைந்து புதிய ஆடைகள் அணிவதுபோன்ற ஒன்று. **'உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்'** (பிலி. 2:12).

உண்மையாகவே நான் அந்த மறுபிறப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறேன் என்றால், அந்தப் புதிய வாழ்வின் அடையாளங்கள் என்னில் காணப்படுகிறதா? இந்நாட்களில் என் இரட்சகரை நான் என்னில் வெளிப்படுத்துகிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருசிக்கும் பலகாரம்

டிசம்பர்

**10**

புதன்

வேத வாசிப்பு : சங்கீதம் 34:1-10

**'கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.' சங்கீதம் 34:8**

கிறிஸ்மஸ் காலங்கள் வந்துவிட்டால், என்ன பலகாரம் செய்வது, அதை யார் யாருக்கெல்லாம் கொடுப்பது, அவற்றை எறும்புக்குப் பாதுகாத்து வைப்பதெப்படி?... இப்படி எத்தனையோ காரியங்கள் மனதில் அலைமோதினாலும், நாம் அவற்றைச் செய்யாமல் விடுவதோ, ருசி பார்க்காமல் விடுவதோ இல்லை. கிறிஸ்மஸ் நாட்களில், 'ருசித்துப் பார்த்தீர்களா?' என்று ஒருவர் கேட்டால், எமது எண்ணமெல்லாம் கேக், பலகாரங்களையே நோக்கி ஓடும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆனால், இன்றைய வாசிப்பிலே, வேறொரு காரியத்தை "ருசித்துப் பாருங்கள்" என்று எமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. அதாவது, "கர்த்தர் நல்லவர், என்பதை உங்கள் வாழ்விலே ருசித்துப் பாருங்கள்" என்று எம்மைத் தாவீது அழைக்கிறார். எமது வாழ்வு சீராகப் போகும்போது, எந்தவிதமான பிரச்சினையையும் எதிர்நோக்காமல் சந்தோஷமாக இருக்கும்போதும் நாமும் கூட "ஆம், கர்த்தர் எவ்வளவு நல்லவர்" என்றுச் சொல்வோம். ஆனால் நாம் நினைப்பதற்கு எதிர்மாறாக ஏதாவது வந்துவிட்டால், அல்லது எம்மால் தாங்க முடியாத அளவுக்கு சூழ்நிலைகள் அமைந்துவிட்டால் அந்த நேரத்தில் "கர்த்தர் நல்லவர்" என்பதை நம்மால் கூறமுடியுமா? நிச்சயமாக முடியும். கர்த்தரோடு நெருங்கிய உறவை நீங்கள் கொண்டிருந்தால், அவருடனேயே அனுதினமும் நீங்கள் வாழ்ந்துகொண்டிருந்தால் எச் சூழ்நிலையிலும், "ஆண்டவர் நல்லவர்" என்பதை நிச்சயமாக நாம் அறிக்கைசெய்யமுடியும். தாவீது, இச் சங்கீதத்தை எழுதும்போது, அவர் ராஜாவாக சிங்காசனத்தில் வீற்றிருந்து எழுதவில்லை. ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தும், அபிமலேக்கு என்பவனால் துரத்தி விடப்படுகையிலேயே இதை எழுதுகிறார். அவர் துரத்துண்டு போகிறவேளையிலும் அவர் கண்டுகொண்டது என்னவென்றால், 'கர்த்தர் நல்லவர்' என்பது தான். காரணம், அந்த அளவுக்கு அவர் கர்த்தரைத் தனது வாழ்வில் ருசி பார்த்திருந்தார்.

நாம் ருசிபார்க்காத எதையும் ருசி என்று சொல்லி அடுத்தவருக்குக் கொடுக்கமுடியாது. ஆகவே, எமக்காக பரலோகத்தின் மேன்மைகளையெல்லாம் துறந்து வந்த கர்த்தரை, இந்தக் கிறிஸ்மஸ் காலங்களில் நாம் முதலில் ருசித்துப் பார்ப்போமாக. கிறிஸ்மஸ் காலம்தான் நாம் முற்றாக ஆண்டவரையே மறந்து வாழும் காலமாகும். அதை விடுத்து கொண்டாட்டங்கள் மத்தியிலும், ஆண்டவருக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பழகிக்கொள்ளுவோம். காலையில் எழுந்து, அதைச் செய்யவா, இதைச் செய்யவா என்று ஆரவாரப்பட முன்பதாக, தேவ பாதத்தில் அமர்ந்திருந்து அந்த நாளை ஆரம்பிக்கப் பழகுவோம்.

என் வாழ்வில் முழுமையாக ஆண்டவரை, அவரது அன்பை ருசிபார்த்த சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்ப்போம். அந்த ருசி என்னுள் இருக்கும் கசப்புகளைப் போக்கியதுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் பரிசுகள்

டிசம்பர்
11
வியாழன்

வேத வாசிப்பு : யோவான் 3:10-21

**'...அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.' யோவான் 3:17**

விசேஷமாக இந்த நாட்களிலே நாம் செய்யும் இன்னுமொரு முக்கிய காரியம், பரிசுகளைப் பரிமாறிக்கொள்ளுதலாகும். எமக்குத் தெரிந்தவர்களுக்கும், அன்பானவர்களுக்கும், குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குமிடையில் நாம் பரிசுகளைக் கொடுத்து, வேண்டி இப்படியாகப் பரிமாறிக் கொள்வதுண்டு. ஆனால், எமக்குத் தெரியாதவர்களுக்கும், எமக்கு அறிமுகமே இல்லாதவர்களுக்கும் நாம் பரிசுகள் கொடுப்பது மிகக் குறைவு.

முழு உலகின் மீட்புக்காக தமது ஒரேபேறான குமாரனையே பரிசாகக் கொடுத்தார் தேவன். ஆனால் அந்தப் பரிசினை இன்னமும் எல்லா மக்களும் உணர்ந்து பெற்றுக்கொள்ளவில்லை. ஒரு சிலராகிய நாம் மாத்திரமே அதனைப் பெற்றிருக்கிறோம். தேவன் உலகிற்குத் தமது குமாரனைப் பரிசாகத் தந்த நாளையே நாம் கிறிஸ்மஸாக நினைவுகூருகிறோம். அப்படியானால் அந்த பரிசினைப் பெற்ற நாம், பரிசினைப் பெறாத மக்களுக்கு, இக்கிறிஸ்மஸ் காலங்களில் அப்பரிசினை அறிமுகம் செய்பவர்களாக, எமது வாழ்விலும், நடைமுறையிலும், எமது கொண்டாட்டங்களிலும் முன்மாதிரியாக விளங்கவேண்டுமல்லவா? இதனை நினைவிற்கொண்டவர்களாக நாம் இக்கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாட ஆயத்தமாவோம். தேவனின் மீட்பை இன்னமும் தமது வாழ்வில் ருசிபாராதிருக்கும், எமது குடும்பத்தினருக்காகவும், நண்பர்களுக்காகவும், உறவினர்களுக்காகவும், எமக்குத் தெரிந்த, அறிமுகமானவர்களுக்காகவும் இக் கிறிஸ்மஸ் காலங்களில் விசேஷமாகப் பாரப்பட்டு ஜெபிப்போம்.

கிறிஸ்மஸ் காலங்களிலே அடுத்தடுத்து பல நிகழ்வுகள் வந்துகொண்டேயிருக்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடமாக புறப்பட்டுப்போக வேண்டியிருக்கும். இதனால் சிலவேளைகளில் காலையில் எமக்கு ஜெபிப்பதற்குக்கூட நேரம் கிடைப்பதில்லை. எல்லா நிகழ்ச்சிகளையும் முடித்து கால தாமதமாகி வரும் நாம், களைப்பின் மிகுதியால் ஜெபிக்காமலேயே படுக்கைக்குச் செல்வதுண்டு. பொதுவாகக்கூறின் இந்நாட்களில் நாம் தேவனுடனான உறவை மறந்து, அதற்கு நேரம் கொடுக்கத் தவறி ஏனோதானோ என்று வாழ்வதுண்டு. இந்நிலை இப்போது மாற தேவனிடம் மன்றாடுவோம். தேவனுடன் அதிகமான நேரத்தைச் செலவிட்டு, அவரது மீட்பாகிய விலைமதிக்க முடியாத பரிசினைப் பெற்றுக்கொள்ளாதிருக்கும் மக்களுக்காக ஜெபிப்போம். அவர்களுக்கும் அப் பரிசினை அறிமுகம் செய்யும் ஊடகமாக திகழ்வோம். வெறுமனே அழிந்து போகும் பரிசுகளை கொடுப்பதிலும், அதிசிரத்தையுடன் அழியாத மீட்பை பிறருக்கு அறிமுகம் செய்யப் பிரயத்தனப்படுவோம்.

இக் கிறிஸ்மஸ் தினத்திலே யார் யாருக்கு பரிசு கொடுப்பதற்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம்? அவர்களிலே எத்தனைபேர் நமக்கு அன்பானவர்கள், எத்தனைபேர் ஏழை எளியவர்கள்? இம்முறை பரிசில்கள் கொடுப்பதில் ஏதாவது மாற்றம் ஒன்றை நாம் கொண்டுவருவோமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிக்கும் பட்டாசுகள்

டிசம்பர்

**12**

வெள்ளி

வேத வாசிப்பு : அப்போஸ்தலர் 2:32-41

**'இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார், இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.' அப்போஸ்தலர் 2:32**

டிசம்பர் 24ம்திகதி இரவு விழித்திருந்து சரியாக 12மணிக்கு பட்டாசுகள் கொளுத்துவதில் சிலருக்கு அலாதிப்பிரியம். இதோ கிறிஸ்மஸ் பிறந்துவிட்டது என்று பட்டாசைக் கொளுத்தி எல்லோருக்கும் பறைசாற்றுவதிலும் மகிழ்ச்சி கொள்வோர் அநேகர். இவைகள் நல்லவைதான், எமது சந்தோஷத்தின் வெளிப்பாடாகவே இவைகள் அமைகின்றன.

கிறிஸ்துவுக்குப் பின்னால் திரிந்த சீடர்கள், கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததும் அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு ஒளித்திருந்தார்கள். இவர்கள் பரிசுத்தாவியானவரால் நிரப்பப்பட்டதும். தைரியமாக எழுந்து நின்று, இயேசுவை தேவன் எழுப்பினார், இதற்கு நாங்கள்தான் சாட்சிகள் என அடித்துக் கூறுவதை இன்றைய வாசிப்புப் பகுதியிலே காண்கிறோம். இவ்விதமாகவே, கிறிஸ்து இவ் உலகிற்கு வந்து பிறந்ததன் நோக்கமும், அவரது மீட்பின் திட்டமும், அவர் மூலமாக நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பும், எமது வாழ்வில் சாட்சிகளாக பிறர் மத்தியில் இன்றைக்கு வெடிக்கவேண்டும். என்னையும், உங்களையும் மீட்கவே தேவாதி தேவன் மானிட ரூபமெடுத்து இந்தப் பாவமான உலகில் வந்து பிறந்தார். அவரது மீட்பைப் பெற்று, இரட்சிக்கப்படாமல் வருடாவருடமாய் கிறிஸ்மஸ் பட்டாசுக்கள் கொளுத்திக் கொண்டாடுவதில் என்ன பயன்?

கிறிஸ்துவின் பிறப்பு அன்று மரியாள் யோசேப்பின் வாழ்வில் அர்ப்பணிப்பாகவும், மேய்ப்பர்கள் வாழ்வில் நற்செய்தியாகவும், தூதர்களின் வாயில் துதியாகவும், இப்படியாகப் பலர் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இன்று கிறிஸ்துவின் பிறப்பு எமது வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள் என்ன? வெறும் வெடிக்கும் பட்டாசுகள்தானா? கிறிஸ்துவின் பிறப்பின் தாற்பரியத்தை எமது வாழ்க்கையும், நடைமுறையும் பிறருக்கு அறிவிக்கும்முறையில் எமது வாழ்வை மாற்றி வாழப் பழகிக்கொள்ளுவோம். அதுவே கிறிஸ்துவின் பிறப்பின் உன்னதமான நோக்கத்தையும், அவர் அகில உலகிற்குக் கொடுத்த மீட்பையும், அதனால் உண்டாகும் மகிழ்ச்சியையும் பிறர் உணர்ந்திடச் செய்திடும். மானிடர் வாழும் இப்பூமியில் சந்தோஷம் உண்டாகத்தக்க முறையில் எமது கிறிஸ்மஸ் ஒழுங்குகளை இம்முறை திட்டமிடுவோமாக.

இயேசுவைத் தெரியாது என்று மறுதலித்த பேதுருதான் பெந்தெகோஸ்தே நாளில் எழுந்து நின்று பேசினார். அவருடைய அந்த ஒரு சாட்சியின் பிரசங்கத்தினால் அன்றையதினம் மூவாயிரம்பேர் மனந்திரும்பினார்கள் என்று வாசிக்கிறோம். இன்று நாம் வருஷந்தோறும் கொண்டாடும் கிறிஸ்மஸினால் அநேகர் கிறிஸ்துவின் அன்பைவிட்டு விலகுவார்களேயானால் அது மிகவும் துக்கமான விடயமல்லவா. சிந்திப்போம்.

இதுவரையிலும் எம்மை யாராவது பார்த்து, 'நீர் ஒரு கிறிஸ்தவரா' என்று கேட்டதுண்டா? கேட்டிருந்தால் எதற்காகக் கேட்டார் என்று சிந்திப்போம். என் வாழ்வில் இயேசு எந்தவித்தில் வெளிப்படுகிறார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ண விளக்குகள்

டிசம்பர்
**13**
சனி

வேத வாசிப்பு : மத்தேயு 5:14-16

**'நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.' மத்தேயு 5:14**

கிறிஸ்மஸ் காலங்களில் எமது வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் நாம் வர்ண விளக்குகள்போட்டு அலங்கரிப்பதுண்டு. சிறு பிள்ளைகள் வீதியால் செல்லும்போது, “இங்கே விளக்கெரிகிறது, எனவே இவர்கள் கிறிஸ்தவர்கள்; அங்கே வெளிச்சம் தெரிகிறது, எனவே அவர்களும் கிறிஸ்தவர்கள். இந்த ஒழுங்கையில் எல்லாமாகப் பத்து வீடுகளில் வர்ண விளக்குகள் எரிகின்றன, எனவே இங்கே பத்துக் கிறிஸ்தவ குடும்பங்களுண்டு” எனக் கணக்கெடுப்புச் செய்வதைக் கண்டேன். இது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தாலும், இதில் ஆழமான ஒரு உண்மை அடங்கியுள்ளது. கிறிஸ்மஸ் காலங்களில் நாம் வீடுகளில் போடும் வர்ண விளக்கினால்தான், மற்றவர்கள் எம்மை கிறிஸ்தவர்கள் என்று கண்டுபிடிப்பது வெட்கத்துக்குரிய விடயமல்லவா.

“நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்” என்ற இயேசு, பாவமான, இருளான இவ்வுலகத்திற்கு கிறிஸ்துவை அறிந்துகொண்ட நாமே வெளிச்சம் என்றார். அந்த வெளிச்சம் எது? எமது வாழ்வு, எமது சாட்சி, எமது நடைமுறை; இவையெல்லாவற்றையும் மரக்காலால் மூடிவைத்துவிட்டு, அவை அணைந்துபோனதும், வர்ண விளக்குகளை எமது வீடுகளில் பொருத்தி நாம் கிறிஸ்தவர்கள் என்று பிறருக்கு அடையாளம் காட்டுகிறோம். நாம் வாழும் சூழலில் அயலவர்கள் மத்தியில் அனுதினமும் பிரகாசமாக ஒளிர்விட்டு எரியக்கூடிய வெளிச்சம் எமது நாளாந்த குடும்ப ஜெபங்கள்தான். அந்த வெளிச்சம் கிறிஸ்தவ குடும்பம் என்பதை பிறருக்கு அடையாளங்காட்டும். அதைவிடுத்து கிறிஸ்மஸ் காலங்களில் மாத்திரம் வர்ண விளக்குகளால் வீட்டை அலங்கரித்து, கரோல் பாடல்களை சத்தமாகப் பாடிவிட்டு, நாம் கிறிஸ்தவர்கள், கிறிஸ்மஸ் கொண்டாடுகிறோம் என்று காட்டுவோமேயாகில் எமது நிலை பரிதாபமானது.

நம்மைச் சுற்றிலும் எவ்வளவோ மக்கள் வாழ்வில் நிம்மதியிழந்து, சுகம் இழந்து ஒரு இருளான வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். நமது அனுதின வாழ்வு நம்மில் குடிகொண்டிருக்கும் ஆண்டவருடைய வெளிச்சத்தை அவர்களுக்குக் கொடுக்கிறதா? முக்கியமான நேரங்களில் நாமெடுக்கும் தீர்மானங்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் அமைந்திருக்கிறதா? மற்றவர்களை நாம் அணுகும் முறைகளும், செயல்களும், எமது வாழ்வில் கிறிஸ்துவின் போதனைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதை மற்றவர்கள் உணரும்படியாகச் செய்யவேண்டும். இவையெல்லாம் எமது வாழ்க்கையில் மற்றவர்கள் காணும் ஒளியாகவேண்டும். இந்த வெளிச்சமே, மற்றவர்களை கிறிஸ்துவண்டை கொண்டுவரும் பிரகாசமான ஒளி. இந்த ஒளி எமக்குள் இல்லாமல், வர்ண விளக்குகளை மட்டும் மாட்டுவதில் என்ன பலன்? சிந்தித்துப் பாருங்கள்.

அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு என்னை ஆண்டவர் கொண்டுவந்தது உண்மையானால், இன்று என் வாழ்வில், கிறிஸ்மஸ் வர்ண விளக்குகளா, அல்லது என் வாழ்வின் வெளிச்சமா? எது ஒளிவீசுகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்மஸ் மரம்

டிசம்பர்

**14**

ஞாயிறு

வேத வாசிப்பு : யோவான் 15:1 -10

**'...நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்.' யோவான் 15:4**

நத்தார் காலங்களில், இளம் வாலிபர்கள் நத்தார் மரங்களை வெட்டி சைக்கிளில் கொண்டுசெல்லும் காட்சிகளை யாழ் நகரில் தாராளமாய் காணலாம். மற்றும் சில இடங்களில் செயற்கை மரங்களை தூசி பிடிக்காமல் பொலித்தீன் பைகளில் கட்டி வைத்திருப்பார்கள்; கிறிஸ்மஸ் காலங்களில் அதை வெளியே எடுத்து வரவேற்பறையில் வைத்து அழகாக சோடிப்பார்கள். கிறிஸ்தவரல்லாத ஒருவர், ஒருமுறை கிறிஸ்மஸ் காலங்களில், ஒரு கிறிஸ்தவர் வீட்டிற்குச் சென்றாராம். உள்ளே வந்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்த அவர், அவ் வீட்டாரைப் பார்த்து, "நீங்கள் கிறிஸ்தவர்கள் தானே" என வினவினார். ஆம், என்று அவர்கள் பதிலுரைத்தபோது, 'அப்படியானால் ஏன் நீங்கள் நத்தார் மரம் வைக்கவில்லை' என்ற ஆச்சரியத்துடனும், ஆவலுடனும் கேட்டாராம். அந்த நபரைப் பொறுத்தமட்டில், "நத்தார் மரம்தான் கிறிஸ்மஸ் காலங்களில் கிறிஸ்தவர்களை அடையாளம் காட்டும் ஒரு அடையாளமாக" இருந்தது.

கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்துதித்த கிறிஸ்மஸின் அர்த்தம், பாவத்தில் இறந்துபோய்க் கிடந்த மரங்களாகிய எமக்கு மீண்டும் உயிர்கொடுப்பதற்காகவே. கனியற்ற மரங்களாகிய எம்மை கனிகொடுக்கும் மரங்களாய் வாழவே ஆண்டவர் அழைத்துள்ளார். இந்த நோக்கத்தை, அர்த்தத்தை, அழைப்பை நாம் மறந்துபோய், செத்துப்போயிருக்கும் எமது வாழ்வுகளை உயிரூட்டாமல், கனியற்று இருக்கும் எம் வாழ்வுகளில் ஆவியின் கனிகள் உருவாவதற்கு முயற்சியெடுக்காமல், இன்னமும் செத்த கிறிஸ்மஸ் மரங்களை முன்னாலே வைத்து அவற்றை அலங்கரித்து, அவற்றிலே பல வர்ண அலங்கரிப்புப் பொருட்களை தொங்கவைத்து, கிறிஸ்துவை அறியாதோருக்கு இதுதான் கிறிஸ்மஸ் என்று பொய்யான தோற்றத்தைக் காண்பித்துக் கொண்டிருக்கிறோம். இது மிகவும் துக்கத்துக்குரிய காரியமல்லவா. வீடுகளிலே கிறிஸ்மஸ் மரங்களை அலங்கரித்து வைக்கும்போது அழகாகத்தான் இருக்கிறது. அதை சந்தோஷமாக நீங்கள் செய்யலாம். அது தவறல்ல. ஆனால் நத்தார் மரம்தான் எமது கிறிஸ்மஸ், அது இல்லாவிட்டால் கிறிஸ்மஸே இல்லை என்ற நிலைக்கு நீங்கள் வந்தால் அது நிச்சயம் தவறானதாகும்.

"இவ்வருடம் எமக்கு அன்பானவர் இறந்தபடியினால், எமக்கு இம்முறை கிறிஸ்மஸ் இல்லை" என்று அநேகர் சொல்வதுண்டு. அதன் அர்த்தம் என்ன? கிறிஸ்மஸ் இல்லாமல் எப்படிப்போகும்? அவருக்கு நத்தார் கொண்டாட்டம்தான் இல்லை. எமது வாழ்விலும் நத்தார் காலங்களில் நத்தாரின் அர்த்தம் மறைந்து கொண்டாட்டங்கள்தான் முதலிடம் வகிக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. இந்நிலை மாற நாமாவது முயற்சி எடுப்போமா!

கிறிஸ்து பிறப்பின் நினைவுகூருதலின் கொண்டாட்டத்தை இம்முறை என்ன விதத்தில் வித்தியாசமாகவும், தேவனுக்கு மகிமையாகவும் மாற்றப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்

டிசம்பர்
**15**
திங்கள்

வேத வாசிப்பு : 3யோவான் 1-14

**'பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.' 3யோவான் 2**

இலங்கையிலே கிறிஸ்மஸ் காலங்களில் தபால்பொதிகள் எல்லாம் தேங்கிக் கிடப்பதாக நாம் செய்திகளில் கேள்விப்படுவதுண்டு. விநியோகம் செய்யமுடியாத அளவுக்கு நத்தார் வாழ்த்துமடல்கள் குவிந்து கிடக்கும் காலம் இது. மே மாதத்தில் ஒருநாள் எனது சிநேகிதி ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து தொலைபேசியில் என்னை அழைத்து, 'கடந்த ஆண்டு நீங்கள் அனுப்பிய கிறிஸ்மஸ் வாழ்த்துமடலை இன்றுதான் பெற்றுக்கொண்டேன்' என்றார். இது என்னைச் சிந்திக்க வைத்தது. மே மாதத்தில் கிறிஸ்மஸை நினைவுகூர முடியாதா! பாவமான இவ்வுலகில் வாழ்ந்து, பாவத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், எம்மை மீட்கும்படிக்கு இப் பாவ உலகில் இயேசு வந்துதித்த நாளை அனுதினமும் நினைத்தவர்களாய் வாழுவதும், அதை மற்றையோருக்கு எடுத்துரைப்பதும் முக்கியமான ஒன்றல்லவா.

கடிதங்களும், வாழ்த்துமடல்களும், செய்திகளும், எமது உள்ளத்தின் சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு மாத்திரமல்ல, ஆண்டவருக்குள்ளாக ஏனையோரைப் பெலப்படுத்தக்கூடிய வல்லமை நிறைந்த ஒரு கருவியாகவும் இருக்கின்றன. யோவான் தனது மூன்றாம் நிருபத்தில் அழகான ஒரு கடிதத்தை பிரியமுள்ள சகோதரன் காயுவுக்கு எழுதுகிறார். இக்கடிதமானது ஆண்டவருக்குள்ளாக இன்னமும் காயுவைப் பெலப்படுத்துகிறதாக அமைகிறது. '**நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன் உண்மைத்துவத்தைக் குறித்து சகோதரர் வந்து சாட்சி கொடுத்தபோது நான் மிகவும் சந்தோஷப் பட்டேன். உன் ஆத்துமா சுகமாக வாழுகிறது. அதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்திருக்க நான் வேண்டுகிறேன்**' என்று குறிப்பிட்டு எழுதுகிறார்.

நத்தார் காலங்களில் சோர்ந்துபோய் இருப்பவர்களையும், ஆவிக்குரிய வாழ்வில் உயிரூட்டமில்லாமல் செத்துப்போய் இருப்பவர்களையும், நத்தாரின் அர்த்தம் புரியாமல் ஏனோதானோ என்று ஜீவிப்பவர்களையும் தொடும்வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் நாம் நத்தார் வாழ்த்துமடல்களை அனுப்ப எத்தனிக்கவேண்டும். அதைவிடுத்து கடமைக்காக கட்டுக்கட்டாக வாழ்த்து மடல்களை வாங்கி, எந்தவித நோக்கமும் இன்றி அனுப்புவதில் என்ன பயன்? அகதிகளாய் இருப்போர், ஏழ்மையில் இருப்போர், தேவனை அறியாமல் இருப்போர் மத்தியில் செயலாற்றவும் அன்பைக்காட்டவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும். அவர்களும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்துகொள்ள எங்கள் வாழ்வே சாட்சியாக முன்மாதிரியாக வேண்டும்.

இம்முறை நான் யார் யாருக்கு வாழ்த்துமடல் அனுப்பப் போகிறேன் என்பதை முன்கூட்டியே தீர்மானம் செய்துகொள்வோம். இந்த வாழ்த்துமடல் யார் யாருக்கு என்பது மாத்திரமல்ல, அது தாங்கிச் செல்லப்போகும் செய்தி என்னவென்பதிலும் கவனம் செலுத்துவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் வருகை

டிசம்பர்
**16**
செவ்வாய்

வேத வாசிப்பு : லூக்கா 2:8-12, 21:25-28

**'அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.' லூக்கா 21:27**

உணர்ந்தோ உணராமலோ வருஷந்தோறும் தவறாமல் நாம் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடுகிறோம். அன்று மேசியாவை எதிர்பார்த்து காத்திருந்த மக்கள், மேசியா வந்து பிறந்தபோது அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அதுபோலவே இன்றும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து அன்றுதொட்டு அறிவிக்கப்பட்டும் நாம் அதையிட்டுக் கரிசனையற்றவர்களாய் இருக்கிறோம். அப்படியானால் நம்மையும் அறியாமலே அதை மறுதலிக்கிறோம் என்பதுதானே அர்த்தம்!

2பேதுரு 3:9ல் எல்லோரும் மனந்திரும்பவேண்டும்மென்று விரும்பியே தேவன் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் என்று வாசிக்கிறோம். இன்று நாம் மனந்திரும்பி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அல்லது எமது மரணத்திற்கு ஆயத்தமாகவேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். இவ்வித உணர்வின்றி இன்னமும் கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் கொண்டாடுவதிலேயே கருத்தாய் உள்ளோம். நல்லது, ஆனால், சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷத்தைக் கொண்டுசெல்லக் கூடியதான காரியங்களில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். கிறிஸ்து பிறந்ததன் அர்த்தம் நம் கொண்டாட்டங்களில் மழுங்கிப்போய் கிடக்கிறது. அதற்கு நாம் புத்துயிர் கொடுத்து பிறர் அதை அறிந்துகொள்ளும்படிக்கு புரியவைக்கவேண்டும்.

தேவன் நம்மீது அன்புகூர்ந்ததாலேயே தமது சொந்தக் குமாரனையே எமக்காகத் தந்தார் (யோவா.3:16). அன்பின் செயலாகவே பரலோகத்தின் மேன்மைகளைத் துறந்து மாட்டுத் தொழுவத்தில் ஏழ்மையின் கோலமாய்க் கிறிஸ்து வந்துதித்தார். பாவத்தின் தண்டனை எம்மீது விழாமல் அதற்குரிய கிரயத்தைச் சிலுவையில் செலுத்தி மரித்து உயிரோடே வெற்றியாய் எழுந்து இன்றும் உயிரோடே இருக்கிறார். இவையெல்லாம் எதற்காக? நாம் வருடா வருடம் கேக் உண்டு களியாட்டம் கொண்டாடவா? அல்லது, மீட்பை அறியாதோர் அதைக் கண்டுகொண்டு தேவனின் உன்னதமான இரட்சிப்பின் திட்டத்துக்குள் பிரவேசிக்கவேண்டும் என்பதற்காகவா?

கிறிஸ்து பிறப்பானது எமக்குச் சந்தோஷமான ஒரு நிகழ்வுதான். அதை நாம் சந்தோஷமாக நினைவுகூருவதில் தவறொன்றுமில்லை. ஆனால், எமது கொண்டாட்டங்களைப் பார்க்கும் பிறர் அதனூடாக எதனைக் கண்டுகொள்கின்றனர்! அவர்கள் நம்மில், நமது கொண்டாட்டங்களில் கிறிஸ்துவைக் கண்டுகொள்கின்றனரா? தேவனை அறியாதோர் உள்ளத்தில் எமது கொண்டாட்டங்கள் ஏதாகிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா என்பதுதான் கேள்வி. அதைக் குறித்து நாம் சற்றுச் சிந்திப்போம்.

இம்முறை கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்களை நான் எப்படியாக திட்டமிடப் போகிறேன்? முன்னர் இல்லாதபடி, இம்முறை இந்நாட்களில் என் காரியங்கள் பிறர் மத்தியில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான கொண்டாட்டம்

டிசம்பர்
17
புதன்

வேத வாசிப்பு : மத்தேயு 1:18-25

**'அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.' மத்தேயு 1:21**

இன்று நாம் கிறிஸ்து பிறப்பை நினைவுகூரும்போது மிக ஆடம்பரமாக, முந்திய வருடத்தைப் பார்க்கிலும் இன்னும் அதிக செலவுசெய்து கொண்டாடி மகிழுகிறோம். அக் கொண்டாட்டத்தில் பிறப்பின் அர்த்தம் உண்டா, கிறிஸ்து மகிழுகிறாரா என்று எதைப்பற்றியும் சிந்திப்பது கிடையாது. அதை வெகு விமர்சையாகக் கொண்டாடிவிட்டால் எமக்குள் ஒரு திருப்தி.

கிறிஸ்து பிறந்த நாள் மார்கழி இருபத்தைந்து இல்லாவிட்டாலும், அவர் இவ்வுலகில் பிறந்தது சத்தியம். அவர் பிறந்தபோது அங்கே எந்தவிதமான ஆடம்பரமும் இருக்கவில்லை. முழுக்க முழுக்க ஏழ்மையிலே ஏழ்மையின் கோலமாகவே கிறிஸ்து பிறந்தார். மாட்டுத்தொழுவ துர்நாற்றத்தின் மத்தியில், கந்தைத் துணியில் சுற்றிவைக்கப்பட்டிருந்தார். அவரை முதலில் பார்க்க வந்த வர்களும் ஆட்டிடையரே. அவர்கள் அவருக்காக என்னத்தைக் கொண்டு வந்திருப்பார்கள்! ஒருவேளை ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்திருக்கலாம். ஆனால், கிறிஸ்து பிறந்த இடத்தில் தேவபிரசன்னமும், தூதர்களின் துதிபாட லும், தேவ சித்தத்திற்கு தம்மை அர்ப்பணித்திருந்த மரியாள் யோசேப்பின் கீழ்ப்படிதலுமே காணப்பட்டது (லூக் 2:6-12).

இன்று சிலர் கொண்டாடும் கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்களிலே வர்ண வெளிச்சங்களும், வான வேடிக்கைகளும், வெடிகளும், தின்பண்டங்க ளும், கொழுத்த சாப்பாடும், குடிபோதையும், விலையுயர்ந்த பரிசுப்பொருட்க ளும், உறவினர் நண்பர்களின் பிரசன்னமுமே முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவைகளுக்கு மத்தியில் கிறிஸ்து சிலவேளைகளில் காணப்படாமலேயே போய் விடுகிறார். கொண்டாட்டத்தின் இறுதியில் நாம் எதற்காகக் கூடினோம் என்பதே மறக்கப்பட்டு, சண்டை சச்சரவில் முடிகின்ற தருணங்கள்கூட சிலசமயங்களில் ஏற்படுகிறது. சமாதானப் பிரபுவின் பிறப்புக் கொண்டாட்டம் சமாதானத்தையே கெடுத்துப்போடுகின்ற ஒன்றுகூடலாக மாறிப்போகிறது என்பது வெட்கத்துக்குரிய தும், துக்கத்துக்குரியதுமாகும்.

அதற்காக நாம் மாட்டுத்தொழுவத்தில் போய் இருக்கமுடியாதுதான். ஆனால், அன்று கிறிஸ்து பிறந்த சூழலில் இன்றும் மக்கள் வாழ்ந்துகொண்டி ருக்கிறார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றோர் இனி தம் வாழ்நாளிலே வெளிச்சத்தையே காணமுடியாதவர்களாய் இருக்கின்றனர். பலர் எதிர்கால நம்பிக்கையை இழந்து கேள்விகளோடு வாழுகின்றனர். அவர்களுக்கு கிறிஸ்து வின் அன்பை, அவர் பிறப்பு தருகின்ற சமாதானத்தை எடுத்துச் சொல்லுவது யார்? அந்தப் பொறுப்பு யாருடையது? (எபே.2:17,18) சிந்தித்துப் பார்ப்போம்.

இம்முறை எனது கிறிஸ்து பிறப்பின் நினைவுகூரலின் அடையாளமாக என்னுடன் கொண்டாட்டத்தில் பங்குபெறப்போகிறவர்கள் யார் யார்? சுவிசேஷத்தை நான் இம்முறை எங்கே எப்படி அறிவிக்கப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாளின் கீதம்

டிசம்பர்
**18**
வியாழன்

வேத வாசிப்பு : லூக்கா 1:46-55

**'...என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.' லூக்கா 1:46,47**

**'பரிசுத்தாவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால், உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்.'** (லூக்.1:35) இதுவே தேவ தூதன் மரியாளுக்குக் கொடுத்த செய்தி. இந்த செய்தி ஒரு உன்னதமான நல்ல செய்தியாக இருந்தாலும்கூட, அவள் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் கன்னியான மரியாளினால் இதை ஏற்றுக்கொள்வது கடினமான விடயம். ஆனாலும், அவள் தன்னை ஆண்டவருக்கு அடிமையாக ஒப்புக்கொடுத்து, அந்த செய்தி தேவனிடமிருந்து வந்த செய்தியாக ஏற்றுக்கொண்டாள்.

இந்த ஒப்படைப்பின், அல்லது ஏற்றுக்கொள்ளுதலின் மகிழ்ச்சியில் எழுந்த கீதமாகவே இந்த மரியாளின் கீதம் அமைந்துள்ளது. முழுமையான ஒரு மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் இந்த மூன்றையும் உள்ளடக்கியவனே. இங்கே தன் சரீரத்தை அதாவது தன் கர்ப்பப்பையை தேவகுமாரனுக்காக கொடுத்தாள் மரியாள், தன் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துவதாகவும், ஆவி தேவனில் களிகூருவதாகவும் பாடும்போது, மரியாளின் அர்ப்பணமானது எவ்வளவுக்கு முழுமையான ஒரு உன்னதமான அர்ப்பணம் என்பது புலப்படுகிறது. தேவ சித்தம் நிறைவேற, தேவதிட்டம் அமுல்படுத்தப்பட தன்னை ஒப்படைத்த மரியாள் தேவனில் களிகூர்ந்து பாடுகிறாள்.

நமது அர்ப்பணம் எப்படிப்பட்டவை? எமது வசதிக்கேற்றவாறு எம்மை நாம் அர்ப்பணிக்கிறோமா? அல்லது, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதற்கேற்ப நம்மை அர்ப்பணிக்க ஆயத்தமாயிருக்கிறோமா? விரும்புகிறபடி காரியங்களை அமைத்துக்கொண்டு, தேவனுக்கு அர்ப்பணித்து வாழுகிறோம் என்றும் நாம் சொல்லலாம். அல்லது, தேவனுக்கு முழுமையாக அர்ப்பணித்து அவர் விரும்புகிறபடி அவர் வார்த்தைகளுக்கு அமைய வாழலாம். எது எமது தெரிவாக உள்ளது? **'நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன், நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன். நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும் நான் கர்த்தருக்குள் மகிழுவேன்.** (சங்கீதம் 104:33,34) இது சங்கீதக்காரரின் அர்ப்பணிப்பின் அனுபவம். இன்று நாம் எங்கே நிற்கிறோம்?

கிறிஸ்து பிறப்பின் பாடல்களைத் தெரிந்தெடுக்கும்போதும் அவைகள் அர்ப்பணிப்பின் பாடல்களாகவும், கேட்பவர்களுக்கு ஒரு செய்தியை வழங்கும் பாடலாகவும் இருத்தல் அவசியம். அதைவிடுத்து நாம் ஆடிப்பாடுவதற்காக பாடல்களை தெரிவுசெய்யக்கூடாது. அர்ப்பணிப்பின் பாடல்களே கேட்பவர்களை அர்ப்பணிப்பிற்காக தூண்டும். இந்நாட்களில் நாம் எப்படியான பாடல்களையும், ஆராதனைகளையும், கிறிஸ்து பிறப்பின் நினைவுக் கொண்டாட்டத்திற்காக தெரிவுசெய்ய எண்ணியுள்ளோம். சிந்திப்போம்.

இம்முறை எனது கொண்டாட்டத்தில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறேன்? இதனால் வருகின்ற எதிர்ப்புகளை என்னால் மேற்கொள்ள முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோடிக்கப்பட்ட மரம்

டிசம்பர்
**19**
வெள்ளி

வேத வாசிப்பு : சங்கீதம் 150:1 - 6

**'அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.'** சங் 149:8

கிறிஸ்மஸ் கொண்டாட்டதிற்கென பணம் சேகரிப்போர் உண்டு. இம்முறை தொழிலில் பலத்த நஷ்டம்; ஆக இவ்வருடம் கிறிஸ்மஸ் இல்லை என்போரும் உண்டு. இவ்விதமாக பணத்தின் தரத்தைக் கொண்டே கிறிஸ்து பிறப்பை நினைப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஒரு ஏழை தம்பதியினர் தமது வீட்டில் சைப்பிரஸ் மரத்தை வைத்து, தேவன் தமக்கு செய்த நன்மைகளையெல்லாம் ஒவ்வொன்றாக சிறுபேப்பர் துண்டுகளில் எழுதி அதையே அந்த மரத்தில் கட்டி அழகாகச் சோடித்துவைத்தனர். 'இது என்ன' என்று யாரும் கேட்கும்போது, தேவனின் வழிநடத்துதலைக் குறித்து அவர்களுக் குச் சொல்லி மகிழ்ந்து தமது கிறிஸ்மஸ்சைக் கொண்டாடியதாக வாசித்தேன். பணத்தைக்கொண்டு கிறிஸ்து பிறப்பை எடை போடுகிறவர்கள் மத்தியில் இவ் விதமாக கிறிஸ்து பிறப்பை நினைவுகூருவோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

பாவத்தில் மாண்டு அழிந்துபோகவேண்டிய நம்மை மீட்கும்பொருட்டு தேவாதி தேவன் எம்மைத் தேடி இவ்வுலகிற்கே வந்தார். அவர் தம்மை நமக்குப் பெரிய ஈவாகத் தந்தார். அதைத் தொடர்ந்து எத்தனையோ ஈவுகளை நமது வாழ்வில் தேவன் செய்து வருகிறார். நாம் பலவேளைகளிலும் அதை உணரா மல் வாழ்ந்திருக்கிறோம். அவர் செய்த நன்மைகளை மறந்து நன்றியற்றவர் களாய் இருந்திருக்கிறோம். தேவைக்குப் பாவிக்கும் மருந்துபோல தேவனைப் பாவித்திருக்கிறோம். துடைத்து விட்டுத் தூக்கிப்போடும் பேப்பர் துண்டுபோல எமது தேவைகள் பூர்த்தியானதும் தேவனைத் தூக்கிப்போட்டிருக்கிறோம். இன்று நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறோம்? சிந்திப்போம்.

**"தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள் ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும், வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'** (சங் 139:23,24). தாவீதின் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எழுந்த இந்த ஜெபமானது நம் ஒவ்வொருவரின் ஜெபமாக அமையவேண்டியது அவசியம். எம்மை ஆராய்ந்து பார்க்க தேவனண்டையில் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். அவர் பாதம் அமர்ந்திருந்து எம்மை ஆராய வேண்டும். தேவனுக்கு ஒவ்வாத, வேதனை தரும் வழிகளை எம்மை விட்டு அகற்றுவோம். தேவன் தமது பிறப்பைக் கொண்டாடும் நபர்களையல்ல; தம்மை ஏற்றுவாழும் நபர்களையே விரும்புகிறார். பகட்டான சோடிப்புகளைத் தவிர்த்து, நம்மைக் காண்கிறவர்கள் 'இது என்ன' என்று கேட்கவும், 'இதுதான் தேவன் என்னில் காட்டிய அன்பின் அடையாளம்' என்று சொல்லக்கூடியதாக, எளிய வாழ்வாயினும் பிறருக்கு இன்பம் கொடுக்கிறவர்களாக வாழ்வோமாக.

இம்முறை கிறிஸ்மஸில் நான் காட்டப்போகும் மாற்றம் என்ன? நான் வெறுமனே சோடிக்கப்பட்டதும் நாளை வாடிப்போகிறதுமான கிறிஸ்மஸ் மரமா? அல்லது தேவனுக்குச் சாட்சியாய் நிற்கப்போகிற தேவபிள்ளையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிழ்ந்துபோகின்ற அர்த்தம்

டிசம்பர்

**20**

சனி

வேத வாசிப்பு : 1யோவான் 1:1-10

**'அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.' 1யோவான் 1:2**

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பொருட்களுக்கான விளம்பரங்களைப் பார்க்கிறோம். இல்லாத ஒன்றைப் பெரிதுபடுத்தி மக்கள் மனதைக் கவரும்வகையில் மேம்படுத்திக் காண்பிப்பார்கள். ஆனால், பொருட்களை வாங்கிப்பார்த்தால் அவர்கள் சொன்னது எதையுமே காணமுடியாது. எல்லாமே வெறும் போலிகளே. இல்லாத ஒன்றை மேம்படுத்திக் காண்பிக்கும்போது எப்படி உண்மைநிலை மறைந்துபோகிறதோ, அதுபோலவே கிறிஸ்து பிறப்பையும் கொண்டாட்டங்களாலும், களியாட்டங்களாலும், போலியான சந்தோஷங்களாலும் மேம்படுத்திக் காட்டும்போது, கிறிஸ்து பிறப்பின் உண்மையான அர்த்தமானது தெரியாமல் மறைந்துபோகிறது.

இன்றைய கிறிஸ்து பிறப்பின் நினைவுகூரலில், கிறிஸ்து மறைந்து கிறிஸ்மஸ் தாத்தாவும், களிப்பை தரும் பாடல்களும் முன்நிலை வகிக்கிறது. கிறிஸ்து பிறப்பில் உதித்த மீட்பின் செய்தி மறைந்து, பாவகாரியங்கள் பெருகுவதற்கு கொண்டாட்டங்களும், களியாட்டங்களும் வழிவகுத்துவிடுகின்றன. இதைக் குறித்து எமக்கு விழிப்புணர்வு உண்டா?

யோவான், "அந்த ஜீவன் பிதாவினிடத்திலிருந்தது; இப்போது அது எங்களுக்கு வெளிப்பட்டது; அதை நாங்கள் கண்டு, அதைக்குறித்து சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று எழுதுகிறார். கிறிஸ்துவை நாம் கண்டு, ஏற்றுக்கொண்டு, சாட்சிகொடுத்து அறிவிப்பதே நாம் செய்ய வேண்டிய பணியாகும். கிறிஸ்து பிறப்பானது சந்தோஷமான நினைவுகூரல்தான்; ஆனால், அதன் கருத்து மழுங்கடித்து பாழாக்கக்கூடாது. கிறிஸ்துவோடு நாம் ஐக்கியப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, நாம் இருளில் நடக்கலாமா? (வச. 6) நமது பாவங்களை அறிக்கைசெய்து விட்டுவிட தேவன் எம்மை அழைக்கிறார் (வச 8).

கிறிஸ்து நமக்கு மட்டும் சொந்தமானவரல்ல. அவர் சர்வலோகத்திற்கும் சொந்தமானவர். நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (1யோவா.2:2). ஆகவே, அவரை அறியாதோருக்கு அறிவிக்கும் பொறுப்பு நம்முடையது. வருடாவருடம் அமிழ்ந்துபோய்க்கொண்டிருக்கும் கிறிஸ்து பிறப்பின் அர்த்தத்தை இவ்வருடத்தில் நாம் ஏன் உயிர்ப்பிக்கக்கூடாது? கிறிஸ்து என்றால் என்ன விலை என்று கேட்கும் ஒரு கூட்ட ஜனங்கள் இன்னமும் நம் மத்தியில் இருக்கிறார்கள். நம்மைத் தேடி வந்த ஆண்டவரை அவர்களும் அறியும்படி, நாம் ஏன் அவர்களை தேடிப்போய் கிறிஸ்துவை அறிமுகம் செய்யக்கூடாது?

சத்தியத்திற்கு விரோதமான ஒன்றினை அடையாளம் கண்டு இம்முறை அதில் எதை நான் விட்டுவிடப்போகிறேன்? கிறிஸ்து பிறப்பின் செய்தி வெளிப்படத்தக்கதாக எதை நான் இவ்வருடத்தில் புதிதாக செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் வெளிச்சம்

டிசம்பர்
**21**
ஞாயிறு

வேத வாசிப்பு : ஏசாயா 58:1-10

**'பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்.' ஏசாயா 58:10**

கிறிஸ்து பிறப்பைக் குறித்து ஏசாயா, **'இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள், மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது.'** (ஏசா.9:2) என்று அறிவிக்கிறார். அதுபோலவே, பசியுள்ளவனுக்கும், சிறுமைப்பட்டவனுக்கும் தன் ஆத்துமாவைச் சாய்க்கிறவனைக் குறித்துக் குறிப்பிடும்போதும் "இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்" என்கிறார்.

இன்று நாம் கிறிஸ்து பிறப்பை நினைவுகூரும்போது, எமது வீடுகளில் உள்ள அழுக்குக் குப்பைகளை துப்பரவு செய்கிறோம். வீடுகளை வர்ண விளக்குகளால் அலங்கரிக்கிறோம். கடைவீதிகள், ஆலயங்கள் எல்லாமே ஒளிமயமாய் காணப்படும் காலமாய் இது அமைந்துவிட்டது. இதனால் இருளில் உள்ள மக்கள் வெளிச்சத்தைக் காண்கிறார்களா? நாம் நினைவுகூரும் கிறிஸ்மஸ் பண்டிகைகள் வீதிக்கும், கட்டிடங்களுக்குமே வெளிச்சமும் அலங்கரிப்பும் கொடுக்கின்றனவே தவிர, உள்ளம் இருண்டு, வாழ்வு இருண்டு, எதிர்காலமே இருண்டுபோய் கிடக்கிற மக்களுக்கு வெளிச்சம் கொடுக்கிறதா என்று நம்மை நாமே கேட்டுப்பார்ப்போம். இவர்களுக்கு வெளிச்சம் கொடுக்க கிறிஸ்து மறுபடியம் பிறக்கமாட்டார். வெளிச்சம் கொடுக்கவேண்டிய நம்மை நியாயம் விசாரிக்கிறவராகவே அவர் திரும்ப வருவார்.

கொண்டாட்டம் என்ற தோரணையில் நாம் எவ்வளவோ பணத்தையும், நேரத்தையும் வீண்விரயம் செய்கிறோம். உணவுப்பண்டங்கள் வீடுகள்தோறும் மிஞ்சிக் கிடக்கின்றன. விருந்துகள், உபசாரங்கள் என்று எவ்வளவோ உணவு மிதமிஞ்சி குப்பை தொட்டிகளில் வீசியெறியப்படுகின்றன. ஆனால் இன்னுமொரு புறத்திலோ மக்கள் ஒருநேர உணவுக்கே அலைந்துதிரிகின்றனர். மாற்றுடைகள் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இவர்களுக்கு வெளிச்சம் காட்டுவது நமது பொறுப்பு இல்லையா!

உண்மையான உபவாசம் என்பது, உணவை விடுத்து ஜெபிப்பது மாத்திரமல்ல, பிறரின் பசியாற்றுவதும்கூட என்கிறார் ஏசாயா தீர்க்கர். கொண்டாட்டம் என்ற தோரணையில் நாம் பசியாறும்போதுகூட, பசித்திருப்பவர்களை நினைக்காமல் நமது சிந்தனை நினைவுகள் எல்லாமே மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. எமது முறைமைகளை மாற்றுவோம். கிறிஸ்து பிறப்பின் அர்த்தத்தை எமது செயல்களாலும், நடத்தைகளாலும், வாழ்வினாலும் வெளிக்காட்டுவோம். இருளில் இருக்கும் ஒருவருக்காவது மெய்யான வெளிச்சத்தைக் கண்டுகொள்ள நாம் காரணராயிருப்போமானால், அது நமக்களிக்கும் சந்தோஷத்தை எந்தக் கொண்டாட்டத்தாலும் தரமுடியாது என்பதுதான் உண்மை.

முன்னர் நானும் இருளில் இருந்ததை நினைத்து, நம்பிக்கையற்ற எவருக்கு நான் சந்தோஷத்தை நம்பிக்கையைக் கொடுக்கப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மானுவேல்

டிசம்பர்

22

திங்கள்

வேத வாசிப்பு : மத்தேயு 1:18-25

**'...இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறு வாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடி ருக்கிறார் என்று அர்த்தமாம்.'** மத்தேயு 1:23

பொதுவாக, "தேவன் நம்மோடிருக்கிறார், எம்மை வழிநடத்துகிறார், அன்பாயிருக்கிறார், ஆசீர்வதிக்கிறார்....." இப்படியான காரியங்களைக் கேட்பது எமக்கு மிகவும் பிடித்தமான விடயம். மாறாக, கீழ்ப்படிவு, பின்பற்றுதல், ஒப்புக் கொடுத்தல், பாவத்தை விட்டுவிலகல் இவைகள் எமக்கு பிடிக்காதவைகள்.

தேவன் தமது திட்டப்படியே கிறிஸ்துவாய் இவ்வுலகில் வந்து பிறந்தார். ஒரு கன்னிகை பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறு வாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். அதற்கு, "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாம். இந்த தேவனின் திட்டத்தை நிறைவேற்ற மரியாளும், யோசேப்பும் கொடுத்த விலையதிகம். அவர்களது அர்ப்பணம் உயர்ந்தது. தேவசித்தத்திற்குத் தம்மை அவர்கள் அர்ப்பணித்ததும், அவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, கீழ்ப்படிந்து நடந்ததும் மிகவும் பெரிதான ஒரு காரியம். சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்து, தேவனுக்கு உகந்தவர்களாய் நீதிமான்களாய் வாழ்ந்த அவர்கள் தம்மைத் தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுத்தனர். கன்னிகை கர்ப்பவதியாவது இந்நாட்களில் ஒருவேளை சர்வ சாதாரணமான ஒன்றாக இருக்கலாம். ஆனால், அந்நாட்களில் அது இலகுவான ஒன்றல்ல. நீதிமானாய் வாழ்ந்த யோசேப்பு கர்ப்பவதியாகிய மரியாளை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் சொப்பனத்தில் அவனோடு இடைப்பட்ட தேவதூதனின் வார்த்தைக்கு இணங்கியமையே ஆகும்.

பிறந்த பிள்ளைக்கு 'தேவன் நம்மோடிருக்கிறார்' என்ற அர்த்தமுள்ள பெயரைச்சூட்ட மரியாளும் யோசேப்பும் கடந்துவந்த பாதை கடினமானது. ஆயினும், தேவன் நம்மோடிருப்பதால்தான் அவர் தமது குமாரனை மனுக்குல மீட்புக்காகக் கொடுத்தார். அவர் எமது பாவங்களுக்காகக் கல்வாரியில் மரித்து பாவத்திலிருந்து நமக்கு மீட்பைக் கொடுத்தார். தேவன் நம்மோடிருப்பதால்தான் நாம் அனைவரும் அவரது பிள்ளைகளாகின்றோம். இப்படியிருக்க, தேவனின் இந்தக் கிருபையை அறியாதோரும், கடவுள் நம்மைக் கைவிட்டாரோ என்று கதறுவோரும் தேவன் தம்மோடிருக்கிறார் என்ற உறுதியைப் பெற்றுக்கொள்ள நாம் இந்த செய்தியை அவர்களுக்குச் சொல்லவேண்டுமே! இது சற்று கடினம் தான். ஆனாலும், இப்பணிக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமானால் தேவனே நம்மை நடத்துவார். மரியாளும், யோசேப்பும் ஒப்புக்கொடுத்த காரியத்தை வருடந்தோறும் நினைவுபடுத்துகின்ற நாம், எப்போது நம்மை ஒப்புக்கொடுக்கப் போகிறோம்! இன்றும் நம்மோடிருக்கும் தேவனுக்கு நாம் செய்கின்ற ஒப்பற்ற பணி இதுதான்.

**இந்த வருடம் முழுவதும் என்னோடிருந்த தேவனுக்கு நன்றியாக மகிமையாக, பாவத்தில் உளலுகின்ற, அதிலிருந்து வெளிவரமுடியாத எத்தனைபேருக்கு, "தேவன் நம்மோடிருக்கிறார்" என்ற செய்தியை நான் அறிவிக்கப்போகிறேன்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பின் அர்த்தம்

டிசம்பர்
23
செவ்வாய்

வேத வாசிப்பு : ஏசாயா 9:1 -7

**'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு...'** ஏசாயா 9:6

விஞ்ஞானியொருவர் பல வருடங்களாகப் முயற்சிசெய்து ஒரு சாதனை படைத்தார். அவர் தன் மனைவிக்கு, "நான் வெற்றி பெற்று ஒரு சாதனை படைத்துவிட்டேன். நான் கண்டுபிடித்த விமானத்தில் இப்போது எத்தனையோ மைல்களுக்கு மேலாக வானத்திலே பறந்துகொண்டிருக்கிறேன். இம்முறை கிறிஸ்மஸ்க்கு வீட்டிற்கு வர எண்ணியுள்ளேன்" என்று ஒரு கடிதம் அனுப்பினார். அதை வாசித்த மனைவி சந்தோஷ மிகுதியில், அநேக காலத்திற்குப் பின்பு தனது கணவர் வீட்டிற்கு வருகிறார் என எல்லாரிடமும் பறைசாற்றினாள். இதனால் கணவன் வருகிறார் என்ற செய்தி முக்கிய இடத்தைப் பெற்றதே தவிர அவரது மகத்தான சாதனை அந்த சந்தோஷத்தில் மறைக்கப்பட்டுப்போனது.

இன்று நமது காரியமும் இப்படித்தான். நமது முன்னெடுப்புகளில் கிறிஸ்தவ கொண்டாட்டம் வெளிப்பட்டாலும், கிறிஸ்து எதற்காகப் பிறந்தார், என்ன செய்தார், அவருடைய வருகையின் நோக்கம் என்ன, சிலுவையில் என்ன செய்தார் என்ற எல்லா சத்தியங்களுமே மறைக்கப்பட்டுப் போகின்றன. கிறிஸ்து பிறப்பை முன்னறிவித்த ஏசாயா, "நமக்காகவே பாலகன் பிறந்தார். நமக்காகவே அவர் கொடுக்கப்பட்டார். அவர் சாதாரணமானவர் அல்ல; அவர் நாமம் அதிசயமானது, அவர் ஆலோசனையின் கர்த்தர், வல்லமையுள்ளவர், நித்தியமானவர், சமாதானப்பிரபு" என்றெல்லாம் அவரை அழகாக வர்ணித்துள்ளார். எமக்காகக் கொடுக்கப்பட்ட இந்தப் பாலகனையும், அவர் கொடுக்கப்பட்டதன் நோக்கத்தையும், அவரின் முக்கியத்துவங்களையும் நாம் இந்நாட்களில் ஒரு நாளிலாவது அமர்ந்திருந்து சிந்தித்திருக்கிறோமா?

கிறிஸ்து பிறப்பின் அர்த்தத்தை நினைவுகூர்ந்து (லூக்கா 2:11) பயபக்தியோடு கொண்டாடுவது நல்லது. அதைவிடுத்து நம் இஷ்டப்படியே அதைக் கொண்டாடுவதால், சத்தியத்தைவிட்டு விலகி நமது வாழ்வை நாசப்படுத்திக் கொள்வோம். அவரது பிறப்பின் அர்த்தம் மங்கிப்போவதற்கு அவரை அறிந்த நாமே காரணமாகிவிடுவோம். ரோமர் 1:5ல் கிறிஸ்து தேவகுமாரனென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் அவரது பிறப்பின் அர்த்தம் கொண்டாடப்படுவதிலும் பார்க்க, கொண்டாட்டத்தினூடாகவும் அவர் அறிவிக்கப்படவேண்டியது மிக அவசியமல்லவா! கிறிஸ்து பிறப்பை வருடந்தோறும் கொண்டாடுவதுதான் எமது அழைப்பா? அல்லது, அவரது வருகையின் அர்த்தத்தை உணர்ந்து அதை உணராதவர்களுக்கு உணர்த்துவது எமது அழைப்பா என்பதை சற்று சிந்தித்து பார்ப்போம். **'கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்.'** (பிலிப்பியர் 2:7)

வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கவேண்டிய நான், விசேஷமாக இந்நாட்களில் என்னை கிறிஸ்தவனாக காண்பிக்கிறேனா, கிறிஸ்துவின் மகா தியாகத்தை வெளிப்படுத்துகிறவனாக இருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபடி பிறத்தல்

டிசம்பர்
**24**
புதன்

வேத வாசிப்பு : லூக்கா 1:26 - 35

**'தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்.' லூக்கா 1:35**

உலகத்தில் பிறப்பவர் அனைவருக்கும் மரணம் நிச்சயமான ஒன்று. எனினும் எந்தவொரு குழந்தையும் பிறக்கும்போது அதன் மரணத்தைக் குறித்து நாம் யோசிப்பதில்லை. அந்தப் பிள்ளையின் வளர்ச்சியையும், படிப்பையும், எதிர் காலத்தையும் குறித்தே நாம் சிந்திப்போம். ஆனால், கிறிஸ்து பிறந்தபோதே அவர் மரிப்பதற்காகவே பிறந்தார் என்ற உண்மையும் உறுதிப்படுத்தப்பட்டது. எட்டாம் நாளில் அவரைக் குழந்தையாக தேவாலயத்துக்கு விருத்தசேதனத்துக் காக எடுத்துச்சென்றபோது, அங்கிருந்த சிமியோன் என்னும் தீர்க்கதரிசி மரியாளைப் பார்த்து, **'உன் ஆத்துமாவையும் ஒருபட்டயம் உருவிப்போகும்.'** (லூக்கா 2:35) என்று உரைத்தார்.

கிறிஸ்து, ஒரு நோக்கத்திற்காகவே பிறந்தார். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர் இறுதிவரைக்கும் உறுதியாக இருந்து, அதனை நிறைவேற்றி வெற்றிசிறந்தார். இயேசு சிலுவையில் தொங்கியபோது, காடியை வாங்கி "முடிந்தது" என்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 19:30). மரணத்திற்கு நியமிக்கப்பட்டவர்களாக பிறந்த நாமோ, கிறிஸ்துவை நமது ஆண்டவராக ஏற்கும்போது, அவருக்குள் புதிய பிள்ளைகளாக மறுபடியும் பிறக்கிறோம் (யோவான் 1:12). இப்போது நமது வாழ்விலும் ஒரு அர்த்தம், ஒரு நோக்கம் உண்டாகிறது. அதை நிறைவேற்றவே நாம் அழைக்கப்படுகிறோம். நோக்கமில்லாத வாழ்வு பிரயோஜனமற்றது. நாம் கிறிஸ்துவை பிரதிபலிக்க, அவரது அன்பை பிறருக்குக் காட்ட, அவர் தந்த இரட்சிப்பை பிறருக்கு அறிமுகம்செய்ய, வழிதப்பிப் போகிறவர்களை கிறிஸ்துவின் வழிக்குள் கொண்டுவர நாம் நோக்கங்கொண்டு வாழவேண்டும்.

கிறிஸ்துவின் பிறப்பை நாம் நினைவுகூர்ந்து சந்தோஷம் கொண்டாடுகிறோம். அவரது பிறப்பு அத்துடன் நின்றுவிட்ட ஒன்றல்ல. அது அகில உலகின் பாவத்தை சுமந்து தீர்க்க ஒரு வழியைக்கொண்ட மீட்பின் திட்டமாகும். அத் திட்டம் நிறைவுசெய்யவே கிறிஸ்து தன் உயிரை அர்ப்பணித்தார். வெற்றியோடு உயிர்த்தெழுந்தார். அப்பணியைத் தொடர்ந்து செய்ய எம்மை அவர் அழைத்துள்ளார். நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம். இன்னமும் கொண்டாட்டங்களில் குதூகலித்து நிற்கிறோமா? அல்லது திறப்பின் வாயிலே மோசே நின்று ஜனங்கள் அழிந்துபோகாமல் காத்ததுபோல (சங்கீதம் 106:23) நிற்க நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோமா? நாம் மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்றிருந்தால், அவரது பிறப்பின் நோக்கத்தோடு வாழக் கற்றுக்கொள்ளுவோம். கிறிஸ்து தாம் இவ்வுலகிற்கு வந்த பணியை வெற்றியாய் முடித்ததுபோல நாமும் எமது பணியைச் செய்து முடிப்போம்.

நான் உண்மையாகவே மறுபடியும் பிறந்திருக்கிறேனா? அப்படியானால் என் பணி என்ன? அதைச் செய்ய எனக்கிருக்கும் தடைகள்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றே அர்ப்பணநாள்

டிசம்பர்
25
வியாழன்

வேத வாசிப்பு : லூக்கா 1:26-38

**'அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.' லூக்கா 1:38**

அனைவருக்கும் சத்தியவசன ஊழியர்கள் சார்பில் அன்பு நிறைந்த கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். இன்றைய நாள் ஒரு அர்ப்பணிப்பின் நாள். மனுக்குலத்தின் பாவங்களைத் தீர்ப்பதற்காக தேவாதி தேவன் பரலோகத்தின் மேன்மைகளைத் துறந்து மாட்டுத்தொழுவத்தில் ஒரு குழந்தையாய் வந்துதிக்க தன்னை அர்ப்பணித்ததை நினைவுகூரும் நாள் (பிலி 2:6-7). தேவனுடைய திட்டத்தை தேவதூதன் அறிவித்தபோது, "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை" என்று சொல்லி மரியாள் தன் வாழ்வை தேவ சித்தத்திற்கு அர்ப்பணித்தமையால் கிறிஸ்து இவ்வுலகில் வந்து உதித்ததை நினைவு கூரும் நாள். கர்ப்பவதியாகிய தன் மனைவியை ஏற்றுக்கொண்டு தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிய தன்னை ஒப்படைத்த யோசேப்பு தேவ சுதன் வந்துதித்த மகிமையைக் கண்டதை நினைவுபடுத்தும் நாள் (மத்தேயு 1:18-25). இப்படியாக பலரின் அர்ப்பணிப்பில் உதித்ததுதான் கிறிஸ்து பிறப்பு.

ஆதியில் ஏதேனிலே பாவம் தோன்றியபோது, அந்நேரமே தேவன் மீட்பின் திட்டத்தை வாக்குப்பண்ணினார் (ஆதி.3:14-15). இப்போது அத்திட்டத்தை நிறைவேற்ற தேவன் ஒரு ஸ்திரீயைத் தேடினார். அக்காலத்தில் எத்தனையோ பக்தியுள்ள பெண்கள் இருந்திருக்கலாம். ஆனாலும், தேவதூதன், மரியாள் இருந்த வீட்டிற்குள் பிரவேசித்து, "கிருபை பெற்றவளே வாழ்க" என்றான். எத்தனையோ பேர் இருந்தும் அக்கிருபை மரியாளையே தேடிவந்தது. அதுவும் மரியாள் திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்டு இருந்ததால் அங்கே யோசேப்பும் இத்திட்டத்திற்குள் வரும் கிருபையைப் பெற்றுக்கொண்டார்.

பலர் இருந்தும் தேவதிட்டம் நிறைவேற ஒரு மரியாளையும், ஒரு யோசேப்பையும் தேவன் தெரிந்துகொண்டார். தெரிந்துகொள்ளப்பட்ட இவர்கள் அத்திட்டத்திற்காக தம்மை அர்ப்பணித்தனர். இன்றும் தேவன் தன் திட்டத்தை நிறைவேற்றவே எம்மை தெரிந்தெடுத்துள்ளார். அத்திட்டத்துக்கு நாம் நம்மை அர்ப்பணம்செய்ய ஆயத்தமா? எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்று தேவன் விரும்பி தன் இரண்டாம் வருகையை தாமதிக்கிறார் (2பேதுரு 3:9). அவரது வருகைக்கு பிறரை ஆயத்தம்செய்யும் பணிக்காக தேவன் தெரிந்துகொண்ட நாம், அதற்கு எம்மை அர்ப்பணிக்க ஆயத்தமா? வருஷந்தோறும் கிறிஸ்து பிறப்பை வெறுமையில் கழித்துவிட்டு, மீண்டும் எமது பழைய வாழ்வுக்குள் கடந்து சென்றுவிடுகிறோம். அப்படியானால் நமது அர்ப்பணம் எங்கே? நம்மைச் சுற்றிலும் வாழுகிற நமக்கு அன்பானவர்கள் உறவினர்களைக் குறித்த ஆத்தும பாரம் எங்கே? இந்த கிறிஸ்மஸ் நமக்குச் சந்தோஷத்தைத் தரவேண்டுமானால் உண்மைத்துவமான அர்ப்பணிப்பைச் செய்வோமாக.

ஒவ்வொரு மனிதரும் நற்செய்தியை அறியவேண்டும் என்ற தேவதிட்டத்தை நிறைவேற்ற என்னை நான் அர்ப்பணம் செய்திருக்கிறேனா? இந்த நாளிலே ஒருவருக்காவது அந்த நற்செய்தியைக் கூறுவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இன்னமும் குழந்தையா?



வேத வாசிப்பு : யோவான் 14:15-21

**'...பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லா வற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.' யோவான் 14:26**

ஒரு காரின் சொந்தக்காரர், எப்போதும் ஓட்டுநரைக் கொண்டே காரை ஓட்டுவார். ஒருநாள் டிரைவர் வராவிட்டால் அவர் வெளியில் எங்கும் செல்லாமல் வீட்டிற்குள் முடங்கிவிடுவார். காரணம், பல வருடங்களாக ஒரு வாகனம் வைத்திருந்தும் அதை ஒரு சிறிய தூரத்திற்குக்கூட அவரால் ஓட்டிச்செல்ல தெரியாமலிருந்தது. இதுபோலவே எமது கிறிஸ்தவ வாழ்வும் பலதடவைகளில், நாமாக இயங்க முடியாமல் எப்போதுமே யாரோ ஒருவரைச் சார்ந்து நிற்கிறோமல்லவா.

நாம் இரட்சிக்கப்பட்டுவிட்டேன்; இத்தனை வருட கிறிஸ்தவராக வாழுகிறேன் என்றெல்லாம் சொல்லுவோம். ஆனால், கிறிஸ்தவ வாழ்வில் ஒரு அடிகூட எம்மால் சொந்தமாக எடுத்துவைக்க முடியாத குழந்தைகளைப்போல நம்மில் பலர் வாழுகிறோம். பொறாமையும், சண்டையும், வாக்குவாதம் செய்கிறவர்களுமாய் நாம் இன்னமும் வாழுவது எப்படி? இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் பவுல், **'நீங்கள் பெலனில்லாதவர்களானதால் உங்களுக்குப் போஜனம் கொடாமல் பாலைக் குடிக்கக் கொடுத்தேன்'** (1கொரி.3:2) என்று எழுதுகிறார். நாமும் எவ்வளவு காலத்துக்குத்தான் குழந்தைகளாகவே இருக்கப்போகிறோம்.

இயேசுவானவர் பரத்துக்குப் போகும்போது, சத்தியஆவியானவர் வந்து உங்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவார் என்று கூறினார். எம்மை வழிநடத்த எப்போதும் எம்மோடிருக்கும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்து தலைப் பெற்று நாம் வாழாமல், எம்மை வழிநடத்தும் தேவஊழியரையோ, ஆவிக்குரிய நண்பரையோ, அல்லது வேறு எவரையோ நம்பி வாழுவது எப்படி? நமக்கு ஆலோசனைத்தர ஆறுதல்தர நண்பர்கள் கூடாது என்பதல்ல. ஆனால் எல்லாவேளைகளிலும் யாரோ ஒருவர் எம்மை வழிநடத்துவதற்குத் தேவையாக இருப்பது நல்லதல்ல. நாளடைவில் நாம் தேவனைச் சார்ந்து வாழாது, வழிநடத்துபவரைச் சார்ந்தே வாழ ஆரம்பித்து விடுவோம்.

தேவனோடு எமது உறவைக் கட்டியெழுப்பி, அவர் வழிநடத்துதலைப் பெற்று, தீர்மானங்களை எடுத்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதுவே உறுதியான கிறிஸ்தவ வாழ்விற்கு வழிவகுக்கும். ஆவிக்குரிய தலைவர்களும், வழிகாட்டிகளும் எமக்கு அவசியம்தான். ஆனால் எப்போதும் அவர்களிலேயே நாம் சார்ந்து வாழாது, தேவஉறவில் வளர்ந்து, தேவ வழிநடத்துதலைப் பெற்று பிறருக்கு நல்ல மாதிரிகளாக வாழவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய் இராமல், கிறிஸ்துவுக்குள் பிறந்த குழந்தைகளை வளர்ப்பவர்களாக மாறவேண்டும். அந்த வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் நம்மை ஒப்புவிப்போமாக.

கிறிஸ்துவுக்குள் நான் ஒரு குழந்தையா? வாலிபனா? வளர்ந்த பெரியவனா? அல்லது முதிர்ச்சியடைந்தவனா? இருக்கிற நிலையிலிருந்து மேலே வளர நான் என்ன செய்யப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபிப்பதோடு முடிந்துவிடாது

டிசம்பர்
**27**
சனி

வேத வாசிப்பு : பிலிப்பியர் 4:1 - 9

**'...உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ ...அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.' பிலிப்பியர் 4:8.**

வீதியில் செல்லும்போது பிச்சையெடுப்பவன் ஒருவன் 'அம்மா பசிக்கிறது' என்கிறான். கையில் இருந்ததைப் போட்டுவிட்டுக் கடந்து செல்கிறோம். மீண்டும் அவனைப்பற்றி நாம் சிந்திப்பது கிடையாது. ஆனால், வீட்டிற்கு வந்ததும் எங்கள் பிள்ளை, 'அம்மா பசிக்கிறது' என்னும்போது 'இந்தா சாப்பாடு' என்று சொல்லிப் போய்விடுவோமா? உணவு கொடுத்து, அதை ஊட்டி பசியாறியதா என்று பார்த்து, இப்படியாக எத்தனையோ செய்கிறோம். காரணம், அங்கே உறவு இல்லை; இங்கேயோ ஒரு உறவு இருக்கிறது.

அதுபோலவே தேவனிடம் நாம் ஜெபிக்கும்போதும் ஒரு பிச்சைக்காரன் கேட்பதுபோல இல்லாமல், ஒரு பிள்ளை கேட்பதுபோலவே கேட்கவேண்டும். நாம் தேவனை நோக்கி ஜெபிப்பதோடு நின்றுவிடாமல், தேவனோடு எமது உறவையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். எமது தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெபித்துவிட்டு, பின்னர் தேவனை மறந்துவிடுவது உண்மையான வாழ்வல்ல. "நீங்கள் ஒன்றுக்கும் கவலைகொள்ளாமல் எல்லாவற்றையும் ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று சொன்ன பவுல் அத்தோடு நிறுத்திவிடாமல், 'உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும் சிந்தித்துக்கொண்டிருங்கள்' என்று பிலிப்பியருக்குப் புத்தி சொல்லுவதைக் காண்கிறோம். ஜெபத்தோடுகூட எமது வாழ்க்கை முறையும் முக்கியமானதாகும். ஜெபிப்பதும் பெற்றுக்கொள்வதும் கிறிஸ்தவ வாழ்வு கிடையாது. நாம் அதற்கும் மேலான வாழ்வை வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

மளிகை கடைக்குப் போகும்போது தேவையான பொருட்களை எழுதிச் சென்று வாங்குவதுபோல இன்று அநேகர் ஜெபத்துக்குப் போகும்போது, வேண்டுதல்களைக் கொண்டுபோய், ஒவ்வொன்றாக ஆண்டவர் சமுகத்தில் ஒப்புவித்துவிட்டு, எல்லாம் முடிந்துவிட்டது என்று தம் இஷ்டம்போல வாழுகின்றனர். ஜெபத்தில் ஆராதனையோ, துதியோ, அர்ப்பணமோ இல்லாமல் போகுமானால் அது வெறும் முறையீடாகவே இருக்கும். தேவனோடு எமக்கு நெருக்கமான உறவு இருந்தால் மட்டுமே எமது ஜெபத்தில் நாமும் மகிழ்ந்திருப்போம், தேவனும் மகிழ்ந்திருப்பார்.

இந்த வருடத்தின் இறுதி நாட்களுக்குள் நிற்கும் நாம், நமது ஜெப வாழ்வையும், தேவனோடு நமக்குள்ள உறவையும் சற்று சிந்திப்போம். கடந்த ஆண்டிலும்பார்க்க நான் எவ்வளவுதூரம் ஜெபஉறவில் வளர்ந்திருக்கிறேன்? எமது கிறிஸ்தவ வாழ்வானது வெறும் ஜெபத்துடன் முடிந்துவிடும் வாழ்வல்ல. அதையும் கடந்து தேவனோடு உறவை நெருக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

என் ஜெபவாழ்வு எனக்கு தேவபிரசன்னத்தையும் அன்பின் உறவையும் உணர்த்துகிறதா? இந்த உறவில் இன்னும் நெருங்கி வளர என்ன செய்யலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மையாய் மாற்றினார்

டிசம்பர்
28
ஞாயிறு

வேத வாசிப்பு : ஆதியாகமம் 50:14 -21

**'நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப்பண்ணினார்.' ஆதியாகமம் 50:20.**

வருடத்தின் இறுதி நாட்களுக்குள் வந்திருக்கும் நாம், இவ்வருடம் முழுவதும் வாழ்ந்த வாழ்க்கையைக் குறித்துச் சிந்திப்பது நல்லது. கடந்து வந்த பாதையில், பிரச்சனைகள், துன்பங்கள், வியாதிகள், சந்தோஷங்கள், வெற்றி தோல்விகள் என்று பல விடயங்கள் நிகழ்ந்திருக்கலாம். இவற்றிற்கூடாக நாம் வெளிவந்தபோது எப்படியான உணர்வினைப் பெற்றிருக்கிறோம்?

யோசேப்பு தன் வாழ்வில் தனது சகோதரரால், போர்த்திபாரின் மனைவியினால் எத்தனையோ பாடுகளை அனுபவித்திருந்தான். சிறையிலும் வாழ்ந்தான். இப்படி எத்தனையோ காரியங்களை கடந்து வந்தும் அவனது மனநிலை குழப்பம் அடையவில்லை. "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள். ஆனால் கர்த்தரோ அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்று தீமைசெய்த சகோதரரிடமே யோசேப்பு கூறினார். இதற்குக் காரணம், யோசேப்பு கர்த்தரோடு எப்போதும் இருந்ததுதான். அதனால் தேவனும் யோசேப்போடு எப்போதும் இருந்தார். யோசேப்பு சிறையில் இருந்தபோதும் தேவன் யோசேப்போடு இருந்தார் (ஆதியாகமம் 39:21).

நாம் தேவனோடு இருக்கிறோமா? தேவனோடு இருந்தால் எமது வாழ்வையும் யோசேப்பின் வாழ்வைப்போலவே உன்னதமான வாழ்வாக பிறருக்கு ஆசீர்வாதமான வாழவாக தேவன் மாற்ற வல்லவராய் இருக்கிறார். தேவனோடு வாழாமல் எமது இஷ்டம்போல் வாழ்வதால்தான் இவ்வுலக பாடுகளையும், வேதனைகளையும் மேற்கொள்ள முடியாமல், அதற்குள் மூழ்கிவிடுகிறோம். அல்லது, அவற்றிற்குத் தப்பிக்கொள்ளுவதற்கான வழியையும் நாமே தேடிக் கொள்கிறோம். இதன் விளைவாக விரக்தி நிலைக்கும், வாழ்வதால் என்ன பயன் என்ற சோர்வுக்கும் தள்ளப்படுகிறோம். தேவன் எம்மை அவ்விதமான ஒரு வாழ்வுக்காய் அழைக்கவில்லை. எல்லாச் சூழ்நிலைகளிலும் வெற்றிகொண்டு வாழவே அழைத்ததுள்ளார். அந்த வெற்றியானது எம்மால் முடியாது. உலகை ஜெயித்த அவராலேயே முடியும். "**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் இயேசு**' (**யோவான் 16:33**).

வரவிருக்கும் புதிய வருடத்திற்குள் ஒரு புதிய தீர்மானங்களோடு பிரவேசிப்போம். தேவனோடு வாழ்வதைத் தெரிந்துகொள்வோம். அப்போது தேவனும் நம்மோடு வாழுவார். எல்லா சூழ்நிலைகளையும் அவரோடு சேர்ந்து கண்ணோக்குவோம். அவரோடு சேர்ந்து எதிர்கொள்வோம், அவருக்காக பணியாற்றுவோம். தேவன் சகலவற்றையும் நன்மையாய் மாற்றுவார்.

இதுவரையிலும் பல நன்மைகள் செய்தும், தேவனுக்காக வாழ்ந்தும், எனக்கு ஏற்பட்ட பாதகமான சூழ்நிலைகள் எவை? அவற்றை என்னால் மேற்கொள்ள முடிந்ததா? கிறிஸ்துவை மகிமைப்படுத்த முடிந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ளதாய் மாற்றுவார்

டிசம்பர்

29

திங்கள்

வேத வாசிப்பு : லூக்கா 15:11 - 21

**'...தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்.' லூக்கா 15:21**

"பழைய பொருட்களைக் கொடுத்தால் பதிலுக்குப் புதிய பொருட்கள் கொடுக்கப்படும்" என்று கடையொன்றில் தொங்கிய விளம்பரப் பலகையைக் கண்ட ஒரு வாலிபன், 'எனது வாழ்வு யாருக்குமே பிரயோஜனப்படாத ஒன்று. அதைத் தந்தால் புதிய வாழ்வைக் கொடுக்க முடியுமா' என்று கேட்டானாம். கடைக்காரர் திகைத்தவராய், 'அது என்னால் முடியாதப்பா, கடவுளிடம் கேட்டுப் பார்' என்றாராம். இதை ஒரு புத்தகத்தில் படித்தேன். இச்சம்பவம் ஒருவேளை கற்பனைக் கதையாக இருக்கலாம். ஆனால் அதில் சொல்லப்பட்ட காரியம் உண்மையானதே. வாழ்வை மாற்ற தேவனால் மாத்திரமே முடியும்.

தகப்பனை விட்டு தூரம்போன மகன் தன் வாழ்வைப் பாழாக்கினான்; எல்லாவற்றையும் இழந்தான். இனி தான் ஒரு மகனாய் வாழத் தகுதியற்றவன் என்பதைக் கண்டுகொண்டான். வேலைக்காரரில் ஒருவனாயாவது தன் தகப்பனிடத்தில் செல்வேன் என்ற தீர்மானத்தோடு புறப்பட்டுத் தகப்பனிடத்தில வந்தான். ஆனால், தகப்பனோ தன்னைத் தேடி மனமாற்றத்தோடு வந்த மகனைக் கட்டித் தழுவி, மகன் என்ற உன்னதமான ஸ்தானத்தை மறுபடியும் அவனுக்குக் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். பயனற்றுப்போன வாழ்வை மீண்டும் பயனுள்ளதாக மாற்ற அந்தத் தந்தையின் அன்பினால் மட்டுமே முடிந்தது.

மகனே, மகளே, உன் வாழ்வு பயனற்றது என்று நீ உணருகிறாயா? இவ்வளவு காலத்தையும் பாழாக்கிவிட்டேனே என்று சோர்ந்துபோனாயா? பாழாகிவிட்ட வாழ்வைத் தேவனிடத்தில் ஒப்படைத்துவிடு. அவர் அதனைப் பயனுள்ளதாய் மாற்றுவார். இவ்வுலக வாழ்வில் நாம் சம்பாதித்ததையும், எமக்குக் கிடைத்தவற்றையும் ஒருவேளை நாம் இழந்துபோகலாம். ஆனால், தேவன் நம்மை இவ்வுலகிற்குக் கொண்டுவந்தது வீணுக்கல்ல. அது உன்னதமான வாழ்வு அதை நாம் எந்நாளும் இழந்துவிடக்கூடாது. தேவன் தந்த வாழ்வை நாம் அவரிடமே ஒப்படைக்கும்போது, அவர் அதை தனக்கு மகிமையான வாழ்வாக பயனுள்ள வாழ்வாக மாற்றுவார்.

பிறந்தோம் வாழ்ந்தோம் மரித்தோம் என்பது வாழ்வல்ல. வாழ்வை கடவுளுக்குள்ளாக கண்டுகொண்டு வாழப் பழகிக்கொள்ளவேண்டும். யோபு தனக்கிருந்த அத்தனை ஆசிகளையும், தனது பிள்ளைகளைக்கூட இழந்தார். ஆனால், தேவனோடுள்ள உறவை, அவர்மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிடவில்லை. அதனால் அவர் மீண்டும் எழுந்தார். தேவனின் ஆசியை இரட்டிப்பாய்ப் பெற்றுக்கொண்டார். கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையை அதிகமாக ஆசீர்வதித்தார் (யோபு 42:12).

இன்று நான் என் பரம தகப்பனைவிட்டு எவ்வளவுதூரம் சென்றிருக்கிறேன்? இழந்துபோன அந்த உன்னத வாழ்வை மீண்டும் புதுப்பிக்க முடியாதபடிக்கு என்னை தடைசெய்கின்ற காரியங்கள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழமான உறவு

டிசம்பர்

**30**

செவ்வாய்

வேத வாசிப்பு : கொலோசெயர் 1:9-17

**'சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்...' கொலோ 1:10**

தங்க நகைக்கும், தங்கமுலாம் பூசப்பட்ட நகைக்கும் நிறையவே வித்தியாசமுண்டு. தங்க நகை எப்பவுமே மங்காமல் பிரகாசிக்கும். ஆனால், தங்க முலாம் பூசப்பட்ட நகையோ, தங்க நகைபோலப் பிரகாசமாய் இருந்தாலும், நாளுக்கு நாள் மங்கி தன் சுயரூப போலித்தனத்தை காட்டிவிடும்.

இதுபோலவே பரிசுத்தவான்கள்போலத் தம்மைக் காட்டிக்கொள்பவர்களுக்கும், உண்மையுள்ளவர்கள்போல. இரக்கமுள்ளவர்கள்போல, உதவுபவர்கள்போல காட்டிக்கொள்பவர்களும், இக்குணாதிசயங்களை உண்மையிலேயே கொண்டவர்களாக இருப்பவர்களுக்கும் வித்தியாசமுண்டு. தேவசாயலாக உருவாக்கப்பட்ட மனிதன், பாவத்தினால் தன் மகிமையை இழந்துபோனான். ஆனாலும் பாவமன்னிப்புப் பெற்று தேவபிள்ளையாகி, கிறிஸ்துவைப்போல மாற பிரயாசப்படுபவனும், தேவனோடு தன் உறவைக் கட்டிக்காப்பவனும், நாளாந்தம் அவ்வுறவில் வளருபவனுமே உண்மையான தங்கத்தைப்போல எல்லா சூழ்நிலைகளிலும் பிரகாசிக்க முடியும்.

தேவனோடு உறவில்லாதவன், நற்குணங்களை காட்டினாலும் அவன் போலியானவன். சூழ்நிலைகள் மாறும்போது அவன் தனது சுயரூபத்தை வெளிக்காட்டுவான். அவனால் எப்போதும் எல்லா நிலையிலும் ஈடுகொடுக்க இயலாது. ஆகையால் கிறிஸ்துவின் குணாதிசயத்தில் வளரவேண்டுமாயின், உள்ள வண்ணமே எம்மை அவரிடம் ஒப்புக்கொடுத்து, அவரது மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, அவர் எம்மை சுத்தம்பண்ணவும், வனையவும் விட்டுக்கொடுக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, முதலாவது, அவரோடு எமது உறவை பேணவேண்டும். உறவில் உறுதியாய் இருப்பவனே எப்போதும் உறுதியாய் அசையாமல் நிற்பான்.

இன்று நமது காரியம் என்ன? தங்கம்போல் கிறிஸ்துவுக்காய் உண்மையாய் ஜொலிக்கிறோமா? அல்லது, போலியான தங்கம்போல மின்னிவிட்டு மங்கிவிட்டோமா? நமது உண்மை நிலைமைகளை ஏற்றுக்கொள்வதிலும் போலித்தனம் கூடாது. உண்மையாய் மனந்திரும்பி தீர்மானங்கள் எடுக்கும்போதுதான் அவைகள் உறுதியானதாக இருக்கும். அதைவிடுத்து, விழிப்பிரவு ஆராதனையில் எடுக்கும் நொடிப்பொழுது தீர்மானங்கள் மறுநாள் விழித்தெழுந்தவுடனேயே மறைந்துவிடும். பிரியமானவர்களே! நமது போலித்தனம் அதிக நாட்கள் நீடித்திராது. அது கறுத்து மங்க ஆரம்பித்தால் அதை எம்மால் தடுக்கவும் முடியாது. ஆகவே, போலியான வேஷங்களைக் களைந்து, பவுல் அறிவுறுத்துவதுபோல கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்வோம்.

என் வாழ்வில் காணப்படும் போலித்தனம் அல்லது, வீண்பெருமைகளை என்னால் அடையாளம் காணமுடிகிறதா? அவற்றை அறிக்கையிட்டு, மனந்திரும்பி, கர்த்தருக்காய் என்றும் ஒளிவீச என்னால் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை



வேத வாசிப்பு : எரேமியா 17:5-8

**'...நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே என்று சொல்லி, அவர்களைத் தேற்றினான்.' 2நாளாகமம் 32:8**

இன்றைய தியான வசனமானது இரண்டுவித நம்பிக்கைகளைக்குறித்து பேசுகிறது. ஒன்று மனுஷன்மீது வைக்கும் நம்பிக்கை; மற்றது, தேவன்மீது வைக்கும் நம்பிக்கை. தேவன்மீது நம்பிக்கை வைப்பவன் எப்படிப்பட்ட மரத்தைப் போலிருப்பான் என்று இங்கே எழுதப்பட்டுள்ளது. வச.7ல் 'கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாய்க் கொண்டு' என்னும்போது, கர்த்தர்மீது கொள்ளும் ஆழமான நம்பிக்கையை அது குறிக்கிறது. நாம் நம்புகிறோம். கர்த்தர்தான் எமது நம்பிக்கை என்றெல்லாம் வாய் பேச்சில் சொல்கிறோம். ஆனால், அந்த நம்பிக்கை எவ்வளவுக்கு ஆழமானது என்பதைச் சிந்தித்துப் பார்த்ததுண்டா!

கர்த்தர்மீது நம்பிக்கை கொண்டவன் தண்ணீரண்டையில் நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிற மரத்துக்கு ஒத்திருக்கிறான். எப்போதும் தண்ணீரை அது உறிஞ்சிக்கொண்டே இருக்கும். காரணம், அது நீரூற்றுள்ள கால்வாய் அருகில் தன் வேர்களை ஆழமாக விட்டிருக்கிறது. ஆகவே, அது உஷ்ணம் கூடினாலும் வாடாது, மழைத் தாழ்ச்சியான காலங்களிலும் சாகாது. காரணம் அது எப்போதும் நீரூற்றுடன் தொடர்புபட்டுள்ளது. ஆகவே அந்த மரம் செழித்திருக்கும். தேவன்மீது கொண்ட ஆழமான நம்பிக்கையும் இது போன்றதே. தேவனோடு உறுதியான தொடர்பு இருப்பதால் எச்சூழ்நிலையிலும் அது அசையாது, எந்தக் காரியத்திலும் அது கலங்காது.

வருடத்தின் இறுதி நாளுக்குள் வந்துவிட்ட நாம், எந்த நம்பிக்கையோடு புதிய வருடத்தில் காலடி எடுத்து வைக்கப்போகிறோம்! எசேக்கியா ராஜா ஜனங்களைப் பார்த்து ஒரு நம்பிக்கையின் வார்த்தையைக் கூறினான். "நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்." அவனது வார்த்தையில் அசைக்கமுடியாத நம்பிக்கை தொனித்தது. அதைக்கேட்ட ஜனங்கள் அந்த வார்த்தையின்மீது நம்பிக்கை வைத்தார்கள். நாமும் கர்த்தர்மீது வைக்கும் ஆழமான நம்பிக்கையோடுகூட கடந்துபோவோம். நம்புகிறோம் என்று சொல்லியும், கலங்கிப்போவது நல்லதல்ல. வலது, இடது பக்கம் சாய்ந்துபோவதும் நல்லதல்ல. தேவனை முற்றாய் நம்புவோம். இதுவரை நடத்தியவர் நம்மை இனியும் கைவிட மாட்டார். வரப்போகும் வருடம் எப்படிப்பட்டது என்பது எமக்குத் தெரியாது. ஆனால், எல்லா நிலைகளிலும் நம்மோடு கடந்துவருகிறவர் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து என்பதுதான் உண்மை. அதை நீ நம்புகிறாயா? இம்மட்டும் வழிநடத்தியவர் இனியும் நடத்துவார்.

இவ்வருடம் முழுவதும் ஆண்டவர் நடத்திய வழிகளை சற்றுத் திரும்பிப் பார். தேவன் என்னைவிட்டு விலகினார் என்று நான் நினைக்கத்தக்கதாக நான் கர்த்தரைவிட்டு விலகிய வேளைகள் எவை? கர்த்தரை நம்பாமல் நான் நடந்த வேளைகள் எவை? வரப்போகும் புதிய ஆண்டில் என் நம்பிக்கை யார்? எம்மை முற்றும் முழுதாக தேவனுக்கு அர்ப்பணிப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா படிவம்



நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் உங்கள் பெயர், முகவரியுடன் உங்கள் கணனி இலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள். உங்கள் முகவரியில் மாற்றம் ஏதும் இருக்குமானால் உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

பெயர் :............................................ கணனி இல.: ...................

முகவரி :..........................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

தொலைபேசி:.................................... ஈமெயில்: ........................

நீங்கள் புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா? [ ]

இப் படிவத்துடன் ரூபா..............................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

அனுப்பியவர் பெயர்: ..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவூட்டுகிறோம்



எமது வெளியீடுகளை
புதிதாக பெற
விரும்புகிறவர்கள் மற்றும்
எமது வெளியீடுகளை
தொடர்ந்து பெற்றுவரும்
சந்தாதாரர்களுக்காக எமது
சந்தா கட்டண விபரங்கள்
கீழே தரப்பட்டுள்ளன.

## ஒரு வருடத்திற்கான சந்தா

| | |
|---|---|
| இலங்கையில் உள்ளவர்களுக்கு | - ரூ. 800.00 |
| இந்தியாவில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |
| தென்னாசிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,500.00 |
| மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,500.00 |
| ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 3,500.00 |
| அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 3,500.00 |

## உங்கள் சந்தா பணத்தை

**மணியோடர் மூலம் பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் (**CINNAMON GARDENS POST OFFICE**) என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் (**BACK TO THE BIBLE**) என்றும் குறிப்பிட்டு அனுப்பவும்.

**காசோலை மூலம் அனுப்புவதாயின்:** (**BACK TO THE BIBLE**) என்ற பெயருக்கு காசோலை எழுதவும்.

*மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் பணம் அனுப்புவதில் உங்களுக்கு சிரமம் அல்லது சிக்கல்கள் ஏதும் இருக்குமானால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.*

***இங்கிலாந்து மற்றும் கனடாவில் உள்ளவர்களுக்கு***

பணம் அனுப்பிவைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு எம்மோடு தொடர்புகொண்டு விசாரிக்கவும்.

*(சந்தாதாருக்கான படிவம் மறுபக்கத்தில் உள்ளது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவர்களுக்கான

# சந்தா படிவம்



எமது வெளியீடுகளை புதிதாக பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த புதியவர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்த விரும்பினால் இந்த படிவத்தை தெளிவாக நிரப்பி அனுப்பவும்.

நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் உங்கள் பெயர், முகவரியுடன் உங்கள் கணனி இலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

பெயர் :...................................................... கணனி இல.: ...................

முகவரி :.......................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

தொலைபேசி:....................................... ஈமெயில்: .........................

இப் படிவத்துடன் ரூபா.............................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

அனுப்பியவர் பெயர்: ...............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BACK TO THE BIBLE
சத்தியவசனம்
120 A, Dharmapala Mawatha, Colombo 7, Sri Lanka.
Phone: +(94)114691500
email: info@backtothebible.lk www.backtothebible.lk

# சத்தியவசன வாசகர்களின் கவனத்திற்கு:

» "சத்தியவசனம்". சஞ்சிகை இருமாதத்திற்கு ஒருதடவையும் (வருடத்திற்கு 6 தடவை) "அனுதினமும் தேவனுடன்" தியான நூல் நான்கு மாதங்களுக்கு ஒருதடவையும் (வருடத்திற்கு 3 தடவை) வெளிவருகின்றது.

» இவையிரண்டும் அனைத்து வாசகர்களுக்கும் தவறாமல் அனுப்பி வைக்கப்படுகின்றது.

» எமது வெளியீடு தவறுதலாக தங்களுக்கு இரண்டு பிரதிகள் வருமாயின், கூடுதலாக வரும் புத்தகத்தில் உள்ள பெயர் மற்றும் முகவரியை எமக்கு தெரிவியுங்கள்.

» நீங்கள் வீடு மாறும்போது உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியை குறிப்பிட்டு அறியத் தாருங்கள்.

» ஒவ்வொரு வருடமும் தங்கள் சந்தாவை புதுப்பித்து கொள்ளும்படி புதியவர்களுக்கு அறிமுகப்படுத்தும்படி அனைத்து வாசகர்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.

» உங்கள் சந்தாவை செலுத்தமுடியாத நிலையில் உரிய- நியாயமான காரணங்களை எழுதி தெரிவிக்காத பட்சத்தில் தபாலில் உங்களுக்கு எமது வெளியீடுகள் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

» உங்களுக்கு வரும் தபால் உறையின்மேல் ஒட்டப்பட்டிருக்கும் உங்கள் முகவரியின் பெயருக்குமேல் உங்கள் சந்தாதார இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

» எம்முடன் ஜெப கடித ஆலோசனை மற்றும் சகல தொடர்பின்போதும் உங்கள் சந்தாதார இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

» எமது வெளியீடுகள் உரிய நேரத்தில் கிடைக்காவிடில் உடனே அறிய தாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| நவம்பர் காலை | நவம்பர் மாலை | திகதி | டிசம்பர் காலை | டிசம்பர் மாலை |
|---|---|---|---|---|
| எரேமி. 51-52 | தீத்து. 2 | 01 | தானி. 4 | 2பேது. 3 |
| புலம். 1-2 | தீத்து. 3 | 02 | தானி. 5 | 1யோவா. 1 |
| புலம். 3,4,5 | பிலே. 1 | 03 | தானி. 6 | 1யோவா. 2 |
| எசேக். 1-2 | எபிரே. 1 | 04 | தானி. 7-8 | 1யோவா. 3 |
| எசேக். 3-4 | எபிரே. 2 | 05 | தானி. 9-10 | 1யோவா. 4 |
| எசேக். 5,6,7 | எபிரே. 3 | 06 | தானி. 11 | 1யோவா. 5 |
| எசேக். 8,9,10 | எபிரே. 4 | 07 | தானி. 12 | 2யோவா. 1 |
| எசேக். 11-12 | எபிரே. 5 | 08 | ஓசியா. 1-3 | 3யோவா. 1 |
| எசேக். 13 | எபிரே. 6 | 09 | ஓசியா. 4-6 | யூதா. 1 |
| எசேக். 14-15 | எபிரே. 7 | 10 | ஓசியா. 7-9 | வெளி. 1 |
| எசேக். 16 | எபிரே. 8 | 11 | ஓசியா. 10-11 | வெளி. 2 |
| எசேக். 17-18 | எபிரே. 9 | 12 | ஓசியா. 12-14 | வெளி. 3 |
| எசேக். 19-20 | எபிரே. 10:1-25 | 13 | யோவேல். 1-2 | வெளி. 4 |
| எசேக். 21-22 | எபிரே. 10:26-39 | 14 | யோவேல். 3 | வெளி. 5 |
| எசேக். 23-24 | எபிரே. 11:1-21 | 15 | ஆமோஸ். 1-3 | வெளி. 6 |
| எசேக். 25-26 | எபிரே. 11:22-40 | 16 | ஆமோஸ். 4-6 | வெளிப். 7 |
| எசேக். 27-28 | எபிரே. 12 | 17 | ஆமோஸ். 7-9 | வெளி. 8 |
| எசேக். 29-30 | எபிரே. 13 | 18 | ஒபதியா. 1 | வெளி. 9 |
| எசேக். 31-32 | யாக். 1 | 19 | யோனா. 1-4 | வெளி. 10 |
| எசேக். 33-34 | யாக். 2 | 20 | மீகா. 1-3 | வெளி. 11 |
| எசேக். 35-36 | யாக். 3 | 21 | மீகா. 4-5 | வெளி. 12 |
| எசேக். 37-38 | யாக். 4 | 22 | மீகா. 6-7 | வெளி. 13 |
| எசேக். 39 | யாக். 5 | 23 | நாகூம் 1-3 | வெளி. 14 |
| எசேக். 40-41 | 1பேது. 1 | 24 | ஆபகூக் 1-3 | வெளி. 15 |
| எசேக். 42-43 | 1பேது. 2 | 25 | செப்பனி. 1-3 | வெளி. 16 |
| எசேக். 44-45 | 1பேது. 3 | 26 | ஆகாய். 1-2 | வெளி. 17 |
| எசேக். 46,47,48 | 1பேது. 4 | 27 | சகரியா. 1-3 | வெளி. 18 |
| தானி. 1 | 1பேது. 5 | 28 | சகரியா. 4-7 | வெளி. 19 |
| தானி. 2 | 2பேது. 1 | 29 | சகரியா. 8-10 | வெளி. 20 |
| தானி. 3 | 2பேது. 2 | 30 | சகரியா. 11-14 | வெளி. 21 |
| | | 31 | மல்கியா. 1-4 | வெளி. 22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Sathiya Vasanam" - Supplimentary

Registered in the Department of Post of Sri Lanka under
No. QD/133/News/2014

இந்நூலை புதிதாக வாசிப்பவர்கள் தொடர்ந்தும் இந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் எமது வெளியீடுகளை பெற்றுவரும் சந்தாதாரரானால் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருமுறையும் உங்கள் கணனி (கம்யூட்டர்) பதிவு இலக்கத்தையும் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் கணனி பதிவு இலக்கம், உங்களுக்கு எமது வெளியீடுகள் அனுப்பப்படும் உறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது வெளியீடுகள் ஏதாவது தவறுதலாக இரண்டு பிரதிகள் உங்களுக்கு கிடைத்தால் தயவுசெய்து உங்களுடைய கணனி பதிவு இலக்கத்துடன் எமக்கு அறியத்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

நீங்கள் வீடு மாறும்போது உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட்டு அறியத்தாருங்கள்.

எமது வெளியீடுகள் உரிய காலத்தில் உங்களுக்கு வந்து சேராவிடில் அது குறித்து உடனடியாக அறியத்தாருங்கள்.

BACK TO THE BIBLE
சத்தியவசனம்
த பெ 1012, கொழும்பு, இலங்கை

நேரில் எமது முகவரி
***120A ,Dharmapala Mawatha,***
***Colombo 7,***
***Sri Lanka.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org